www.padippakam.com

www.kalachuvadu.com

இருமாத இதழ் ரூ.15

# காலச்சுவடு


ஜூலை - ஆகஸ்ட் 2001 இதழ் 36



நேர்காணல்

மருது

## கலை இலக்கியச் சிறப்பிதழ்



அரசி

குளோப்

ஸ்ட்ரோபரி ஜாம்போத்தலும், அபிஸீனியன் பூனையும்

இசையும் கவிதையும்

பாட்டுக்குத்தான் மெட்டு

கவிதை பிறக்கும்பொழுது

செம்பதிப்பின் வரலாறு

சாகித்ய அகாதமி விருது : இலக்கியத்திற்கா? களப்பணிக்கா?

## தமிழக அரசியல் சூழல்

இரா. செழியன் • பிரபஞ்சன் • கானகன் • இராசேந்திர சோழன் • ராஜ் கௌதமன்

படிப்பகம்

www.padippakam.com



மங்கள நாள்தனிலே!
அந்த மங்கள நாள்தனிலே!!

RmKV
முகூர்த்தப் பட்டுகள்
திருநெல்வேலி டவுண்

காஞ்சிபுரம் பட்டுகள் ● ஆரணி பட்டுகள் ● தர்மாவரம் பட்டுகள்
பனாரஸ் பட்டுகள் ● பிரிண்டட் சில்க்ஸ்

www.padippakam.com


*நேர்காணல்*............................................ 20

# மருது



*அதிகாரம் யாருக்கு?*............................................ 6



**தமிழக அரசியல் சூழல்**

இரா. செழியன்
பிரபஞ்சன்
கானகன்
இராசேந்திர சோழன்
ராஜ் கௌதமன்

*பத்தி*............................................37



வானகமே இளவெயிலே மரச்செறிவே
சுந்தர ராமசாமி



பெருமாள் முருகன்
பாட்டுக்குத்தான் மெட்டு



ஆறாம் திணையும் ஏழாம் திணையும்
சேரன்



ரவிக்குமார்
பிறவழிப் பயணம்

*மதிப்புரை*............................................50

பாவண்ணன்
அமரந்த்தா

*அரங்கு*............................................ 46

தமிழ் இனி 2000மும் காண்பியக் கலைகளும்
சமவெளி நோக்கி
தமிழ் இனி 2000 விமர்சன அரங்கு : திரிகோணமலை
தடை செய்யப்பட்ட படைப்பும் பலியான தலித் அரசியலும்
மரப்பாச்சி

*விவாதம்*............................................58

தி. க. சி.க்கு விருது — ராஜமார்த்தாண்டன்
மைலாஞ்சி — ஹெச். ஜி. ரசூல்

*நெடுங்கவிதை*............................................ 3

**அரசி**
மனுஷ்ய புத்திரன்

*கவிதைகள்*............................................32



மாலதி மைத்ரி ● கனிமொழி ● லதா
உமா மகேஸ்வரி ● அழகிய பெரியவன்
கோகுல கண்ணன் ● காளி – தாஸ்
சத்யன் சுந்தர் ● டி. மகேந்திரன்
பாலச்சந்திரன் சுள்ளிக்காடு
யுவபாரதி ● பாவண்ணன்
ரவி சுப்பிரமணியன்

*சிறுகதை*............................................12

குளோப் — ஜீ. முருகன்
ஸ்ட்ரோபரி ஜாம் போத்தலும்
அபிஸீனியன் பூனையும் — அ. முத்துலிங்கம்

*மற்றும்*............................................

புதுமைப்பித்தன் யாருக்குச் சொந்தம்? :
கோபால் ராஜாராம் — 2
நூல் அறிமுகம் : அ. கா. பெருமாள் — 45
செம்பதிப்பின் வரலாறும் . . . : ராஜ் கௌதமன் — 52
மௌனத்தின் சிறகடிப்பு : கண்ணன் — 54
வரப்பெற்றோம் — 55
கண்டதும் கேட்டதும் — 56
கடிதங்கள் — 62



இதழ் 36
ஜூலை – ஆகஸ்ட் 2001
**காலச்சுவடு**
669 கே. பி. சாலை
நாகர்கோவில் 629 001
மின்னஞ்சல் : kalachuvadu@vsnl.com

காலச்சுவடு புதிய எண்கள்
தொலைபேசி : 04652 - 222525
தொலைநகல் : 04652 - 231160

**ஆசிரியர் குழு**
கண்ணன்
மனுஷ்ய புத்திரன்
**வடிவமைப்பு**
குமார்
லீலா
**தயாரிப்பில் உதவி**
எம். எஸ்.
மைதிலி
ஜோதி
சிவகுமாரி
மகாதேவன்

காலச்சுவடு இருமாத இதழ்
சந்தா விவரம்

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 15 |
| ஆண்டுச் சந்தா | ரூ. 90 |
| இரண்டாண்டுச் சந்தா | ரூ. 140 |
| வெளிநாட்டுச் சந்தா | ரூ. 400 |
| இரண்டாண்டுச் சந்தா | ரூ. 700 |

வெளிநாட்டு
நிறுவனங்களுக்கு US $ 20

*கல்லூரி / ஆய்வு மாணவர்களுக்குச் சிறப்புச் சலுகை*
ஆண்டுச் சந்தா ரூ. 50 (சான்று அனுப்ப வேண்டும்.)

சந்தா தொகையை
**Kalachuvadu**
என்ற பெயரில்
பணவிடையாகவோ
வரைவோலையாகவோ
அனுப்புக. காசோலையாக
அனுப்புகிறவர்கள் ரூ. 15
சேர்த்து அனுப்புக.

முன் அட்டை ஓவியம்
டிராட்ஸ்கி மருது


படிப்பகம்

www.padippakam.com



# புதுமைப்பித்தன் யாருக்குச் சொந்தம்?

கோபால் ராஜாராம்

இந்தக் கேள்வி சமீப காலத்தில் எழுப்பப்பட்டு வருகிறது. இதன் அடிப்படை என்ன என்று தெரிந்து கொள்வதற்காக இதழ்களையும், மின் இதழ்களையும் பார்வையிட்டேன். 'இளைய பாரதி' என்பவர் தொகுத்து வெளியிட்ட 'கண்மணி கமலாவுக்கு...' கடிதத் தொகுப்பு மறு பதிப்பு வருகிறது. அந்தத் தொகுப்பு வெளிவரக் கூடாது, புதுமைப்பித்தன் படைப்புகளின் முழு உரிமையையும் நாங்கள் வாங்கியிருக்கிறோம் என்று காலச்சுவடு பதிப்பகம் தெரிவித்துள்ளது. இதன் தொடர்பாக புதுமைப்பித்தன் மகள் தினகரி இளைய பாரதிக்குப் பதிப்பிக்கத் தரப்பட்ட உரிமை ஒரு பதிப்புக்கானதுதான என்று தெர்வித்துள்ளார். இத்லலாமல "புதுமைப்பித்தன் பதிப்பகம்" என்ற பெயரில் இளைய பாரதி தொடங்கிய பதிப்பகத்தின் பெயரையும் மாற்ற வேண்டும் என்று சொல்லிக் கேட்டிருக்கிறார் தினகரி என்று அறிகிறேன்.

புதுமைப்பித்தன் எழுத்துகள் மக்களுக்குச் சொந்தம் என்று குரல் எழுப்பியுள்ளனர் சிலர். ச. செந்தில்நாதன், வீ. அரசு, இன்குலாப் போன்றவர்கள் காலச்சுவடு மற்றும் சுந்தர ராமசாமியைத் தாக்கியும் இந்தப் போக்கின் பின்னணியில் இவர்கள்தான் இருக்கிறார்கள் என்றும், புதுமைப்பித்தன் படைப்புகள் "மக்களு"க்கே சொந்தம் என்று குரல் கொடுத்திருக்கின்றனர். பாராட்ட வேண்டிய விஷயம் என்னவென்றால், புதுமைப்பித்தனின் எழுத்து மக்கள் இலக்கியம் என்ற இவர்களின் வரையறைக்குள் அடங்குவதாய் இவர்கள் ஒப்புக் கொண்டிருப்பதுதான்.

> புதுமைப்பித்தன் படைப்புகள் நிச்சயமாய் மக்களுக்குச் சொந்தம் தான் - படிக்கவும் கருத்துச் சொல்லவும். ஆனால், அதன் மூலம் லாபம் அடைகிற, யார் லாபம் பெற வேண்டும் என்று தீர்மானிக்கிற உரிமை அவர் குடும்பத்தினருக்குத் தான் உண்டு.

இவர்கள் இது நாள் வரையில் புதுமைப்பித்தனின் சிறப்பை ஒப்புக் கொண்டதில்லை. முற்போக்கு முகாமில் புதுமைப்பித்தனின் 'பொன்னகரம்' கதை தவிர மற்ற கதைகள் சிறப்பான கதைகள் என்றுகூட இவர்கள் ஒப்புக் கொண்டதில்லை. நம்பிக்கை வரட்சி, இருண்மைவாதம் என்று தான் புதுமைப்பித்தன் பற்றிய இவர்களின் பார்வை இருந்தது. இன்று இவர்கள் தம் பார்வையை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறித்து மகிழ்ச்சி. ச. செந்தில்நாதன் "புதுமைப்பித்தன் முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடி" என்கிறார் இப்போது.

"புதுமைப்பித்தன் பதிப்பகம்" என்ற பெயருக்குச் சட்ட ரீதியாய் தினகரி அவர்கள் தடைபெற முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. மேனாடுகளில் உள்ள காப்புரிமைச் சட்டம் பெயர்களைப் பயன்படுத்துவதையும் பாதுகாக்கிறது. நம் நாட்டில் அப்படி இல்லை என்று நினைக்கிறேன். ஆனால் புதுமைப்பித்தன் பதிப்பகம் என்ற பெயர் வியாபார நோக்கங்களுக்காக அல்லாமல் வேறு எந்த நோக்கம் கருதி இளைய பாரதியினால் பயன்படுத்தப்படுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. சமீப காலத்தில் காலச்சுவடு முயற்சியால் புதுமைப்பித்தன் உணர்வு பரவலாக்கப் பட்டிருப்பதைப் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சி இது என்றுதான் தோன்றுகிறது.

அதில்லாமல் 'கண்மணி கமலாவுக்கு...' நூலில் இளைய பாரதியின் பங்கு ஒரு அச்சுக் கோர்ப்பவரின் பங்குக்கு மேலானதாய் எனக்குத் தெரியவில்லை. கடிதத் தொகுப்பு என்பது சும்மாவேனும் கடிதங்களைத் தொகுத்துப் போடுவதல்ல. கடிதங்களில் பேசப்படுகிற நபர்கள், நிகழ்வுகள் பற்றிய பின்னணியையும், மற்றும் இந்த நிகழ்வுகள் கடிதம் எழுதியவரின் வாழ்க்கையில், படைப்பில் பெற்ற இடம் பற்றியும் வெளிச்சம் காட்டுகிற ஒரு உழைப்பின் தேவை கடிதத் தொகுப்பாளனுக்கு உள்ளது. அது இளைய பாரதியிடம் சுத்தமாக இல்லை. நிச்சயமாக ஆய்வாளர் என்ற முறையில் வேங்கடாசலபதி, இளைய பாரதியை விடவும் சிறப்பான பணியாளர்தான்.



"பாரதியார் கவிதைகளை ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் முடக்கி வைத்திருந்தார். அது போல் காலச்சுவடு புதுமைப்பித்தனை முடக்கப் பார்க்கிறது என்று" அ. மார்க்ஸ் பேசுகிறார். ஆனால், இந்த நிலைமைக்கு முன்பு நடந்ததைத் திரும்பிப் பார்த்தால் இந்தப் பேச்சின் அபத்தம் தெரியும். முற்போக்கு இலக்கியங்களை வெளியிடுகிறோமாக்கும் என்று சமையல் புத்தகங்களையும் , சோவியத் குப்பைகளையும் வெளியிட்டுக் கொண்டிருந்த என்.சி.பி.எச்., கி.ரா.வின் நாட்டுப்புறக் கதைகளை பல பதிப்புகள் வெளியிட்டு அவருக்குச் சேர வேண்டிய ராயல்டியைக்கூடக் கொடுக்காமல் இருந்த முற்போக்குப் பதிப்பகம் என். சி. பி. எச்., ஏன் முன் வந்து புதுமைப்பித்தன் படைப்புகளை வெளியிடவில்லை? அ. மார்க்ஸ் தான் புதுமைப்பித்தன் தலித் விரோதி, வேளாள மரபின் பின்செல்பவர், இந்துத்துவ வாதி என்கிறாரே – என்றால் அவர் வாதப்படி காலச்சுவடின் வெளியீடாக புதுமைப்பித்தன் படைப்புகள் வெளிவருவதுதானே பொருத்தம்?

இந்த வாதங்களில் ஒரே ஒரு சரியான பார்வை, புதுமைப்பித்தன் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைதான். நாலாந்தரத் தமிழ்த் தூய்மைவாதி மறைமலையடிகளையும், வியாபார எழுத்தாளர் கல்கியையும், தரமற்ற மற்றவர்களையும் நாட்டுடைமையாக்கிய அரசு ஏன் புதுமைப்பித்தன் பற்றிக் கண்டு கொள்ளவே இல்லை? அந்த அரசின் போக்கை விமர்சிக்க வேண்டிய இவர்கள் ஏன் "காலச்சுவடு" புதுமைப்பித்தன் படைப்புகளை வெளியிடுவதைத் தாக்குகிறார்கள்?

இதை யோசிக்கும் போது இவர்கள் புதுமைப்பித்தன் படைப்புகள் பரவலாய்ப் படிக்கப்பட வேண்டும் ஒருவரிடம் அவர் படைப்பின் உரிமைகள் முடங்கிவிடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தைக் காட்டிலும் ஏதோ ஓர் ஆயுதத்தை ஏந்தி "காலச்சுவடு"வைத் தாக்கிவிட வேண்டும் என்பதாய்த் தோன்றுகிறது. இப்போதைய ஆயுதம் புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தன் படைப்புகள் நிச்சயமாய் மக்களுக்குச் சொந்தம்தான் – படிக்கவும் கருத்துச் சொல்லவும். ஆனால், அதன் மூலம் லாபம் அடைகிற, யார் லாபம் பெற வேண்டும் என்று தீர்மானிக்கிற உரிமை அவர் குடும்பத்தினருக்குத் தான் உண்டு. எல்லாப் படைப்பாளிகளுக்கும் அப்படித்தான் இருந்தது. இருக்க வேண்டும்.

பாரதிதாசனுக்கும் அப்படித்தான் இருந்தது. பாரதி பாடல்களுக்கு ஜீவா, காமராஜ் நடத்திய போராட்டம் மாதிரி இவர்கள் ஏன் பாரதிதாசன் படைப்புகளுக்கு இவர்களோ இவர்களை ஒத்தக் கருத்துக் கொண்டவர்களோ நடத்தவில்லை? இவர்கள் நோக்கம் இது போன்ற சிறந்த படைப்பாளிகள் நாட்டுடைமையாக்கப் பட வேண்டும் என்பதைக் காட்டிலும் 'காலச்சுவடு'வின் முயற்சிகளை விமர்சிக்க வேண்டும் என்பது தான்.

நன்றி : *www.thinnai.com*




படிப்பகம்

www.padippakam.com



மனுஷ்ய புத்திரன்

# அரசி



1

கூந்தல் முடித்தெழுந்த அரசி
வென்ற நகருக்குள் பிரவேசித்த போது
நகரம் ஸ்தம்பித்து நின்றது

அரசி கண்ணுக்கெட்டியவரை
ஸ்தம்பித்த நகரையே பார்த்தாள்
எங்கோ ஒருமரம் அசைந்தது
பின்னர் அதுவும் நிறுத்தப்பட்டது
அது தன்னுடைய நகரமே என்று
நிச்சயப்படுத்திக்கொண்டாள்.

அரசி எப்போதும் ஸ்தம்பிக்கும் நகரங்களை
மிகவும் நேசித்தாள்
ஸ்தம்பித்தல் சக்தியின் வெளிப்பாடு

மெதுவாக கையை உயர்த்தி
“இனி நகரம் வழக்கம்போல இயங்கலாம்”
என்றபோது ஒருவரும் அதை நம்பவில்லை

மகத்தான அரசி
மகத்தான மக்கள் சக்திக்கு
மகத்தான தன் முதல் செய்தியை
மீண்டும் வலியுறுத்துகிறாள்.

“வாகனங்களும் மனிதர்களும்
வழக்கம் போல சாலைகளிலேயே செல்லலாம்”

2

எதிரிகள் வெளியேற்றப்பட்ட கோட்டையின்
எல்லாக் கதவுகளும் அரசிக்காகத் திறந்திருக்கின்றன
ஒவ்வொரு கதவின் வழியாகவும் உள்ளே வருகிறாள்.
எதுவும் அவளைத் தடுப்பதில்லை
அவள் விரும்பாத எந்த முகமும்
அங்கே இல்லை

சாவிகளும்
சவுக்குகளும்
அவள் கைகளில் கனத்துக்கொண்டிருக்கின்றன

அவ்வளவு பெரிய வெளியை
எப்படி நிரப்புவதென்று அரசிக்குத் தெரியவில்லை
பின்னர் தன்னைத்தானே
பெருக்கிக் கொள்ளத் தொடங்கினாள்
ஒரு ராட்சச பலூனாகி
நகரத்தின் மேல் பறந்தாள்
அப்புறமும் அவளால்
நிரப்பமுடியாத இடங்கள் மிச்சமிருந்தன.
அவளுடைய எல்லாப் படைகளும் சேர்ந்தும்
நிரப்பமுடியாத இடங்கள்

அரசி உள்ளூர நகரத்திடம்
தனிமையும் பயமும் வெறுப்பும்
கொள்ளத் தொடங்கினாள்.

3

சரித்திரம்
எப்போதும் நினைவுகளைக் கண்டு
அஞ்சுகிறது

அரசி புதிய சரித்திரத்தை
எழுதத் தொடங்கியபோது



படிப்பகம்

www.padippakam.com



நினைவுகள் அவளை
தொந்தரவு செய்கின்றன

அரசியின் அவசர ஆணையின்படி
நகரத்தின் மத்தியில்
பிரமாண்டமான
துடைப்பான்களின் தொழிற்சாலை
இயங்கத் தொடங்கியது

எல்லா மூலைகளிலிருந்தும்
எதிரிகளைப் பற்றிய நினைவுகளை
துடைப்பான்கள் அழிக்கின்றன
அழுத்தமான சில நினைவுகள்
துடைப்பான்களுக்கு இசைய மறுக்கிறபோது
அவை கல்லறைகளாக மாற்றப்படுகின்றன

எதிரியின் நினைவுகளனைத்தும்
அழிக்கப்பட்டபின்
தன்னைப்பற்றிய நினைவுகள்
எஞ்சிவிட்டதை அரசி கண்டாள்

நகரின் துடைப்பான்களையெல்லாம்
ஏவிய பிறகும்
அவற்றை யாராலும் துடைக்க முடியவில்லை
துப்புரவுப் பணியாளர்கள்
நிழல்களைத் துடைக்க முடியாது என்று
கைவிரித்தபின்
அரசி அவை தன்னுடைய
நிழல்களே அல்ல
என்று சொல்லத்தொடங்கினாள்.

4

புதிய தலைவியிடம்
புதிய வாக்கியங்களை வேண்டி
நகரம் காத்திருந்தது

அரசி
அவ்வளவு தெளிவான முகத்துடன் கூறுகிறாள்
'இனி குற்றவாளிகள் யாரும் தப்ப முடியாது'
வேறெந்தக் காலத்திலும்
நம்முடைய காலத்தினைப்போல் நீதியின் குரல்
இவ்வளவு திடமாக ஒலிக்க முடியாது

அரசியின் தன்னம்பிக்கை
அவளை எல்லாக் குற்றங்களுக்கும்
மேலானவளாக்குகிறது

குற்றமும் தண்டனையும்
குற்றமும் நீதியும்
அரசியின் உறைந்த கண்களில் ஒடுங்குகின்றன

5

படைத்தலைவன் மிகவும்
களைப்படைந்து விட்டான்
அவனால் வீட்டிற்குப் போகவே முடியவில்லை
எல்லா வேட்டைக் கருவிகளையும்
பழுது பார்த்த பின்பும்
புதிய தளவாடங்கள் தேவையாக இருந்தன



அரசியின் பட்டியல் மிகவும் நீளமானது
மேலும் கணத்திற்குக் கணம்
வளர்ந்து கொண்டேயிருந்தது
எல்லாவற்றையும் ஓரிரவுக்குள்
நிறைவேற்ற வேண்டுமென்று
அரசி விரும்பினாள்
சிறிய தாமதங்கள்
அவளைப் பதட்டமடையச் செய்கின்றன.

படைத்தலைவன் அனைத்தையும்
சீக்கிரம் முடித்துவிட்டு
வீட்டிற்கு போகவே விரும்பினான்
அவன் வேறொரு காலத்திலிருந்து வந்தவன்
அவனுக்குத் தேவைப்பட்டதெல்லாம்
'கொல்லுங்கள்' எனும் ஒரு சொல்
ஆனால் எல்லாவற்றையும்
சட்டப்படி செய்ய வேண்டியிருக்கிறது
இது ஒரு தேவையற்ற சுமை
சட்டங்கள் அவனை ஒரு சிந்தனையாளனாக
மாற்றிவிட்டன
சகல வழிமுறைகளையும்பற்றி
பொறுமையிழந்து
சிந்தித்துக்கொண்டிருக்கிறான்

சிந்தனை
அவனை ஒரு புனைகதையாளனாக
சிலசமயம் ஒரு மாந்திரீகனாக
மாற்றிக்கொண்டிருக்கிறது

அவனது குழந்தைகள்
அவனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்
அவர்களுக்குத் தெரியாது
அவன் அவ்வளவு சீக்கிரம்
வீடு திரும்பமுடியாதென்று.

6

இன்று எல்லாப் பாதைகளும்
அரசியின் நகரத்தை நோக்கிச் செல்கின்றன

பருவங்கள் பொய்க்கும் நிலங்களிலிருந்து
சருகாய் உலர்ந்த முகங்கள்
அரசியை நோக்கி வருகின்றன



படிப்பகம்

www.padippakam.com



கண்களில் அழியாமல்
மின்னும் நம்பிக்கைகள்

அரசி
மிகுந்த அவசரத்துடன்
தனது தெய்வ முகத்தை எடுத்து
அணிந்து கொள்கிறாள்
யாருக்கு வேண்டுமானாலும் பொருந்தும் முகம்
இந்த முறை அரசிக்கு
கொஞ்சம் சிரமம் கொடுக்கிறது
'முகத்தின் கடுமையை
சற்று குறைக்கவேண்டும்' என்று
அவளது ஒப்பனைக் கலைஞர்கள்
வலியுறுத்துகின்றனர்

அரசி சிரிக்க முயல்கிறாள்
அது பயங்கரத்தை இன்னும் அதிகரிக்கிறது

அரசிக்கு வேறு வழியிருக்கவில்லை
நகரத்தின் அனைத்து சித்திரக் கலைஞர்களும்
அழைக்கப்பட்டனர்
தாய்மையின் சித்திரமொன்றை
கருணையின் சித்திரமொன்றை
உருவாக்கக் கட்டளையிட்டாள்

மக்கள் எல்லா இடங்களிலும்
அரசிக்காகக் காத்திருக்கின்றனர்
அரசி எல்லா இடங்களுக்கும்
ஒரு சித்திரமாகி வருகிறாள்.

7

அரசி கண்ணாடியின் முன் நின்று
ஒரே கேள்வியை திரும்பத் திரும்பக்
கேட்டுக்கொண்டிருக்கிறாள்
'துர்கனவுகளெல்லாம் முடிந்து விட்டனவா?'
தனது எல்லா நண்பர்களிடமும்
அவள் இந்தக் கேள்வியைக் கேட்கிறாள்
அவளை யாராலும் நம்பவைக்க முடியவில்லை
விதியின் ரேகைகள்
அவளைக் குழப்பமடையச் செய்கின்றன

அவளது அச்சுறுத்தல்களாலேயே
அவளது பயங்கள் அதிகரிக்கின்றன

அவள் வீட்டின் ஒவ்வொரு பொருளையும்
இடம் மாற்றிவைக்கிறாள்
எல்லாப்பழக்க வழக்கங்களையும்
மாற்றியமைக்கிறாள்
இந்தக்கனவிலிருந்து
திடீரென விழித்துவிடுவோமோவென்று
பயப்படுகிறாள்
எது புதிய கனவு
எது பழைய கனவு
என்று அவளுக்குப் புரியவில்லை

அரசிக்கு மிகவும் பசித்தது
அவளால் அதைத் தணிக்கவே முடியவில்லை. ■


## வெளிவந்து விட்டன

**காலச்சுவடு பதிப்பகத்தின் புதிய பதிப்புகள்**

ஜே. ஜே : சில குறிப்புகள் ❖ சுந்தர ராமசாமி ❖ விலை ரூ. 75 ❖ பக்கம் 184
ஒரு புளியமரத்தின் கதை ❖ சுந்தர ராமசாமி ❖ விலை ரூ.80, பக்கம். 200 (ராஜ் கௌதமனின் பின்னுரையுடன்)
புதுமைப்பித்தன் கதைகள் (முழுத் தொகுப்பு) ❖ பதிப்பாசிரியர் : ஆ.இரா. வேங்கடாசலபதி ❖ விலைரூ.350, பக்கம் 824

காலச்சுவடு பதிப்பகம், 669 கே. பி. சாலை,
நாகர்கோவில் 629 001, தொலைபேசி எண் : 222525



## காலச்சுவடு விளம்பரக் கட்டணம்

| | | ரூ. |
|---|---|---|
| முழுப் பக்கம் | : | 2000 |
| அரைப் பக்கம் | : | 1000 |
| கால் பக்கம் | : | 500 |
| ஒரு பத்தி (1/3 பக்கம்) | : | 650 |

புத்தக விளம்பரங்களுக்கு 25% தள்ளுபடி உண்டு.
ஒரு வருடம் (ஆறு இதழ்கள்) தொடர்ந்து வரும் விளம்பரங்களுக்கு 50% தள்ளுபடி
புத்தகச் (சிறு) விளம்பரம். (மிகக்குறைந்த கட்டணம்.) ஒரு நூலுக்கு ரூ.100. ஒரே பதிப்பகத்தின் அதிகப்படியான ஒவ்வொரு நூலுக்கும் ரூ.50. அளவு ஒரு பத்தியில் மூன்றில் ஒரு பங்கு (எட்டு செ.மீ.) தள்ளுபடி எதுவும் இல்லை.



மறைந்த இலங்கை எழுத்தாளர் வை. அஹ்மத்தின் தொகுக்கப்படாத இரு தொகுதிகள் தற்போது உயிர்ப்பைத் தேடும் வேர்கள் வெளியீடாக வந்திருக்கின்றன.

**முக்காடு**
(சிறுகதைகள்)

1967 முதல் 92 வரையான கால இடைவெளியில் வெளி வந்த, கிராமிய வாழ்வின் அழகும் அதன் உள்ள டுக்கும் அவை கட்டமைக்கும் அதிகாரத்தையும் வெளிப்படுத்தும் கதைகள் அடங்கிய 26 சிறுகதை களின் அழகிய தொகுப்பு.

பக்கம் 144 விலை இல. ரூ.120

**தரிசனங்கள் : நிலவின் நிழலில்**
(குறுநாவல்கள்)

1968இலும் 92இலும் வீரகேசரியில் வெளிவந்த இரு குறுநாவல்களின் தொகுப்பு.

பக்கம் 48 விலை இல. ரூ.60

பதிப்பாசிரியர் : ஏ. பி. எம். இத்ரீஸ்
வெளியீடு : உயிர்ப்பைத் தேடும் வேர்கள்,
வாழைச்சேனை
தொடர்புகள் : A.B.M.Irfan
Mohamood alim Road,
Valaichennai 05 (30400)
Srilanka
TP. 009465 57170




படிப்பகம்

www.padippakam.com



## அதிகாரம் யாருக்கு?

# தமிழக அரசியல் சூழல்

ஓரஞ் செய்தி டாமே - தருமத்
துறுதி கொன்றி டாமே
சோரஞ் செய்தி டாமே - பிறரைத்
துயரில் வீழ்த்தி டாமே
ஊரை யாளு முறைமை - உலகில்
ஓர்பு றத்து மில்லை.

பாரதி *(பாஞ்சாலி சபதம்)*



## தமிழக தேர்தல் முடிவுகள் : வரலாற்று நோக்கில் ஒரு பார்வை

இரா. செழியன்

சுதந்திரம் பெற்ற பிறகு பல ஆண்டுகளுக்கு இந்திய அரசியலில் மத்தியிலும் மாநிலங்களிலும் காங்கிரஸின் ஆதிக்கம்தான் இருந்தது. 1957இல் கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் வெற்றி பெற்றதுதான் இந்தப் போக்கில் முதல் மாறுதலை ஏற்படுத்தியது. 1967இல் இந்த நிலையில் கணிசமான மாற்றம் ஏற்பட்டது. அப்போதுதான் பல மாநிலங்களிலும் எதிர்க்கட்சிகள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தன. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் வென்று தனித்து ஆட்சியைப் பிடித்தது.

அன்றிலிருந்து இன்றுவரை காங்கிரஸோ மற்ற தேசியக் கட்சிகளோ ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. தி. மு. க. பிளவுபட்ட பிறகும்கூட திமுகவோ அதிமுகவோ தனி பலத்துடன் ஆட்சியைப் பிடிக்கும் நிலைதான் இன்று வரை இங்கு நிலவுகிறது. இந்த இரு கட்சிகளும் கூட்டணி வைத்துத்தான் தேர்தலை சந்திக்கின்றன என்றாலும் இறுதியில் இந்த இரண்டில் ஒரு கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்து விடுகிறது. சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலும் இதற்கு விதிவிலக்கல்ல.

இந்திய அரசியலில் 1989இல் ஒரு மாற்றம் வந்தது. முதன்முதலாக மத்தியில் ஒரு கூட்டணி ஆட்சி பதவி ஏற்றது. (1977இல் பல கட்சிகள் ஒன்றாக சேர்ந்து ஜனதா கட்சி என்ற அமைப்பை ஏற்படுத்தி வெற்றி பெற்றன. ஆனால் அதுவும் ஒரே கட்சியாகத் தேர்தலை சந்தித்து வென்று ஆட்சியைப் பிடித்தது. எனவே அதைக் கூட்டணி ஆட்சி என்று சொல்ல முடியாது.) வி. பி. சிங் தலைமையில் மத்தியில் 1989இல் கூட்டணி ஆட்சி ஏற்பட்ட பிறகு மத்தியில் ஒரு கட்சி ஆட்சி முடிவுக்கு வந்தது. 1991இல் பி. வி. நரசிம்மராவ் தலைமையில் அமைந்த காங்கிரஸ் ஆட்சிகூட சிறுபான்மை அரசுதான். வெளியில் இருந்து சில கட்சிகள் தந்த ஆதரவில்தான் அது பிழைத்துவந்தது. மாநிலக் கட்சிகளின் துணை இல்லாமல் மத்தியில் ஆட்சி அமைக்க முடியாத நிலை 1989க்குப் பிறகு உருவாகியிருக்கிறது. அதே சமயம் மாநிலக் கட்சிகள் வலிமை பெற்று வளர்ந்து வந்தன. அந்த வலிமை மத்திய அரசை நிர்ணயிக்கும் அளவுக்கு வளர்ந்தது.

சுருக்கமாக சொல்வதானால் தேசியக் கட்சிகளின் பரப்பும் வலிமையும் குறைந்து ஒரு சில மாநிலங்களுக்குள் அவை சுருங்கிவிட்டன. மாநிலக் கட்சிகள் வலிமை பெற்று தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்றவையாகி விட்டன. இதன் விளைவு தமிழகத்திலும் பிரதிபலித்தது.

தமிழகத்தைப் பொறுத்தவரை மக்களின் ஆதரவு எப்போதும் ஒரு மனதாக ஒரு கட்சிக்கே சாதகமாக அமையும். யாருக்கும் பெரும்பான்மை இல்லாத தொங்கு சட்டமன்றம் இங்கு ஏற்பட்டதே இல்லை. இந்தத் தேர்தலும் அதற்கு விலக்கல்ல. தேர்தல் முடிவுகள் அதிமுகவுக்கு சாதகமான அமைந்ததற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக, கடந்த தேர்தல்களில் திமுக கூட்டணியில் இருந்த தமாகா, பாமக, மதிமுக ஆகிய கட்சிகள் திமுகவை விட்டு விலகிவிட்டன. இவற்றில் மதிமுக தவிர மற்ற கட்சிகள் அதிமுக பக்கம் போய்விட்டன. இது அந்தக் கட்சிக்குப் பெரும் சாதகமாக அமைந்துவிட்டது.

இரண்டாவதாக, திமுக ஆட்சியில் பணப் புழக்கம் இல்லை என்ற கருத்து கிராமப்புற மக்களிடம் ஆழமாகப் பரவிவிட்டது. பணப் புழக்கம் என்பது சாதாரண மனிதன் நோக்கில் பண வரவுதான். வேலைவாய்ப்பு சுருங்கி, விவசாயம், கைத்தறி போன்ற துறைகளில் வருமானம் குறைந்துவிட்டது. இந்த பாதிப்புக்குப் பெருமளவில் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் காரணம் என்றாலும் மாநில அளவில் புதிய தொழில்களைத் தொடங்குதல், வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துதல் ஆகிய செயல்களில் மாநில அரசு சிறப்பாகச் செயலாற்றவில்லை. அது மட்டுமின்றி மத்திய அரசில் பங்கு வகிப்பதால் மத்திய அரசின் தவறுகளுக்கும் மாநில அரசு பொறுப்பேற்க வேண்டியிருந்தது.

அடுத்தபடியாக, தேர்தலுக்கு முன்பு வெளியான பல கணிப்புகளும் அதிமுக வெற்றி பெறும் என்று கூறின. இந்தச் செய்தி ஏற்படுத்திய நம்பிக்கை அதிமுகவுக்கு ஆதரவாக அமைந்துவிட்டது. ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்து அவர் மீது மக்களுக்கு அனுதாபம் ஏற்பட்டது. இதெல்லாம் போதாது என்று ஜாதிக் கட்சிகளுக்கு திமுக ஆதரவளித்து ஊக்குவிக்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்தக் காரணங்களால் திமுக தோற்று அதிமுக வெற்றி பெற்றது.

தேர்தல் முடிவு என்பது ஒரு ஆட்சி மீது மக்கள் வைத்துள்ள மதிப்பீட்டைப் பிரதிபலிக்கிறது. அடுத்து அமையும் ஆட்சி தங்களுக்கு நல்லது செய்யும் என்ற அவர்களது நம்பிக்கையையும் அது காட்டுகிறது. அந்த வகையில் மக்கள் காட்டிய நம்பிக்கையைப் பொய்யாக்காமல் நல்லாட்சி தர வேண்டிய பொறுப்பு ஜெயலலிதாவுக்கு இருக்கிறது. எல்லாத் தரப்பு மக்களின் நலனுக்கும் ஏற்றவாறு ஆளுங்கட்சி செயல்படவேண்டும்.

கேட்டு எழுதியவர் : அரவிந்தன்



படிப்பகம்


www.padippakam.com



# வெட்சித் திணை

பிரபஞ்சன்

கத்திரி வெயில்காலக் காலை நேரங்களில் பெரிய வித்தியாசம் இருப்பதில்லை. உதிக்கும் போதே சூரியக் கதிர்கள் எரிக்கத் தொடங்கும். அப்படியான ஒரு காலை நேரம். எங்கள் காலனிக்கு எதிரே இருக்கும் உணவு விடுதிக்குப் புறப்படுகிறேன், காலைக் காபிக்கு. மண்ணில் தேங்கிய தண்ணீரில், காக்கைகள். குடித்தலா குளியலா? சுற்றும் இரும்புக் கதவைத் தள்ளினால் தெரு வந்துவிடும். சுற்றும் இரும்புக் கதவு, அண்மையில் தாள் போடப்பட்டது. கதவு இல்லாத வழியாகத்தான் முதலில் இருந்தது. மாடுகள் புகுந்துவிடுகின்றன என்பதால், நிர்வாகம் காலனியின் பக்கவாட்டில் கதவு பொருத்தியது. இப்போது சுழல் கதவுக்குள் தங்கள் உடம்பைத் திணித்து நுழைபவர்கள் மனிதர்கள்தான் என்று எங்கள் காலனி நிர்வாகம் நம்புகிறது.



நான் தெருவுக்கு வருகிறேன். வலப்பக்கம் பெட்டிக்கடை. காலைப் பேப்பர்களின் போஸ்டர்கள் வரிசையாகத் தொங்குகின்றன. வழக்கத்துக்கு மாறாக நிறைய பேர் நின்று போஸ்டர் செய்திகளில் தங்களை நுழைத்துப் பிசைந்து தாமே அவைகளாக மாறிப் போயிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த லாட்டரிச் சீட்டு விற்பனையாளர் ஒருவர், என்னைப் பார்த்துத் தலை அசைக்கிறார். அவர் கண்களில் வன்மம் கொப்பளிக்கிறது. எதிரியை அழித்து வீழ்த்திய வன்மம். யுத்தத்தின் தொடக்கத்தில் தீக்குச்சித் தீயாக இருந்தது அது. யுத்தம் முடிந்து, பட்டாபிஷேகமும் நடந்து முடிந்த மறுநாள் காலையிலும், அந்தத் தீ, ஜுவாலையுடன் பல்கிப் பரந்து, நீட்சி கண்டிருந்தது. உணவுப் பையில் மதிய உணவுடன் அலுவலகம் செல்பவராகத் தோன்றிய ஒரு மத்திய வயதுக்காரர், மகிழ்ச்சிப் புன்முறுவல் கூடிய தன் முகத்தை அங்கிருந்த எல்லோரிடமும் காட்டினார். அவர் முகத்திலிருந்த அந்தப் புன்னகை, ஒரு பட்டுப்பூச்சியாக மாறி, எல்லாருடைய உதடுகளின் மேலும் உட்கார்ந்து, பறந்து மறைந்தது. இரவு காவற்காரர், எப்போதுமே சட்டைக் கையை முட்டிக்கு மேல்தான் சுருட்டி விட்டுக்கொள்வார். அந்தச் சுருட்டுதல் இன்னும் மேலேறி, இப்போது கையும் தோளும் இணையும் இடத்தில் இருந்தது. துடை தெரிய வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, தெருவை, தெருவின் மேல் விரியும் காலை வெயிலை முறைத்துக்கொண்டு நின்றார். மனத்தளவில் எவரோடும் மோதுவதற்கான தயார் நிலையில் அவர் இருப்பது தெரிகிறது. அவர் வழிபட்ட தலைவர், அரியணையில் இருக்கும்போது அவரை யார் என்ன செய்துவிட முடியும்?

கடந்த ஐந்தாண்டு காலப் படையெடுப்பு இது. கோட்டையைச் சுற்றிப் பலமான அகழி இருந்ததால், கோட்டை முற்றுகை சுலபமாக இல்லை. தவிரவும், இதுவும் தமிழின் மரபின்பால் பட்டது. எதிரி நாட்டின் மேல் படையெடுக்க ஆசைப்படும் அரசன், சட்டென்று படையெடுப்பு நிகழ்த்துவது இல்லை. எதிரி நாட்டின் பசு மந்தையைக் கொள்ளை அடித்து வர ஆட்களை அனுப்புவான். இதன் பெயர் வெட்சி எனப்படும். இக்காரியத்தைத் திணை அல்லது ஒழுக்கம் என்று இலக்கணம் சொல்லும். இதைப் போய் ஒழுக்கம் எனலாமா என்றால், எனலாம். ஒழுக்கம் என்றால், வாழ்க்கை முறை என்றே பொருள். பசுவைப் பறிகொடுத்தவன் மீட்டு வர ஆட்களை அனுப்புவான். இது கரந்தை எனப்படும். போர் தொடங்குவது வஞ்சி. முற்றுகையைத் தடுப்பது காஞ்சி. கோட்டையைக் காத்து நிற்பது நொச்சி. கோட்டையை வளைப்பது உழிஞை. வெற்றியை வாகை என்றனர். வெற்றி பெற்றவரைப் புலவர்கள், அறிவு ஜீவிகள் பாராட்டிப் பலன் பெறுவது பாடாண் திணை. தமிழ் கண்ட அகம், புறம் என்ற இரு திணைகளில், புறத்தின் அதாவது அரசியலின் இலக்கணம் இது.

இது, இரண்டாயிரம் ஆண்டு மரபு. சேரர்களில் முதலில் அறியப்படும் மன்னன் உதியஞ்சேரன். இவன் பாரதப் போரில் கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் சோறு போட்டான். ஆகவே இவன் பெயர் 'பெருஞ்சோற்று' உதியன் சேரலாதன். சோழர்களில் சிறந்தவன் கரிகால பெருவளத்தான். பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை ஆகிய இரண்டு இலக்கியங்கள் இவனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டன. இவன்தான் காவிரியில் அணை கட்டியவன். பாலம் கட்டியவன் என்றும் சொல்லலாம்.

சேரர்கள், சோழர்கள், பாண்டியர்களாகிய தமிழர்கள், தங்களுக்குள் சண்டை போடுவதைப் பெருமையாகக் கொண்டதோடு, வாழ்க்கையாகவும் கொண்டார்கள். ஓய்வு நேரத்தில் காதலித்தார்கள்.

நடந்து முடிந்த போரும் அந்த மரபு வகைப்பட்டதே.

மைசூருக்கு மகிஷாபுரி என்று ஒரு பெயர். மகிஷம் என்றால் எருமை. எருமையூர் என்பது தமிழ் மரபு. மகிஷம் - மைசூர் எனத் திரிந்தது. மகிஷாபுரி, சேர நாட்டைச் சேர்ந்தது. சேரர்களின் தலைவர், திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழர்மேல் படையெடுத்து அவரது கோட்டையை முற்றுகை இட்டுப் பிடித்திருக்கிறார். இப்போது கோட்டையில் இலைக்கொடி பறக்கிறது. இலைக் கொடி சார்ந்து போர் செய்த மறவர்கள், போரின் மயக்கம் தீராது அம்பறாத் தூணியில் போடப்படாத அம்புகளோடு அலைகிறார்கள். சமிக்ஞை வரும் வரையில் அவர்கள் அவ்வாறுதான் இருக்க வேண்டும். அதன் பிறகே, அவர்கள் தங்கள் பணியான நிலம் அழித்தல், வீடு கொளுத்தல், மூக்கறுத்தல் போரில் ஈடுபடவேண்டும். இது, பதிலுக்குப் பதில். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால், சோழப் பேரரசு கோட்டையைப் பிடித்து, அவர்களது புலிக்கொடி பறக்கையில் நடந்தது, திரும்ப நடத்தப்படவேண்டுமே. வரலாறு திரும்பவும் எழுதப் படாது என்பது நியதி அல்லவே!

பசு கவர்தல் தமிழர் நியதியாக இருக்கையில், அதைக் 'கொள்ளை' என்பது எப்படி? சோழர், சேரர் மேல் கொள்ளைப் பழி சுமத்துவது, போரின் இலக்கணம் மீறல் அல்லவோ என்பது சேரரின் பதிலாக இருக்கிறது. எங்கள் வீரத்தைக் கொச்சைப்படுத்தாதே என்கிறார்கள் சேர மறவர்கள். சோழரும், ஒரு காலத்தில் பசு கவர்ந்தவர்கள் தானே? அவர்களது, வீரம் என்றால், எங்களது கொள்ளையா என்கிறார்கள் சேரர். நியாயம் போலத் தானே இருக்கிறது? 'ஆம், ஆம்' என்கிறார்கள் மக்கள்.

வரலாற்று நோக்கில், இந்தப் போர், சேரன் பெருஞ்சோற்று உதியன் பரம்பரைக்கும், கல்லணை கண்ட கரிகாற்சோழர் பரம்பரைக்குமான பரம்பரைப் போர் என்பது தெளிவு. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த தமிழர் கவிமரபுக் கேற்ப, சோழரைச் சுற்றி ஏழெட்டு கவிச் சக்ரவர்த்திகள், எழுபது எண்பது கவி மாமன்னர்கள், கவி இளவரசர்கள், கவி மிட்டாமிராசுகள், கவிப் பிஸ்தாக்கள் இருந்து கொண்டு, மாமன்னரின் தோள் வலிமை, வாள் வலிமையைப் புகழ்ந்து கவிபாடி



படிப்பகம்

www.padippakam.com



யது போல, வென்ற பேரரசரின் பெருமையைப் பாட மற்றும் எழுநூறு எண்ணூறு கவிச் சக்ரவர்த்திகள் கிடைக்காமலா போய்விடுவார்கள்? அதுவும் தமிழ்நாட்டில்? மகிஷாசுரனை வதம் செய்த மகிஷாசுர மர்த்தினியாக வெற்றி பெற்றவரைப் பாடிக் காவியம் புனையாமலா போய்விடுவார்கள்?

அசந்தர்ப்பமாக, சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் கண்ட ஒரு காட்சி என் நினைவுக்கு வருகிறது. சற்றே ரஸக்குறைவானது.

சேக்கிழார் அரங்கில் ஒரு விழா. முதுபெரும் தலைவர் மேடையில் இருக்கிறார். திடுமென அவருக்கு இயற்கை உபாதை. தொண்டர் அவரை அரங்கின் பின் அழைத்துச் செல்கிறார். அரங்கின் பின்தான் நானும் நண்பர்களும் (சிகரட்பிடிக்கும் வசதிக்காக.) தலைவர், 'தேமே' என்று நிற்கிறார். தொண்டர், தலைவர் வேஷ்டியை விலக்கி, தன் இரு விரல்களை ஆங்கில எழுத்து 'வி' போல் பண்ணிக்கொண்டு, அந்த உறுப்பைத் தாங்கி, இருக்கச் செய்கிறார். தலைவர் அவஸ்தை முடிகிறது. தொண்டர் அதை உதறி, அதனிடத்தில் அதைப் பொருத்துகிறார். அந்தத் தொண்டர் குறுகிய காலத்தில் லௌகிகச் சௌகர்யங்களை அனுபவித்து வாழ்ந்து அண்மையில் தான் மடிந்தார்...

அந்த உணவு விடுதியில் காவல் துறை சகோதரர்களுக்கு உணவு, காபி இலவசம். பிளாஸ்க் எடுத்து வந்து அடுத்த வேளைக்கும் காபி வாங்கிச் செல்வதைப் பார்த்திருக்கிறேன். காவலர்கள், மேற்படி போர்வீரர்களை வணங்கி, நட்புமுறை முகங்களைத் தோழமையுடன் தந்தார்கள். இனிமேலாவது நாங்கள் சங்கம் அமைக்கலாம் என்று திருப்தி கொண்டார்கள்.

ஒரு ஆட்டோ எங்கள் முன் வந்து நின்றது. ஆட்டோக்காரருக்கு, நண்பரைத் தெரிந்திருந்தது. வந்தவர், கட்டைவிரலை உயர்த்தி இருந்தவர்க்கு காட்டினார். இருந்தவரும், அதைச் சந்தோஷத்துடன் ஆதரித்தார். '... ஜெயிச்சாச்சி... இனி பணப் புழக்கம் இருக்கும்' என்றார். இனி, தினம் தினம், அவர் பைகளில் லட்சம் லட்சமாகப் பணம் புழுங்குமாய் இருக்கும். அவர் இவரிடம் ஒரு லாட்டரிச் சீட்டு, கூட்டுத் தொகை ஒன்பது வருமாறு வாங்கிக்கொண்டார். ஒன்பது அவரது ராசி எண். ஏழு கோடி அடிக்கவில்லை என்றால் என்ன? லட்சமாக இருந்தாலும் அவர் மறுக்கப் போவது இல்லை. வந்தவர் விடை பெற்றார். அவர் முதுகில், ஒரு அம்பறாத் தூணி தொங்கிக் கொண்டிருந்தது. பேண்ட்டிலிருந்து ரத்தம் தோய்ந்த குறுவாள் முனை தெரிந்தது.

தெருவில் கால் புதைந்தது. தார் ரோடில் கால் புதைய வாய்ப்பில்லை. உடைந்த ரதங்கள், இறந்த குதிரைகள், வெட்டுண்ட தலைகள், உடல்கள், கத்திகள், கேடயங்கள், ரத்தமும், நிணமும் சேர்ந்த சேறு. தேர்ச் சத்தம், ஜெயகோஷம், காற்றில் நீலத்தைப் பொடியாகத் தூவி விட்டிருக்கிறது.

மனைவி, கீரைக்காரியுடன் மல்லுக் கட்டிக் கொண்டிருந்தாள். நாலணா பேரம், ஒரு வழியாகத் திகைந்தது.

வந்திருந்த காலைப் பத்திரிகைகளைப் படிக்க ஆரம்பித்தேன். மகுடம் ஏந்திய வெற்றி முகங்கள், பக்கம் தோறும், சிரித்துக் கெக்கலித்தன. இரும்பு டின்னைச் சுரண்டும் சத்தம் கேட்டது. எங்கள் வீட்டு அரிசி டின். டின்னின், நாலாபுறமும் ஒதுங்கி இருக்கும் அரிசியைச் சேர்த்துவாரி முறத்துக்குள் கொட்டிக் கொண்டிருந்தாள் அவள். இந்தச் சத்தம், காலையிலும், மாலையிலும் இடையறாமல் கேட்கும் சப்தம். சேரர் காலத்திலும், சோழர் காலத்திலும், இனி வரப் போகும் பாண்டியர் காலத்திலும் இது கேட்கும். ■

# வால்டர் தேவாரமும் ஜனநாயகமும்

**கானகன்**




"மனித உரிமை மீறல்கள் பற்றி அனாவசியமாக என்னிடம் பேசாதீர்கள், எனது ஒரே இலக்கு வீரப்பன் தான். அவனைப் பிடிப்பதே என் ஒரே குறிக்கோள்" என்று அதிரடிப்படையின் புதிய தலைவர் வால்டர் ஐசக் தேவாரம் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

புரட்சித் தலைவி ஆட்சி மீண்டும் மலர்ந்து விட்டது. மீண்டும் பாலும் தேனும் ஆறாக ஓடப் போகிறதோ இல்லையோ, வனப்பகுதிகளில் இரத்த ஆறு ஓடப்போகிறது அப்பாவி மலைவாழ் மக்களின் கூக்குரல் இந்தியாவெங்கும் எதிரொலிக்கப்போகிறது.

இனி என்ன ஆகுமோ, எப்படியெல்லாம் போலீசார் தங்களைத் துன்புறுத்தப் போகிறார்களோ என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பவர்கள் வீரப்பன் நடமாடும் வனப்பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள் தான். ஏற்கெனவே ஒருமுறை இதே அதிரடிப்படைக்கு தேவாரம் தலைமை தாங்கியபோதுதான் சொல்லொணா மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்தன. அப்பாவி மலைவாசிகள் பலர் கொல்லப்பட்டனர், சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர், அவர்கள் வீட்டுப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர், நூற்றுக்கணக்கானோர் சிறையிலடைக்கப்பட்டனர். தலைவர் என்று அறிவிக்கப்பட்டவுடன் நிகழ்ந்த முதல் செய்தியாளர் சந்திப்பில் தேவாரம் வழக்கம்போல தனது மீசையை முறுக்கிக்கொண்டு இந்தப் பணிக்கான ஒப்பந்தக் காலம் ஒரு வருடம்தான். அதற்குள்ளேயே வீரப்பனைப் பிடித்து விடுவேன் - உயிருடனோ, பிணமாகவோ - விடப்போவதில்லை என்று சூளுரைத்தார்.

ஏற்கனவே வீரப்பனுக்கும் அவரைத் தேடும் காவல் துறைக்குமிடையில் சிக்கித் தவிப்பது பொதுமக்கள்தான். இப்போது தேவாரம், மற்றும் ஜெயலலிதா ராஜாங்கத்தில் அவர்கள் இன்னமும் கூடுதலாக அவதிப்படப் போகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவில் நிலவுவதாகக் கூறப்படும் மக்களாட்சியின் உண்மையான முகங்கள் ஜெயலலிதாவும் தேவாரமும்தான் என்றே தோன்றுகிறது. ஊரைக் கொள்ளையடித்து உலையில் போடலாம்; லூயி மன்னன் போல நான்தான் அரசு, நானே மக்கள், நானே எல்லாம் எனலாம்; மக்களும் திரண்டு வந்து அப்படிப்பட்ட நபருக்கு வாக்களிப்பார்கள்; அவர் முதல்வராகி, தன் மீதான வழக்குகளை விசாரித்தவர்களை ஒரு கை பார்க்கலாம்.

தேவாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எண்பதுகளில் நக்சலைட்டுக்களை ஒழிக்கிறேன் பேர்வழி என்று சொல்லிக்கொண்டு அப்பாவி இளைஞர்கள் பலரை வட மாவட்டங்களில் சுட்டுத்தள்ளினார். இப்படியெல்லாம் செய்யலாமா என்று கேட்டதற்கு, கம்யூனிஸ்டுகளை ஒழிக்கவேண்டும், அதற்காக எதையும் செய்யத் தயங்க மாட்டேன் என்று முண்டா தட்டினார்.

நக்சலைட் இயக்கம் ஒடுக்கப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் கொல்லப்பட்ட இளைஞர்களுக்கு,



படிப்பகம்

www.padippakam.com



அழிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, என்ன பதில்? கிராமப் புறங்களில் நடந்து வந்த, இன்னமும் தொடரும் பண்ணையார்களின், மேல்சாதியினரின் அட்டூழியங்கள், அத்துமீறல்கள், தாங்கொணா வறுமை, இவையெதுவும் தேவாரத்தின் கண்ணை உறுத்தாது. நக்சலைட் ஒழிப்பில் அவர் மும்முரமாக ஈடுபட்டிருந்தபோது, அவரைப்பற்றி கேரளாவைச் சேர்ந்த தலைசிறந்த எழுத்தாளர் மற்றும் கார்ட்டூனிஸ்ட் ஓ. வி. விஜயன் கூறினார் 'தேவாரம் லஞ்சம் வாங்காத அதிகாரியாக இருக்கலாம், ஆனால் அன்றாட மக்களின் பிரச்சனைகளோ, லட்சியவாதிகளின் கனவுகளோ அவருக்குப் புரியாது. அவர் ஒரு காவல் துறை அதிகாரி. சட்டம் ஒழுங்கினைப் பராமரிக்க வேண்டும், சட்டத்தை மீறுபவர்களை தண்டிக்க வேண்டும், தப்பியோடுபவர்களைப் பிடிக்கவேண்டும் அவ்வளவு தான் அவருக்குத் தெரியும். இந்தப்பணியில் எந்த குறுக்கீடு வந்தாலும் தயவுதாட்சணியம் இல்லாமல் அதையெல்லாம் நொறுக்கித் தள்ளவேண்டும். இப்படித்தான் அவர் சிந்தனையோடுகிறது. தெய்வபக்தி மிகுந்த ஒரு ப்ராட்டஸ்டண்ட் கிறித்தவர் என்ற முறையில், அவருக்கு கறுப்பு, வெள்ளை இரண்டுதான் தெரியும். இடைப்பட்ட நிறங்கள் கண்ணில் படாது. பாவம், புண்ணியம் என்ற நேரெதிர் துருவங்களைத்தான் அறிந்து வைத்திருக்கிறார். ஏன் பாவச் செயல் புரியப்படுகிறது என்பது பற்றியோ, எது பாவம் என்பது பற்றியோ அவருக்குத் தெளிவான சிந்தனை கிடையாது.'

இப்படிப்பட்ட ஒரு மனிதரிடம்தான் ஆயிரக்கணக்கான மலைவாழ் மக்களின் எதிர்காலத்தினை ஜெயலலிதா ஒப்படைத்திருக்கிறார். தேவாரத்தை எதிர்த்து நீதிபதி சதாசிவம் கமிஷனின் முன் சாட்சியமளித்த பெண்களின் கதி என்ன? அதிரடிப்படையினர் பல்வேறு அட்டூழியங்களைச் செய்தார்கள் என்று கூறியவர்களுக்கெல்லாம் இப்போது என்ன தண்டனை கிடைக்கும்?

ஒருபுறம் நானே சர்வமும் என்று அகங்காரத்துடன் உலவும் ஜெயலலிதா; இன்னொரு புறம் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதே என் பணி, குறுக்கே எது வந்தாலும் அதனை நிர்மூலமாக்குவேன் என்று சூளுரைத்து செயல்படும் தேவாரம்; ஏதோ இத்தகைய மனிதர்கள் தான் இந்தியாவின் இறையாண்மையினைக் காக்க அவதரித்தவர்கள் என்ற ரீதியில் எழுதும் சோ போன்ற விமர்சகர்கள்; அதனை அப்படியே நம்பும் படித்தவர்களாக தங்களை கருதிக் கொள்ளும் நடுத்தர வர்க்கத்தினர் - இவர்கள் ஆட்சியே இந்திய ஜனநாயகம். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பல லட்சக்கணக்கான பிரஜைகளுக்கும் இந்த ஜனநாயகத்திற்கும் துளியும் தொடர்பில்லை.

தேர்தல் பிரச்சாரத்தின்போது நான் கண்ட சில காட்சிகள் எத்தகையதொரு மக்களாட்சி நடைபெறுகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டின. தேனியருகே தேவாரம் - எங்கு போனாலும் தேவாரத்திடமிருந்து தப்ப முடியாது போலிருக்கிறது! - கிராம பேருந்து நிலையம். ஒரு மூதாட்டி. பல மணி நேரங்களாக காத்துக் கொண்டிருந்தார் போலிருக்கிறது. எந்தக் கட்சிக்கு ஓட்டுப் போடுவீர்கள் என்று கேட்டதற்கு, தனது இயலாமையை, ஏழ்மையினை, கால் கடுக்கக் காத்திருப்பதை, வயதான காலத்தில் தனித்து விடப்பட்டிருப்பதையெல்லாம் சொல்லிப் புலம்பிவிட்டு, எனக்கெல்லாம் எதற்கய்யா ஓட்டு என்றும் கூறினார் மனங்கசந்து. நானும் எனது நண்பரும் ஏமாற்றத்துடன் திரும்பிய போது, அவரே எங்களை விளித்து, தம்பி ஆனாலும் நான் ஓட்டுப் போடுவேன் பாத்துக்க என்றார். ஏனாம்? ஓட்டுப் போடாட்டி செத்து போயிட்டதா அருத்தமாமில்ல, கார்டெல்லாம் புடிங்கிருவாங்களாமே... அதனால் போடுவேன்... யாரு காசு கொடுப்பாகளோ அவுங்களுக்கு...

எம். ஜி. ஆர் ப்ரூக்ளின் மருத்துவமனையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தபோது, இங்கு சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்தன. ஆண்டிப்பட்டியில் அவரது வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது, அவருடைய கைரேகையை ஒத்தி எடுத்திருந்தார்கள். அவர் சுய நினைவில் இருக்கிறாரா என்பதுகூட தெரியாத நிலையிலும் அவரது மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த நேரம், அப்பகுதியில் பெருவாரியாக எங்கள் வாக்கு இரட்டை இலைக்கே, எம். சி. ஆருக்கே, அந்த மகராசனுக்கே என்று கோஷங்கள் எழ, ஒரு கிராமத்தில் நான் அவர் உயிருடன் இருப்பதே சந்தேகத்தில் இருக்கிறது, எதற்கு நீங்கள் அவருக்கு வாக்களிக்கிறீர்கள் என்று - சற்று தயங்கித் தயங்கித்தான் - கேட்டேன். சில பெண்கள் சரமாரியாக திட்டி அடிக்கவே வந்து விட்டார்கள்.

அவர்களை சமாதானப்படுத்திய ஒரு முதியவர் கூறினார் 'ஒங்களுக்கேன் தம்பி இந்த வம்பெல்லாம்... ஒண்ணு வெச்சிக்கிங்க... அவரு போயிட்டாருன்னே இருக்கட்டுமே... அதுனாலே என்ன? இதுக்கப்புறம் அவருக்கு ஓட்டுப்போட எங்களுக்கு சான்ஸ் கிடைக்காதுய்யா... அதுனாலே நாங்கள்ளாம் அவரு உயிரோட இருந்தாலும் சரி, இல்லேன்னாலும் சரி அவருக்குத்தான் ஓட்டுப் போடுவோம்.' ஜெயலலிதா மீது அப்படிப்பட்ட வெறிகலந்த பக்தி ஏதும் இல்லை. புதிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக பண வீக்கம் அதிகமாக, விலைவாசி ஏற, விவசாய விளைபொருட்கள் விலை வீழ, வாழ்க்கைச் சுமை கடுமையாக, வெகுண்டெழுந்த மக்களின் தீர்ப்பே அஇஅதிமுக அணிக்கு மாபெரும் வெற்றி என்பது எனது கணிப்பு.

ஜெயலலிதா ஊழல் செய்யவில்லையா என்றால், அட போய்யா யார்தான் யோக்கியம் என்ற பதிலே திரும்பத் திரும்பக் கிடைத்தது. அவரது யதேச்சாதிகார மனப்பான்மை பற்றியும் எவரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆக 17 ஆண்டுகளுக்கு முன் வாக்களித்தவர்களைவிட, இன்று வாக்களித்தவர்கள் சற்று சிந்தித்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆயினும் பிரச்சினையின் பல பரிமாணங்களை அவர்கள் உணரவில்லை என்பது வெளிப்படை.

மதவாதம் மற்றும் பற்றி புதிய பொருளாதாரக் கொள்கைகளைப் பற்றி கவலைப்படும் கம்யூனிஸ்ட்கள் ஜெயலலிதா உருவாக்கப்போகும் ஆபத்துகளைப் பற்றி சிந்திப்பதில்லை. பாரதீய ஜனதாவையும் மக்கள் விரோத புதிய பொருளாதாரக் கொள்கைகளையும் அரவணைத்துக் கொண்ட கருணாநிதியா, இதையெல்லாம் எதிர்ப்பதாகச் சொல்லிக் கொள்ளும் யதேச்சாதிகார ஜெயலலிதாவா, இதுதான் மக்களின் முன் வைக்கப்பட்ட கேள்வி என்றால் நமது ஜனநாயகம் எப்படிப்பட்ட ஒரு இக்கட்டில் இருக்கிறது என்று நாம் யூகித்துக் கொள்ள வேண்டியது தான்.

இத்தகையதொரு சூழலில் யாரையும் வேட்டையாடுவேன், எனக்கு வேண்டியது வீரப்பன்தான் என்று கொக்கரிக்கும் தேவாரம் போன்ற அதிகாரிகளிடமிருந்து மக்களைக் காப்பது என்பது அவ்வளவு எளிதான வேலையல்ல.

ஜனநாயகமென்றால் ஜெயலலிதா, கம்யூனிசம் என்றால் ஸ்டாலின் அல்லது போல்பாட் என்று வரலாறு நமக்குக் கூறுமானால் மனித குலத்தின் எதிர்காலம் பற்றி மகிழ்ச்சி அடைய ஏதுமில்லை. ■



படிப்பகம்

www.padippakam.com



# நெடும் புனலுள் வெல்லும் முதலை

இராசேந்திர சோழன்



எபனேசர்

தமிழகத்தின் 12வது சட்டப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் கட்சிகளின் வெற்றி தோல்விகள் குறித்த மதிப்பீடுகள் வெவ்வேறு வகைப்பட்டு இருந்த போதிலும், சாரத்தில் இம்முடிவுகள் ஜெ. அனுதாப ஆதரவு அலையோ அல்லது தி. மு. க. எதிர்ப்பு அலையோ ஏதும் வீசிடவில்லை என்பதையே மெய்ப்பிக்கின்றன.

கட்சிகளுக்கு உள்ள வாக்கு வங்கிகள் அப்படியே நீடித்து வந்துள்ளன. தமிழகத்தில் தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் உள்ள பலம் கிட்டத்தட்ட எப்போதும் சரிபாதியாகவே இருந்து வந்திருக்கிறது. நிலையான வாக்கு வங்கிகள் உள்ள பிற கட்சிகள் எந்தக் கட்சியோடு கூட்டு சேர்கிறதோ அந்தக் கூட்டணியே வெற்றி பெறுவது வழக்காகியிருக்கிறது. இந்தத் தேர்தலிலும் அதுவே நேர்ந்திருக்கிறது.

பதிவான மொத்த வாக்குகளில் அ.தி.மு.க. அணி 140 லட்சமும், தி.மு.க. அணி 108 லட்சமும் பெற்றுள்ளன. கூடுதல் 32 லட்சம் கூட்டணிக் கட்சிகளின் வலுவால் பெறப்பட்டதாகக் கொள்ளலாம். இதில் தில்லி அரசின் பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட நியாய விலைக்கடைப் பொருட்களின் விலையேற்றம், பேருந்துக் கட்டண உயர்வு, விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை வீழ்ச்சி முதலானவை காரணமாக தி.மு.க. பால் ஏற்பட்ட அதிருப்தியும் ஒரு சிறு பங்காற்றியிருக்கலாம். எனினும் அதை ஒரு தீர்மானிக்கும் சக்தியாகக் கொள்ள முடியாது.

ஆட்சி முறையைப் பொறுத்தமட்டில் கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் கொள்கை ரீதியில் அடிப்படையில் சில வேறுபாடுகள் இருந்தாலும் பண்பு ரீதியில் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. கருணாநிதி எல்லா வகையிலும் தில்லியோடு இணக்கமாகப் போய் பதவியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதிலேயே குறியாய் இருப்பவர். அந்த நிலையிருந்தே அனைத்துப் பிரச்சனைகளையும் அணுகுபவர்.

ஜெ. வும் இப்படிப்பட்ட போக்குடையவர்தான் என்றாலும் சில நேரங்களில், சில பிரச்சனைகளில் தனக்குத் தோன்றுவதைப் பிடிவாதமாகப் பற்றி அதை சாதிக்க வேண்டும் என்று நினைப்பவர். பின் விளைவுகள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தடாலடியாக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளத் தயங்காதவர். அவரது கடந்த காலச் செயல்பாடுகள் பல இதைப் புலப்படுத்தும்.

தமிழகத்தில் இன்றும் தீர்க்கப்படாத பிரச்சனைகளாக காவிரி நீர், இட ஒதுக்கீடு, கச்சத் தீவு, தமிழ் வழிக் கல்வி முதலான சிக்கல்கள் தொடர்ந்து வருகின்றன. இப்பிரச்சனைகள் எதிலும் தில்லியின் முகம் கோண ஒரு துரும்பையும் அசைக்க விரும்பாதவர் கருணாநிதி. 74ல் கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டபோது தான் முதல்வராக இருந்தும் அதை உறுதியாக எதிர்க்காதவர் அவர்.

எனில் ஜெ. அப்படியல்ல. தான் முதல்வராக இருந்த போதும் காவிரிப் பிரச்சனைக்காக பட்டினிப் போராட்டத்தில் இறங்கியவர் (ஜூன் 18, 19, 20, 1993) அவர். 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் (31.12.93) நிறைவேற்றியவரும் அவரே.

தற்போது கச்சத்தீவை மீட்பது, 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு சட்டப் பாதுகாப்புப் பெறுவது, சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவது முதலானவற்றுக்கு மத்திய அரசை வலியுறுத்துவோம் என அறிவித்துள்ளார்.

தமிழ் வழிக் கல்விக்கு எதிரான கொள்கையுடையவரேயானாலும் தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளுதல், தமிழை முதல் பாடமாக எடுத்து முதல் வந்த மாணவர்களுக்கு உயர் கல்விக்கு உதவுதல் முதலான செயல்பாடுகள் மூலம் தனது 'தமிழ்ப்பற்றை' வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். தொழிற்கல்விகளில் கிராமப்புற மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 25 விழுக்காடாகவும் உயர்த்தியிருக்கிறார்.

கடந்த கால அவப்பெயர்களிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொண்டு நற்பெயரெடுக்க இதுபோன்ற பல நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளலாம் என்றாலும், தி.மு.கவை எதிர்ப்பது, பழிவாங்குவது என்பதில் எப்படிப்பட்ட தீவிர நிலையையும் மேற்கொள்ளத் தயங்காதவர் அவர். உழவர் சந்தைகளை மூட அறிவித்தது, மாவட்டங்கள், போக்குவரத்துக் கழகங்களுக்கு மீண்டும் தலைவர்கள் பெயரைக் கொண்டு வரும் யோசனைக்கு இடம் தருவது, கொஞ்சமும் நிதானிப்புக்கோ, கால அவகாசத்துக்கோ கூட இடம் தராமல் அவசர அவசரமாக தி.மு.கவினர் மேல் வழக்குப்போடுவது, கைது செய்வது முதலானவைகளை இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

இத்துடன் இன்னொன்றையும் அவர் செய்யக்கூடும். தில்லி ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் குறியாயிருக்கும் பா.ஜ.க. தற்போதைய தேர்தல் முடிவுகளை வைத்து தன் கூட்டாளிகளை மாற்ற முனையலாம். தமிழகத்தில் தி.மு.கவை கழற்றிவிட்டு அ.தி.மு.க. வுடனான உறவுக்கு முயலலாம். தில்லி அதிகார பீடத்தின் ருசியை அனுபவித்த பா.ம.க.வும் இதற்கு முன் கை எடுக்கலாம். மத்திய அமலாக்கப் பிரிவு வழக்குகளிலிருந்து மீள தில்லியின் பலத்தோடு தி.மு.க.வை எதிர்க்க ஜெ.வும் அதற்கு உடன்படலாம். தில்லியில் யாருக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறது எனப் பார்த்து தேவைப்பட்டால் காங்கிரசைக் கழற்றிவிட்டு பா.ஜ.க. வுடனும் கை கோர்க்கலாம். இப்படியெல்லாம் ஜெ. செய்யமாட்டார் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

இறுதியாக, இந்தத் தேர்தலில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் இரண்டு.

ஒன்று, இத்தேர்தலில் சாதிக்கட்சிகள் ஏதும் நிலைபெற முடியவில்லை என்பது. பா.ம.க.வும் சாதியக்


மூன்றாவது மனிதன்

ஏப்ரல் - ஜூன் 2001

அ.யேசுராசாவின் நேர்காணல், சினுவா ஆச்சிபியின் கதை, மற்றும் கட்டுரைகள், கவிதைகள், நூல் விமர்சனங்கள்

தொடர்புகட்கு

Editor, 37-14, Vauxhall lane, Colombo-02, Sri Lanka.
T.P. : 01-336035, 01-302759 E.Mail : 3man@sltnet.lk




படிப்பகம்

www.padippakam.com



கட்சிதான் என்றாலும் அது பல போராட்டங்கள் நடத்தி உயிர்த்தியாகங்கள் செய்து தனக்கென நிலையான தொரு வாக்கு வங்கியைக் கொண்டுள்ளது. புதிதாக முளைத்த பல சாதிக்கட்சிகள் அப்படியல்ல என்பதோடு மக்களும் சாதிய அடிப்படையில் மட்டுமே தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளத் தயாராயில்லை என்பது இந்தத் தேர்தலில் கவனிக்கப்பட வேண்டிய ஒரு நல்ல அம்சமாகப்படுகிறது.

அடுத்தது, இதுவரை நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தல்களிலேயே இத்தேர்தலில்தான் மிகக் குறைவான எண்ணிக்கையில் வாக்கு பதிவாகியுள்ளது. தமிழகத்தின் மொத்த வாக்காளர்கள் 474 லட்சத்தில் 270 லட்சம் பேரே இத்தேர்தலில் வாக்களித்துள்ளனர். அதாவது கிட்டத் தட்ட பாதிக்கு நெருக்கமானோர், 42 விழுக்காட்டினர் வாக்களிக்கவில்லை.

பெரும்பாலான நடுத்தர வர்க்கத்தினர் சோம்பல் அல்லது அக்கறையின்மை காரணமாக வாக்களிக்கச் செல்வதில்லை என்பது பொது நிகழ்வு என்றாலும் தேர்தல் கட்சிகளிலோ அல்லது முறைகளிலோ அதிருப்தியுற்று வாக்களிக்க விரும்பாதோரின் தொகை தேர்தலுக்குத் தேர்தல் அதிகரித்து வருவதும் ஓர் உண்மை.

பல்வேறு பகுதிப் பிரச்சனைகள் காரணமாக மக்கள் ஆங்காங்கே தேர்தல் புறக்கணிப்பு செய்வது ஒரு புறமிருக்க, தமிழகத்தைப் பாதிக்கும் அடிப்படைப் பிரச்சனைகளில் இத்தேர்தல்களால், தேர்தல் கட்சிகளால் பலனேதுமில்லை என்கிற நோக்கில் அரசியல் காரணங்களுக்காக புறக்கணிப்பு செய்ததும் இந்த ஆண்டு கூடுதலாகியிருக்கிறது.

தமிழக ஆட்சியதிகாரத்தில் 1967க்குப் பிறகு தி.மு.க. விட்டால் அ.தி.மு.க.; அ.தி.மு.க.விட்டால் தி.மு.க. என இவ்விரு கட்சிகளுமே மாற்றி மாற்றி அமர்ந்து வந்திருக்கின்றன. இக்கட்சிகளுக்கு அப்பால் நிலையான, வலுவான மூன்றாவது அணி என்பது ஒன்று உருவாகவேயில்லை. அப்படிப்பட்ட ஒன்றை உருவாக்க வேண்டிய இடதுசாரிக் கட்சிகளோ தங்கள் நிலைபாடுகளையெல்லாம் கைவிட்டு இவ்விரண்டில் ஏதாவதொரு கட்சியுடன், ஏதாவதொரு காரணம் சொல்லி கூட்டு சேர்ந்து வருவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றன. இவர்களால் தமிழகத்துக்கு எந்த விமோசனமும் ஏற்படும் என்பதற்கான நம்பிக்கைக்கும் இடமில்லை. எனவே, இவர்களைத் தாண்டி முகிழ்த்து வரும் வேறு ஏதாவது புதிய சக்திகளின் மூலமே தமிழகத்தில் ஏதும் மாற்றம் ஏற்படும் என்று தோன்றுகிறது. அந்த மாற்றமும் கொள்கை, கோட்பாடுகளைப் பற்றியெல்லாம் பொருட்படுத்தாது நடைபெறும் இத்தேர்தல்கள் மூலமாக மட்டுமே சாத்தியப்படாது என்பதும், இத்தேர்தல் நடைமுறைகள் காட்டும் படிப்பினையாக உள்ளது. ■

## மே 2001 – தமிழக சட்டசபைத் தேர்தல்

**ராஜ் கௌதமன்**




நடந்து முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தல் (மே 2001) முடிவுகள் இப்படி ஒரேயடியாக தி. மு. கழகத்திற்கும் அதன் ஐந்தாண்டு கால அரசாட்சிக்கும் எதிராக இருக்கும் என்று எதிர்பார்க்கவே இல்லை. இப்போது தோல்விக்கான பல்வேறு காரணங்களைத் தேர்தல் பண்டிட்டுகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ தமிழ்ச் சினிமாப் படம் மாதிரிதான் இது. படம் எடுக்கும் போது ஓடுமா ஓடாதா என்று கணிக்க முடியாது. ஆனால் படம் வெளியாகிப்படு தோல்வியைத் தழுவும்போது இன்ன இன்ன காரணங்களால் படம் ஓடவில்லை என்று மிகச்சரியாகத் திரை விமர்சனம் செய்யப்படும்.

என்னைப் போன்றவர்கள், பாண்டிச்சேரியில் 'வந்தேறி' என்கிற வரையறைக்குள் வாழ விதிக்கப்பட்ட நிலையிலிருந்து பாண்டிச்சேரி அரசியலுக்குப் பார்வையாளர்களாகவும், இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பே சொந்த மாநிலத்திலிருந்து இடம் பெயர்ந்துவிட்ட காரணத்தால் தமிழக அரசியலுக்குப் பார்வையாளர்களாகவும் இருக்கவேண்டியவர்களாகி விட்டோம்.

பத்திரிகைகள், (கருத்துக் கணிப்புக்கள்) மின்னணு ஊடகங்கள் முதலானவற்றை மட்டுமே நம்பி நடந்து முடிந்த தேர்தலை மட்டுமல்ல, நடைபெற்ற ஆட்சியையும், அது விளம்பரம் செய்த வளர்ச்சித் திட்டங்களையும் நேர்மறையாகக் கணிப்பது அத்தனை விவேகமான காரியம் இல்லை என்பது இப்போது புரிகிறது. பொதுவாகவே ஜனநாயக ரீதியிலான தேர்தலுக்கும், சன் டி. வி. பார்க்கின்ற நடுத்தர வர்க்க மக்களுக்கும் ஒத்துப் போகாது.

தேர்தல் மூலமாக ஆட்சிக்குவரக்கூடிய கட்சி/கட்சிகளைத் தீர்மானிக்கின்ற மக்கள் பிரிவினர் வேறு; ஆட்சியை நடத்துகின்ற மக்கள் 'பிரதிநிதிகள்' வேறு; ஆட்சியைச் சுமக்கின்ற வரி செலுத்தும் மக்கள் பிரிவினர் வேறு என்பதை இனிமேல் வரையறுத்துக் கொள்ள வேண்டும். இவர்களில் தேர்தலைத் தீர்மானிக்கின்ற கட்சித் தொண்டர்களுக்கும் தினக் கூலிகளுக்கும், உதிரி வர்க்கத்தினர்க்கும், சிமெண்ட் ரோடுகளும், பாலங்களும், வரிவிலக்குகளும், தள்ளுபடிகளும், இலவசங்களும், மானியங்களும், அன்றாடம் வயிற்றைக் கழுவப் போவதில்லை. கூலிக்கு வேலை, பசிக்கு உணவு (குடிப்பவராயின் மதுபானம்), விசேசங்களுக்கு கொஞ்சம் பணம் கிடைத்தால் போதும் என்கிற நிலைமை இருக்கும்வரை தேர்தல் முடிவுகள் இப்படித் தான் இருக்கும்.

இந்தத் தேர்தலில் ஏமாற்றத்திற்கு பிரத்தியேகமான காரணம் ஒன்று உண்டு. தமிழகத்தில் தெற்கிலும் வடக்கிலும் ஆளும் கட்சியோடு கூட்டணி வைத்துக் களமிறங்கிய தலித் கட்சிகள் விழுப்புண்களைப் பெற்றுத் திரும்பியது தலித்துகள் ஜனநாயக அமைப்பில் தேர்தல் ரீதியாக அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்குக் கிடைத்த பலத்த அடியாகும். இந்த நிலைமையை அன்றே அண்ணல் அம்பேத்கர் எதிர்பார்த்துத் தான் தலித்துக்குத் தனித்தொகுதி - இரட்டை வாக்குரிமை என்பதை வலியுறுத்தினார். மதிப்பிற்குரிய காந்தியார் வழக்கம்போல உண்ணாவிரதம் என்ற பூச்சாண்டி காட்டி அம்பேத்கரின் தூரதிருஷ்டி பட்டுவிடாமல் பார்த்துக் கொண்டார். அம்பேத்கரிடமிருந்து தலித்துக்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் இன்னும் உண்டு என்பதை இந்தத் தேர்தல் முடிவு நினைவூட்டியுள்ளது. ■



படிப்பகம்

www.padippakam.com




# குளோப்

ஜீ. முருகன்

என்னுடைய பெயர் ஆறுமுகம். வெறும் ஆறுமுகம் என்றோ, மிஸ்டர் ஆறுமுகம் என்றோ, திருவாளர் ஆறுமுகம் என்றோ எப்படிவேண்டுமானாலும் அழைக்கலாம். அது ஒன்றும் அவ்வளவு முக்கியமான விஷயமல்ல. மனிதர்களாகிய உங்களுக்கோ நிறைய வேலைகள். விசேஷமாக கிடைத்த அறிவைப் பயன்படுத்தி நிறைய சாதிக்க வேண்டியிருக்கிறது. வெற்றிகளைக் குவிக்கவேண்டியிருக்கிறது. இதற்கு மத்தியில் என் பேச்சை வேறு கவனிக்கிறீர்களே, இதுவே என் பாக்கியம்.

இந்தக் கதை சமீபத்தில் இறந்துபோன நாராயணன் சார் பற்றியும், ஸ்டீபன் என்கிற மோசக்காரப் பூனையையும் பற்றியது. ஸ்டீபனை இவ்வளவு கடுமையான வார்த்தைகளால் சாடியதால் அது என்னுடைய எதிரியோ என்று நீங்கள் நினைக்கலாம். ஒரு பூனை எனக்கு எப்படி எதிரியாக இருக்க முடியும்? எதிரி என்றால் சமபலம் வேண்டும். ஒரு எலியால் என்றைக்கும் ஒரு பூனையை வேட்டையாடி விழுங்க முடியாது இல்லையா? அதன் குணசேஷ்டையை வைத்துத்தான் அப்படிச் சொன்னேன். பக்கத்து வீட்டில் வசிக்கும் கிறிஸ்துவர்கள்தான் அதற்கு இந்தப் பெயரைச் சூட்டியிருந்தார்கள். அது அவர்களுடைய செல்லப்பிராணி. பூனைகளுக்கு உணவிடுவதுபோல எலிகளுக்கும் நீங்கள் ஏன் உணவு வழங்கக்கூடாது? இந்தச் சங்கிலியில்தான் ஏதோ சிக்கல் விழுந்து விட்டது; அதர்மம் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது.

ஒவ்வொரு கணமும் எத்தனையோ உயிர்கள் ஜனிப்பதும் மரணமடைவதும் நிகழ்ந்துகொண்டே இருந்தாலும் மனிதர்களைப் பொறுத்துத்தான் இது பிரச்சனைக்குரியதாக மாறிவிடுகிறது. நாராயணன் சாரின் மரணம் குறித்துக்கூட பலவித அபிப்பிராயங்கள் சொல்லப்படுகிறது. தற்செயலாக நடந்த விபத்து என்றும், தற்கொலைதான் என்பது போலவும். பைத்தியம் முற்றி தற்கொலை செய்துகொண்டாராம்! அவரை அருகிலிருந்து கவனித்து வந்த எனக்கும்கூட இது பிடிபடவில்லை. சில பொழுது அது ஒரு கொலையோ என்றும் ஐயம் எழுகிறது.



நாராயணன் சார் ஒரு கவிஞர். ஓவியங்களிலும் அவருக்கு ஈடுபாடுண்டு. இயற்கையின் ஆன்மாவுக்கு மிக நெருக்கத்திலிருக்கும் வண்ணங்களையும் இசையையும் விட்டுவிட்டு இப்படி மனிதர்களைச் சுமந்துதிரியும் வார்த்தைகளைக் கட்டிக்கொண்டு மாரடிக்க வேண்டியிருக்கிறதே என்று வருத்தப்படுவார். அலுவலகம் போய்வந்த பின்பு ஓய்வு நேரங்களில் அவர் நிறையப் புத்தகங்கள் வாசிப்பார். நண்பர்களுடன் இலக்கியம் குறித்துப் பேசிக்கொண்டிருப்பார். சில பொழுது விஸ்கி துணையிருக்கும். தூரமாக இருந்து கவனித்துக்கொண்டிருப்பேனே ஒழிய, இவர்கள் பேசுவது என்னவென்றே எனக்குப் புரிவதில்லை. ஸ்டீபனோ இதிலெல்லாம் பட்டுக்கொள்ளாமல் இதைவிட வேறு ஏதோ பெரிய காரியம் இருப்பது போலப் போய்விடும்.

நாராயணன் சாருடையது பழைய வீடு. அவருடைய அப்பா ஓய்வு பெற்ற வரலாற்றாசிரியர் என்பதற்கும் இந்த பழமைக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை. மாடியிலிருந்த இரண்டு அறைகளில் ஒன்றை சார் படிப்பறையாக பயன்படுத்தி வந்தார். அவருடைய பள்ளியறையும் அதுதான். முதன் முதலாக நாராயணன் சாரை இந்த அறையில் பார்த்தபோது பேராபத்து ஒன்றில் சிக்கிக்கொண்டிருந்தேன். ஸ்டீபன் என்னைத் துரத்திக்கொண்டு வர, அவருடைய அறைக்குள் ஓடி புத்தகங்களுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டேன். அப்போது அறைக்குள் நாராயணன் சார் நாற்காலியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தார். என்னை துரத்திக்கொண்டு வந்த ஸ்டீபனோ அவரைப் பொருட்படுத்தாமல் அலமாரியின் மேல் ஏறி என்னைத் தேடியதில் புத்தகங்கள் சரிந்து விழுந்தன. திடுக்கிட்டு திரும்பியவர் அங்கே ஸ்டீபனைக் கண்டார். புத்தகம் விழுந்த சப்தத்தில் அதுவும் மிரண்டுதான் போயிருந்தது.

அவர் கேட்டார், "ஏன் புத்தகங்களை தள்ளுகிறாய், என்ன வேண்டும்?" அலமாரியிலிருந்து ஸ்டீபன் கீழே குதித்து, சற்று தயங்கியபடி மேஜைக்கு அருகில் போய் நின்று அவரைப் பார்த்தது. திரும்பவும் அவர் கேட்டார், "உனக்கு என்ன வேண்டும்?" "ரொம்ப பசிக்கிறது, ஒரு எலி வேண்டும்" என்றது. "இங்கே இருக்கிறதா?" "ஆமாம் இந்த புத்தகங்களுக்குபின்னால் ஒளிந்துகொண்டிருக்கிறது" "அதை விட்டுவிடு. உனக்கு வேறு உணவு தருகிறேன்" என்ற நாராயணன் சார் மேஜைமேல் அவருக்காக கொண்டு வந்து வைத்திருந்த ஆர்லிக்ஸ் கலந்த பாலை எடுத்து கீழே ஊற்றினார். ஸ்டீபன் அதை நக்கிக் குடித்துக் கொண்டிருந்தது.

நான் அச்சம் தெளிந்தவனாக கீழே இறங்கி வந்து, மேஜையின் மேல் ஏறி நின்று சாரைப் பார்த்தேன். முன் கால்கள் இரண்டையும் தூக்கி "நன்றி" என்றேன். பாலை குடித்து முடித்த ஸ்டீபன் மேஜைக்கு ஏறிவந்து 'என்ன தைரியம்!' என்பது போல் என்னை முறைத்து பார்த்தது. பயந்துபோன நான் நடுங்கியபடி அவருடைய கைக்கருகில் போய் ஒடுங்கிக்கொண்டேன். "நீ பயப்



படிப்பகம்

www.padippakam.com



படாதே, அது உன்னை ஒன்றும் செய்யாது" என்றார். "எப்போதுமா?" "ஆமாம் இனி எப்போதுமே உன்னை தொந்தரவு செய்யாது, நாம் மூவரும் நண்பர்களாகிவிட்டோமில்லையா?"

ஸ்டீபனுக்கோ ஏமாற்றம். "அது எப்படி முடியும்?" என்றது வருத்தம் தொனிக்க.

"ஏன்?" என்றார் அவர்.

"உணவுக்கு நான் எங்கே போவேன்? எலிகளை வேட்டையாடுவதை விட்டால் வேறு என்ன தொழில் தெரியும் எனக்கு?"

"இந்த எலியை மட்டும் விட்டு விட்டு, வேறு எலிகளை வேட்டையாடிக்கொள். உன் பெயரென்ன?" என்று கேட்டார் அதனிடம்.

"ஸ்டீபன்" என்றது.

"நல்லது" என்னைப் பார்த்து, "உன்னுடைய பெயர்?" என்றார்.

"எங்களுக்குத்தான் யாருமே பெயர் வைப்பதில்லையே?" என்றேன் வருத்தத்துடன்.

"சரி, உனக்கு நான் பெயர் வைக்கிறேன்" என்று யோசித்தவர், "ஆறுமுகம்" என்றார்.

"எளிமையாக இருக்கிறது, இது போதும் எனக்கு" என்றேன் நான்.

"நீ ஏன் இன்னும் வருத்தத்துடன் இருக்கிறாய்?" என்று கேட்டார் ஸ்டீபனைப் பார்த்து.

"நீங்கள் கேட்டுக்கொண்டது போல நான் இந்த எலியைத் தின்னப் போவதில்லை; ஆனால் துரத்த வேண்டும்; அது அகப்படும் கணம் வரை விரட்டவேண்டும்."

"சரி, உன் இஷ்டம். ஆனால் எந்த காரணத்தைக்கொண்டும் அதன் மரணத்திற்கு நீ காரணமாகக் கூடாது. சரியா?"

"சம்மதிக்கிறேன்" என்றது ஸ்டீபன்.

இப்படியாக நாங்கள் நண்பர்களானோம்.

நாராயணன் சார் ஒருநாள் பூனையைப் பற்றி முன்பு அவர் எழுதியிருந்த கவிதை ஒன்றை எங்களுக்கு வாசித்துக் காண்பித்தார்.

ஒரு பறவையைப்போல
லேசாக இருக்கிறது பூனை
பந்து தக்கையாகவும்
காற்றைப்போல
நழுவிச்செல்லுவதாகவும்
இருக்குமெனில்
லாவகமாக உருட்டி
விளையாடுகிறது
கைகளில் வைத்து சுழற்றுகிறது

சுவர்மேல்
வேகமாக நடந்துவந்து
தாவிக் குதித்து
எளிதாக கலந்து விடுகிறது
என் சுவாசத்தில்

அனாதரவாக விடப்பட்ட
பந்தை நோக்கி
மீண்டும் நழுவிச் செல்கிறது.

ஸ்டீபன் உற்சாகமாகி "அற்புதம்" என்றது.

நான் சாரிடம் கேட்டேன்:

"பூனை எந்தக் கடவுளுக்காவது வாகனமாக இருந்திருக்கிறதா? புராண இதிகாசங்களில் இடம் பெற்றிருக்கிறதா?"

சற்று யோசித்துவிட்டு, "எனக்குத் தெரிந்தவரை இல்லை" என்றார்.

ஸ்டீபனின் முகத்தில் சோக ரேகை தோன்றியது.

"உங்களுக்கு கடவுளோடு சம்மந்தமில்லை; பிசாசுகளோடுதான்" என்றேன் கிண்டலாக.

ஒரு எலி கிண்டல் செய்யும் அளவுக்கு நாம் ஏன் தாழ்ந்து போனோம் என்று நினைத்ததோ என்னவோ, ஸ்டீபன் வருத்தத்துடன் படுத்துக்கொண்டது.

அதை குஷிபடுத்தும் நோக்கில் நாராயணன் சார் சொன்னார், "உனக்கு பந்து ஒன்று வாங்கித் தருகிறேன். கவிதையில் உள்ளது போல நீ விளையாடலாம், காற்றாகி விடலாம்."

ஸ்டீபன் தெம்புடன் எழுந்து கொண்டது. அதன் கண்களில் பிரகாசம்.

இப்படித்தான் அய்யா அந்த விபரீதம் தொடங்கியது. அவர் பந்து வாங்கித் தருவதாகச் சொன்னார் என்பது நிஜம் என்றாலும் அலுவலகத்திலிருந்து திரும்பி வரும்போதெல்லாம் வெறுங்கையோடு வந்தார். ஸ்டீபன் ஒவ்வொரு நாளும் நினைவுபடுத்த அவர் மறந்தபடியே இருந்தார். அவருடைய யோசனைகளெல்லாம் வேறொன்றில் குவிந்திருந்தது. தன்னுடன் அலுவலகத்தில் பணிபுரியும் பெண்ணின்மேல் அவர் காதல் வயப்பட்டிருந்தார். பிறகென்ன, பக்கம் பக்கமாகக் காதல் கவிதைகள் குவிந்தன. இந்த இரண்டு தனித்தனி அற்புதங்களும் ஒரே நேரத்தில் அவர் பிரக்ஞையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கையில் பந்து பற்றி அவருக்கு எங்கே நினைவிருக்கப் போகிறது.

ஏமாற்றத்துடன் வலம் வந்த ஸ்டீபனோ இதை ஈடு செய்ய வேறொரு மார்க்கத்தை கண்டுபிடித்தது. நாராயணன் சார் அலுவலகம் போன பின்பு அவருடைய அறைக்குச் சென்று மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்த உலக உருண்டையை உருட்டிப்பார்த்தது. இரண்டு பக்கமும் மாறிமாறி சுழற்றி மகிழ்ந்தது. இந்த விளையாட்டு தினமும் நடந்திருக்கவேண்டும். ஒருநாள் எதேச்சையாக இதை நான் பார்க்க நேர்ந்த போது அதனிடம் எச்சரித்தேன். நாராயணன் சாரின் அனுமதியில்லாமல் இதை நீ தொடக்கூடாது என்று. அதற்கு கோபம் வந்து விட்டது.

"பந்து வாங்கித்தருவதாகச் சொல்லிவிட்டு எத்தனை நாட்களாக என்னை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்."

"அவருக்கு மறந்து விடுகிறது."

"மறக்கவில்லை, இவர்கள் பேசும் இலக்கியம் போல வெத்து வேட்டு..."

நான் அதிர்ந்து போனேன். "ஸ்டீபன், நீ எல்லை மீறிப் பேசுகிறாய். இன்றைக்கு சார் வரட்டும் சொல்கிறேன்..."



ஸ்டீபன் என்னை முறைத்துப் பார்த்தது.

"சொல்லிவிடுவாயா?" என்றது.

"சொல்வேன். எனக்கென்ன பயம்?"

"அந்த ஒப்பந்தத்தால் குளிர் விட்டுப்போய்விட்டது உனக்கு. நீ இருக்கும் வரைதானே இந்த ஒப்பந்தமெல்லாம்" என்று சொல்லி முடிக்கும் முன்பே அதன் நோக்கம் என்ன



படிப்பகம்

www.padippakam.com



வென்று புரிந்ததால் அவ்விடத்தை விட்டு அகன்று வெளியே ஓடினேன். ஸ்டீபன் எனக்குப் பின்னாலேயே துரத்திக்கொண்டு வந்தது. மாடியிலிருந்து படிவழியாக கீழே இறங்கி, வரவேற்பறையின் ஓரத்தில் சுவரை ஒட்டி ஓடி, பின்பக்கமிருந்த குளியலறைக்குள் புகுந்தேன். அதுவும் பின்னாலேயே வந்துவிட்டதால் தண்ணீர் வெளியேறும் துளை வழியாகத் தப்பிவிட நினைத்து உட்புகுந்தேன். துரிதமாக ஓடிவந்த ஸ்டீபன் தன் கால்களால் வாலை மிதித்துக்கொண்டது. வாலின் பாதிக்குமேல் அதன் காலடியில். சிரமத்துடன் இழுத்துப் பார்த்தும் ஒன்றும் பலிக்கவில்லை. ஸ்டீபனின் கால்நகம் ஒன்று வாலின்மேல் அழுத்திக்கொண்டிருந்தது.



தப்பிக்கவும் முடியாமல் அகப்படவும் முடியாமல் என்ன நிலைமை இது? எதுவும் சொல்லாமல் சிறிது நேரம் அப்படியே வளைக்குள்ளேயே படுத்துக் கிடந்தேன். ஸ்டீபனும் அசைந்தபாடில்லை. அசமந்தமான வேளையில் சட்டென்று உருவிக்கொண்டு ஓடிவிடலாமென்று முயன்ற கணத்தில்தான் இன்னும் அது அழுத்தமாக நின்றது. நகம் பட்டதில் வலி வேறு.

"ஸ்டீபன் என்னை விட்டுவிடு" என்றேன் அதனிடம்.

"உன்னை விடப்போவதில்லை" என்றது ஆத்திரத்துடன்.

"என் வால் மட்டும்தானே உன்னிடம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறாய்?"

"இப்போது கடித்துத் துப்பப் போகிறேன்" என்றது இரக்கமற்று.

கிலிபிடித்துக் கொண்டது எனக்கு. இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதைத் தவிர வேறு வழியில்லை.

"சரி, நான் இப்போது என்ன செய்யவேண்டுமென்கிறாய்?"

"அந்த உருண்டை விஷயத்தையோ, வெத்துவேட்டு என்று சொன்னதையோ நீ நாராயணன் சாரிடம் சொல்லக்கூடாது."

"சரி, நான் சொல்லவில்லை."

"அப்படி சொன்னாயானால் அடுத்த நிமிஷமே எனக்கு இரையாகிவிடுவாய், சம்மதம்தானே?"

"சம்மதம்தான்."

இப்படித்தான் அன்று நான் அந்த பேராபத்திலிருந்து தப்பினேன். இல்லையென்றால் இப்போது வாலில்லாமல் திரிந்திருப்பேன்.

ஸ்டீபன் அத்துடன் நின்று விடவில்லை. உருண்டையை வெறுமனே சுழற்றிவிடும் விளையாட்டு சலித்துப் போனதால் அதை சுவாரஸ்யப்படுத்த வேறு ஒரு உத்தியை கையாண்டது. உலக உருண்டையில் ஒரு இடத்தைக் குறிவைத்துக்கொண்டு சுழற்றிவிடும். சுற்றும்போதே கூர்ந்து கவனித்து கையால் தடுத்து நிறுத்த, அது குறிவைத்த இடம் வந்திருந்தால் வெற்றி பெருமிதத்தில் நகத்தால் அந்த இடத்தில் ஒரு அடையாளமிடும்.

அறைக்குள் எங்கேயாவது ஒளிந்திருந்து இந்த விபரீத விளையாட்டை நான் கவனித்துக்கொண்டிருப்பேன்.

இந்த சமயத்தில்தான் நாராயணன் சாரின் காதல் விவகாரம் மோசமான ஒரு நிலைமைக்கு வந்திருந்தது. ஒவ்வொரு நாளும் எங்கேயாவது அழைத்துப் போகச் சொல்லி நச்சரிக்கிறாளாம். பெரிய ஓட்டல்களுக்கோ, சினிமாக்களுக்கோ தன்னுடன் வரவேண்டுமென்கிறாளாம். தாடியை எடுத்துவிட்டு தினமும் முகச் சவரம் செய்துகொள்ள வேண்டுமாம். நன்றாக ஆடை உடுத்திக்கொள்ளவேண்டுமாம். இதெல்லாம் அவருக்கு வெறுப்பை ஏற்படுத்தியதே தவிர சந்தோஷமான விஷயங்களாக இல்லை. இருந்தும் சொன்னார், "இதெல்லாம் சரியில்லைதான். ஆனால் ஏதோ ஒரு ஈர்ப்பு அவளிடம் இருக்கிறது" என்று.

"அவள் ஒரு பெண். அதுதான்" என்றான் அவருடைய நண்பன்.

தவிர்க்கவே முடியாத ஒரு சம்பவம் போல அதுவும் நிகழ்ந்தேவிட்டது. நாராயணன் சார் ஒரு நாள் அந்த குளோப்பை கவனித்துவிட்டார். பெரும் அதிர்ச்சி அவருக்கு.

"இவ்வளவு கீறல்கள் எப்படி வந்தது இதில்?" என்றார்.

"எனக்குத் தெரியவில்லை" என்றேன்.

"ஸ்டீபனைக் கேட்டால் தெரியுமா?"

"கேட்டுப்பாருங்கள்" என்று சொல்லி நழுவிவிட்டேன்.

அடுத்த நாள் ஸ்டீபனிடம் அவர் விசாரித்தார். அதுவும் தனக்குத் தெரியாது என்று சொல்லியது அவரைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. ஒவ்வொரு நாளும் அதிகரிக்கும் கீறல்களினால் அவர் கலவரமடைந்தார் என்பதைக் கவனித்தேன்.

ஒருநாள் மிகவும் சோர்ந்து போய் வீடு திரும்பினார். அவரைக் கழட்டிவிட்டுவிட்டு சோக்கு காண்பிக்கும் ஒரு தடியனுடன் அவள் ஓட்டிக்கொண்டுவிட்டாளாம். முன்பே அவர் எதிர்பார்த்ததுதான் என்றாலும் மனம் உடைந்து காணப்பட்டார். நாடக பாணியில் சொல்வதென்றால் அவருடைய மனம் மட்டுமல்ல, மேஜையிலிருந்த குளோபும் கீழே விழுந்து உடைந்து போயிருந்தது.

'ஸ்டீபனே! ஏ நம்பிக்கை துரோகியே! அந்த குளோபை உடைத்தே போட்டுவிட்டாயா' என்று மனதிற்குள் திட்டினேன்.

நாராயணன் சாருக்கு கடுமையான ஜுரம் கண்டது. வீட்டிலேயே படுத்துக்கிடந்தார். தூங்கினால் மோசமான கனவுகள் வந்து தொந்தரவு செய்கின்றன என்றார் நண்பர்களிடம்.

"உடல் மட்டுமல்ல கனவு கூட தகிக்கிறது... எல்லாமே உருகுவது மாதிரி இருக்கிறது... புத்தகங்கள், அலமாரி, மேஜை, உடைந்து போன குளோப். இதில் அவளுடைய தொந்தரவு வேறு... என் படுக்கை அருகில் வந்து கைகளை பற்றிக்கொண்டு என் வயிற்றில் முத்தமிடுகிறாள்... அவளுடைய பெருத்த மார்பை என் மார்பில் படரவிட்டு அழுத்தி அணைக்கிறாள். மூச்சு முட்டுகிறது... காதில் கிசுகிசுக்கிறாள் 'சாகமாட்டாய்' என்று..."

தூங்கவே அச்சமாக இருக்கிறது என்றார். மருத்துவமனைக்கு சென்று வந்ததில் ஜுரம் நின்றுவிட்டது. ஆனால் அவருடைய மனம்தான் பிதற்றிக்கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



அவர் கேட்டார் :

"சிறு நீர்த்துளி இருக்கிறதே அது ஏன் உருண்டு நிற்கிறது? பரப்பு இழு விசை... நம் கண்கள்? நிலா? சூரியன்? பூமி?... பூமி ஏன் உருண்டையாக இருக்கவேண்டும்? பந்தைப் போல தரையிலா அது உருண்டு செல்லப் போகிறது?''

கண்களை மூடி ஜுரத்தில் பிதற்றுவது போலச் சொன்னார் :

"நான் நினைக்கிறேன் பிரபஞ்சமே முழுமையற்ற ஒரு உருண்டை... இயற்கையிலுள்ள மற்ற எல்லாமே அதன் சாயலில்... இல்லை... ஒன்றைத் தவிர. அது ஒன்றுதான் வேறுவிதமாக இருக்கிறது... மனிதனின் அறிவு... அவனுடைய விஞ்ஞானம்... கணிதம்...''

அவருடைய முகம் கடுமையாகி விட்டது.

"முக்கோணங்கள், சதுரங்கள், உருளைகள் இயற்கையிலுள்ள பொருட்களின் சாரமாக இருக்கிறதென்கிறான் பால் செசான்... முட்டாள்... கேண்டன்ஸ்கியின் சில ஓவியங்களைக்கூட கொளுத்தி விடலாம்... எப்படியோ பாஸ்கல் தப்பிவிட்டான்... ஜோசியர்களோ ஸ்ரீசக்கரங்களை வரைகிறார்கள்... பூமியின் தேகமெங்கும் சூன்யக்காரர்களின் நகக்கீறல்கள்...''

ஆவேசத்துடன் எழுந்து உட்கார்ந்துகொண்டார்.

அவர் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. நான் பயத்துடன் விலகிப் போய் நின்று அவரைப் பார்த்தேன். இதற்குள் அவருடைய அம்மா வந்து அவரைத் திரும்பவும் படுக்கையில் கிடத்தி ஆறுதல்படுத்தினாள்.

அவருடைய உடல் தேறி வந்தது. வழக்கம்போல அலுவலகம் சென்று வந்தார்; புத்தகங்கள் வாசித்தார்; மொட்டைமாடியில் வானத்தைப் பார்த்தபடி மல்லாந்தவாக்கில் படுத்திருப்பார். மற்றவர்களுடன் குறைவாகவே பேசினார் என்றாலும் அவருடைய எண்ணங்கள் முழுவதும் வேறு எங்கோ நிலை பெயர்ந்திருந்ததைப் புரிந்து கொள்ளமுடிந்தது.

வழக்கம்போல நண்பர்கள் வந்தார்கள். மதுக்குப்பிகளுடன் உரையாடல் தொடங்கியது. அவருடைய பேச்சில் பிரபஞ்ச இசை, பேரன்பு, பேரறிவு என்றெல்லாம் புதிய வார்த்தைகள் வந்து விழுந்ததில் அவருடைய நண்பர்களே வியப்புடன் பார்த்தார்கள். விஞ்ஞான மனோபாவத்திற்கெதிரான அவருடைய பேச்சு அவர்களை நிலைகுலையச் செய்தது என்றே சொல்லவேண்டும்.



"மனிதனுக்குள்ள அறிவையும், விஞ்ஞானத்தையும் எடுத்துவிட்டு அந்த இடத்தில் கடவுளைத் தவிர வேறு எதை நீ முன் வைக்கமுடியும்?" என்று அவர்கள் சினந்தார்கள்.

இந்த பகை பல நாட்கள் அவர்களுடைய உரையாடலில் தொடர்ந்து வந்தது.

ஒருநாள் அவர்களுடைய போதை அதிகமாகி அந்த பகையும் விஸ்வரூபமெடுத்து நின்றது.

"ஆமாம்'' என்று அவர் கத்தினார். "இந்த நாகரீக சீமான்களும் சீமாட்டிகளும் இந்தக் கடவுள்களும் இல்லாத ஒரு உலகத்தில் வாழ ஆசைப்படுகிறேன்; அதுதான் என் கனவு, கவிதை எல்லாம்.''

ஒருவன் சிரித்தான். சிகரெட் புகையை ஊதியபடியே அவன் சொன்னான், "அப்படியானால் இந்த உலகத்தை காலி செய்துவிட்டு இன்றே வெளியேறிவிடு... உன்னுடன் உன் கட்சிக்காரர்கள் யாராவது இருந்தால் அவர்களையும் கூட்டிச் சென்றுவிடு, ஜனநெரிசல் வேறு அதிகமாகிவிட்டது...''

இந்த காரமான உரையாடல் கண்டு இன்னொருவன் சங்கடத்தில் சிரித்தான்.

நாராயணன் சாரும் இதை ஆமோதிப்பதுபோல, 'ஆமாம், வெளியேறிவிடவேண்டும்' என்று முணுமுணுத்தார்.

எல்லாமே நிஜத்தில் நடந்து கொண்டிருக்க நான் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் நம்பினேன், இதெல்லாம் வெறும் பேச்சுதான், போதை அதிகமாகிவிட்டால் வீறாப்பும் கூடித்தெரிகிறதென்று.

அவர்கள் சென்ற பிறகு நானும் விடைபெற்றுக்கொண்டேன்.

மறுநாள் பொழுது புலர்வதற்கு முன்பே ஏதோ ஒரு உணர்வால் உந்தப்பட்டு வேகமாக அவருடைய அறைக்கு சென்ற நான், அந்த விபரீதத்தைக் கண்டேன். மின்விசிறியில் தலை சிதறடிக்கப்பட்டு அவர் இறந்து கிடந்தார். அவருக்குப் பக்கத்தில் விழுந்திருந்த ஸ்டூலின் மேலும், சுவர்களிலும், தரையிலும், புத்தகங்கள் மேலும் ரத்தம் தெறித்து உறைந்திருந்தது.

ஓவியங்கள் : மருது

**உடைந்த பொம்மையும் அழாத குழந்தையும்**

வண்ணை சிவா

பக் : 80, விலை ரூ. 40

ஒரு கவிதைத் தொகுப்பில் புலப்பட வேண்டியது எழுத்தாளனின் மென்மையான மன உணர்வுகள்தான். இத்தகைய மன உணர்வுகள் 'அபிப்ராயம்' என்ற கவிதையிலும், தலைப்புக் கவிதையான 'உடைந்த பொம்மையும் அழாத குழந்தையும்' என்ற கவிதையிலும் பதிவாகியுள்ளன.

பேராசிரியர் க. பஞ்சாங்கம்

நூல் கிடைக்குமிடம்

கூடு இலக்கிய வட்டம்
4, ஆறாவது குறுக்குச் சாலை
புதுவண்ணை
சென்னை 600 081



படிப்பகம்

www.padippakam.com



# ஸ்ட்ரோபரி ஜாம் போத்தலும், அபிஸீனியன் பூனையும்

அ. முத்துலிங்கம்
கனடா

குதிரையே, கேள்!

ஆசை பெரும் கேடு விளைக்கும். இது எனக்கு சிறு வயதிலேயே அடித்தடித்து போதிக்கப்பட்ட பாடம். ஆனபடியால் வாரா வாரம் ஸ்ட்ரோபரி ஜாமில் ஏற்படும் ஆசையை கட்டி வைக்க முயன்றேன். ஆனாலும் முடிய வில்லை. சுப்பர் மார்க்கட்டில், கடுமையான கத்தரி கலரில் ஜொலித்துக்கொண்டு, நிரையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் போத்தல்களைப் பார்க்கும் போதெல்லாம் ஆசை பொங்கும். செய்த சங்கல்பங்களை மறந்து வாங்கிவிடுவேன்.

ஆனால் அத்துடன் பிரச்சனை தீராது. இந்த ஜாம் போத்தல்களை செய்யும் Sun Fresh கம்பனிக்கு ஒரு கவலை இருந்தது. இரவிலோ, அல்லது மனிதக் கண்கள் கண்காணிக்காத நேரத்திலோ, யாராவது இந்த மூடியை திறந்து ஜாமை அபகரித்துவிடுவார்கள் என்று பயந்தது. ஆனபடியால் மிக உயர்ந்த மெசின்களைக் கொண்டு அந்தப் போத்தல்களின் மூடிகளை இறுக்கி இருந்தார்கள். அதனால் என் அறையில் நிரையாக ஜாம் போத்தல்கள் இருந்தன, திறக்காமல். இவற்றை நான் எவ்வளவு முக்கியும் திறக்க முடியவில்லை.

டோல்ரஸ் நீளமான பெண். ஒல்லி என்றாலும் அவள் கைகள் முறுகி, இறுகி இருக்கும். அவள் உடம்பில் இடைக்கு மேலேயும் சரி, கீழேயும் சரி, ஒரு சதைத் துண்டையும் பிடிக்க முடியாது. அவளுக்கு நீண்ட கண்கள், நீண்ட மூக்கு, நீண்ட விரல்கள். இந்த விரல்கள் போத்தல்கள் திறப்பதற்காக, அதிலும் Sun Fresh கம்பனியின் ஜாம் போத்தல் மூடிகளைத்



தளர்த்துவதற்காகவே, படைக்கப்பட்டவை. என் அறைக்கு அவள் வரும்போதெல்லாம் சர்வ சாதாரணமாக ஜாம் சாப்பிட அழைப்பேன். அவள் அந்த நீண்ட விரல்களை ஒரு சிலந்தியின் கால்களைப் போல பரப்பி, மூடியை கவ்வி ஒரு திருகிலேயே திறந்துவிடுவாள்.

இப்படித்தான், ஒரு பெண் போத்தல் மூடி திறக்கும் லாவகத்திலே லயித்து காதல் வயப்பட்டது இந்த உலகத்திலேயே நான் ஒருவனாகத்தான் இருக்கும்.

டோல்ரஸ் என்னைப் போல *sophomore* என்று அழைக்கப்படும் இரண்டாம் வருட மாணவி. சிவந்து நீண்ட அலகுடைய ஒரு பறவையின் முகத்தைப்போல அவளுடைய முகம் கூரானதாக இருக்கும். அந்தக் குருவியைப் பழிப்பதுபோல ஒரு பக்கம் தலையை சாய்த்தபடி பேசுவாள். *Resistors* பற்றிய ஆய்வுக்குழுவில் என்னுடன் இருந்தாள். ஒரு அமெரிக்க கப்பல் மாலுமி போல கால்களை அகட்டிவைத்து, கைகளைப் பின்னுக்கு கட்டிக்கொண்டு, *200 B.C.*ல் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட அபூர்வ உலோகக்கலவை பற்றி பேராசிரியரிடம் எங்களுக்காக போரா டியவள். கோபாவேசமான இவளுடைய கணங்கள் அதிகமானது என்று நான் உணர்ந்தது அப்போதுதான்.

இந்தப் பேராசிரியர் சொல்வார், உலகத்திலேயே முழுமூடன் ஒருவன் இருந்தால் அவனால் பெரும் உபயோகம் என்று. அவனிடம் ஒரு காரியத்தை செய்யக் கொடுக்க வேண்டும். அவன் எப்படி அதை செய்கிறானோ அதற்கு எதிர் திசையில் நாம் அந்தக் காரியத்தை செய்தால் வெற்றியாகும் என்று.

டோல்ரஸ் இதைக் கேட்டு வயிற்றை அமுக்கிப் பிடித்துக் கொண்டு சிரித்தாள். நான் பரீட்சைகள் எழுதுவதிலும், எழுதிய பரீட்சைகளின் முடிவுகளுக்கு காத்திருப்பதிலும் காலத்தை கழித்துக் கொண்டிருக்கும்போது இவள் பாடப் புத்தகங்களை தொடுவதேயில்லை. நான் செய்வதற்கு எதிராக தான் செய்யப் போவதாகவும், தனக்கு வெற்றி நிச்சயம் என்றும் கூறிவந்தாள்.

பியூட்டரிக்காவில், காற்றுப் புயல் அடிக்கும் ஒரு கிராமத்தில் தான் பிறந்ததாகச் சொல்லுவாள். ஒரு தகரம் போட்ட வீட்டில், அப்பா பாரில் குடித்துக்கொண்டிருக்கும்போது, பக்கத்து வீட்டுப் பெண் மருத்துவம் பார்க்க, பிறந்தாளாம். இழுப்பதற்கு வசதியாக கால்கள் முதலில் தோன்றியபடியால் அதை பிடித்து பிடித்து இழுக்க வெளியே வந்து விழுந்ததாகச் சொல்லுவாள். அவளுடைய கால்கள் இன்று வரை நீளமாக இருப்பதற்கு இதுதான் காரணம் என்று அவளுடைய அம்மா தீவீரமாக நம்புகிறாளாம்.

டோல்ரஸ் கல்லூரி வகுப்புகளுக்கு அடிக்கடி மட்டம் போட்டுவிட்டு நூலக மூலையிலிருந்து ஏதாவது படித்தபடி இருப்பாள். ஒருமுறை என்ன படிக்கிறாள் என்று எட்டிப் பார்த்தேன். *Don Quixote* என்று பெரிய எழுத்தில் தலைப்பு போட்டிருந்தது. அவள் படிப்பதற்கும் எங்கள் பாடங்களுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்று எனக்கு அடிக்கடி பயம் பிடித்துவிடும். வகுப்பில் நான் சிரத்தையாக எடுக்கும் குறிப்புகளை என்னிடம் வந்து கடன் வாங்குவாள். நான் போய் எடுக்கும் வரை அவை திரும்பி வராது.

அஸ்வமே, இன்னும் இருக்கிறது, கேள்.

ஒருநாள் அவளுடைய அறைக்கு போனபோது அங்கே ஒரு மூன்று வயது பெண்குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



'இதோ என்னுடைய மகள், எலினா' என்று அறிமுகப்படுத்தினாள். எலினா, பியூட்டரிக்காவில் இருந்து வந்திருந்தாள். இரண்டு வாரம் தங்கிவிட்டு திரும்பிப் போய் விடுவாளாம்.

ஒரு முழு நிமிடம் என் வாயில் பேச்சு வரவில்லை.

'உனக்கு மணமாகிவிட்டது என்பதை எனக்குச் சொல்லவில்லையே?' என்றேன்.

'மணமாவதற்கும், பிள்ளை பெறுவதற்கும் என்ன சம்பந்தம்?' என்றாள்.

'என்ன, உனக்கும் நட்சத்திரம் வந்து வயிற்றிலே உதித்ததோ?'

'எனக்கு விருப்பமான ஒருவன், ஆமை இறைச்சி சாப்பிடாதவன். அவனுடைய உறவில் பிறந்தவள் தான் எலினா.'

'நீ எனக்கு ஏன் முன்பே சொல்லவில்லை?' என்றேன்.

'நீ யார்? என்னுடைய சுயசரிதை எழுத நியமிக்கப்பட்டவனா?'

எனக்கு வந்த கோபத்தை அடக்கிக்கொண்டேன். ஆனால் அவள் சொண்டுக்குள் 'சுத்தமான மூடன், சுத்தமான மூடன்' என்று முணுமுணுத்தது மட்டும் கேட்டது.

அந்தக் கோபத்தை நீடிக்கும் சந்தோசம் எனக்கு கிடைக்கவில்லை. அடுத்த நாள் அதிகாலை டோல்ரஸ் என் அறைக்கதவைத் தட்டினாள். இது அதிசயமான விஷயம். ஏனென்றால் டோலரஸ் காலை பத்து மணிக்கு முன் எழும்புவது கிடையாது. எலினாவைக் கூட்டி வந்திருந்தாள். டோல்ரஸ்ஸுக்கு கல்லூரியில் முக்கியமான பாடம் ஒன்று இருக்கிறபடியால் நான் ஒரு மணி நேரம் அந்த பெண் குழந்தையை பார்த்துக் கொள்ளவேண்டுமாம்.

எலினா மிகவும் ஆயத்தமான குழந்தை. தன் புத்தகங்களையும், விளையாட்டு சாமான்களையும் மூட்டையாக கட்டி எடுத்து வந்திருந்தாள். மிகவும் பழகியவள் போல அங்கே தங்கியிருந்த மற்ற அறைவாசிகளுக்கு 'ஹலோ, ஹலோ' என்று சொல்லிவிட்டு வந்தாள். 'அங்கிள், இந்த ஷூவைப் பாருங்கள்' என்றாள். அப்பொழுதுதான் பார்த்தேன். முகப்பிலே லைட் பொருத்திய சப்பாத்து. அவளுடைய சிறிய பாதங்களுக்கு அது ஒரு சைஸ் கூடியதாக இருந்தது. அவற்றை அணிந்து கொண்டு அதை இறுக்கக் கட்டியும்,



கழற்றியும் மாறி மாறிப் போட்டு விளையாடினாள். ஒன்றிரண்டு முறை அதை அணிந்து தொப்பு தொப்பென்று நடந்தபோது அந்த ஒளியும் அவளுடன் ஆடியது.

திடீரென்று 'அங்கிள் ஒரு கதை சொல்லுங்கள்' என்றாள். முழுக்கையையும் நீட்டி ஒரு புத்தகத்தை கொடுத்தாள். 'அண்ணன் பெயர் ஹன்ஸல்; தங்கை பெயர் கிரேட்டல். இருவரும் காட்டுக்கு போகும் வழியில் பாண் துண்டுகளை போட்டபடியே சென்றார்கள். அந்த துண்டுகளை பறவைகள் உண்டுவிட்டபடியால் திரும்பும்போது வழி தவறிவிட்டது. ஒரு சூனியக்காரியிடம் மாட்டிக்கொண்டார்கள். அவர்களை கொழுக்க வைத்து சாப்பிடுவதற்கு அவள் சமயம் பார்த்திருந்தாள். ஒருநாள் அவளிடமிருந்து சாமர்த்தியமாக அவர்கள் தப்பி நேராக வீடு வந்து சேர்ந்தார்கள்.

'ஆகவே இதிலிருந்து தெரியும் படிப்பினை என்ன? சூனியக்காரியிடம் பிடிபட்டால் வீட்டுக்கு திரும்பும் வழி எப்படியும் தெரிந்துவிடும்.'

அந்தப் பெண் குழந்தை வாய்விட்டு சிரித்தது. அவளுடைய முகம் தாயினுடையதுபோல கூம்பியிருந்தது. ஆனால் அந்தக் கண்கள் மட்டும் நீலமாக ஆமை இறைச்சி சாப்பிடாதவனுடைய கண்கள் போல இருப்பதாக எனக்குத் தோன்றியது.

வாய்நீர் இருபக்கமும் ஒழுக,
புல்லை சாப்பிடும் துரகமே,
இதையும் கேட்டுவிடு.

பல நாட்கள் காக்க வைத்தபிறகு ஒருநாள் மாலை டோல்ரஸ் என்னுடன் வருவதற்கு சம்மதித்தாள். அபூர்வமாக குறித்த நேரத்துக்கு வந்துவிட்டாள். பயிற்சிக்காலம் முடிவடையாத ஒரு சிகை அலங்காரியிடம் அவள் முடி திருத்தியிருந்தது அப்பட்டமாகத் தெரிந்தது. இறைச்சி பிளந்ததுபோல சிவந்த அதரங்கள். இடது கையிலே மட்டும் பழுப்பு நிறத்திலான ஒரு ஜேட் காப்பு. அவள் கை நிறத்துக்கு பொருத்தமாக இருந்தது.

மிகவும் சாதாரண உணவகத்தில் தயாரித்த மலிவு விலை சாப்பாட்டை உண்டுவிட்டு 'பாறைக்குப் போகலாம்' என்றாள். இந்தப் பாறை எங்கள் கல்லூரியில் மிகவும் பிரசித்தமானது. ஒரு ஒதுக்குப்புறத்தில் ஆயிரமாயிரம் கால்கள் பட்டு தட்டையாகவும், வழவழப்பாகவும் இருந்தது. இரண்டு பாய்ச்சலில் ஒருவர் உதவியும் இல்லாமல் டோல்ரஸ் பாறையின் உச்சிக்கு ஏறிவிட்டாள்.

சூரியன் முற்றிலும் மறைந்தபிறகு மிச்சமாயிருக்கும் வெளிச்சத்தில் அவள் முகம் ஒரு பூனையினுடையது போல தோன்றியது. இதமான குளிர் காற்று தொட்டு வீசியது. வெகு நேரம் ஒன்றும் பேசாமல் அவள் சுவாசக் காற்று கொடுக்கும் சத்தத்தையே கேட்டுக்கொண்டிருந்தேன்.

'உன் உடம்பு முழுக்க என் காதலால் தோய்க்கப்பட்டு இருக்கிறது. உனக்கு தெரியவில்லையா? உன் பதிலைச் சொல்லு. அவசரமே இல்லை. வேண்டிய நேரம் நீ எடுக்கலாம். வேண்டுமானால் பத்து செக்கண்ட் கூட எடுக்கலாம்' என்றேன்.

என்ன நினைத்தாளோ, அவள் மௌனமாக இருந்தாள். அது அவளுடைய இயல்புக்கு மாறானது. தடவித் தெரிந்துகொள்ள வேண்டிய இருட்டு கவிந்துவிட்டது. நாலைந்து மூச்சுக்களை சேமித்து ஒரு மூச்சாக விட்டாள். மனிதனால் படைக்கப்பட்ட உலகத்து கார்கள் எல்லாம் கீழே அதிவேக சக்தியோடு நெடுஞ்சாலையில் ஒன்றன்பின் ஒன்றாக ஒளி வெள்ளத்தை முகத்தில் விட்டுவிட்டு அடித்தபடி உருண்டு போக, எனக்குப் பக்கத்தில் அவள் நின்றாள். ஒரு ஒளி வெள்ளம்போய் மற்ற ஒளி வெள்ளம் வருமுன் ஏற்பட்ட இடைவெளியில் என்னை அணைத்து நீண்ட முத்தம் ஒன்று தந்தாள்.

இதற்கு பிறகு, என் ஆசையை நான் அளவு மீறி வளர்த்துவிடக் கூடாது என்பதை ஞாபகமூட்டும்படி ஒரு சம்பவம் நடந்தது.

இடைப் பரீட்சை நடந்து முடிந்த ஒரு மாலைப்பொழுது. நண்பர்கள்



படிப்பகம்

www.padippakam.com



பலர் சேர்ந்துவிட்டார்கள். இப்படியான சமயங்களில் டோல்ரஸ் ஒரு பியருக்கு மேலே எடுப்பதில்லை. அன்றும் அப்படியே இருக்கலாம். நான் எண்ணத் தவறிவிட்டேன். மேசையின் மீது தாவிக்குதித்தாள். 'நான் உங்களுக்கெல்லாம் ஒரு சந்தோசமான செய்தி சொல்லப்போகிறேன்' என்று சொன்னபடி என்னைச் சுட்டிக்காட்டினாள். 'நண்பரும் நானும் விரைவில் மணம் முடிக்கப்போகிறோம்.' எல்லோரும் ஆரவாரம் செய்தார்கள். சீட்டி அடித்தார்கள். அடிக்கத் தெரியாதவர்கள் அன்று பழகிக்கொண்டார்கள். கையமர்த்திவிட்டு தொடர்ந்தாள். 'என்னுடைய நண்பரை பாருங்கள். அவருடைய உயரமின்மையை நான் பொருட்படுத்துவதில்லை. என் கழுத்தை அவருடைய நாக்கு தொடும்படிக்கு அவர் வளர்ந்த அன்று அவரை மணப்பதற்கு நான் சித்தமாக இருக்கிறேன்' என்றாள். சிலர் 'ஹாஹா' என்று சிரித்தார்கள்; சிலர் கை தட்டினார்கள். எல்லோரும் என் முதுகிலே குத்தினார்கள். முதுகுத்தண்டை வளர்ப்பதற்கு கொடுத்த அச்சாரமாக அதை ஏற்றுக்கொண்டேன்.

அன்று கல்லூரியில் *Integral Calculus*ல் ஒரு அபூர்வமான கணித நுட்பம் பற்றிய விவாதம் நடந்தது. டோல்ரஸ் வரவில்லை. அவளைத் தேடிப்போனேன்.

அறைக்கதவை நான் திறந்ததும் நல்ல காட்சி ஒன்று கிடைத்தது. நிலத்திலே ஒரு கும்பல் உடுப்பு. ஜீன்ஸ், நிக்கர், ஸ்வெட்டர், பிளவுஸ், ப்பிரா என்ற ஒடரில் துகில் நீக்கியிருப்பதற்கான அறிகுறியுடன் அவை ஒன்றன் மேல் ஒன்றாகக் கிடந்தன. இனி அவள் அதை திருப்பி அணியும்போதும் அதே முறையில் அணிவாள் என்று எதிர்பார்க்கலாம்.

ஒரு வெல்வெட் மாதிரியான பசுந்துணியில் தயாரித்து மெத்தென இருக்கும் மயில் நீல பிளவுஸ் ஒன்று அவளிடம் இருந்தது. கடந்த இரவு அதைத்தான் அணிந்திருந்தாள் போலும். கடந்த வாரமும் அதைத்தான் உடுத்தினாள்; கடந்த மாதமும் அதுதான்; கடந்த வருடமும் அதையேதான் அணிந்திருக்கலாம்.

நாலு தடித்த கால் சோபா ஒன்றில் ஒரு முரட்டு கம்பளிப் போர்வையால் மூடிக்கொண்டு முழங்கால் நாடியைத் தொட, படுத்திருந்தாள். அவளுடைய படுக்கையில், நட்ட நடுவில் ஒரு அழகான பூனை தூங்கியது. சொக்லட்டுக்கு கொஞ்சம் தகுதி குறைந்த நிறத்தில், தொட வேண்டும் என்ற ஆசையைத் தூண்டும்படி கத்தை கத்தையாக மெத்தென்ற ரோமம் கொண்ட பூனை. கால்களிலும், வாலிலும் ஒரு சொட்டோ சொட்டு கறுப்பு. மஞ்சள் கண்கள். அதனுடைய இமைகளை அவசரமின்றி மூடி அவசரமின்றி திறந்தது. சாம்பலாக என்னைப் பார்த்துவிட்டு மறுபடியும் சயனமாகிவிட்டது.

'இது என்ன பூனை, சொல்லு பார்ப்போம்?' என்றாள். வான சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், பூனை சாஸ்திரம் ஒன்றிலும் பரிச்சயம் இல்லாத நான் என் புத்தி போகும் தூரத்துக்கு யோசித்து 'சயாமிஸ் பூனை' என்று சொன்னேன்.

'இல்லையே! அபிஸீனியன் பூனை! பூனைகளின் மூதாதை. எகிப்தில் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு வழிபாடு செய்யப்பட்டது' என்றாள்.

'அவ்வளவு வயதா?' என்றேன் நான்.

'சுத்த மூடன், சுத்த மூடன்' என்றாள் அவள்.

இந்தப் பூனை வந்த பிறகு அவளில் ஒரு பெரிய மாற்றம் தென்பட்டது. அவள் கையிலே *Don Quixote* புத்தகம் இருக்கும். மடியிலே பூனையை வைத்து தடவிக்கொண்டு இருப்பாள். நீண்ட விரல்களில் அரைவாசி அந்தப் பூனையின் செழித்த மயிர் பிரதேசத்துக்குள் மறைந்துவிடும். அந்தப் பூனையும் அவளுடைய உருண்டையான தொடைகளில் நீளவாக்காகப் படுக்கப் பழகிக்கொண்டது. பூனை தொக்கையாக வரவர அவளுடைய புத்தகத்தின் படிக்காத பக்கங்களின் தொக்கைத்தன்மை குறைந்து கொண்டு வந்தது.

இரண்டு பெரிய மூக்குத் துவாரங்கள் இருந்தும், மேலு தட்டினால் மூச்சுவிடும் கந்தகமே, மீதியையும் சொல்லிவிடுகிறேன்.

என்னுடைய *Integral Calculus* குறிப்புகளை ஒருநாள் அவள் கொண்டுபோய்விட்டாள். இரவு முழுவதும் கண்விழித்து தயாரித்த குறிப்புகள் அவை. அவற்றை மீட்பதற்காக போயிருந்தேன். என் நோட்ஸை கேட்டபோது எரிச்சல் பட்டாள். தவழ்ந்து, தவழ்ந்து அவற்றை சேகரிக்கத் தொடங்கினாள். சில அவளின் சோபாவின் அடியிலும், சில படுக்கையிலும் கிடந்தன. சில தாள்களின் மூலையில் பூனையின் ஏதோவொன்று ஒட்டிக்கொண்டிருந்தது போல பட்டது. நான் மூன்று விரல்களை நீட்டி, இரண்டு விரல்களால் ஒற்றைகளைப் பிடித்து, பக்கங்களை எண்ணி சரி பார்த்தபடி ஒரு கேள்வியை கேட்டேன்.


○ மாறுபட்ட தரமான சிற்றிதழ்
○ கலை, இலக்கியம், அறிவியல், பொருளாதாரம், உலக நடப்பு என அனைத்து துறை விஷயங்கள்...
○ அழியும் கலைகள், காலத்தை வென்ற தமிழ்ச் சிறுகதைகள், உலகை வென்ற 22 பேர், நுண்ணாய்வு கட்டுரைகள், பல் துறை சாதனையாளர்கள் பேட்டி, படைப்புக்கள், விமர்சனம், இன்னும்...
○ முற்றிலும் புதிய இளைஞர்களின் சவாலான புதிய முயற்சி
○ தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

ஆயுள் சந்தா ரூ.1000
மூன்றாண்டு சந்தா ரூ.100
அளவு 1/8, பக்கம் 32

இந்தியன் இனி
28, சஞ்சீவித் தெரு
மன்னார்குடி 614 001

விளம்பரம்


உலகத்திலே சண்டையை உண்டாக்கும் கேள்விகள் சில இருக்கின்றன. அந்தக் கேள்விகளை ஊகிப்பதும் அவ்வளவு கஷ்டமானதல்ல. அவளுடைய பூனைக்கு என்ன பேர் என்று கேட்பது அப்படிப்பட்ட கேள்வியா? நான் கேட்டுவிட்டேன். அதிலிருந்துதான் மிகப் பெரிய போர் ஒன்று ஆரம்பமாகியது.

அந்தப் பூனையின் பெயர் கஸில்டா என்றாள். 'கஸில்டா யார்?' என்று கேட்டேன். அவளுக்கு கோபம் வந்துவிட்டது.

'நீ என்ன இலக்கியம் படிக்கிறாய். உலகத்தின் தலைசிறந்த ஆர்ஜண்டீனிய படைப்பாளி தந்த கதாநாயகி அல்லவா? தெரியாதா?' என்றாள்.

தோல்வியை ஒப்புக்கொள்ள மனது வரவில்லை. சமாளிக்கப் போய் இன்னும் சேற்றுக்குள் மாட்டிக்கொண்டேன்.

'கஸில்டாவின் குணாதிசயம் இதற்கு எப்படி பொருந்தும்?'

'இது என்ன கேள்வி? எவ்வளவு காதலைக் கொட்டினாலும் திருப்பிக் காதலிக்காத பெண்.'

'அதைத்தான் சொல்கிறேன். பொருந்தாதே?'



படிப்பகம்

www.padippakam.com



'அதுதான் நாய்க்கும் பூனைக்கும் உள்ள வித்தியாசம். இந்தப் பூனையில் நான் எவ்வளவுதான் அன்பை கொட்டினாலும் அது என்னை ஒரு நண்பியாக ஏற்பதே கிடையாது. தன்னுடைய இயல்பை அது மாற்றுவதே இல்லை. எப்பொழுதும் பூனையாகவே இருக்கும்.'

'நீ இதை பூனைக்கு சொல்கிறாயா? அல்லது எனக்கு சொல்கிறாயா?'

'பூனைக்கு சொல்லத் தேவை இல்லை. அது மதியூகம் படைத்தது.'

*மிகவும் பாரதூரமான ஒரு கதையை உனக்கு நான் சொல்கிறேன். அதற்குரிய மரியாதை தந்து கேட்பாயாக, பரியே.*

அன்றிலிருந்து நான் முகம் கொடுக்கவில்லை. அவள் வரக் கூடிய இடங்களை முன்கூட்டியே அனுமானித்து அவற்றைத் தவிர்த்தேன். டெலிபோனை எடுப்பதில்லை. அதில் அவள் விடும் தகவல்களையும் சட்டை செய்வதில்லை.

ஒருநாள் அவள் டெலிபோனில் இப்படி ஒரு செய்தியை விட்டிருந்தாள் : 'உன்னுடைய குரலுடன் பேசியது எனக்கு மிகவும் சந்தோசம். இந்த ஒரு வாரத்தில் உன் குரலுடன் பலமுறை பேசியிருக்கிறேன். ஆனால் நீ விடும் தகவல் ஒரே மாதிரியாக இருக்கிறது. கல்லூரி விடுமுறை தொடக்கமுதல் உன்னுடைய உடம்புடன் கூடிய குரலுடன் பேச ஆசைப்படுகிறேன்.'

முழுவதும் பசப்பல்.

பனி பெய்து சேறாகிய ஒரு நாள் அவளைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வேகமாக என்னை தாக்கியது. அவசரத்தில் கையுறை கூட அணியாமல் வெகு நேரம் நடந்து அவளுடைய அறைக்குப் போனால் அவள் அங்கே இல்லை. ஜோசெப் ஹெல்லர் எழுதிய *Catch 22* புத்தகம் பாதி படித்தபடி தலைகுப்புறக் கிடந்தது. விஸ்காஸ் என்ற பூனை உலர் உணவு பெட்டிகள் பன்னிரெண்டு ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. 25 வீதம் தள்ளுபடி என்பதால் வாங்கப்பட்டவை. அந்த வாரம் *cafeteria*வில் அவள் வேலை செய்து சம்பாதித்த அவ்வளவு பணமும் இப்படி பூனை உணவு வாங்குவதில் செலவழிந்து விட்டதாக பின்னால் அறிந்தேன்.

அந்தப் பூனை, கவனயீனமாக திறந்துவிட்ட உள்ளறையின் கதவில் தொற்றிக்கொண்டு என்னை சம்சயத்தோடு பார்த்தது. நான் நண்பனா எதிரியா என்பதை அது இன்னும் தீர்மானிக்கவில்லை. பிறகு ஒரு கொட்டாவியை விட்டு தன் அசிரத்தையைக் காட்டியது.

காசை மிச்சப்படுத்துவதற்காக மிகக் குறைந்த வெப்பநிலையில் அறையின் உஷ்ணமுள்ளைத் திருப்பி வைத்திருந்தாள். என்னுடைய மேலங்கியை கூட கழற்றாமல், முழங்கால்கள் ஒட்ட, அவளுடைய சோபாவில் நெடுங்காலமாக வசித்த ஒரு லேஸ் வைத்த உள்ளாடையைத் தள்ளிவிட்டு, உட்கார்ந்து என்னுடைய காத்திருக்கும் வேலையை தொடங்கினேன். நல்லகாலமாக எனக்கு பிடித்த அவளின் மெல்லிய வியர்வை நெடி அவளுடன் போகவில்லை.



இரவு இரண்டு மணி வரை அவளுக்காக காத்திருந்ததை அடுத்த நாள் கூறினேன். அவள் ஆச்சரியப் படவில்லை. நூற்றுக்கணக்கான வாலிபர்கள் இப்படி அவளுக்காக காத்திருப்பது வழக்கம் என்பது போல நடந்துகொண்டாள்.

பாடம் நடந்துகொண்டிருந்தது. முழங்கையால் என்னை இடித்தாள். 'ஏய், உன் நகங்களைப் பார்! இந்த அரைச்சந்திர வடிவங்கள் அபூர்வமானவை. எப்படி வெள்ளை வெளேரென்று இருக்கின்றன, பார்த்தாயா? உனக்கு ஒரு பெண்ணினால் அதிர்ஷ்டம் கிட்டும்' என்றாள்.

'இது என்ன? பியூட்டரிக்கா சாஸ்திரமா? எனக்குத் தெரிந்தது ஓர் உயரமான பெண்தான். அவளுடைய காதுகள் வெகு தூரத்தில் இருக்கிறபடியால் நான் சொல்லும் வாசகங்கள் அவளுக்கு எட்டுவதில்லை. இதில் எப்படி எனக்கு அதிர்ஷ்டம் வரும்?' என்றேன்.

'இவ்வளவு சீக்கிரம் தைரியம் இழக்கக்கூடாது. யார் கண்டது, நீ அவளுக்கு கடன் கொடுத்த *thermodynamics* குறிப்புகள் உனக்கு திரும்ப கிடைத்தாலும் கிடைக்கும்.'

அவள் கால்களை எட்டி வைத்து போகும்போது திரும்பி என்னைப் பார்த்து, பற்கள் தெரிய சிரித்து, பறக்கும் முத்தம் ஒன்றை அனுப்பினாள். அது என்னிடம் வந்து சேர்வதற்கிடையில் ஒரு வாயிலோன் குறுக்கிட்டுவிட்டான்.

*உன் முன்னங்கால்களில் எது வலது கால், எது இடது கால் என்று நீ அறியாவிட்டாலும் வலது காலை மட்டும் தூக்கி கதவு தட்டுவதுபோல நிலத்தை தட்டுகிறாயே, முடிவையும் சொல்கிறேன் கேள், புரவியே.*

அன்று எப்படியும் அவளை மடக்கிவிட வேண்டும். அவளறியாமல் அவளைத் தொடருவதென்ற முடிவெடுத்தேன். வெகுநேரம் அவள் செய்கைகளை கவனித்தபடி அவளை பின் தொடர்ந்தேன். காத்திருந்தேன். தொடர்ந்தேன். காத்திருந்தேன்.

நாளின் நிறம் மாறிவிட்டது. நீளமான தோல்வார் கொண்ட மொசமொசவென்ற சிவப்புப் பையை தூக்கிக்கொண்டு, அதனுடைய தபால் தலை அளவு பக்கிள் அந்த மங்கிய வெளிச்சத்திலும் ஜொலிக்க, அபிஸீனியன் பூனையின் கண்களை தோற்கடிக்கும் பழுப்பு நிறக் கண்களை வீசிக்கொண்டு எதிர்த்திசையில் நடக்கத் தொடங்கினாள்.

நான் என் வாழ்க்கையின் மிக முக்கியமான முடிவை எடுப்பதற்கு இரண்டே இரண்டு செகண்டுகள் இருந்தன.

பேராசிரியர் சொன்ன 'சுத்த மூடன்' கதை ஞாபகத்துக்கு வந்தது. ஒரு சுத்த மூடன் எடுக்கும் முடிவுக்கு நேர் எதிரான முடிவை ஒருவன் எடுத்தால் எல்லாம் சரியாகி விடும். அப்படியே செய்வதென்று தீர்மானித்தேன்.

அவசரப்பட்ட காற்றுப்போல சிகை கலைய, நீண்ட கறுப்பு காலுறைகள் பளபளக்க, அவள் சாலையைக் கடந்தாள்.

அவளைத் தின்னவேண்டும் போல பட்டது.

ஓவியங்கள் : ஆர். பி. பாஸ்கரன்



படிப்பகம்

www.padippakam.com



நேர்காணல் :

# என் தேர்வுகளை ஆர்வங்களை திறந்து வைத்திருக்கிறேன்

# டிராட்ஸ்கி மருது



நவீன தமிழின் கலை இலக்கிய இயக்கத்தோடு தீவிரமாகப் பிணைந்திருக்கும் டிராட்ஸ்கி மருதுவின் கலை ஆளுமை வெவ்வேறு தளங்களைத் தொட்டு விரிந்து செல்கிறது. நவீன ஓவியத்தின் பண்புகளை வெகுசன ஊடகங்களுக்குள் செலுத்திய முன்னோடிகளில் மருதுவின் பங்கு தனிச்சிறப்பு வாய்ந்தது.

18-8-1953ல் மதுரையில் பிறந்த மருது 1976ல் ஓவியத்திற்கான பட்டயப் படிப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதுடன் 1977ல் சென்னை அரசினர் ஓவியக் கல்லூரியில் மேல்நிலை பட்டயச் சான்றிதழ் பெற்றார். 1978ல் புது தில்லியில் Garhi Arts Studioவில் வரைகலைப் பயிற்சி பெற்றார். 1974 முதல் இன்று வரை 15க்கும் மேற்பட்ட ஓவியக் கண்காட்சிகளில் பங்கேற்றுள்ள மருது பல்வேறு விளம்பர நிறுவனங்களில் பணியாற்றியுள்ளதுடன் 70களின் பிற்பகுதியில் மங்கையர் மலர் இதழிலும், 90களில் குமுதத்திலும் வடிவமைப்பாளராக பணியாற்றியுள்ளார்.

சமூக விழிப்புணர்விற்கான பல்வேறு முகாம்களிலும் ஓவியராக தன்னுடைய பங்கைச் செலுத்தியிருக்கிறார். 1980ல் இருந்து வெவ்வேறு நிலைகளிலான போஸ்டர் வடிவமைப்பாளராக பணியாற்றி வந்திருப்பதுடன் 90களில் பத்திற்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு மற்றும் தென்னிந்திய மொழிப் படங்களில் Special Effects மற்றும் Digital Effects இயக்குநராக பணியாற்றியிருக்கிறார். ஓவியத்திற்காக கணினியைப் பயன்படுத்திய முதல் தமிழக ஓவியராக மருது கருதப்படுகிறார். அனிமேஷன் படங்களுக்கான பல்வேறு பயிலரங்குகளில் பங்கேற்றுள்ள மருது இன்று முன்னணியில் உள்ள பத்திற்கும் மேற்பட்ட அனிமேஷன் கலைஞர்களுக்கு பயிற்சி அளித்தவராவார். தமிழ்நாடு திரைப்பட இயக்கத்தைத் துவங்கியவர்களில் மருதுவும் ஒருவர். அவர் 1998-99ல் சென்னை டான்பாஸ்கோ தொடர்பியல் மையத்திற்காக நடத்திய குழந்தைகளுக்கான இரு அனிமேஷன் பயிலரங்குகள், அத்துறையில் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகும். மருதுவின் பன்முக கலை இயக்கத்தின் சில பகுதிகளை இந்த நேர்காணல் பதிவு செய்கிறது.

*சனாதனன் : நீங்கள் கதைகள், கவிதைகளுக்குப் படங்கள் வரைகிறீர்கள். தனியாகவும் ஓவியங்கள் வரைந்து வருகிறீர்கள். அனிமேஷன் துறையிலும் திரைப்படத் துறையிலும் செயல்பட்டு வருகிறீர்கள். அடிப்படையில் உங்களை யாராக நீங்கள் இனங் காண்கிறீர்கள் ?*

இளம் வயதிலிருந்தே இந்த மூன்றும் என்னுடன் இணைந்து வந்திருக்கின்றன. தெளிவாக, திட்டவட்டமாக வரையறுக்க என்னால் முடியவில்லை. கதை, கவிதைகளுக்கு விளக்கப்படங்கள் வரையும்போது கூட சமகால நவீன ஓவியராகத்தான் அவற்றில் இயங்குகிறேன். என்னுடைய தேடலை, பயணத்தை, உறைந்த தன்மையுடைய கலைகளில் (plastic arts) இருந்து அசையும் தன்மையுடைய கலைகளை நோக்கிய நகர்வாகக் கூறலாம் என்று நினைக்கிறேன். உறைந்த தன்மையுடைய கலைகளில் இயங்கியபோதும்கூட ஒரு அசைவை அதில் பிரதிபலிக்க முயன்று வந்திருக்கிறேன். நமது சூழலில் இருக்கும் பிற ஓவியர்களெல்லாம் கம்ப்யூட்டர், க்ராபிக்ஸ் துறை நோக்கி நகர்வதற்கு வெகு முன்பாகவே - 80களிலேயே - நான் அவற்றில் ஈடுபட ஆரம்பித்திருந்தேன். ஓவியத்தில் நாம் நமது படைப்பை உடனே நேரடியாகப் பார்க்க முடிகிறது. சினிமாவிலோ தொழில்நுட்ப ரீதியான பல தளங்களைக் கடந்த பின்தான் பெரிய திரையில் நமது படைப்பைப் பார்க்க முடிகிறது. கம்ப்யூட்டர் அந்த இடைவெளியை, நெருக்கடிகளை முற்றாக இல்லாமல் ஆக்கிவிட்டிருக்கிறது. ஒரு ஓவியத்தைப் போலவே உடனடியாகப் பார்த்துவிட முடிகிறது. அசையும் தன்மையுடைய கலைகளைத் தேடிக் கொண்டிருந்த நான் இயல்பாக கம்ப்யூட்டர் துறையை - அனிமேஷன் துறையை - நோக்கி நகர்ந்தேன்.

*ஓவியங்கள் வரையும்போது தூரிகை, வண்ணங்கள், கேன்வாஸ் இவற்றுடன் ஒரு நேரடித் தொடர்பு இருக்கிறது இல்லையா...? கம்ப்யூட்டரில் வரையும்போது தூரிகையும் வண்ணங்களும் ஏற்படுத்தும் கிளர்ச்சி கிடைக்காது போய்விடுகிறதே... அது பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?*

இது எல்லாத் துறைகளிலும் நடந்து வருகிறது. மண்ணாலான உருவங்கள் செய்யும்போது களிமண்ணைப் பிசைந்து செய்கிறோம். கல்லால், மரத்தால் சிற்பங்கள் செய்யும்போதும் அவற்றுடன் நமக்கு நேரடித் தொடர்பு இருக்கிறது. த்ரீ டைமன்ஷன் க்ராபிக்



படிப்பகம்

www.padippakam.com



ஸில் வரையும் போதோ அனைத்தும் கம்ப்யூட்டருக்குள்ளே நடைபெறுகிறது. இருப்பினும் ஓவியருக்கு படைப்பின்மீதும், உடனும் உள்ள தொடர்பு, ஸ்பரிசம் ஆகியவற்றை ஓவியர் இழந்து விடுவது கூடாது என அக்கறைப்பட்டும், படைப்பாளிக்கு அதனால் எந்த படைப்புச் சோர்வோ, விலகிவிட்ட தன்மையோ வந்துவிடாமல் இருக்க அக்கறையுடன் சாப்ட்வேரும், ஹார்டுவேரும் கண்டுபிடிக்கப்பட்டு புழக்கத்தில் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். திரைப்படத்துறையில் தற்போது செயல்பட்டு வரும் தொழில் நுட்பங்களே கூட இல்லாமல் பெரிய மாற்றங்கள் நிகழப்போகிறது. நவீன இயந்திரங்களில் இயங்கும்போது இப்படியாக நேரடித் தொடர்பு இல்லாமல் போய் விடுவது சிறிது நிகழ்ந்தாலும் தூரிகை, கேன்வாஸ் முதலானவற்றை அது முற்றாக இல்லாது ஆக்கிவிடும் என்று சொல்ல முடியாது. அந்த பயம் நமக்குத் தேவையில்லை. அதே சமயம் இத்தகைய கலைகள் - ஓவியம் உட்பட - ஒற்றை பிம்பத்தைக் கொண்டதாக இருக்கின்றன. அவற்றின் சாத்தியப்பாடுகளை நாம் இன்னமும் முழுமையாக வெளிக் கொணர்ந்து விடவில்லைதான். இருந்தாலும் அவற்றிற்கும் சில எல்லைகள் இருக்கின்றன. ஒரு காகிதத்தின் வெள்ளைப் பரப்பு திறக்கத் திறக்க எல்லையற்று விரியும் தன்மையுடையதாகத்தான் இன்னமும் இருக்கிறது. ஆனால் சினிமாவோ எண்ணற்ற பிம்பங்களின் பிரவாகமாக இருக்கிறது. நகரும் ஓவியத்துணி என்று சொல்லலாம் சினிமாவை. சிலபடங்களை மிகச்சிறந்த படங்களாக நாம் மதிப்பதற்கு அவற்றின் உள்ளடக்கம் மட்டுமே காரணம் என்று சொல்ல முடியாது. ஹிட்ச்காக் படங்களை எடுத்துக் கொள்வோம். அவரைப் பெரும்பாலானோர் ஒதுக்கித் தள்ளிவிடுவதுண்டு. என்னைப் பொறுத்தவரை அவர் மிகப்பெரிய படைப்பாளிதான். பார்வையாளரையும் கருத்தில்கொண்டு செயலாற்றியவர் அவர். அவருடைய படங்களை ஒளி நிழலால் ஆன மாயாஜாலம் என்று சொல்லலாம். ஒரு பிரேமில் ஒரு இடத்தில் மட்டும் ஒளி இருக்கும். இன்னொருபுறம் இருளாக இருக்கும். திடீரென்று ஒரு கோளம் மையத்தை நோக்கி நகரும். பிரம்மாண்டமாக உங்களை நோக்கி வரும். ஒளி - நிழல் இவற்றின் இத்தகைய விளையாட்டே சினிமா. . . அது சில சமயங்களில் ஆணாக இருக்கிறது சில சமயங்களில் பெண்ணாக இருக்கிறது. நாயாக இருக்கிறது. காராக இருக்கிறது. கதை சொல்கிறது. ஒரு மந்திரவாதி தனது வசியத்திற்குள் கட்டுப்படுத்தி வைப்பது போல் அது நம்மைக் கட்டுப்படுத்துகிறது.

இன்றைய காலகட்டம்வரை ஓவியத்திற்கென ஒரு தனிஇடம், தனி வெளிப்பாட்டு முறை இருந்து வந்திருக்கிறது. இனிவரும் காலங்களில் அசையும் தன்மையுடைய ஓவியமே மிகப் பெரிய அளவில் கவனம் பெறும் என்று நினைக்கிறேன். இலக்கியம் மொழி சார்ந்து இயங்குகிறது. நடனம், ஓவியம், திரைப்படம் இவை எல்லாராலும் புரிந்துகொள்ளக்கூடியவையாக, மொழியைக் கடந்தவையாக, இருக்கின்றன. அந்தவகையில் அனிமேஷனும் எல்லையற்ற சாத்தியப்பாடுகளைக் கொண்டதாக இருக்கிறது. முதலில் இங்கு ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அனிமேஷன் என்பது கார்ட்டூனுக்கு மாற்று அல்ல. அது அசையும் தன்மையுடைய ஓவியம் ஆகும். அனிமேஷன் கலைஞரை அசையும் ஓவியங்களை உருவாக்குபவர் என்று சொல்லலாம். உறைந்த தன்மையுடைய கலைகளின் அம்சத்தையும் நிகழ்த்து கலைகளின் அம்சத்தையும் தன்னுள் கொண்டதாக இருக்கும் அனிமேஷன் மிகுந்த வீச்சைக் கொண்டதாக இருக்கிறது. அனிமேஷன் பிற எல்லாக் கலைகளையும் தன்வயப்படுத்தியதாக இருக்கிறது. ஆனால் அது உரிய மரியாதை கொடுத்து கவனிக்கப்படவில்லை வெகுகாலமாக. ஒரு தனித் துறையாக, நிறுவனமாக அதை வளர்த்தெடுத்தவர்களாக டிஸ்னி போன்ற ஒரு சிலரை கூறமுடியும். வேறு பல ஓவியர்களும் வர்த்தக ரீதியான எதிர்பார்ப்புகளின்றி இத்துறையில் கடந்த எண்பது ஆண்டுகளில் உலகின் எங்கோ ஒரு மூலையில் ஒரு முனிவரைப் போல் தனித்து இயங்கி பெரும் சாதனைகளை செய்தும், படைப்புகளை விட்டும் சென்றிருக்கிறார்கள்.



**ஒரு காகிதத்தின் வெள்ளைப் பரப்பு திறக்கத் திறக்க எல்லையற்று விரியும் தன்மையுடையதாகத்தான் இன்னமும் இருக்கிறது. ஆனால் சினிமாவோ எண்ணற்ற பிம்பங்களின் பிரவாகமாக இருக்கிறது. நகரும் ஓவியத்துணி என்று சொல்லலாம் சினிமாவை.**

*சிறுவயதில் உங்களைப் பாதித்த விஷயங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்...*

மதுரையில் இருக்கும் கோரிப்பாளையம் பகுதிதான் எனது ஊர். அங்கு இருந்த ஐய்யனார் சிலைகள், மண் குதிரைகள் முதலானவை என்னுள் பயம் கலந்த ஆர்வத்தை சிறு வயதில் ஏற்படுத்தியுள்ளன. திருவிழாக் காலங்களில் சிலைகள் புதுப்பிக்கப்படுவதை, அலங்காரங்கள் செய்யப்படுவதை, ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவதை ஒவ்வொரு கட்டத்திலும் கூடவே இருந்து முழுமையாகப் பார்த்து வருவேன். அவை என்னை வெகுவாகப் பாதித்திருக்கின்றன. சிறுவயதில் நிறைய காமிக்ஸ் புத்தகங்கள் படிப்பதுடன் மணிக்கணக்கில் பார்த்துக்கொண்டே இருப்பேன். அவைதான் நான் ஒரு ஆர்ட்டிஸ்டாக வர வேண்டும் என்ற உந்துதலை என்னுள் ஏற்படுத்தின என்று சொல்லலாம். நல்ல திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பும் எனக்கு சிறுவயதிலேயே கிடைத்தது. வால்ட் டிஸ்னியின் அதுவரை வந்த அனைத்துப் படங்களையும் நான் என் பதினெட்டு வயதிற்குள்ளேயே பார்த்துவிட்டிருந்தேன். ஐரோப்பாவிலிருந்து வந்த பரிட்சார்த்தபடம், Stop-motion படங்கள், Puppet படங்கள், Hammer Horror, ரே ஹாரியின் Stop-motion animation படங்கள் எனத் திரை ஓவியப் படிமங்களும் என்னை பாதித்தன.

*மதுரையிலேயே இதற்கான வசதிகள் இருந்தனவா...?*

ஆமாம். மதுரையில் ரீகல் டாக்கீஸ் என்றொரு வித்தியாசமான சினிமா அரங்கம் இருந்தது. பகலில் அது நூல் நிலையமாக இருக்கும். இரவில் தியேட்டராக மாறிவிடும். குறிப்பிட்ட பார்வையாளர்கள் மட்டுமே அங்கு வருவார்கள். குறும்படங்கள், அனிமேஷன் படங்கள் என அனைத்து வகைப்படங்களும் திரையிடப்படும். இள வயதில் கனவுத் தன்மை நிறைந்த மாயாஜாலப் படங்களைப் பார்த்த அந்த அனுபவம் மறக்க முடியாத ஒன்று. சிறுவனாக இருந்ததால் முன்னால் அமர்ந்திருப்பவரின் தலை திரையை மறைக்கும். தோள்பட்டைகளுக்கு இடையே இருக்கும் இடைவெளியினூடாக பார்க்க வேண்டி



படிப்பகம்

www.padippakam.com

யிருக்கும். பிரமாண்டமான குகைகள், மலைகள், ஒற்றைக் கண் அரக்கன் என அப்போது பார்த்த அந்தப் படங்கள் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தின. சிறு வயதிலேயே ஷெர்லி டெம்பிள் படம், அலெக்ஸாண்டர் கொர்டாவின் படங்கள் பார்த்திருக்கிறேன். சென்னையில் இருந்த என் நண்பர்களுக்குப் பார்க்கக் கிடைத்திராத படங்களை நான் மதுரையிலேயே பார்த்து விட்டிருந்தேன். டென் கமாண்ட்மெண்ட்ஸ், சாம்ஸன் அண்ட் டி லைலா என்று பல்வேறு வரலாற்றுப் படங்களைப் பார்த்திருக்கிறேன். அந்தப் படங்களைப் பார்க்கும்போது அதில் வரும் கோட்டை மதில்கள், குகைச் சுவர்கள் எல்லாம் - திரையில் சில வினாடிகள்தான் வரும் என்றாலும் -வரைந்தது போல் இருக்கிறதே என்று அந்தச் சிறுவயதிலேயே கண்டுபிடித்துவிடுவேன். Matte Painting முறையில் அக்காட்சிகளை சாதாரணக் கண், கதை போகிற வேகத்தில் கவனிக்க விட்டு விடும். இப்போது தொழில்நுட்பரீதியாக எப்படி அதைச் செய்கிறார்கள் என்றெல்லாம் தெரிந்துவிட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சிறுவயதிலேயே தூரிகையால் வரைந்தவற்றை இனங்காணும் திறமை எனக்கிருந்திருந்தது. சினிமா பார்க்கும் பழக்கம் தீவிரமடைந்ததற்கு என் அப்பாவும் ஒரு காரணம். ''பள்ளி ஆசிரியர் பாலைவனம் என்று வெறுமனே சொல்லித்தான் தருவார், சினிமாவிலோ நீ அதை நேரடியாகப் பார்க்க முடியும், எனவே முதலில் சினிமாவிற்குப் போ, பாடங்களை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்'' என்பார். எனக்கு டாலியை அறிமுகப் படுத்தியது அவர்தான். பிக்காஸோ பற்றி என்னிடம் கடுமையாக விமர்சிப்பார். ஓவியம் குறித்த அவரது பார்வை வேறாக இருந்தது. 40களில் பெருந்தலைவர்களின் உருவப்படங்கள் அச்சடிக்கப்பட்டு விற்கப்பட்ட போது ட்ராட்ஸ்கி, தாகூர், சுபாஷ் சந்திர போஸ் போன்றோரின் படங்களெல்லாம் வாங்கி வீட்டில் மாட்டியிருந்தார். கடவுள் படங்கள் வாங்க மாட்டார். என் அம்மாவுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. அதற்காகச் சில படங்களை மட்டும் அனுமதித்தார். அப்போதும் மதம் சார்ந்த எந்த நேரடிக் குறியீடும் இல்லாத கிரேக்கக் கடவுள் படங்கள் போன்றவற்றை மட்டுமே வாங்கித் தருவார். கையில் வேல் வைத்துக் கொண்டு, தோளில் புரளும் அளவுக்கு முடி வளர்த்துக் கொண்டிருக்கும் வேடன் தோற்றத்தில் உள்ள முருகன் படம் (மதுரையின் ஒரு சுதை மண் சிற்பி செய்த



**நான் படத்திற்கும் கதைக்கும் நடுவில் பார்வையாளனை நிறுத்துகிறேன். அவனே அதை இணைத்துப் பார்த்துக் கொள்கிற நிலைக்கு வந்து விடுகிறான். அந்தவகையில் கதையைப் பிரித்தாலும் ஓவியத்திற்கு தனியான ஒரு இருப்பு, உயிர் வந்துவிடுகிறது.**

சிற்பத்தின் புகைப்படம்) மட்டுமே எங்கள் வீட்டில் மாட்டப்பட்டு இருந்தது. என்னுடைய அப்பத்தாவும் கூத்து, நாட்டுப்பாடல் போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார். அவர் கூத்து பார்க்கப்போகும் போது எங்களையும் அழைத்துச் செல்வதுண்டு. தியேட்டரில் அப்பத்தா படம் பார்ப்பது வேடிக்கையாக இருக்கும். திரையில் வெள்ளம் வந்தால் சீட்டின் மேல் ஏறிக்கொண்டு விடுவார். அக்கம்பக்கத்தில் நடக்கும் ஒரு கூத்தையும் விடமாட்டார். என்னையும் கூடக் கூட்டிக்கொண்டு போவார். மாலையில் தெருவில் விளையாடிவிட்டு பிய்ந்த சட்டையுடன் வீடு திரும்பி இருப்பேன். வேறு சட்டைகூட மாட்டிக் கொள்ளாமல் அப்படியே போய்விடுவேன். வளர்ந்த பிறகு நான் தனியாகவே போய்வர ஆரம்பித்தேன். ஒரு முறை அப்படி பவழக்கொடி நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் போதுதான் உடல் நலம் சரியில்லாமல் இருந்த என் பாட்டி இறந்த செய்தி சொல்லப்பட்டு என்னையும் என் சகோதர்களையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

எனது தாத்தாவிற்கு என் அப்பா ஒரே பையன். என் தாத்தா ஊரில் நாட்டாமையாக இருந்தார். விவசாயத்திற்கு நிலங்கள் இருந்தன. ஒரு வசதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். என் அப்பா 14 வயதிலேயே காந்திஜியின் வார்தா ஆஸ்ரமத்தில் சேர்வதற்காக வீட்டைவிட்டு ஓடிப்போய்விட்டார். அவர் வீட்டைவிட்டு ஓடி வந்திருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரிந்ததும் வீட்டிற்குத் திரும்பிப் போய் விடும்படி அனுப்பி வைத்துவிட்டனர்.

கொல்வினார் டி. சில்வா, என். எம். பெரெரா போன்ற இலங்கையிலிருந்து இங்கு தலைமறைவு வாழ்க்கை வாழ வந்த ட்ராட்ஸ்கியினருக்கு பெரிய ஆதரவாக இருந்தார் என் அப்பா. அந்தக் குழுவிலேயே மிகச் சிறியவராக இருந்தது அவர்தான். வைக்கோல் படப்புகள் இருக்கும் களத்து மேட்டில் - அப்போது அது ஊருக்கு வெளியே இருந்தது - சின்னச் சின்னத் தெருக்களில் தங்கி இருந்தனர். என் அப்பாவிற்கு கம்யூனிஸம் பற்றி அவர்கள் தான் கற்றுத்தந்தார்கள். என் தாத்தா அவ்வளவாகப் படிக்காதவர். ஹிந்தி படிக்கப் போவதாகப் பொய் சொல்லித்தான் அப்பா ட்ராட்ஸ்கியினருடன் இருந்து வந்தார். அவர்கள் அப்போது கையெழுத்துப் பத்திரிகையும் நடத்தி வந்தனர். அவர்களில் பலர் கைது செய்யப்படவே எஞ்சியிருந்தோர் வேறு இடத்திற்குப் போய்விட்டனர். எனது தந்தை வீட்டுக்கு ஒரே பிள்ளை என்பதால் தீவிர அரசியல் செயல்பாடுகளில் இருந்து விலக்கி வைத்துவிட்டனர்.அப்பாவின் நண்பர்களிடையே ஒரு பழக்கம் இருந்தது. அவர்கள் தேனீர் அருந்தும்போது மேஜையின் மேலே ட்ராட்ஸ்கியின் படத்தை மாட்டி வைத்திருந்தனர். காலம் பல கடந்த பின்னும் கோரிப்பாளையம் குமரன் நாயர் கடையில் அந்த டிராட்ஸ்கி படம் இருந்தது.

எனது தந்தை எங்களை பாரதி புத்தக நிலையத்திற்கு அழைத்துச் செல்வார். அதை என் அப்பாவின் பால்யகால நண்பரான சுவாமிநாதன் என்பவர்தான் நடத்தி வந்தார். சுவாமிநாதனுக்கு பெரிய மனிதர்களுடன் நல்ல பழக்கம் இருந்தது. அவரது கடை ரயில் நிலையத்திற்கு அருகில் இருந்ததால் மதுரைக்கு விழாக்களில் பங்கெடுக்க வரும் தலைவர்கள் பலரும் கடையின் மேல் தளத்தில் இருந்த அறையில் தங்கிக் கொள்வது வழக்கமாக இருந்தது. ஜீவானந்தம், பாரதிதாசன் முதலானோரெல்லாம் அவருக்கு நல்ல நண்பர்களாக இருந்தனர். எனது அப்பாவுக்கும் அவர்களுடன் நல்ல நட்பு இருந்தது. எங்களையும் அடிக்கடி அங்கு அழைத்துச் செல்வார். ஓவியம் வரைவது எப்படி? என்பது போன்ற பல புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. மூன்று மணிக்கெல்லாம் நூல்நிலையத்திற்கு எங்களை அழைத்துச் சென்று விடுவார். நான் ஒன்பதாவது படித்துக் கொண்டிருக்கும் போதுதான் நேஷ


படிப்பகம்

www.padippakam.com



னல் ஜியாக்ரபிக்கில் வெளியான 27 பக்கக் கட்டுரை - அனிமேஷன் பற்றியது - படிக்க நேர்ந்தது. அதற்கு முன்புவரை அனிமேஷன் எப்படிச் செய்கிறார்கள் என்பது பற்றித் தெளிவாக எதுவும் தெரிந்திருக்கவில்லை. பின்னணியைத் தனியாகவும் அசையும் பிம்பங்களைத் தனியாகவும் வரைகிறார்கள் என்பது போன்ற அடிப்படை விஷயங்களையெல்லாம் அதிலிருந்துதான் கற்றுக்கொண்டேன். அப்போதுதான் 101 Dalmatians படம் மதுரைக்கு வந்தது. அந்தப் படத்தை ஒரேநாளில் நான்கு தடவை பார்த்தேன். பின்னணிக்காக ஒருதடவை அசையும் பிம்பத்திற்காக ஒருதடவை என அந்தப் படத்தை மீண்டும் மீண்டும் பார்த்தேன். வீட்டிலிருந்தது ஆட்கள் வந்து அடித்துத்தான் அழைத்துப் போனார்கள். காணவில்லையே என்று தேடியிருக்கிறார்கள், மாமா சொல்லியிருக்கிறார் ''அவன் தியேட்டரில்தான் இருப்பான்'' என்று 2001: A Space Odyssey, Michelangelo, Antonioniயின் Romeo and Juliet ஆகிய படங்களை பார்க்க வாய்ப்பு ஏற்பட்டதுடன் அதில் வந்த படிமங்களும் திரைப்படமாக்க முறையும் என்னை வெகுவாகப் பாதித்தது... அந்த அளவிற்கு அந்தப் படம் என்னைக் கவர்ந்திருந்தது.

புதுமைப்பித்தனை அந்த வயதில்தான் படிக்க ஆரம்பித்தேன். 'பொன்னகரம்'தான் நான் முதலில் படித்த அவரது கதை. அவரது கதைகளைத் தொடர்ந்து படிக்க ஆரம்பித்தேன்.

சிறுவயதில் என்னை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பங்கள் வெகுவாகப் பாதித்திருந்தன. உறவினர்களுடன் கோவிலுக்குப் போகையில் சிலைகளின் முன்னால் பிரமித்து நின்றுவிடுவேன். பின்னந்தலையில் தட்டி பராக்குப் பார்க்காமல் வா என்று சொல்லி சொல்லித்தான் அழைத்துச் செல்வார்கள். திடீரென்று ஏதாவது சிலையைப் பார்த்து மிகுந்த பரவசத்துடன் ஐயா இங்க பாருங்க ஐயா - (எங்கள் அப்பாவை ஐயா என்றுதான் கூப்பிடுவோம்) - என்று கூச்சலிடுவேன். அப்பா நடுங்கிப் போய்விடுவார். மெதுவாகச் சொல்லேன் என்று கடிந்து கொள்வார். அதுபோல் பொற்றாமரைக்குளத்துச் சுவர்களில் வரையப்பட்டிருந்த ஓவியங்களும் என்னை ஆழமாக வசீகரித்திருந்தன. அந்த ஓவியங்கள் எழுத்துக்கள் இல்லாமலேயே புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் இருந்தன. சமீபத்தில் கோவிலைச் சுத்தம் செய்வதாகக் கூறிக்கொண்டு அந்த ஓவியங்களின் மீது வெள்ளை அடித்துவிட்டார்கள். என்றென்றைக்குமாக அவற்றை இழந்துவிட்டோம் என்பது தெரியவந்தபோது மிகவும் கலங்கிப்போனேன்.

*க்ளாசிக்கல் சிற்பங்கள், ஓவியங்களில் எவ்வகையானவை உங்களை பாதித்திருந்தன ?*

அதிக அலங்காரங்கள் இல்லாத மனிதச் சிலைகள், ஓவியங்கள் - நாயக்கர் காலத்தவை - என்னைக் கவர்ந்திருந்தன. சிறுவயதில் என்னை வசீகரித்திருந்த மண்குதிரைகள் முதலானவற்றில் கூட இந்த நாயக்கர் காலத்திய க்ளாசிக்கல் தன்மை மிகுந்து இருந்தது. ஒருவித rawவான தன்மையும் அவற்றில் உண்டு. 9ம் நூற்றாண்டுக்கும் 11ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்து கல்யாண சுந்தரனார் சிலை - பல்லவ சோழ சிற்பக் கலைகளின் அம்சங்கள் கொண்டது - என்னை வெகுவாகக் கவர்ந்த



ஒன்று. சிலையைத் தாண்டி பல விஷயங்களை நம்முள் எழுப்பிவிடும் வலிமை கொண்டவை அவை. அதுபோல் நாயக்கர் காலத்தில் தந்தத்தில் செய்யப்பட்ட கலைப் பொருட்களும் என்னை வெகுவாக பாதித்திருக்கின்றன.

*நாயக்கர் காலத்து கலைவடிவங்களில் அலங்காரங்கள் மிகுந்து காணப்படுமே...?*

அலங்கார ஆடம்பரங்கள் இருக்கின்றன என்றாலும் வாழ்க்கையின் கொண்டாட்டமானது அந்தச் சிலைகளில் முழுமையாகப் பிரதிபலிக்கப் பட்டுள்ளது. உடல் வடிவ அமைப்பில் சிறந்த கிரேக்க கலை வடிவங்களைக் காட்டிலும், தத்துவ அம்சங்களில் சிறந்த சோழர்கால கலைப் படைப்புகளைக் காட்டிலும் வாழ்க்கையின் கொண்டாட்டத்தைத் துல்லியமாக பிரதிபலிக்கும் நாயக்கர் காலத்து கலைப் படைப்புகள் என்னை வெகுவாகக் கவர்ந்திருக்கின்றன.

*ஓவியத்தை உங்களது துறையாக நீங்கள் தேர்ந்தெடுத்தபோது உங்கள் வீட்டில் என்ன சொன்னார்கள் ?*

புத்தகங்கள் வாங்கிக் கொடுத்து, படங்கள் பார்க்க வைத்து எனக்கு ஓவியத்தில் ஆர்வம் ஏற்பட காரணமாக இருந்தது என் அப்பாதான். ஆனால் ஓவியம் வரைவதையே என் துறையாக நான் தேர்ந்தெடுக்கப் போவதாகச் சொன்னபோது, அந்தத் துறைக்கு இருக்கும் வாய்ப்பு, வரவேற்பு பற்றித் தெளிவாகத் தெரியாததால் சற்று தயங்கினார். ஆனால் சிறுவயதிலிருந்தே யார் கேட்டாலும் வளர்ந்ததும் ஓவியராகத்தான் வருவேன் என்று சொல்லிக் கொண்டிருந்தேன் நான். என் அப்பாவின் நண்பர் ஒருவர் என் ஆசைக்கு எதிர்மறையாகப் பேசுவார். அப்போது எனக்கு முன்மாதிரியாக வால்ட் டிஸ்னிதான் இருந்தார். அவரெல்லாம் பெரிய மனிதராக வரவில்லையா; அவரைப்போல் நானும் வருவேன் என்று சொல்வேன். அதற்கு அவர் லட்சத்தில் ஒருவர்தான் அப்படி வரமுடியும் என்று சொல்வார். நானும் சளைக்காமல் அந்த ஒருவனாக நான் இருப்பேன் என்று சொல்வேன். எட்டாவது படிக்கும்போது ஆனந்த விகடனில் "உயிருள்ள படிப்பு" என ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. ஓவியக் கல்லூரியில் அப்போது சிற்பி தனபால்தான் தலைமைப் பொறுப்பில் இருந்தார். கல்லூரியில் தரப்படும் பயிற்சிகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். போதிய திறமையும் ஆர்வமும் இருந்தால் எட்டாவது படித்தவர்களையும் சேர்த்துக் கொள்வோம் என்று கூறியிருந்தார். நான் அப்போதே ஓவியக் கல்லூரியில் சேர்ந்துவிட வேண்டுமென வீட்டில் சொன்னேன். வீட்டில் சம்மதிக்கவில்லை. அடுத்த இரண்டு வருடங்களும் ஏனோதானோ என்று படித்தேன். பள்ளியில் இருந்து ஓவியப் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டேன். நான் வரைந்த சில படங்களை ஓவியக் கண்காட்சியில் பார்த்த ஆசிரியர் ஒருவர் ஓவியக் கல்லூரியில் சேருமாறு சொன்னார். எக்மோரில் இருக்கும் கல்லூரி முகவரிக்கு படிவங்கள் கேட்டு எழுதச் சொன்னார். வீட்டுக்குத் தெரியாமல் விண்ணப்பித்து விட்டேன். நேர்முகத் தேர்வுக்கு வரும்படிச் சொல்லிக் கடிதம் வந்தது. அப்போதுதான் மஞ்சள் காமாலையால் பீடிக்கப்பட்டேன். பத்திய உணவு சாப்பிட வேண்டியிருந்ததால் வெளியே தங்கிப் படிக்க அனு



படிப்பகம்

www.padippakam.com

மதிக்க மாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். அதற்கு அடுத்த வருடமும் விண்ணப்பித்தேன். நேர்முகத் தேர்வுக்கான கடிதம் வந்தது. பலர் முன்னால் அமர்ந்து அப்போதுதான் முதன் முறையாக வரைகிறேன். சற்று நடுக்கமாக இருந்தது. வரைந்து முடித்ததும் ஓரளவுக்கு நம்பிக்கை வந்தது.

*கல்லூரி வாழ்க்கை உங்களுக்கு எதையெல்லாம் கற்றுக் கொடுத்தது?*

அதற்கு முன்னால் வரை ஒரு வகையில் மூடுண்டவனாக இருந்தேன். கல்லூரியில் எனக்கு பல விஷயங்களுடனான தொடர்பு ஏற்பட்டது. அங்கிருந்த நூல்நிலையத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டேன். நானும் எனக்கு மூத்த மாணவர் ஓவியர் சந்துருவும் எப்போதும் நூல்நிலையத்திலேயேதான் இருப்போம். ஒவ்வொரு புத்தகமும் எங்கிருக்கிறது என்பதுவரை எங்களுக்குத் தெரிந்திருக்கும். அதோடு கல்லூரிகளில் கிட்டத்தட்ட நாற்பது ஓவியர்கள் ஒரே இடத்தில் விதவிதமாக வரைவதைப் பார்ப்பது என்பது பல விதங்களில் உபயோகமாக இருந்தது. அங்கு யாரும் எதையும் கற்றுத் தரவில்லை. எல்லாம் பரீட்சார்த்தமாக கண் முன்னாலேயே நடந்து கொண்டிருந்தது. நாமாகப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டியதுதான். உலக மியூசியங்களில் ருபன்சின் படங்களும் வைத்திருக்கிறார்கள். பிக்காஸோவின் அரூபப் படங்களும் வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஏன் அருகருகில் வைத்திருக்கிறார்கள் என்று தோன்றும். அப்படியானால் நாம் அறிந்து கொள்ள வேண்டியது ஏதோ இருக்கிறது என அவற்றை கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தேன். சிதைத்து உருவாக்குதல் மீது தனிக் கவனம் ஏற்பட ஆரம்பித்தது. எனக்குள் நிகழ்ந்த மாற்றமானது இயல்பாக நிகழ்ந்த ஒன்று. திடீரென்று எதையாவது பார்த்து அதுபோல் வரைய வேண்டும் என்றெல்லாம் நான் புறப்பட்டுவிடவில்லை.

*சுதந்திரத்திற்குப் பின்னால் கலாச்சாரத்தைப் புனரமைத்தல் என ஒரு இயக்கமாக சில ஓவியர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு பிறகு 60 – 70களில் ஆதிமூலம், பாஸ்கரன், தட்சிணாமூர்த்தி முதலானோர் வருகிறார்கள். நீங்கள் ஓவியக் கல்லூரியில் சேர்ந்த காலகட்டத்தில் இந்த இயக்கங்கள் ஒருவகையில் நிலைபெற்று விட்டிருந்தன. இந்தச் சூழலில் உங்களுக்கான வெளிப்பாட்டு முறைகளை உங்களுக்கான ஓவிய மொழியை எங்ஙனம் கண்டடைந்தீர்கள்... அந்தக் காலத்தில் இயங்கிய பிற ஓவியர்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

சுதந்திரத்திற்குப் பின் வந்த காலகட்டத்து தென்னிந்திய ஓவியர்கள் கோட்டோவியத்தில் சிறந்து விளங்கியிருக்கின்றனர். இந்திய ஓவியப் பாரம்பரியத்திற்கு அது பெரிய நன்கொடை என்றே சொல்லலாம். எழுபதுகளுக்குப் பிறகு எமது ஓவிய உலகில் உண்மையிலேயே சிறிது தேக்க நிலை இருந்தது. ஒரு சிலர் தனித் தனியாக சில சாதனைகள் புரிந்திருக்கிறார்கள். ஆனால் இயக்கமாக வலுப்பெறவில்லை. 70களில் பரீட்சார்த்தமான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. ஆதிமூலம், சந்தான ராஜ் போன்றோரெல்லாம் அவர்களது வீரியமான காலகட்டத்தில் இருந்தனர். அவர்களது படைப்புகளை அருகில் இருந்து விமர்சனப் பூர்வமாகப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பெரும்பாலானவர்கள் செய்ததையே திரும்பத் திரும்ப செய்து வந்திருக்கின்றனர். அவர்களது செயல்கள் மிகுந்த அயர்ச்சியை ஏற்படுத்துகின்றன. எண்பதுகள் தொய்வாகத்தான் இருந்து வந்திருக்கிறது.



**மதுரையில் ரீகல் டாக்கீஸ் என்றொரு வித்தியாசமான சினிமா அரங்கம் இருந்தது. பகலில் அது நூல் நிலையமாக இருக்கும். இரவில் தியேட்டராக மாறிவிடும். குறிப்பிட்ட பார்வையாளர்கள் மட்டுமே அங்கு வருவார்கள்.**

*பிற கலை வடிவங்கள் உங்களிடம் ஏற்படுத்திய பாதிப்பு என்ன?*

அச்சுத் துறை மீதும் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. பெரிய எழுத்து புத்தகம், வுட் கட் இவைகளெல்லாம் என்னைப் பெருமளவில் பாதித்ததுண்டு. பழைய புகைப்படங்கள் என்னை மிகவும் கவர்ந்ததுண்டு. அந்தக்காலப் புகைப்படங்களைத் தேடிப்பிடித்துப் பார்த்து வந்தேன். நானே புகைப்படங்கள் எடுத்ததும் உண்டு. உலக அளவில் நடைபெற்ற ஹிப்பி இயக்கம், பாப் கல்ச்சர் முதலானவை என்னையும் பாதித்தன. அனிமேஷன் துறை, கலாச்சார நிகழ்வுகளுக்கான சுவரொட்டி, குழந்தைகளுக்கான புத்தகங்களுக்கு டிசைன் செய்வது, வரைவது, பொம்மைகள் டிசைன் செய்வது, பத்திரிகைகளுக்கு வரைவது, எழுத்து வடிவங்களைச் செய்வது என்று பல்வேறு பிரிவுகளில் இயங்கிய முக்கிய ஓவியர்களான Heinz Edelmann என்ற ஜெர்மானிய ஓவியர், போலந்து ஓவியர் Jan Lenica, அமெரிக்காவின் Milton Glaser போன்றவர்களின் இயக்க மனநிலையோடு என்னை அடையாளம் கண்டுகொண்டேன் அவர்களின் படைப்பால் கவரப்பட்டேன்.

பிரபல ஓவியங்கள், சிற்பங்கள் நாட்டுப்புறக் கலை வடிவங்கள் இவை எல்லாமே என் கோட்டோவிய மொழியைத் தீர்மானித்திருக்கின்றன. இசை, கவிதை, புத்தகங்கள், திரைப்படங்கள் போன்றவை நவீன மனிதனை அவனது கலை வெளிப்பாட்டைத் தீர்மானிப்பது போல என்னையும் அவை வெகுவாகப் பாதித்திருக்கின்றன. என் அப்பத்தா கூறிய கதைகள் என்னைப் பாதித்திருக்கின்றன. கருப்பண்ணசாமிக் கோவில் திருவிழாக்கள் என்னை பாதித்திருக்கின்றன. அதே சமயத்தில் மேற்கத்திய கார்ட்டூனிஸ்ட்களும் என்னைப் பாதித்திருக்கின்றனர். கூட்டுக் கலைகள் என்னைப் பாதித்திருக்கின்றன. சோல் ஸ்டீன்பர்க், ஹிட்ச்காக். இவர்களெல்லாம் என்னை பாதித்திருக்கின்றனர். சோல் ஸ்டீன்பர்கின் படைப்புகளை தீவிர கலைப்படைப்பு என்று வகைப்படுத்த முடியாது என்றாலும் கார்ட்டூன் என்று வகைப்படுத்திவிடவும் முடியாது. ஸ்டீன்பர்கின் படைப்பை கேரிக்கேச்சரா, ஆழமான ஓவியமா என்று பிரித்துக் கூற முடியாது. இது மாதிரியானவர்களின் படைப்புகள் தான் என்னை வெகுவாக பாதித்திருக்கின்றன. நவீன ஓவியர்கள் என்று தனியாக ஒரு இடம் எல்லாம் தரப்படுகிறது. அதையெல்லாம் நான் நம்பவில்லை. இந்தியாவில் இருக்கும் பல ஓவியர்களுக்கு இதுபோன்ற கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் யாரும் வெளிப்படையாகச் சொல்வதில்லை. Heinz Edelmann படங்களை முழுமையாகப் பார்த்தவர்களுக்கு நான் சொல்லவருவது தெளிவாகப் புரியும். அவர் வியாபார ரீதியான தேவைகளுக்காகவும் படம் வரைந்திருக்கிறார். சுதந்திரமாகத் தனியாக


படிப்பகம்

www.padippakam.com



வும் படங்கள் வரைந்திருக்கிறார். இரண்டுக்கும் இடையே எந்த வேறுபாடும் பார்க்க முடியாது. தான் செய்யும் வேலைக்கு எப்போதும் உண்மையாக இருந்திருக்கிறார். போஸ்டர் டிசைன் செய்திருக்கிறார், இன்டீரியர் டிசைன் செய்திருக்கிறார், சினிமாவில் பணி புரிந்திருக்கிறார். அவருடைய ஓவியங்களோ ஈடு இணையற்றவை. அப்படிப் பல துறை நிபுணராக 35 வருடங்கள் இருந்திருக்கிறார். என்னுடைய சூழலும் எனக்கு அதுபோல் இருக்க வசதிகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. என்னை நான் அவர்களுடனே அடையாளப்படுத்திப் பார்த்துக் கொள்கிறேன்.

*நெசவாளர்கள் பணி மையத்தில் (**Weavers Service Centre**) இருந்திருக்கிறீர்கள். அந்த அனுபவம் எப்படி இருந்தது?*

ஓவியக் கல்லூரி எனக்கு எவ்வளவு பயனுள்ளதாக இருந்ததோ அதே அளவுக்கு நெசவாளர்கள் பணி மையமும் எனக்குப் பயனுள்ளதாக இருந்தது. மிகுந்த ஆர்வத்துடன் அதில் பணி புரிந்தேன். எனது திறமையை மதித்து சென்னைக்கு அருகிலேயே விஜயவாடாவில் எனக்கு போஸ்டிங் தந்தார்கள். நெசவாளர் பணி மையத்திற்குப் போவதற்கு முன்பு வரை இந்திய நெசவுத் தொழிலைப் பற்றி மேலோட்டமாகத்தான் தெரிந்திருந்தது எனக்கு. அங்கு போன பின்புதான் நமது பாரம்பரிய நெசவுத் தொழில் நுட்பம் மீது மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. அங்கிருந்த நூலகத்தையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டேன்.

*பொருளாதார ரீதியாக உங்களுக்குத் தனியாக இயங்கியபோது பிரச்சனைகள் இருந்ததா?*

நிறைய இருந்தன. இப்போதுதானே சினிமாவில் பணி புரிகிறேன். அதற்கு முந்தைய பத்து வருடங்கள் இயல்பான ஒன்றாக இருந்திருக்கவில்லை. வேலை செய்துவிட்டு பணம் கேட்கக் கூச்சப்படுவேன். ஆனால் நான் சந்தோசமாகத்தான் செயல்பட்டேன். எதையும் இழந்துவிட்டதாக நினைக்கவில்லை. நினைத்தவற்றை நினைத்த விதத்தில் செய்ய முடிந்தது. தெளிந்த நீரோடைபோல் ஓடிக்கொண்டிருந்தது வாழ்க்கை. கலாபூர்வமாக நான் விரும்பியவற்றை செய்வதற்கான வசதிகளை மட்டும் நான் எதிர்பார்த்தேனே தவிர வேறு எதையும் விரும்பியிருக்கவில்லை. எனக்கான மைதானத்தை நானே செம்மைப்படுத்தி அதில் விளையாடினேன் என்று சொல்லலாம். மேலும் பத்திரிகைகளில் இருக்கும் தொழில்முறை ஓவியர்



களைப்போல் நான் ஒரு போதும் இயங்கியதில்லை. என் படங்களைப் பத்திரிகைகளில் பார்ப்பதே மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. இவ்வளவு தரவேண்டும் என்றெல்லாம் நான் கேட்டதே கிடையாது. இந்த மாதிரிச் செய்யுங்கள், அதுபோல் செய்யுங்கள் என்றெல்லாம் யாரும் சொன்னதும் கிடையாது. எனது படங்கள் வாசகர்கள் எளிதில் நெருங்க முடியக் கூடிய ஒன்றாக இருந்தது. நெசவாளர்கள் பணி மையத்தில் இருந்தபோது வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் இரண்டு மூன்று மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு பின் இரவு 9 மணிக்கு வரைய ஆரம்பிப்பேன். மறு நாள் காலை 5 - 6 மணி வரை வரைந்துவிட்டு காலை 10 மணிக்கு அலுவலகத்திற்குப் போய் விடுவேன். இப்படிப் பல நாட்கள் இயங்கியிருக்கிறேன். ஓவியர் ஆதிமூலமும் அப்படித்தான் இயங்கினார் என்றும் அறியமுடிந்தது.

*இலக்கியப் பத்திரிகைகளுக்கு வரைய வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?*

ஓவியர்கள் ஆதிமூலம், தட்சிணாமூர்த்தி, பாஸ்கரன் போன்றோர் அவர்களது இலக்கிய நண்பர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். தொடர்ந்து புத்தகங்கள் படிக்கும் பழக்கம் இருந்ததால் கல்லூரி நாட்களிலேயே ஆசிரியர்களின் மூலம் ஆத்மாநாம், வீராச்சாமி, எஸ். வி. ராஜதுரை போன்றோர் அறிமுகம் எனக்குக் கிடைத்தது.

*எந்தெந்தப் பத்திரிகைகளில் எல்லாம் வரைந்திருக்கிறீர்கள்? யார் உங்களை முதலில் அணுகியது?*

இலக்கியப் பத்திரிகைகளில் கணையாழியில் என் படங்கள் நிறைய வந்திருக்கின்றன. மாலன் 'திசைகள்' நடத்தியபோது என் படங்களை வாங்கிப் பயன்படுத்திக்கொண்டார். பாவைச்சந்திரன், மதன், மாலன், இரா. வேலுச்சாமி, சா. கந்தசாமி போன்ற சிறுபத்திரிகையுடன் தொடர்பும் அதன் மீது மதிப்பும் வைத்திருந்தவர்கள் என்னை வெகுசனப் பத்திரிகையை நோக்கி அழைத்துச் சென்றனர். அரசியல் நிலைப்பாடுள்ள பத்திரிகைகளில்கூட சுதந்திரமாகவே செயல்பட்டு வந்திருக்கிறேன். வியாபாரப் பத்திரிகைகளில் தனி ஓவியமாகவும் வரைந்திருக்கிறேன்.

*சிறு பத்திரிகைகளில் வரைவதற்கும் வெகுசனப் பத்திரிகைகளில் வரைவதற்கும் இடையில் ஏதாவது மாறுதல் செய்து கொள்வதுண்டா?*

இரண்டிலும் ஒரேவித ஈடுபாட்டுடன் தீவிரத்துடன்தான் செயல்பட்டேன். இரண்டிற்கும் இடையே எந்தப் பாகுபாடும் நான் பார்த்துக் கொள்ளவில்லை. வெகுசனப் பத்திரிகைகளில் பல பரீட்சார்த்தமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன். வியாபாரப் பத்திரிகைகளில் சில கதைகள் என்னை வெகுவாகப் பாதித்து வரையத் தூண்டியிருக்கின்றன. தண்டனை போலவும் இருந்திருக்கிறது. எல்லாக் கதைகளையும் படித்துவிட்டுத்தான் வரைகிறேன். பத்திரிகையில் விளக்கப்படங்கள் வரைவதில் பல பரிமாணங்களில் சுதந்திரமானவனாக் வரைந்தது நானாகத்தான் இருக்கும். அகடெமிக்கான பாணி தேவைப்பட்டபோது அப்படியும் வரைந்திருக்கிறேன். பரீட்சார்த்தமான முயற்சிகளும் செய்து பார்த்திருக்கிறேன். கதை கவிதைகளில் எழுதப்பட்டிருப்பதையே வேதமாக எடுத்துக்கொண்டு நான் வரைவது கிடையாது. கதை எழுதுபவருக்கு, கவிதை எழுதுபவருக்கு என்ன சுதந்திரம் உண்டோ அதே அளவு சுதந்திரம் ஓவியருக்கும் உண்டு இல்லையா? ஆனால் முன்பெல்லாம் பத்திரிகைகளில் வரைந்து தருவது என்பது பக்கவாத்தியம் போல இருந்திருக்கிறது. கதையில் வரிகளில் உள்ளதே படத்தில் இருக்க வேண்டும் என்றில்லை. நான் படத்திற்கும் கதைக்கும் நடுவில் பார்வையாளனை நிறுத்துகிறேன். அவனே அதை இணைத்துப் பார்த்துக் கொள்கிற நிலைக்கு வந்துவிடுகிறான். அந்த வகையில் கதையைப் பிரித்தாலும் ஓவியத்திற்கு தனியான ஒரு இருப்பு, உயிர் வந்துவிடுகிறது. இதை பல நேரங்களில் திட்டமிட்டே செய்கிறேன். பல தடவைகளில் கதைகளில் இல்லாதவற்றை வரைந்திருக்கிறேன். அவைகளைக் கதைகளுக்குப் பொருத்தமான படம் என்று பலர் சொல்லியதுண்டு.



படிப்பகம்

www.padippakam.com



ஒரு கலைஞன் புதிதாக ஒன்றை சுதந்திரமாக சுயம்புவாக உருவாக்குகிறான். தொழில்நுட்ப வல்லுநன் அதைச் சற்று எளிதாக்கி பிரதிகள் எடுத்து மக்களிடம் கொண்டு செல்கிறான். இந்த இரண்டு செயல்பாட்டையும் நானே ஏற்று கடுமையாகவும் பொறுப்போடும் செயல்பட்டிருக்கிறேன். வேறு ஒருவரும் இந்தச் சவாலை எதிர்கொள்ளவில்லை. எல்லோரும் வெகுசன கலையையும் தீவிர கலையையும் தவறாக வேறுபடுத்திப் பார்க்கிறார்கள். நானும் ஒரு காலத்தில் வெகுசனக் கலைகளைப்



**வெகுசனத் தளத்திற்கு வருவதாலேயே ஒன்று தரம் தாழ்ந்து போய்விடுகிறது என்று சொல்ல முடியாது. பாப்புலாரிட்டியை நோக்கி நகர்ந்து அழிந்து போனவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தளத்திலும் தனித்தன்மையை இழக்காமல் செயல்பட்டவர்களும் இருக்கிறார்கள்.**

புறக்கணித்து வந்திருக்கிறேன். ஆனால் அதில் வேடிக்கை என்னவென்றால் என்னை க்ரியேட்டிவ் ஆர்டிஸ்டாக வர வேண்டுமென்று தூண்டியதே அவைதான். ஜான் போர்ட் மாதிரி ஒருவரின் படம்தானே குரோசோவாவை இயக்குநராக்கியது இல்லையா?

ஒவ்வொரு ஓவியருக்குள்ளேயும் மூன்றுவிதமான பரிமாணங்கள் நிகழ்வதாக நான் நினைக்கிறேன். முதலாவதாக, உள்ளதை உள்ளபடியே வரைய வேண்டுமென்ற அகடமிக் தன்மையுடைய உந்துதல். இரண்டாவதாக, தனது பங்களிப்பையும் சேர்த்து வெளிப்படுத்துதல்... மூன்றாவது இடம் கிட்டத்தட்ட முதல் இடத்தைப் போன்றதுதான். நாம் வயோதிகர்களாக ஆகும்போது குழந்தைத்தன்மையை அடைவது போன்றது. சிலர் முதல் தளத்திலேயே நின்றுவிடுவதுண்டு. தனக்கான தனித்தன்மையுடன் வருபவர்கள்கூட ஒரு கட்டத்தில் அந்த அளவோடே நின்றுவிடுவதுண்டு. ஒரு ஓவியன் ஆகிய எனக்குப் பின்னால் ஒரு பெரிய அனுபவம் இருக்கிறது. ஏராளமான பிம்பங்கள் மனதில் ததும்பிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு வெள்ளைப் பரப்பிற்கு முன்னால் வந்து அமர்ந்தபின் திட்டமிடாமல் இயல்பாக வெளிப்படுவதாக என் அருகில் அமர்ந்து வெண் பரப்பில் ஓவியம் உருப்பெறுவதை ஒருவர் பார்க்கும்போது எப்படி உணர்வாரோ அதை போலவே உணர்கிறேன்.

இந்த அதிசய உணர்வே ஒரு ஓவியனை தொடர்ந்து புதியனவற்றைச் செய்யத் தூண்டும் நிலையாகக் கருதுகிறேன். ஒரு குழந்தையை வரையவிட்டால் எப்படி வரையும்... இந்தக் கலரை எடுத்துத் தீட்டும். அந்தக் கலரை எடுத்துத் தீட்டும் இல்லையா... அதுபோல்தான்.

*குமுதத்தில் பணி புரிந்தீர்களல்லவா... எவ்விதமாகச் செயல்பட்டீர்கள்...? எதை எதிர்பார்த்து அங்கே போனீர்கள்?*

நெசவாளர் பணி மையத்தை விட்ட பிறகு எந்த நிர்வாகத்திலும் எந்த பத்திரிக்கையிலும் பணிபுரிய வேண்டாம் என்றே நினைத்தேன். சுஜாதா அவர்களுக்கு என் ஓவியங்கள் மீது ஒரு அபிமானம் உண்டு. கணையாழிக்கு பணிபுரிந்த காலத்தில் எங்களது நட்பு பலப்பட்டது. எப்போது என்னைப் பார்த்தாலும் என் ஓவியங்களைப் பற்றி உணர்ச்சிபூர்வமாகப் பேசுவார். சுஜாதாவும் நானும் பேசிக் கொண்டிருந்த போது சயின்ஸ் பிக்ஷன் பற்றி பேச்சுவந்தது. அதில் எனக்கு இருந்த ஆர்வத்தைக் கூறினேன். உடனே சுஜாதா, சரி நான் ஒரு கதை எழுதுகிறேன். அதற்கு நீங்கள் வரையுங்கள் என்றார் இயல்பாக. காஞ்சனை மாதிரியான ஒரு கதை குங்குமத்தில் எழுதினார். அதற்குப் படங்கள் வரைந்தேன். அந்தக் கதையில்தான் முதன் முதலாக Spray gun பயன்படுத்தி வரைந்தேன். எண்பதுகளில் முதன் முறையாக Spray gun உபயோகித்து ஓவியங்கள் வரைந்தது நான்தான். அதுவரை ஒருவரும் வெகுசன பத்திரிகைகளில் அப்படி வரைந்திருக்கவேயில்லை. எனது தேடலின், தவிப்பின் மூலமாகத்தான் அந்த வெளிப்பாட்டு யுக்தியைக் கண்டுபிடித்தேன். மேலைநாடுகளில் 40களிலேயே air gun உபயோகித்து வரைந்திருக்கிறார்கள். 60களில் பாப் கல்ச்சர் கலைஞர்கள் உபயோகித்திருக்கிறார்கள். நமது படைப்பாளிகளில் நான்தான் முதலில் அதை உபயோகித்தேன் என்று நினைக்கிறேன். எல்லோரும் அதை உபயோகிக்க ஆரம்பித்ததும் நான் அதை விட்டுவிட்டேன். ஏற்கனவே இருந்த தொழில்முறை ஓவியர்களின் படங்களில், கோடுகளில் இருந்த இறுக்கம் காலப்போக்கில் தளர்ந்து சுதந்திரம் பெற்றதுடன் வண்ணத்தைப் பயன்படுத்தும் முறையிலும் சிறிது சிறிதாக மாற்றங்கள் வந்ததை மற்றவர்களைப் போல நானும் உணர்ந்தேன்.

சுஜாதா ஒருமுறை என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். அப்போது அவர் குமுதத்தில் இருந்தார். என்னையும் குமுதத்தில் சேர்ந்து கொள்ளும்படிச் சொன்னார். முதலில் தயங்கினேன். நான் என்னவெல்லாம் செய்ய விரும்புகிறேனோ அதையெல்லாம் செய்துகொள்ளும் சுதந்திரத்தைத் தந்தார். குமுதத்தில் பணிபுரிவதன் மூலம் எனக்குப் பெரிய அங்கீகாரம் கிடைக்குமென்ற நம்பிக்கையோ, பொருளாதார ரீதியிலான பெரிய எதிர்பார்ப்புகளோ என்னிடம் இருந்திருக்கவில்லை. அவர் தந்த முழு சுதந்திரம்தான் என்னை அங்கு தொடர்ந்து செயல்பட ஊக்கமளித்தது.

*குமுதத்தில் எவ்வகையான முயற்சிகளில் ஈடுபட்டீர்கள்?*

நீங்களே பார்த்திருப்பீர்களே... அதற்கு முன் குமுதத்தில் வெளிவந்தேயிராத படைப்பாளிகளின் படைப்புகள் எல்லாம் வெளிவந்தன. அந்தப் பத்திரிகைக்கு என்று சில குணங்கள் இருந்தன. அவற்றிற்குள்ளும் என் பங்களிப்பைப் புகுத்தியிருக்கிறேன். நடுப்பக்கங்களில் போடப்படும் படங்களைக்கூட க்ராப் செய்வேன். அந்த ஒரு வருடம் குமுதத்தில் சுஜாதாவாலும், எனக்குக் கிடைத்த சுதந்திரத்தாலும் பல விஷயங்களை செய்ய முடிந்தது என்று நம்பினேன். பல ஓவியர்களிடமிருந்து கேட்டு வாங்கி வெளியிட்டோம். பலரைச் சென்றடையும் அந்த இதழில் ஒரு வாசகன் அதுவரைப் பார்த்தேயிராத படங்களை பார்க்கும், படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தினோம். ஓவியர் மார்சர் ஆரிஸ்மென் படமெல்லாம் அதற்கு முன் குமுதத்தில் வந்ததே கிடையாது.

எனக்கு கணையாழிக்குப் பிறகு பெரிய இடம் தந்த பத்திரிகை சுபமங்களா. நடுப்பக்கத்தில் கவிதைகளுக்கு ஓவியம் வரைந்து வந்தேன். அந்த இதழ் நிற்பதுவரையில் நடுப்பக்கத்தில் கவிதைகளுக்கு ஓவியம் வரைந்தேன். அது மிகப்பெரிய வாய்ப்பாக, பயிற்சியாக எனக்கு அமைந்தது. சில சமயம் இரண்டு மூன்று வெவ்வேறு கோணத்தில



படிப்பகம்

www.padippakam.com





மைந்த கவிதைகள் அந்தப் பக்கத்தில் இடம் பெறுவதுண்டு. அந்தப் பக்கத்தில் தொடர்ந்து வரைந்தது சற்று சவாலாகவே இருந்தது.

*நீங்கள் கொண்டுவந்த மாற்றங்கள், செயல்பட்ட விதம் பிறரது அழகியல் பார்வையில், பிற அம்சங்களில் ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததா ?*

நிச்சயமாக பாதித்திருந்தது. உதாரணத்திற்கு விளக்கப்படங்களை எடுத்துக் கொள்வோம். பொதுவாக முன்பெல்லாம் கதைகளுக்குப் படம் வரையும்போது கதையில் வரும் பெண்களை மிகவும் அழகானவர்களாகவே வரைவதுண்டு. என்னிடம் ஒரு கதை தரப்பட்டிருந்தது. அந்தக் கதையை படித்துக் கொண்டிருந்த போது வீட்டில் டி. வி. ஓடிக் கொண்டிருந்தது. அப்போது அதிக அழகில்லாத ஒரு பெண்ணை டி.வியில் காட்டினார்கள். அந்தப் பெண்ணையே முன்மாதிரியாக வைத்துக் கொண்டு ஒரு படம் வரைந்து தந்தேன். அது அனைவருக்கும் பிடித்திருந்தது. அந்த வகையில் இயல்பான சாதாரணமான தோற்றங்களை ஓவியங்களில் இடம்பெறச் செய்தேன். அழுத்தமான தெளிவான கோடுகள் இவற்றால் வரையப்பட்ட விளக்கப் படங்களைத் தவிர்த்துவிட்டு வேறு வகையான படங்கள் வரைந்தபோது அவை மக்களுக்குப் பழக்கப்பட சிறிது காலம் எடுத்தது. வேறு சிலரும் சேர்ந்து தீவிரமாக செயல்பட்டிருந்தால் சூழலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால் ஒருவகையில் அம்முயற்சிகளுக்கு ஒரு தேக்கம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

*நீங்கள் முதலில் ஒரு திறந்த தளத்தில் சுதந்திரமாக பணியாற்றி வந்தீர்கள். அழிப்பானை உபயோகிக்காமல், வண்ணங்களைக் கையாண்டு செயல்பட்டு வந்தீர்கள். இப்போது அதை நகலெடுப்பவர்களும் அது போன்று உற்பத்தி செய்து வருபவர்களும் அங்கீகாரம் பெற்றுவிட்டிருக்கும் சூழலில் நீங்கள் எவ்விதம் எதிர்வினை புரிந்து வருகிறீர்கள். அதை எப்படி எதிர்கொள்கிறீர்கள்*

சூழல் மிக மோசமானதாகத்தான் இருக்கிறது. நான் என் அளவில் உண்மையாக தீவிரமாக செயல்பட்டு வருகிறேன். 4, 5 பேர் இதுபோல் செயல்பட்டால் கலாச்சார ரீதியாகவே பெரியபாதிப்பை ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன். கல்கத்தா, கேரளாவில் வெளிவரும் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். அதுபோல் இங்கு இயக்கமாக செயல்கள் நடைபெறவில்லை. சினிமாவிலும் இதே பிரச்சனை இருப்பதை நான் கவனித்திருக்கிறேன். நமது சினிமாக்கள் அதிகம் பேசிக்கொண்டேயிருக்கின்றன. காட்சிபூர்வமாக எடுக்கிறேன் என்று சொல்பவர்களில் சிலர் சாதாரண விஷயத்திற்குக்கூட சிக்கலான காட்சி அமைப்பை மேற்கொள்கிறார்கள். அதுவும் ஒருவகையில் அபாயகரமானதுதான். நவீன ஓவியம் என்ற பெயரில் பொறுப்பற்று சிலர் செயல்படுகிறார்களே அதுபோல் Visual excellence, Enhanced beauty என்று சொல்லிக்கொண்டு மூன்றாம் தரக் கதைகளை எடுப்பதும் தவறானதுதான்.

*முன்னால் இருந்த பார்வையாளர்களுக்கும் இப்போது இருக்கும் பார்வையாளர்களுக்கும் இடையில் என்ன வேறுபாட்டை நீங்கள் பார்க்கிறீர்கள்...?*

எப்போதும் இல்லாத அளவு காலரிகள் வந்துவிட்டன. நல்ல ஓவியங்களைக் கண்டுணரும் திறன் உடையவர்கள் இப்போது இருக்கிறார்கள். இன்று மக்கள் நேஷனல் ஜியாக்ரபிக் சானலும் பார்க்கிறார்கள். மூன்றாம் தர சினிமாவும் பார்க்கிறார்கள். பேஷன் ஷோவும் பார்க்கக் கிடைக்கின்றன. நல்ல படங்களும் பார்க்கக் கிடைக்கிறது. சின்னச் சின்ன மாற்றங்கள் கூட மக்களை இன்று பரவலாகச் சென்று சேர்ந்து விடுகிறது. எனவே பார்வையாளர்கள் முன்னைவிட ரசனை மிகுந்தவர்களாக இருக்கிறார்கள். கலைஞர்களுக்கு அது பெரிய சவாலாகவும் ஆகிவிட்டிருக்கிறது. புதிய புதிய விஷயங்களைத் தேடி அவர்கள் எப்போதும் ஓடிக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது.

*தமிழ்ச் சூழலில் இருக்கும் பார்வையாளர்கள் உங்களை ஓவியராகப் பார்க்கிறார்களா, விளக்கப்படங்கள் வரைபவராகப் பார்க்கிறார்களா ? பிரான்சில் **Honore Daumier**இன் ஓவியங்கள் அவருடைய சம காலத்தில் சொல்லப்பட்டதும் பின்பு இப்போது நாம் பார்க்கும் முறையும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.*

*அதே போல் **Gustave Dore**இன் ஓவியங்கள் செயல்பட்டமுறையும், பின்னால் அதைப்பார்க்கும் முறையும் இன்று உணர்வுகளைப் படிமமாக்கும் வழியில் அனிமேஷன், சினிமா, **Fantasy** ஆகியவற்றில் இவர் பாதிப்பு அறிந்தவர் அறிந்தது.*

விமர்சனம் என்பது பரவலாக இங்கு வளரவில்லை. எதுவும் தெரியாமல் எல்லாம் தெரிந்தது போல் பேசுபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். நான் முக்கியமானவர்களாகச் சில ஓவியர்களைச் சொன்னேனே அவர்களது பெயர்களைக் கூடக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள் சில விமர்சகர்கள். நான் என் தேர்வுகளை, ஆர்வங்களைத் திறந்து வைத்திருக்கிறேன். பழமைவாதிகளாக இருப்பவர்கள் சில மதிப்பீடுகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருப்பார்கள். அதை விட்டுவிடும்படிச் சொன்னால் கேட்க மாட்டார்கள். ஏனெனில் அவைதான் அவர்களது அடையாளமே... அதை விட்டுவிட்டால் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளப் பெரும்பாடு படவேண்டியிருக்கும். தொழில்நுட்பங்களின் வேகமான பாய்ச்சலுக்கு ஈடு கொடுத்து தலைதெறிக்க ஓட வேண்டிவரும். அதற்குத் தயாராக இல்லாதவர்கள் வசதியாக இருந்த இடத்திலிருந்தே சில விஷயங்களைச் சொல்லிவருவார்கள். எனவே எனது செயல்பாடுகளைச் சரியாகப் புரிந்துகொண்டு விமர்சிப்பது என்பது சாத்தியப்பட்டிருக்கிறதா? வெகுசிலரே நான் செய்த பரீட்சார்த்த முயற்சிகளை அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார்கள். விளக்கமாகப் பேசுவதற்கான ஆட்கள் இப்போது இங்கு இல்லை. பெரும்பாலானவற்றை நானேதான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. நான் சொன்ன பிறகுதான் ஓகோ இப்படியெல்லாம் நடந்திருக்கிறதா என்று கேட்கிறார்கள். எனது படைப்புகள் பற்றி மட்டுமல்ல, ஒட்டு மொத்தமாகவே புதிய மதிப்பீடுகள், விவாதங்கள் முதலானவை போதுமான அளவு நடைபெறவேயில்லை. அவை நடந்தால்தான் பின்னால் வருபவர்களுக்கு உபயோகமாக இருக்கும். நான் என் அளவில் என் பணியைச் செய்துகொண்டிருக்கிறேன்.

*முன்பும் ஓவியர்களெல்லாம் விளக்கப் படங்கள் வரைந்து வந்திருக்கிறார்கள். ஆனால் அதை அவர்கள் உபதொழிலாகவே வைத்துக் கொண்டிருந்தனர்... நீங்கள் ?*

என் விளக்கப்படங்களை நான் கேன்வாஸில் வரைந்து கண்காட்சியில் வைத்திருந்தால் அவை ஓவியமாகியிருந்திருக்கும்... இல்லை என்று எப்படிச் சொல்லமுடியும்? வெகுசன ஊடகங்களில் செயல்பட்டபோதும் தனி ஓவியமாக வரைந்தபோதும் ஓரேவித ஈடுபாட்டுடன் தான் செயல்



படிப்பகம்

www.padippakam.com



பட்டிருக்கிறேன். அதோடு கேன்வாஸில் வரைந்துவிடுவதனாலேயே ஒன்றின் தரம் கூடிவிடுவதில்லை. ஓவியம் என்ற பெயரில் குப்பையான படங்கள் வரையப்பட்டுள்ளன. சினிமாவில் பின்னணி வரைபவர்களில் சிலருக்கு இருக்கும் திறமைகூட ஓவியர் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு இல்லாமல் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். தனக்கெனத் தனித்தன்மையோ செய்நேர்த்தியோ இல்லாமல் இன்னொருவரின் பாதிப்பில் வரைய ஆரம்பித்து அதிலேயே ஊறி அதிலேயே முடங்கிப்போன ஓவியர்களையும் நான் பார்த்திருக்கிறேன்.

*ஸ்டோரி போர்டு பற்றி...?*

மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட வெற்றிகரமான விளம்பரப்படங்களுக்கு ஸ்டோரி போர்ட் வரைந்திருக்கிறேன். அனிமேஷனாக, கோட்டோவியமாக வரையப்பட்டு பின் அவை படமாக்கப்படுவதில் மிகவும் ஆர்வத்துடன் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டிருக்கிறேன். விளம்பரப்படங்களில் நான் உடன் பணியாற்றியிருக்கிறேன். ஸ்டோரி போர்டின் முக்கியத்தை எழுதியும், நானே வரைந்தும் செயல்பட்டிருக்கிறேன். பல இளம் கலைஞர்களுக்கு ஸ்டோரி போர்டு வரைவது அனிமேஷன் துறையில் ஈடுபடுவதற்கு தூண்டுகோலாக இருந்து பயிற்றுவித்திருக்கிறேன்.

*மற்ற ஓவியர்களுக்கு வாய்க்காத ஒரு பின்புலம் இயல்பாகவே உங்களுக்கு வாய்த்திருந்தது. உங்கள் அப்பா அரசியல் இயக்கங்கள், சமூக சீர்திருத்த இயக்கங்கள் இவற்றுடன் தொடர்பு கொண்டவராக இருந்திருக்கிறார். நீங்கள் எந்தெந்த இயக்கங்களுடன் தொடர்பு வைத்திருந்தீர்கள். எவை உங்களை அதிகமாக பாதித்திருக்கின்றன? உங்களது பங்களிப்புகள் என்னென்ன?*

என் தாத்தாவிற்கு ஒரே பையனான என் அப்பா 14 வயதிலேயே காந்தியின் வார்தா ஆஸ்ரமத்தில் சேர, யாரிடமும் சொல்லாமல் ஓடிப்போய் விட்டிருக்கிறார். 5, 6 மாதங்கள் அங்கிருந்திருக்கிறார். அங்கிருந்த தமிழர் ஒருவர், தகவல் தெரிந்ததும் வீட்டிற்குக் கடிதம் எழுதி ரயில் ஏற்றி அனுப்பி வைத்துவிட்டார்.

அதன்பிறகு தலைமறைவு வாழ்க்கைக்காக இலங்கையிலிருந்து ட்ராட்ஸ்கிவாதிகள் மதுரைப்பக்கம் வந்தபோது அப்பாவுக்கு அவர்களுடன் நல்ல பழக்கம் ஏற்பட்டிருந்தது. 18 - 19 வயதில் ட்ராட்ஸ்கிவாதியாக மாறிய என் அப்பா இறக்கும் வரை ட்ராட்ஸ்கிவாதியாகவே இருந்தார். இயக்கத்தில் இருந்தபோது சுதந்திரப் போராட்ட காலத்தில் பிரிட்டிஷ் கலெக்டர் ஒருவரைச் சுட்டுக் கொல்வதற்கான திட்டம் தீட்டியிருந்திருக்கிறார்கள். கேரளத்துப் பண்ணையார் ஒருவரிடமிருந்து அவரது பணியாளர் மூலமாக துப்பாக்கி ஒன்றைத் திருடியிருக்கிறார்கள். கொல்வதற்குத் திட்டமிட்டிருந்த நாளில் அதற்கான தோட்டாக்கள் கிடைக்காததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாம். டிசில்வா, பெரேரா இங்கு இருந்தபோது கையெழுத்துப் பத்திரிகை எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். தாத்தா மதுரையிலே பெரிய மனிதர் என்பதால் அப்பாவுக்குப் பெரிய சிக்கல்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. அதுவும் போக வீட்டுக்கு ஒரே பையன் என்பதால் இயக்கத்தினரும் அவரைத் தீவிர அரசியல் பணிக்குச் சேர்த்துக்கொள்ளவில்லை. அப்பா எனக்கு ட்ராட்ஸ்கி என்று பெயர் வைத்தார். டிசில்வாவோ யாரோ சரியாக ஞாபகம் இல்லை, மறைவு வாழ்க்கையின் போது திலகர் என்று பெயர் வைத்திருந்ததாக என் அப்பா சொல்லியிருக்கிறார். எனவே என் ஒரு தம்பிக்கு திலகர் மருது என்று பெயர் வைத்தார். மருது என்பது குடும்பப் பெயர். எனது இன்னொரு தம்பிக்கு போஸ் மருதநாயகம் என்று பெயர் வைத்திருந்தார். தங்கைக்கு வாஸுகி என்று பெயர் வைத்தார். பெரியார் மீது அப்பாவுக்கு ஈடுபாடு இருந்தது. அதனால் பாரதிதாசன் நடத்திய குயில் பத்திரிகை, திராவிட நாடு இவையெல்லாம் சிறு வயதிலேயே படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. புராணங்களைக் கேலி செய்து வரும் காமிக்ஸ் எல்லாம் ஆர்வத்துடன் படித்த ஞாபகம் இருக்கிறது. பல புத்தகங்களை அப்பா நூல்நிலையங்களுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதுண்டு. சென்னைக்கு வந்தபின் பெசண்ட் நகர் நூல்நிலையங்களுக்குக் கூட புத்தகங்கள் கொடுத்தார்.

சிறுவயதில் எங்களுக்குச் சின்னச் சின்ன புத்தகங்களைப் பரிசாகத் தருவார். சேகுவேராவின் வாழ்க்கை வரலாறு, தான்பரீனின் இயக்கம் பற்றிய புத்தகம் என்று முக்கியமான புத்தகங்களைப் பரிசாகத் தருவார். எங்கள் குடும்பப் பெயர் மருது என்பதால் மருது பாண்டியர்கள் பற்றிய எல்லா விவரங்களையும் புத்தகங்களையும் படிக்கக் கொடுத்தார். அவர்கள் கட்டிய கோவில்கள் மற்றும் அவர்களது தலையும் உடலும் புதைக்கப்பட்ட இடங்கள் இவற்றுக்கெல்லாம் எங்களை அழைத்துச் சென்றுக் காட்டுவார். அவர் அளித்த ஓரியண்ட் லாங்மேன் தமிழில் வெளியிட்ட வீர சிவாஜி பற்றிய புத்தகம் மார்க்கோ போலோ பற்றிய புத்தகம், போன்றவை என்னை மிகவும் கவர்ந்தவை. அதுபோல் புலியூர் தேசிகனின் தயாரிப்பாக வந்த திப்பு சுல்தான், கான் சாஹிப், குஞ்ஞி மரக்காயர் போன்ற கலகக்காரர்களைப் பற்றிய புத்தகங்களெல்லாம் எட்டாம் வகுப்பிலேயே படித்துவிட்டிருந்தேன். அவரது மனநிலைக்கேற்ற இது போன்ற புத்தகங்களை நிறைய வாங்கித் தருவார்.

எங்களது தொகுதி மதுரை மேற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. தாத்தா ஊரில் செல்வாக்குள்ள மனிதர் என்பதாலும், அப்பா நன்கு படித்திருந்தார் என்பதாலும் அப்பாவை கவுன்சிலர் பதவிக்கு நிற்கும்படி வற்புறுத்தியிருக்கிறார்கள். மேடைகளில் பேசுதல், கட்சிப் பணிகள் செய்தல் முதலான அரசியல் செயல்பாடுகளில் அவருக்கு ஈடுபாடு இருந்திருக்கவில்லை. எனவே மறுத்துவிட்டார். சங்கரய்யா வருவதற்கு முன்பும் இன்னொருமுறை வாய்ப்பு வந்தது. அதையும் மறுத்துவிட்டார்.

தேர்தல்கால கூட்டங்கள் ஊர்வலங்களில் எல்லாம் நான் ஆர்வத்துடன் கலந்து கொள்வேன். இளையராஜாவின் சகோதரர் பாவலர் வரதராசனார் பாடல்கள் பாடிக்கொண்டே போவார். நானும் கூடவே பின்னால் போகிறவர்களோடு போவேன்.

அதற்குப் பிறகு இந்தி எதிர்ப்புப் போராட்டம் வந்தது. அப்போது மதுரை செயின்ட் மேரிஸ் பள்ளியில் படித்து வந்தேன். மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது அது என்னுள். அதன் பிறகு 67ல் தேர்தல் வந்தது. தேர்தல் பணிகளில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கொண்டேன். கிட்டத்தட்ட 600 கார்ட்டூன் போர்டுகள் வரைந்து கொடுத்தேன்...

*நீங்களே வரைந்ததா...?*

இல்லை. செல்லம் வரைந்ததை பார்த்து அதுபோல் வரைந்து கொடுப்பேன். இருபது அடிக்குப் பதினைந்து அடி உள்ள சுவர்களில் எல்லாம் வரைந்திருக்கிறேன். என் அப்பாதான் 'போய் வரை' என்று ஊக்கப்படுத்துவார். அண்ணா, தேர்தலில் வெற்றி பெற்ற பின் வெற்றி விழாக்கள் நடந்தன. வெற்றிவிழா வளைவுகளிலும் என் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை எனக்கு மிகுந்த சந்தோசத்தைத் தந்தது. வெற்றிக்குப் பாடுபட்டவர்களுக்குப் பாராட்டு விழாக்கூட்டம் நடந்தது. ட்ரவுசர் போட்டுக் கொண்டிருந்த என்னை பெரிய மேடையில் மிகப் பெரிய மனிதர்கள் எல்லாம்



படிப்பகம்

www.padippakam.com



இவன்தான் வரைந்தது என கூப்பிட்டு பாராட்டியது எனக்கு மிகுந்த சந்தோசத்தைத் தந்தது. எனது மாமா கட்சியில் முக்கியமான பொறுப்பில் இருந்தார். அந்தப் பகுதி இளைஞர்களுக்கெல்லாம் தலைவராக இருந்தார். அவருடன் இருப்பவர்களெல்லாம் என்னிடமும் மிகுந்த அன்புடன் இருப்பார்கள். நான் ஏணியில் நின்று கோடு படம் வரையும் போது ஆர்வத்துடன் போய் கலர் வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பார்கள். ஏணியைப் பிடித்துக்கொண்டு நிற்பார்கள். படம் வரையும்போது முதலில் ஸ்கெட்ச் பண்ணிக்கொண்டு பின்பு வரைவது என்பதெல்லாம் அந்த வயதிலேயே தாண்டி வந்திருந்தேன். நேரடியாக பெரிதாக வட்டம் போடுவேன். அதை அப்படியே கண் காது மூக்கு வரைந்து காமராசர் முகமாக மாற்றிவிடுவேன். வயிறு தலை முகம் இவற்றையெல்லாம் வெகு துல்லியமாக ஒருங்கிணைத்து வரைந்துவிடுவேன்.

*நீங்கள் திராவிடக் கட்சிக்குத் தானே உழைத்தீர்கள்... காமராசரின் படம் எப்படி வரைந்தீர்கள்?*

கார்ட்டூன் தானே. அவரைக் கேலி செய்து வரைய வேண்டியிருக்குமே...

*திராவிட இயக்கத்திற்குப் படங்கள் வரைந்து தந்தீர்கள் இல்லையா, அதைத் தாண்டி கட்சிப் பணிகளில் ஈடுபட்டதுண்டா?*

திராவிட அரசியலில் தீவிரமாக நான் ஈடுபட்டதில்லை. ஆனால் அவற்றின் கொள்கைகளோடு என்னை அடையாளப்படுத்திப் பார்த்துக் கொள்வதுண்டு. ஹிந்தி எதிர்ப்பு போன்ற விஷயங்களில் உணர்வுபூர்வமாக மிகுந்த ஈடுபாட்டோடு செயல்பட்டேன். ஆனால் எந்தக் கட்சியிலும் இன்றுவரை சேர்ந்து கொள்ளவில்லை.

*மார்க்சிய இயக்கத்தினருடனான தொடர்புகள் எந்தவிதமான பாதிப்புகளை ஏற்படுத்தின...?*

மார்க்சிய நண்பர்களோடு பல விஷயங்கள் குறித்து விவாதித்ததுண்டு. தன் செயல்பாடுகள் மூலமாக என்னைப் பெரிதும் பாதித்தவர் பெரியார்தான். எனது கல்லூரியின் ஹாஸ்டல் பெரியார் திடலுக்கு அருகில் இருந்தது. கல்லூரியில் என்னுடன் படித்த பாண்டியன் (போஸ்டர் டிசைனர்), கலை (ஆர்ட் டைரக்டர்) முதலிய நண்பர்களுக்கும் பெரியார் மீது மிகுந்த மரியாதை உண்டு. பெரியார் திடலில் இருந்த நூல்நிலையத்திற்குப் போய் அவரது நூல்களை ஆர்வத்துடன் படிப்போம். இப்போதும் அவர்கள் வெளியிடும் புத்தகங்களில் நான் வரைந்த பெரியார் படங்களை உபயோகித்து வருகிறார்கள். எந்தக் கட்சியிலும் சார்ந்து இல்லை என்றாலும் அனைவரது பத்திரிக்கைகளிலும் வரைந்திருக்கிறேன்.



மருது 1974ல் வரைந்த சுய உருவச் சித்திரம்

*வெவ்வேறு கருத்தியல் போக்கு உடையவர்களுடன் எப்படிச் சேர்ந்து பணிபுரிய முடிந்தது. பத்திரிகைகளில் இயங்கும்போது எந்த விஷயத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டீர்கள்?*

சிறுவயதில் அரசியல் கார்ட்டூன்கள் வரைவது குறித்து ஆசைகள் இருந்தன. ஆனால் வளர்ந்தபின் வெகுசன இதழ்களில் அதுபோல் வரையவில்லை. ஏனெனில் ஒவ்வொரு பத்திரிகை நிறுவனத்தினருக்கும் ஒருவிதமான கருத்தியல் பார்வை இருக்கும். நான் என் கோணத்தில் வரைவது என்பது அவர்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதால் அதைச் செய்யவில்லை. அதே சமயத்தில் என் கருத்துக்களுக்கு இணக்கமாக இருக்கும் பத்திரிகைகளில் சுதந்திரமாக என் கருத்துக்களை ஓவியமாக வரைந்திருக்கிறேன். ம.க.இ.க.வினருக்கு பல கார்ட்டூன்கள் வரைந்து தந்திருக்கிறேன். அவர்களுடன் சுமூகமாக என்னால் இயங்க முடிந்தது.

*சமூக அரசியல் செயல்பாடுகள் அடிப்படையில் தமிழகக் கலை இலக்கியச் சூழலைப் பற்றிய உங்களது மதிப்பீடு என்ன?*

தமிழக ஓவியர்கள் நடந்த சமூக அரசியல் சம்பவங்களுக்குச் சரியான முறையில் எதிர்வினையாற்றியிருக்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. உதாரணமாக இலங்கைப் பிரச்சனையை எடுத்துக் கொள்வோம். ஆரம்பத்திலிருந்தே கலைஞர்கள் இதில் தீவிர கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர். ஒரு சிறிய மனிதச் சங்கிலிக்கு ஏற்பாடு செய்யப்பட்டாலும் அதில் முன்னணியில் இருந்தது கலைஞர்கள்தான். எழுத்தாளர்களை விட ஓவியர்கள் இந்த விஷயங்களில் அதிக அக்கறையுடன் முன்னணியில் இருந்திருக்கிறார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

*முன்னணியில் இருப்பது என்றால்...?*

மாநாடுக் கூட்டங்கள் நடத்துதல் போன்ற அரசியல் செயல்பாடுகளிலும் சரி, படைப்புகளில் இவ்விஷயங்களை வெளிப்படுத்துதல் என்ற அளவிலும் சரி தீவிரமாகச் செயல்பட்டிருக்கிறார்கள். கடந்த பதினைந்து வருடங்களாக இந்தியாவில் அப்படிச் செயல்படுவதில் சிக்கல்கள் இருந்த நிலையிலும் தொடர்ந்து இது குறித்த விஷயங்களில் ஓவியர்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக இலங்கை பிரச்சனையைப் பதிவு செய்ததில் அவர்களின் பங்கு சற்று அதிகம்.

*குரவை முதலான பெண்ணுரிமை இயக்கங்களுடன் நாடகங்களில் பணி புரிந்திருக்கிறீர்கள்... அது பற்றிச் சொல்லுங்களேன்.*

காலேஜ் ஆஃப் ஆர்ட்ஸில் படித்துக் கொண்டிருந்தபோது கடைசி வருடத்தில் நான், பாண்டியன், கலை இவர்களெல்லாம் சேர்ந்து நவீன நாடக இயக்கம் ஆரம்பிப்பதற்கு முன்னே ஒரு நாடகம் போட்டோம். குழப்பமான சூழ்நிலை ஒன்றில் புத்தரின் வருகையை மையமாக வைத்து நடிக்கப்பட்ட நாடகம் அது. நாயக்கர் காலம், திரியாட்டக்காரர்கள், கள்ளழகர்மீது தண்ணீர் பீச்சுபவர்கள், கூத்து என்று பல்வேறு கூறுகளில் இருந்து வடிவமைத்தேன். அதன் பிறகு ந.முத்துசாமி கூத்துப்பட்டறை ஆரம்பித்த போது ஆரம்ப கட்ட பயிற்சிக்காக அங்கு போய்ச் சேர்ந்தோம். முகமூடியுடன் ஆடும் மனிதன், கையில் முகமூடியை வைத்துக்கொண்டு தலையில்லாமல் ஆடும் மனிதன் எனத் தொடர்ந்து பல படங்கள் வரைந்தேன். அதைப் பார்த்துவிட்டு ந. முத்துசாமி பரவசத்துடன் உற்சாகப்படுத்துவார். அதன் பின் மங்கை, இளைய பத்மநாபன் நாடகங்களில் அரங்க வடிவமைப்பு, ஆடை அலங்காரம், ஒப்பனை முதலியவற்றில் பணிபுரிந்திருக்கிறேன். கடைசியாக அவர்களது அவ்வை நாடகத்திற்குப் பணிபுரிந்த அனுபவம் மறக்க முடியாத ஒன்று. அந்தக் காலத்து ஆடைகள் அணிகலன்கள் என்று மிகுந்த கவனத்துடன் செய்தேன். காலத்தினுடான அந்தப் பயணம் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

*திரைப்படத் துறையில் எப்படி நுழைந்தீர்கள்...? அந்த விஷயங்கள் குறித்து விரிவாகக் கூறுங்கள்*



படிப்பகம்

www.padippakam.com



எனது குடும்பத்தில் பலர் திரைப்படத் துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருந்தனர். என் சின்னத் தாத்தா எம். எஸ். சோலை மலை பிரபலமான கதை வசனகர்த் தாவாக இருந்தவர். பாகப் பிரிவினை, பாவ மன்னிப்பு, பதி பக்தி போன்ற வெற்றிகரமான திரைப்படங்களின் கதை வசனகர்த்தா என் தாத்தா தான். டைரக்டர் பீம்சிங் திருப்பதியி லிருந்து சென்னை வந்தவர்.' அவ ருக்கு மதுரை, திருநெல்வேலி போன்ற தென் மாவட்ட மக்களின் வாழ்க்கை முறைபற்றி அவ்வள வாகத் தெரியாது. அவரது படங் களில் அவ்விஷயங்கள் நல்ல முறை யில் பதிவு செய்யப்படுவதற்குக்க் காரணமாக இருந்தது என் தாத்தா தான். நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் என் பெரியப்பா பையன். அவர் எஸ். எஸ். ஆர் பிக்சர்ஸ் என்ற பேனரில் படங்கள் எடுத்ததுண்டு. மதுரையில் அந்தப் படங்கள் வெளியிடப்படும் போது அவர் எங்கள் வீட்டிற்கு வந்து விடுவார். நாங்கள் எல்லோரும் முதல் காட்சி பார்த்துவிட்டு வருபவர் களின் கருத்துக்களைக் கேட்பதற் காகப் போவோம். இப்படியாக சினி மாவுடனான தொடர்பு 69களிலேயே ஆரம்பித்திருந்தது.

திருவிளையாடல் படம் வெளிவந்த பின் சென்னை வந்திருந்தபோது அந்தப் படத்திற்கான செட்களினூடே தனியாக உலவிக் கொண்டிருந்த அனுபவம் மறக்க முடியாதது. எல்லோரும் ஷூட்டிங் பார்க்கப்போய் விடுவார்கள். யாருமற்ற அரங்கு களில் பள்ளி மாணவனான நான் போய்த் தனியாக நின்று கொண்டி ருப்பேன். பாலையா அந்தப் படத் தில் பெரிய பாடகராக வருவார். அதற்கான அரண்மனை போன்ற செட்டில் தரைகளில் பெரிய பெரிய பூ போன்ற டிசைன்களை பேப்பரில் வரைந்து மொசைக்போல் தரையில் ஒட்டி வைத்துவிடுவார்கள். நான் போன போது அதைப்பிரித்து எடுக்க முழங் காலளவு தண்ணீர் ஊற்றி ஊற வைத்திருந்தார்கள். காலியான சிம்மாசனங்கள், இருக்கைகளைத் தனியாக முழங்காலளவு நீரில் நின்று கொண்டு பார்த்த அனுபவம் மறக்க முடியாத ஒன்று. அதுபோல் சிவாஜி விறகு விற்பாரே அந்த வீதி யில் தனியாக அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருப்பேன். சினிமா வாக எடுக்கப்படும் இடத்தில், அதே சமயத்தில் அதே உலகத்திற்குள் இருக்கிறோம் என்பது மிகுந்த பிர மிப்பைக் கொடுத்தது. நான் சென்னைக் கலைக் கல்லூரியில் படிக்கப்போகி றேன் என்று சொன்னபோது சற்று தயங்கிய என் அப்பாவை என் சின்னத் தாத்தாதான் தைரியமாகச் சேர்க்கும்படிச் சொன்னவர். அப்பா வுக்கு மற்றொரு தாய்மாமன் கார் மேகம் தாத்தா. அவர் என். எஸ். கேயை வைத்து நாடகங்கள் நடத்தியவர். அதேபோல் எம். எஸ். சோலைமலை யின் 'நீதிபதி' நாடகத்தைப் பார்த்து விட்டு அதைத் திரைப்படமாக தயா ரிக்க எண்ணிய என். எஸ். கே. தன் தம்பி என். எஸ். திரவியத்தை அதற்கு தயாரிப்பாளராக்கினார். பின்னாளில் இவர் தனபால் ஆசிரியருக்கு சம் பந்தி. என் அப்பா 61ல் சென்னைக்கு வந்தபோது அவரது நண்பர் ஒருவர் தனபால் அவர்களின் வீட்டிற்கு என் அப்பாவை அழைத்துச் சென்றிருக் கிறார். தனபால் பெரியாரை சிலை வடித்திருந்தாரே அந்தச் சிலையின் புகைப்படத்தை என் அப்பா அரிய கலைப் பொக்கிஷமாக எங்கள் வீட் டில் வைத்திருந்த விஷயம் தனபால் சாருக்குத் தெரிய வந்தபோது மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். அவரி டம்தான் பின்னாளில் நான் ஓவியம் கற்றுக் கொள்ளப் போகவும் செய் தேன். இப்படி என் வாழ்க்கையில் பல நல்ல விஷயங்கள் சிரமங்கள் இல்லாமலேயே இயல்பாகவே நடந் தன. சின்னத் தாத்தா சொந்தமா கவே படம் எடுத்தபோது கதை திரைக் கதை விவாதங்களில் கூடவே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பேன். கண்ணதாசன் பாடல்கள் எழுதும் போது சிறுவனாக அவர்கள் நடுவில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருப் பேன். தாத்தாவுக்குப் புதுமைப்பித் தனை ரொம்பவும் பிடிக்கும். அவரைப் பார்க்கப் போய்வந்தது பற்றி சுவா ரஸ்யமாகச் சொல்லுவார். தாத்தா வின் நாடகங்களில் மனோரமா நடித் திருக்கிறார். அப்போது நான் கலைக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந் தேன். கல்லூரி முடிந்த பின் தாத்தா வுக்குத் தயாரிப்பு வேலைகளில் உதவி புரிந்திருக்கிறேன்.

முதன் முதலாக மூவி கேமராவைப் பார்த்தது தாத்தாவின் ஷூட்டிங்கில் தான். பெரிய பெரிய நடிகர்கள் நடிப் பதைப் பக்கத்தில் இருந்து பார்த்தது ஒரு நல்ல அனுபவமாக இருந்தது. காட்சியமைப்பு பற்றியோ வேறு ஏதா வது பற்றியோ தாத்தாவிடம் விவா திப்பேன். இன்னார் இது பற்றி இப் படி சொல்கிறாரே என்று கேட்பேன். அதற்கு அவர், 'அவன் கிடக்க றான்... உனக்கு என்ன தோணுது அதைச் சொல்லு... இங்க நீயும் நானும்தான் கலைஞர்கள்' என்று சொல்வார். இவருடைய பாதிப்பும் எனக்கு நிறைய. அப்போதெல்லாம் கேமரா வழியாகப் பார்க்க யாரையும் அனுமதிக்க மாட்டார்கள். குரு தட் சணை கொடு, அது இது என்று கலாட்டா செய்வார்கள். ஒருநாள் நான் திடீரென்று கேமராவிற்குள் நுழைந்து பார்த்தேன். ஸ்டுடியோ கேட்டின் மேல் மத்திய சிறைச்சாலை என்று போர்ட் எழுதி ஷாட் ரெடி பண்ணியிருந்தார்கள். சாதாரண கண்ணால் பார்ப்பதற்கும், கேமரா வழியாகப் பார்ப்பதற்குமான இடை வெளி அன்று புரிந்தது. முதன் முதலாக பார்த்த அந்தக் காட்சி, அந்த நாள் அதை என்னால் மறக்க முடியாது.

சினிமாவில் நுழைந்தபோது ஆரம் பத்தில் ஆப்டிகல் அனிமேஷன் செய்து வந்தேன். வேலுப் பிரபாகர னின் படங்களில் பணிபுரிந்திருக் கிறேன். அவரது அப்பா ஒரு ஓவியர். வேலுப் பிரபாகரன் தன் படங்களில் செய்யும் பரீட்சார்த்த முயற்சிகளுக்கு என்னையும் துணைக்கு அழைத்துக் கொள்வதுண்டு. அதன்பிறகு ஸ்ரீதரு டன் பணிபுரிந்தேன். அப்போதுதான் நாஸருடன் பழக்கம் ஏற்பட்டது. அவர் 'தேவதை' எடுத்தபோது நான் அவருடன் இணைந்து பணியாற்றி னேன்.

சிறுவயதிலேயே கேமரா மூலம் படங்கள் எடுத்திருக்கிறேன். டேபிள் லேம்ப் வெளிச்சத்தில் சின்னச் சின்ன பொம்மை வீரர்களை நிற்க வைத்து பின்னணியை வரைந்து படங்கள் எடுப்பேன். மதுரையில் ''டாய் லாண்ட்'' என்றொரு பெரிய பொம்மைக் கடை இருந்தது. ஒரு வட இந்தியர் அதை நடத்தி வந்தார். அந்தக் கடைக் கண்ணாடி வழியாக உள்ளே வைக்கப்பட்டிருக்கும் பொம் மைகளைப் பார்த்துக் கொண்டே யிருப்பேன். அதில் ஒரு சினிமா ப்ர ஜெக்டர் இருந்தது. அதை எப் படியாவது வாங்கிவிட வேண்டு மென்று தவித்தேன். வீட்டில் எனக்குத் தரும் காசுகளைச் சேர்த்து வைத்ததில் என்னிடம் 20 ரூபாய் இருந்தது. அம்மா யாருக்கோ கொடுப்பதற்கு என்று அலமாரியில் 25 ரூபாய் வைத்திருந்தார்கள். யாரிட மும் சொல்லாமல் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு என் நண்பன் ஒருவனை அழைத்துக் கொண்டு கடைக்குப் போனேன். இப்படி ஒரு போதும் இல்லாத துணிவை பல நாட்கள் நான் பார்த்து ஏங்கிய அந்தப் புரொஜக்டர் தூண்டியது. அதன் விலை சரியாக 45 ரூபாய். என்னிடம் இருந்ததும் அவ்வளவு தான். உடனே கொடுத்தேன். அந்தக் கடையை ஒரு முதியவரும் அவரது



படிப்பகம்

www.padippakam.com



பையனும் நடத்தி வந்தனர். அந்த முதியவர் மகனைப் பார்த்து, 'சிறுவனுடன் வியாபாரம் வைத்துக் கொள்ளக் கூடாது... பெரியவர்கள் யாரும் வராமல் சிறுவர்களுக்குப் பொருட்கள் எதுவும் கொடுக்கக் கூடாது. பின்னால் பிரச்சனை ஏதும் வரலாம்' என்று சொன்னார். இந்தியில்தான் சொன்னார் என்றாலும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் அவரது மகனோ அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் ப்ரஜெக்டரைப் பேக் செய்து தந்துவிட்டார். எனக்கு ஒரே கொண்டாட்டம். வீட்டிற்கு ஆவலுடன் ஓடிப் போனேன். அங்கே பணத்தைக் காணவில்லையே, எங்கே மறந்து வைத்தோம் என்று தேடிக் கொண்டிருந்தார்கள். நான் கையில் பார்சலுடன் போனதும் என்னது இது என்று கேட்டார் அப்பா... ப்ரொஜக்டர் என்றேன். அப்பாவுக்குப் புரிந்துவிட்டது என் வெறித்தனம். உடனே அவர் சற்றும் கோபப்படாமல் என்னிடம் கேட்டால் நான் வாங்கித் தந்திருப்பேனே என்றார் மெதுவாக... வீட்டிற்குள் ஆர்வத்துடன் ஓடிப்போய் ப்ரொஜக்டரைப் பொருத்தினேன். பிலிம் சுருளை மாட்டி விளக்குகளை அணைத்துவிட்டு இயக்க ஆரம்பித்தேன். படம் அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் பார்ப்பது போல் மங்கலாகத் தெரிந்தது. என்னவெல்லாமோ செய்து பார்த்தேன். பிலிம் சுருளை மாற்றினேன். லென்ஸை சரி செய்தேன்... ஒன்றும் பலனளிக்கவில்லை. அம்மா வேறு அடிக்கடி வந்து கேமராதானே வாங்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தாய்... இதைப்போய் ஏன் வாங்கினாய்? போய்த் திருப்பிக் கொடுத்துவிடு என்றார்கள். இரண்டு நாட்கள் அதனுடன் மல்லாடிவிட்டு கடைக்குப் போய் திருப்பிக் கொடுத்தேன். அந்த முதியவர் நான்தான் அப்போதே சொன்னேனே என்று மகனைத் திட்ட ஆரம்பித்தார். நான் கேமரா வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லி ஸ்டில் - கேமராவை வாங்கிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினேன். அந்தக் காமராவை வைத்துத்தான் கல்லூரி வரும்வரை 5 வருடங்கள் பல படங்களை எடுத்தேன்.

*நீங்கள் நல்ல திரைப்படங்கள் பார்த்திருக்கிறீர்கள். நிறையப் படித்திருக்கிறீர்கள். இன்றைய படங்களில் பணிபுரியும்போது உங்களது மன நிலை என்னவாக இருக்கிறது? உங்களது பங்களிப்புகள் – உங்கள் அளவில் நீங்கள் சரியாகச் செயல்பட்டாலும் – ஒட்டு மொத்தப் படத்தில் எப்படி வெளிப்பட்டிருப்பதாகக் கருதுகிறீர்கள்...?*

திரைப்படங்களில் என்னுடைய பங்களிப்பு பொறுப்பு மிகவும் வரையறுக்கப்பட்டதாக, குறுகலானதாக இருக்கிறது. ஒரு இயக்குநர்தான் எல்லாவற்றையுமே தீர்மானிக்கிறார். நமக்குக் கிடைக்கும் இடத்திற்குள் நாம் எவ்வளவு மேலாகச் செய்ய முடியுமோ அதைத்தான் செய்ய முடிகிறது. 80களின் கடைசியில் தனியாக அதிகமான ஸ்பெஷல் எபெக்ட் சாத்தியங்கள் உள்ளபடி முழுமையாக ஒரு படம் செய்ய முயற்சித்து அது தள்ளிப் போய்விட்டது.

*வெகுசன போக்கிலிருந்து விலகி, மாற்றுச் செயல்பாடாக ஆரம்பிக்கப் படுபவை நாளடைவில் வெகுசனத்*



*தளத்திற்கு வந்துவிடுகின்றன... அப்போது அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

வெகுசனத் தளத்திற்கு வருவதாலேயே ஒன்று தரம் தாழ்ந்து போய் விடுகிறது என்று சொல்ல முடியாது. பாப்புலாரிட்டியை நோக்கி நகர்ந்து அழிந்து போனவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தளத்திலும் தனித்தன்மையை இழக்காமல் செயல்பட்டவர்களும் இருக்கிறார்கள். வெகுசனக் கருத்தியல்களையே அசைத்துமிருக்கிறார்கள். காமிக்ஸ் புத்தக உலகில் பார்த்தீர்களென்றால் ஆரம்பத்தில் வெகுசன கதைகளில் இருந்து விலகி ஆரம்பிக்கப்பட்டவை நாளடைவில் வேகமான வளர்ச்சியுற்று காமிக்ஸ் புத்தக உலகின் போக்கையே மாற்றி அமைத்திருக்கின்றன. அவற்றில் பல பரீட்சார்த்த முயற்சிகள் பாப்புலாரிட்டியை அடைந்த பின்னரும் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. சமீபத்தில் ஒரு புத்தகத்தில் ஒரு விஷயம் பார்த்தேன். ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோவும் Vampireம் சந்தித்துக் கொள்வதாக ஒரு காட்சி. என்ன பிரமாதமான கற்பனை பாருங்கள்... வேம்பயர் பகலில் பெண்ணாக இருப்பாள். இரவில் ரத்தம் குடிப்பவளாக மாறிவிடுவாள் இல்லையா... ஒதெல்லோவில் அவன் தன் மனைவியை படுக்கையில் கழுத்தை நெறித்துக் கொன்றுவிடுவான். இந்த இரண்டு கதாபாத்திரங்களையும் சந்திக்க விட்டிருக்கிறான். யார் யாரைக் கொல்லுவார்?... ஷேக்ஸ்பியர் மிகச் சிறந்த நாடக ஆசிரியர். வேம்பயர் எழுதியதோ ஒரு பல்ப் பிக்‌ஷன் ரைட்டர். இவர்களுக்குப் பின்னால் வரும் ஒரு நவீன படைப்பாளி, இவர்களது பாத்திரங்கள் இருவரையும் அருகருகே நிற்க வைத்து விடுகிறான். இதுபோல் பரீட்சார்த்தமான முயற்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றன. வெகுசன தளம், சிறிய வட்டத்திற்குள் இயங்குபவை என்றெல்லாம் தனித் தனியாகப் பிரித்துப் பார்க்க வேண்டாம் என்று தோன்றுகிறது. வெளியே வேறுவிதமாக சொல்லிக்கொண்டு வெகுஜனப் பத்திரிக்கையில் தன் படைப்பு வெளிவர விரும்பும், அதற்குச் செயல்படும், மறைவாக மகிழும் சிலர் இருக்கிறார்கள் என்பது வேறு விசயம். என்னைப் போன்று இருப்பவர்களுக்கு இதில் நெருக்கடிகள் அதிகம். முற்றிலும் வெகுசனத் தளத்தில் இயங்குபவர்களுக்கோ அல்லது முற்றிலும் சிறு தளங்களில் இயங்குபவர்களுக்கோ பெரிய பிரச்சனைகள் எதுவும் இருக்காது என்றே தோன்றுகிறது. இவையல்லாமல் இத்துடன் டான் பாஸ்கோ தொலைத் தொடர்பு மையத்தின் ஆதரவில் அனிமேஷன் முகாம் கடந்த 3 வருடங்களாக நடத்தினோம். சிறுவர்களை அவர்கள் வரையும் படங்களின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து அனிமேஷன் பற்றி பட்டறை நடத்தினோம். ஒரு விஷயத்தைச் சொன்னால் சிறுவர்கள் அதை தங்களது கற்பனை மூலம் மேலெடுத்துப் பார்க்கவும் அவர்களுடன் சேர்ந்து முழுமை பெற்றுவிடுகிற அத்துண்டுப் படங்களைப் பார்ப்பதும் அற்புதமான அனுபவம்தான்.

*சந்திப்பு :* சனாதனன்

*தொகுப்பு :* மகாதேவன்

*புகைப்படம் :* சுந்தர்



படிப்பகம்

www.padippakam.com



## அம்மாவும் மகளும்

**மாலதி மைத்ரி**

சிறு மழைக்குப்பின் செம்மண்காடு
மாலை இளம் ஒளியில் செம்பவளமாய்
தகித்துக் கொண்டிருக்கிறது
ஆங்காங்கே புற்களின்மீது
வெல்வெட் பூச்சிகள் தம் முதுகில்
மழைத்துளியை சுமந்து திரிகின்றன
தூறலும் வெயிலுமாக மாலை கடந்து கொண்டிருக்கிறது

பெருமழைக்குமுன் வீட்டுக்குத் திரும்பிவிட
ஓட்டமும் நடையுமாக விரைகிறேன்
பாதையோர ஆலமரம்
மதம் கொண்டு அலைகிறது
விழுதுகளை ஒதுக்கினால்
நெற்றியில் தூறல்பட்டு
முகம் முழுதும் கரைந்து வழிகிறது குங்குமம்
முலைகளாய் பிதுங்கிய மரத்தினடியில்
மழைக்கு ஒதுங்கிய சிறுமி
கைப்பிடியில் துவளும் பாம்புடன்
நின்று கொண்டிருக்கிறாள்

## நீருக்கடியில் ஒரு வீடு

முன்பு எல்லாம் அதுஅது அதனதன் இடத்தில்
வரிசையாக அழகாக தன்னைத்தானே
வரையறுத்துக்கொண்டு ஒழுங்கு குலையாமல்

கால் முளைத்த அவளிடம் தன்னை
கிழித்துக் கொள்ளும் புத்தகங்கள்
கையை உடைத்துக்கொண்ட மரப்பாச்சி
தலைபோன ரப்பர் பொம்மை
காதறுந்த நாய்க்குட்டி
எடுத்துமாளாத சொப்புகளின் உடைசல்கள்

சமயங்களில் இவையெல்லாம் சேர்ந்து
கீழாடை நனைத்து நீச்சலும் படித்துக்கொண்டிருப்பாள்

வீடு எப்பொழுது திரும்பும் தன் பழைய நிலைக்கு
பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தால் பிரச்சினை குறைந்திடும்
மீண்டும் மீண்டும் எல்லாவற்றையும் அதனதன் இடத்தில்

வகுப்பு ஆசிரியையிடம் கதறவிட்டுத் திரும்புகிறேன்
நீருக்கடியில் கிடக்கும் ஓவியம்போல்
அசைந்து கொண்டிருந்தது தூரத்தில் வீடு
உறைந்த நீர்ப்படலத்தைக் கிழித்துக் கொண்டு
உள்நுழைகிறேன்

ஒழுங்கின் சவ அமைதி

எல்லாம் சில்லிட்டுப் புகைந்து கொண்டிருந்தது
வெறுமையின் பனிச்சுழியில் சிக்கி
உறையத் துவங்கினேன்
அவளின் மென் விரல்களின் கதிர்த் தீண்டலை எதிர்நோக்கி
ஓவியத்தின் காதறுந்த நாய்க்குட்டி
என் மடிமீது ஏறி சோகமாய் அமர்ந்துகொண்டது






படிப்பகம்

www.padippakam.com



## கனிமொழி


மேசையின் விளிம்பில்
வைக்கப்பட்டிருக்கும்
மெல்லிய கண்ணாடி
குவளையைப் போல் உள்ளது
நம்பிக்கை

விபரீதமான ஒரு தருணத்தை
எதிர்நோக்கிக் காத்திருக்கிறது
திரவம்

எங்கு வைத்தாலும் நகர்ந்து
விளிம்பில் உட்கார்ந்திருக்கிறது
குவளை

அவசரத்தில் எறியப்படும்
வார்த்தைகளையும்
நழுவி விழும் உண்மைகளையும்
அறியப்படாதுபோகும் ஸ்பரிசங்களையும்
எதிர்நோக்கி
சிதறிப்போதலை வேண்டியபடி

ஆனால்
என்றுமே
காலியாய் இருப்பதில்லை மேசை



### இரவுச் சிறகுகள்

சுவர்களை அரை நிர்வாணமாக்கிக்
கொண்டிருந்தது விளக்கு
விளக்கை அணைத்துவிட்டால்
சுவர்கள் கரைந்து போகும்

நட்சத்திரங்கள் மினுக்கும்
பிரபஞ்சவெளி
மயிர்கூச்செரியும் நிசப்தம்
பெருகிக் கரைகிறது உயிர்

சுவர்களைச் சாத்திவிடுகிறது விடியல்
வெளிறிய பூதங்கள்
கற்களை நெருக்கி
ஜன்னல்களைப்
பிதுக்கி எறிந்துவிட்டன
வெளியேயும் சுவர்கள்
செங்குத்தாய் முடிவற்றதாய்

முகம் நோக்கிக் குனிகிறது
ஈரங்களை உறிஞ்சும் அமிலக்காற்று
சுவாசப்பைகள் காய்ந்து நொறுங்கும்

பூதக்கால் தலையில்
பெருவிரல் கபாலத்தைத் தாண்டி
நகக் கீறலில் பிதுங்கி வழியும்
வெண் குழம்பு காரை உதிர்ந்து உடல் மூடும்
இரவு வரை ஒரு மரணம்



படிப்பகம்

www.padippakam.com





## சாலையின் கனவு

எப்பொழுதும் அவசரமாய்
ஓடிக்கொண்டே இருக்கும்
கார்கள்

தலையை அழுத்தித் தேய்த்துச்
செல்லும் கனரக வாகனங்கள்
அவை கழித்துச் செல்லும் கரும்புகை

அவ்வப்போது வந்து பிளந்து பார்த்து
ஒட்டுப்போட்டுப் போகும் பணியாளர்கள்
அவர்களின் கொப்பளித்த உள்ளங்கால்கள்,
எச்சிலோடு அவர்கள்
துப்பி விட்டுச் சென்ற ஆசைகள்

குச்சி உடைந்த விளக்குமாற்றால்
ஆண்டுக் கணக்காய்
குப்பை பெருக்குபவர்கள்

தளர்ந்த உடம்போடு
தள்ளு வண்டி இழுத்துச் செல்லும் கிழங்கள்
துள்ளியோடும் பள்ளிப் பிள்ளைகள்
பின்னிப் பின்னி கால் சேர்த்து
நடக்கும் காதலர்கள்

விபத்துக்களில் உறைந்துபோன குருதி
காலையில் பெய்த மழை
பகலில் சுட்டெரித்த வெய்யில்
எல்லாவற்றையும் அசைபோட்டபடி
அதிகாலை நேரத்தில்
அயர்ந்து தூங்குகிறது நீண்ட தெரு
ஒருநாளில் இவை எதுவுமே இல்லாமல்
தான் சுருட்டி மடிக்கப்பட்டுவிடலாம்
என்ற நினைவோடு

லதா, சிங்கப்பூர்

## ஒற்றை ரகசியம்

என் மென்மைகளை
ஊற்றி விடுகிறேன் ஒவ்வொருநாளும்
செம்பருத்தியின் வேருக்கு.
உருட்டி வைக்கின்ற எனது
நட்புணர்வில்
அலகு பதிக்கும் காகம்
உன்னைக் கண்டதேயில்லை.
நமதில்லாத குழந்தைகளைத் தழுவும்போதுதான்
தளிர்க்கிறது என் தாய்மை நிபந்தனைகளின்றி
நள்ளிரவில்
நட்சத்திரங்கள் தேங்கிய மாடித்தளம்
என் பாதம் வழி ஊடுருவிப்
பகிரும் கிளர்ச்சிகளை
ஒவ்வொரு மழையின் போதும்
இளகிப் பொழிவித்திட முடிகிறது என்னையும்
மோகங்கள், தாபங்கள்
முற்றுப் பெறாத சஞ்சலங்கள்
மற்றும் நீ தொடவொண்ணாத
தூய்மையின் ஆழங்களோடு
சாறுகள் பிழிபட்ட
வெற்றுச் சக்கையின் கிடப்பே
உன் கட்டிலுக்கு என்றுணர்கையில்
அடைகிறேன் உனை வென்ற உவகையை
நீ அறியவியலா ஒற்றை ரகசியமாக.

உமா மகேஸ்வரி

அருகில் இருக்கும் தூரம் நீ
நான் உன் துருவம்
நான் உன்னிடமும்
நீ என்னிடமும்
வந்தடைவதற்கான
பயணம்
இந்த வாழ்க்கை

அழகிய பெரியவன்



படிப்பகம்

www.padippakam.com



## பிணங்களின் நகரம்

இந்த நகரம் பிணங்களுக்கானதாய்
மாறிக்கொண்டே வருகிறது

கல்லறைகளுக்குள்
தடங்கலற்றுப் புரளும் மண்
சோர்வுடன் முனகுகிறது

குழிகள் பறித்து
களைத்து விழுபவனை
கல்லறை வாயில் வரிசை இறுதிக்கு
உந்தித் தள்ளுகிறது
பிணங்களின் கூட்டம்

பிணங்களுடன்
பிணங்கள் மோதும் வன்முறை
தாள முடியவில்லை

சுடுகாடுகளின் வாயில்கள்
சாம்பலின் உயரத்தால்
மூடப்பட்டிருக்கிறது

நாற்றம் பெருகும் நகரத்தில்
நுரையீரல்களின் பதற்ற விம்மல்கள்
பிணங்களின் அமானுஷ்யக் கூச்சலில்
ஒடுங்கிக் கரைகின்றன

கரைமணலில் பிணமிழுத்து
அலை வரையும் கோடுகள்
தீராது அச்சுறுத்துகின்றன

நீலமிட்டப் பிஞ்சு உதட்டுக் கவ்வலில்
முலைகள் பெருக்கும் குருதியுடன்
சேர்கிறது கடல் போல் கண்ணீர்

உயிருள்ள விறைத்த குறிகள்
சில்லிட்ட யோனிகளில்
சிக்கி நசுங்குகின்றன

இந்நகரத்தின்
எண்ணற்ற பாதைகள்
எண்ணற்ற பிணங்களால்
அடைந்திருக்கிறது

வழி மறிக்கும் பிணங்களை
கடந்து வெளியேறும்
வழியேதும் தெரியவில்லை

**கோகுல கண்ணன்**

ஊரில் இருக்கிறது வீடு
வீட்டுக்குப் போயிருந்தேன்
ஊருக்குப் போகவில்லை . . .

**காளி – தாஸ்**



## நடைவழிப் பாடல்

அறிவுரைகள் தீர்ந்தபோது
எனக்குள்
அறிவு வளரத் தொடங்கிற்று

கனவுகளற்ற மண்ணில்
பதிந்ததென் தேடலின் முதலடி

துருவங்களும் திசைகளுமற்ற வெளியில்
விரிந்த தவ்வழி

அர்த்தங்கள் உதிர்ந்தபின் கிடைத்தது காட்சி
விழிப்பின் சலன சாட்சி

**சத்யன் சுந்தர்**

## கோவில்

எரியும் தீபம்
கவிழ்ந்து
அனலாய்க் கொதிக்கும்
தரை

படர்ந்த புல்வெளி
நிமிர்ந்து
புல்வெளியாய்
ஓர் தெய்வம்

நீல ஆகாயம்
உடைந்து
செருகிய வடிவாய்
கோபுரம்

அதில்

மணியோசை நாதம்
தெறித்து
பறந்த ஒலிபோல்
ஓர் சிட்டுக்குருவி

**டி. மகேந்திரன்**



படிப்பகம்

www.padippakam.com



பாலச்சந்திரன் சுள்ளிக்காடு




## பயனற்றது

நூற்றாண்டு
நான் காத்திருந்தேன்.
உண்டென்றோ இல்லையென்றோ
நீ சொல்லவில்லை.

சூரியனும் அப்படியே சந்திரனும் அப்படியே.
பனியும் அப்படியே மழையும் அப்படியே.
காற்றும் அப்படியே கடலும் அப்படியே.

பருந்து உதறிவிட்ட நிழலுமாய்
நான் காத்திருந்தேன்.
ஆமென்றோ இல்லையென்றோ
நீ சொல்லவில்லை.

மண்ணை உண்ணும் மண்புழுவைப்போல்
நான் காலத்தை தின்று தீர்க்கிறேன்.

இறுதியில்
பாலைவனத்திற்குள் பாய்ந்த நதியைப்போல்
எனது காதல் வற்றிப்போனது.
இப்போது என் உள்ளத்தில்
காற்று. உஷ்ணக்காற்று.

*மலையாளத்திலிருந்து தமிழில் :* மூழிக்குளம் ஆர். சசிதரன்

மரங்கள்
எரிந்த வனம்

நீர்வாசம்
ஒலித்த திசையில்
சாம்பல் மிதக்க
புள்ளிகள் தெறிக்க
ஓடினேன்

வற்றிக்
கிடந்தது கானல்

உயிரில் அசைகிறது
வேடன் நிழல்

யுவபாரதி


## வழிபாடு

குத்து விளக்கில்
நெய்யூற்றித் தாய் நிற்க
தத்தித் தத்தி நடந்த சிறு குழந்தை
விழுந்து தாள் பணியும்
பெரியவர்களைப் பார்த்ததும்
ஏதோ ஆவல் உந்த
கருவறைக்குப் பொற்பாதம் காட்டி
சட்டென்று விழுந்து சிரிக்கிறது

## தடுமாற்றம்

வெயிலில் மின்னுகிறது ஐயனார் வாள்
கை நடுங்கக் கதறுகின்றன மரங்கள்
வாளிலிருந்து மரத்துக்கும்
மரத்திலிருந்து வாளுக்கும்
மாறி மாறிப் பறந்து
நிலை கொள்ளாமல் தவித்து
திசையெங்கும் நிற்கும் நடுகற்களில்
கடந்த பிறவியின் அடையாளம் தேடி
தடுமாறித் தடுமாறிப் பறக்கிறது
சுடுகாட்டுக் குருவி

பாவண்ணன்



## கொஞ்சம் கிராம்புத் தைல பற்பசை வேண்டும்

கொந்தளிப்பை சாஸ்வதமாக்கி

மனக்குகையின்
இருட்டு முடுக்கில்
சுருண்டு படுத்திருக்கும்
பிராணியை

தூக்கத்தில் சீண்டி
பயம் அறைந்து
உயிர் அதிரத் துரத்தி
மெல்லக் கடித்துப் பார்க்க
காமமுறச் சீறுகிறதொரு
மிருகம்

ரத்தக்கறை ஏதும்
உதடுகளில் தென்பட்டால்
நானில்லை
அது

ரவி சுப்பிரமணியன்



படிப்பகம்

www.padippakam.com





வானகமே இளவெயிலே மரச்செறிவே

# இசையும் கவிதையும்

: சுந்தர ராமசாமி :

இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னர் என் குடும்பத்தினருடன் சானொஸேயில் ஒரு தென்னிந்திய ஓட்டலில் உணவருந்தப் போனேன். மாலை மணி ஏழு ஏழரை இருக்கும். ஓட்டலில் நெரிசல். அதிகமும் இந்தியர்கள். இந்திய உணவில் விருப்பம் கொண்ட அமெரிக்கர்களையும் ஆங்காங்கு பார்க்க முடிந்தது.

நாங்கள் உணவருந்த அமர்ந்துகொண்ட இடத்திற்கு அருகே சிறிய மேடையொன்றில் புல்லாங்குழல் இசைக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. புல்லாங்குழல் வித்வான் ஆஜானுபாகுவாக இருந்தார். சதைப் பற்று மிகுந்த உருண்டை முகம். ஜிப்பா. தபலா வாசித்துக் கொண்டிருந்த பெண்மணி ஒல்லியாக, நீட்டுவாகான முகம் கொண்டவர். தலையில் காஷ்மீர் பெண்கள் அணிவது போன்ற குல்லா. இருவரும் அமெரிக்கர்கள் போலவே தோன்றினர். வித்வான் சிந்துபைரவி ராக ஆலாபனையில் ஈடுபட்டிருந்தார். பெண்மணி மிக மென்மையாகவும் அனுசரணையாகவும் தபலாவை அடக்கி வாசித்துக் கொண்டிருந்தார்.

சுற்றி வரக் கவனித்தேன். சந்தடி மிகுந்த சூழல். சளசளவென்று பேச்சு. கண்ணாடித் தட்டுகளும் கரண்டிகளும் உராயும் சப்தம். ஒருவரின் கவனம்கூட இசையில் இல்லை. சபையின் எதிர்வினை மீதும் இசைக் கலைஞர்களின் கவனம் இல்லை. இருவரும் தாங்கள் எழுப்பும் இசையில் தாங்களே ஆழ்ந்து அதன் ரசனையில் மிதந்து கொண்டிருப்பது போல் பட்டது. தென்னிந்தியாவில் பெரிய திருமணங்களின் மாலை வரவேற்புக் கச்சேரிகளில் முக்கிய வித்வான்கள்கூட தங்கள் இசையை எவரும் கவனிக்காத சபையில் குழந்தைகளின் கத்தலையும் பெரியவர்கள் எழுப்பும் இரைச்சலையும் பொருட்படுத்தாமல் கச்சேரியை நிகழ்த்த நேரும் கொடுமை நினைவுக்கு வந்தது.

புல்லாங்குழல் வித்வானைப் பற்றியும் தபலா கலைஞரைப் பற்றியும் எண்ணற்ற கேள்விகள் மனத்தில் தோன்றின. மேடையின் முன்பக்கத்தில் இனாம் தரும்படி வேண்டிக்கொள்ளும் அட்டை கண்ணில் பட்டதும் இருவரும் இருள்மயமான வாழ்க்கையில் தத்தளிக்கும் கற்பனை தோன்றிற்று. அவர்களை அணுகி சில கேள்விகள் கேட்டு அவர்களது வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. ஆனால் அன்று மிகுந்த மனச்சோர்வில் நான் இருந்ததால் என் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை.

பின்னால் ஒரு நாள் அந்த ஓட்டலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது அந்த இசைக் கலைஞர்கள் வாரக் கடைசி நாட்களில் வந்து வாசிப்பது வழக்கம் என்பது தெரிந்தது. அந்த வாரக் கடைசியில் அவர்களைச் சந்திக்க ஓட்டலுக்குச் சென்றேன். சிறிது நேரம் அவர்களுடன் பேச விரும்புவதாகச் சொன்னபோது,கச்சேரியின் இடைவேளையின் போது சந்தித்துப் பேசலாம் என்று உற்சாகத்துடன் இசைவு தெரிவித்தனர். நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தெளிவாகவும் சுயக் கற்பனைகள் எதுவுமின்றியும் மனம் விட்டுப் பேசினார்கள். அந்தப் பேச்சின் சாராம்சமான பகுதிகளை மட்டும் சுருக்கமாக இங்கு தருகிறேன் :

புல்லாங்குழல் கலைஞரின் பெயர் ஜெஃப்ரி எ. வைட்யர் (Jeffrey A. Whittier), தபலா கலைஞரின் பெயர் லெஸ்லீ ஷெனிடர் (Leslie Schneder). ஜெஃப்ரி பாலோ ஆல்டோவிலும் லெஸ்லீ பெர்க்லியிலும் குடியிருக்கிறார்கள். 1960க்களில் இந்திய இசைக் கச்சேரிகள் பெர்க்லியிலும் சுற்றிவர வேறு பல இடங்களிலும் நடந்திருக்கின்றன. ரவி சங்கர், பண்டிட் ராம் நாராயண், அலி அக்பர்கான் போன்ற பலரும் கச்சேரிகள் நிகழ்த்தியிருக்கின்றனர். அப்போது ஜெஃப்ரிக்கு 24 வயது. இசை சார்ந்த பின்னணி எதுவும் அவரது குடும்பத்திற்கு இல்லையென்றாலும் இந்தக் கச்சேரிகள் அவரை வெகுவாகக் கவர்ந்து இந்திய இசை மீது மிகுந்த ஆர்வத்தை உண்டாக்கியிருக்கின்றன. அவர் தனது மனத்திற்கு விருப்பமாகத் தேர்ந்தெடுத்தது புல்லாங்குழல். பல்வேறு இந்திய வித்வான்களை அமெரிக்காவில் சந்திக்கவும் அவர்களிடம் பயிற்சி பெறவும் வாய்ப்புப் பெற்றார் என்றாலும் அவர்கள் எவரையும் அவர் தன் குருவாகக் கருதவில்லை. கலைக் கடவுளான சரஸ்வதி தேவியையே தனது மானசீக குருவாகக் கருதுவதாக ஜெஃப்ரி சொன்னார். வியட்நாம் போர் மூண்டபோது அதற்கெதிராக ஜெஃப்ரி பிரச்சாரம் செய்ததால் அவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை கிடைத்திருக்கிறது.



ஜெஃப்ரி எ. வைட்யர் (புல்லாங்குழல் கலைஞர்), லெஸ்லீ ஷெனிடர் (தபலாக் கலைஞர்)

புகழ்பெற்ற இந்திய புல்லாங்குழல் கலைஞரான ஹரிப்பிரசாத் சௌரேசியாவுடன் ஜெஃப்ரிக்கு தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. விலைமதிப்பற்ற உபதேசம் ஒன்றை தான் சௌரேசியாவிடமிருந்து பெற்றதாக ஜெஃப்ரி குறிப்பிட்டார். குருவைத் தேடி அலைவதை விட்டுவிட்டு நேரடியாக மேடைக் கச்சேரிகள் செய்ய வேண்டுமென்றும், அவரது இசைத் திறன் காலப்போக்கில் வளர்ந்து நிறைவடையும் என்றும் சொல்லியிருக்கிறார் சௌரேசியா. அதிலிருந்து தொடர்ந்து உணவு விடுதிகளிலும், திருமண வைபவங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் ஜெஃப்ரி கச்சேரி செய்து வருகிறார். ஆனால் இவற்றிலிருந்து போதுமான வருமானம் இவருக்கு கிடைத்து வருவதாகத் தெரியவில்லை. இசைக் கச்சேரிகள் செய்வதுடன் புல்லாங்குழல்களும் செய்து விற்று வருகிறார். இசையும் கற்றுத் தருகிறார். இந்திய இசையின் குறுந்தட்டுகள் தன்னிடம் ஏராளம் இருக்கின்றன என்றும் ஆனால் அவற்றைக் கேட்பதை விட நேர்முகமாகக் கச்சேரிகள் கேட்பதே தனக்கு அதிக விருப்பமானதாக இருக்கிறதென்றும் சொன்



படிப்பகம்

www.padippakam.com



னார். சில காலம் மிருதங்கம் கற்றுக் கொண்டார் என்றாலும் பின்னால் அதை விட்டுவிட்டார்.

லெஸ்லி குறைவாகப் பேசும் குணம் கொண்டவராகத் தென்பட்டார். இந்திய இசையைப் பற்றி ஜெஃப்ரி கூறிய கருத்துகளில் அநேகம் அவருக்கும் உடன்பாடானவை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அவர் பதினைந்து வருடங்களாக ஜெஃப்ரியின் கச்சேரிகளுக்கு தபலா வாசித்து வருகிறார். ஜெஃப்ரியைப் போல் இவர் இசையைத் தன் முழு நேரப் பணியாக வைத்துக் கொள்ளவில்லை. அலுவலகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். பல தபலாக் கலைஞர்களிடம் இவர் கற்றுக் கொண்டிருக்கிறார். ஜாகீர் ஹுசைனிடமும் சில காலம் கற்றுக் கொண்டதாகச் சொன்னார்.

இந்திய இசைக்கு அமெரிக்காவில் முன்னால் இருந்த மதிப்பு இப்போது இல்லையென்பது ஜெஃப்ரியின் அபிப்ராயம். திட்டமிட்டு நடத்தப்படும் வட இந்தியக் கச்சேரிகள் இப்போது குறைந்து கொண்டு வருவதாகக் கூறினார். எம். டி. வி. (ஜனரஞ்சக நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே முழுநேரத்தையும் ஒதுக்கும் ஒரு தொலைக்காட்சி சானல்) இப்போது இசை ரசிகர்களின் முழுக் கவனத்தையும் ஆட்கொண்டு விட்டதாம். இருந்தாலும் இந்தியாவிலிருந்து கலிஃபோர்னியாவுக்கு வந்து கொண்டிருக்கும் கணினித் தேர்ச்சியாளர்கள் வட இந்திய இசைக்கும் தென்னிந்திய இசைக்கும் இப்போது ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகச் சொன்னார்.

ஜெஃப்ரி மூன்று முறை இந்தியாவுக்கு வந்திருக்கிறார். கடைசி முறை வந்தது *1985*இல். தனக்கு மகன் பிறந்த பின் இந்தியாவுக்கு வரச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லையென்று சொன்னார். சென்னைக்கும் வந்திருக்கிறார். சென்னையில் ரமணி, மகாலிங்கம், ருக்மணி அருண்டேல் ஆகியோரைச் சந்தித்திருக்கிறார். கலாக்ஷேத்ரா வெளியிடும் இதழொன்றில் தான் இசை பற்றி ஒரு கட்டுரை எழுதியதாகவும் அதைப் படித்துவிட்டு ருக்மணி அருண்டேல் தன்னை வெகுவாகப் பாராட்டியதாகவும் சொன்னார். அவருக்கு மிகவும் விருப்பமான இந்திய இசை கலைஞர் கங்குபாய் கங்கல். பன்னலால் கோஷ் தன் இசை ரசனையை வெகுவாகத் தூண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சபையோரின் அசிரத்தையைப்பற்றிக் கேட்டபோது ஜெஃப்ரி சொன்ன பதில் முக்கியமாகப் பட்டது. இசைக் கச்சேரிகளை தான் ஏற்றுக்கொள்ளக் காரணமே சாதகம் பெறுவதற்கு ஏதோ வெகுமதி கிடைத்து வருவதால்தான் என்றும், சபையின் மனோபாவத்தைக் கவனிக்காமல் தன்னால் இயன்றளவு சிறப்பான இசையையே ஒவ்வொரு முறையும் தர முயல்வதாகவும், சந்தடியும் இரைச்சலும் நிறைந்த சபையில்கூட தன் இசையை ஆத்மார்த்தமாகக் கேட்டு ரசிக்கும் ஒருவர் இருக்கக்கூடும் என்பதால் அவரை மனத்தில் வைத்தே தான் வாசித்து வருவதாகவும் கூறினார்.

இசையில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்களாகத்தான் அந்தக் கலைஞர்கள் இருவருமே என் மனத்திற்குப்பட்டனர். தாங்கள் மேற்கொண்டிருக்கும் இசை வாழ்க்கையின் மீது பெரும் மரியாதையும் மதிப்பும் கொண்டவர்கள் அவர்கள். பெயரோ, புகழோ, பணமோ மிகக் குறைந்த அளவில்தான் அவர்கள் பெற்று வருகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால் அதில் குறையோ அதிருப்தியோ அவர்களுக்கு இல்லை. வாழ்க்கையில் அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கும் அப்பாதை அவர்களுடைய விருப்பம் சார்ந்தது. பிறரால் தீர்மானிக்கப்பட்டதோ, திணிக்கப்பட்டதோ அல்ல.

கலிஃபோர்னியா, *02.04.2001*

# ஒரு மரத்தைக் கொல்வது பற்றி

ஒரு மரத்தைக் கொல்ல நிறைய நேரம் ஆகிறது
கத்தியின் எளிய குத்தலில் அது முடிந்துவிடுவதில்லை
அது பூமியை மெல்லத் தின்று
அதிலிருந்து மேலெழும்பி
அதன் இறுகிய மேற்பரப்பை உண்டு
சூரிய ஒளி காற்று தண்ணீர் என
பல்லாண்டுகள் உறிஞ்சி
தொழுநோயாளிக்குரிய தன் மறைவை நீக்கி
இலைகளை முளைக்க விடுகிறது.

ஆக, வெட்டி துண்டு போடுவது
மட்டுமே பலித்து விடுவதில்லை
மிதமிஞ்சிய வலியால் முடிந்து போய்விடுவதுமில்லை.
ரத்தம் பீறிடும் மரப்பட்டைப் புண்ணாறும்
மண்ணையொட்டி சுருண்ட பச்சைக்கிளைகள் முளைக்கும்
அந்தச் சிறிய கிளைகளை அதன்போக்கில் விட்டால்
அவை மீண்டும் பழைய அளவுக்கே விரியும்.
விடக் கூடாது,
வேரை அடியோடு பிடுங்கி விட வேண்டும்
நங்கூரம் பாய்ச்சி நிற்கும் பூமியிலிருந்து.
பூமிக் குகையிலிருந்து கயிற்றால்
கட்டி இழுக்க வேண்டும்; பிடுங்க வேண்டும்
துண்டித்து அல்லது முழுமையாகப் பிடுங்கி
மரத்தின் பலத்தை அம்பலப்படுத்த வேண்டும்.
பூமியின் உள்ளே பல்லாண்டுகள் மறைந்து கிடந்த
உணர்வு மிகுந்த, வெண்மையும் ஈரமும் கொண்ட
அந்த மூலசக்தி

கடைசியில் அந்தப் பொருள்
சூரிய ஒளியிலும் காற்றிலும் காய்ந்து
மூச்சுத் திணறி பழுப்பேறி இறுகி
முறுகி வாடி வதங்குகிறபோது

அதன் கதை முடிந்துபோகிறது.

**(On Killing a Tree,** *Gieve Patel,* Ten Twentieth Century Indian Poets)

*ஆங்கில மூலம் :* ஜீவ் பட்டேல்
*தமிழில் :* பசுவய்யா

ஜீவ் பட்டேல் 1940இல் பிறந்தார். மருத்துவம் கற்றவர். மும்பையில் தொழில் நடத்தி வருகிறார். *கவிதைகள்* எனும் தலைப்பில் 1960 இல் இவரது முதல் தொகுப்பு வெளியாயிற்று. இவரது கவிதைகள் பல சஞ்சிகைகளில் வெளியாகி புத்தக வடிவமும் பெற்றுள்ளன. ஜீவ் பட்டேல் இந்தியக் காட்சிகளைத் துல்லியமாகக் கூறுவதில் வல்லவர். படிமங்களை பெரும்பாலும் அவரது கவிதை தவிர்த்து விடுகிறது. ஒடுக்கப்பட்ட மக்கள் மீதும் ஏழை எளியவர்கள் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவர். வாழும் உரிமை மறுக்கப்படுவதற்கு எதிரான குரல் பல கவிதைகளிலும் வெளிப்பட்டுள்ளது.'ஒரு கவிதை தெளிவாக இருந்தால், சீராகச் சிந்திக்கப்பட்டிருந்தால், குறிக்கோளைக் கொண்டிருந்தால், தருக்க பூர்வமாகவும் உண்மையாகவும் இருந்தால் அது ஏதோவொன்றை மாற்றியிருக்கும். . . கவிஞனிலேயே அம்மாற்றம் நிகழ்ந்திருக்கலாம். இவ்வாறு நிகழவில்லையென்றால் கவிதையே உருவாகவில்லை என்று கூறிவிடலாம்' என்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com





# பாட்டுக்குத்தான் மெட்டு

: பெருமாள் முருகன் :

நான் ஏழு அல்லது எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு வானொலி அறிமுகமானது. சின்ன 'ரேடியோ பெட்டி' ஒன்றை வேறொருவரிடமிருந்து எதேச்சையாக வாங்க நேர்ந்தது. அது என் கைக்கு வந்ததிலிருந்து ஆறேழு ஆண்டுகள் இலங்கை வானொலியின் தீவிரக் காதலனாக மாறிப்போனேன். காடுமேடுகளிலெல்லாம் அந்தப்பெட்டி என்னோடு வந்தது. திரைப்பாடல்களை வைத்துக்கொண்டே விதவித மான நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி கொடுக்கும். பாடல் பொருள், பாடுவோர், பாடலாசிரியர், மெய்ப்பாடு, இசை ஆகியவற்றை மையமாகக் கொண்டு நிகழ்ச்சி களுக்குப் பெயர் சூட்டும் அழகே கவரும். சொற்களில் ஏற்ற இறக்கம், உணர்ச்சி பாவமின்றி அறிவிக்கும் தமிழக வானொலிக்கும், நேரடியாக நம்மோடு உரையாடும் இலங்கை வானொலிக்கும் இடையேயான வேறுபாட்டைச் சொல்ல உவமையில்லை.

எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும், அது எத்தகைய இடமாக இருப்பினும் ஒருபக்கம் பாட்டு ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். ரொம்பவும் பழைய பாடல்களாக இருந்தால் அதன் மீது ஈர்ப்பு கூடும். பாடலின் படம், பாடியோர், பாடலாசிரியர், இசையமைப்பாளர் ஆகிய விவரங்களைத் தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம். என் வகுப்பு நண்பர்கள் சிலரும் இதில் விருப்பத்தோடு இருந்தார்கள். அவர்களைவிடக் கூடுதலான விவரம் எனக்குத் தெரியும் எனக் காட்டிக் கொள்வேன். குரலைக் கேட்டதுமே அது யாருடையது என்று கண்டு பிடிப்பது எனக்கு வெகு சுலபம். அந்தத் திறமையை என் நண்பர்கள் அங்கீகரித்தது மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஒவ்வொருவருடைய குரலின் தனித்தன்மையை வேறுபடுத்திக் காண மிகுந்த பிரயாசை எடுத்துக் கொள்வேன். பி. சுசீலா, எல். ஆர். ஈஸ்வரி, ஜிக்கி, ஜமுனா ராணி ஆகியவர்களின் குரல்களை மட்டுமல்ல, லீலா, ஏ. பி. கோமளா, பெரியநாயகி, எம். எல். வசந்த குமாரி முதலியோரின் குரல்களைக்கூட என்னால் கண்டு பிடிக்க முடியும். பிரபலமில்லாத, அதிகம் பாடாத பாடகர்களின் குரல்களும்கூட எனக்குத் தெரியும். மெட்டு, இசையைக் கொண்டு எம். எஸ். சுப்பையா நாயுடுவா, ஜி. ராம நாதனா, விஸ்வநாதன் ராமமூர்த்தியா என்று கூடச் சொல்ல முடியும்.

இதற்கெல்லாம் முக்கிய காரணம் இலங்கை வானொலிதான். கொஞ்சகாலம் அதன் ஒலிபரப்பு இரவிலும் தொடர்ந்தது. இரவு பத்து மணிக்கு மேல் 'தூக்கமும் கண்களைத் தழுவட்டுமே' போன்ற மென்மையான பாடல்கள் ஒலிக்கும். அவற்றையெல்லாம் கேட்டுவிட்டு வானொலி மூடப்படும்போதுதான் தூங்குவேன். எக்கச்சக்கமான பாட்டுப் புத்தகங்களையும் வாங்கிக் குவித்தேன். அந்த வயதில் கிட்டத்தட்ட அது ஒரு பைத்தியம் போலத்தான்.



இப்போது யோசிக்கும்போது, பாடலின் ராகம், இசையை விடவும் வரிகள்தான் எனக்கு முக்கியமானவையாக இருந்தன என்று தோன்றுகிறது. ஏனென்றால், அப்போதைய என் கனவு எதிர்காலத்தில் திரைப்படப் பாடலாசிரியன் ஆக வேண்டும் என்பதுதான். புதிய வரிகளை நானாக உருவாக்கிப் பாடல்களின் மெட்டில் பொருத்துவது எனக்குப் பிடித்த வேலை. பாடல் ஒலிக்கும் போது என்னுடைய வரிகளைக் கொண்டு நான் பாடுவேன். வரிகள் சரியாகப் பொருந்தும்வரை மாற்றி மாற்றிச் சொற்களைப்போட்டு நிறைவு செய்தால்தான் திருப்தி. வாய்க்கு வரும் 'தத்தகாரங்களை' திரும்பத் திரும்பச் சொல்லி அதை ஒரு மெட்டுப் போலப் பாவித்து அதற்கேற்பப் புதுப்பாடல்களை உருவாக்குவேன்.



எனது கவிதைக் குறிப்பேடுகளில் ஒன்று பாடல்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 'தொகையறா, பல்லவி, அனுபல்லவி, சரணம்' என்றெல்லாம் போட்டுப் பாடல்களை எழுதி வைத்தேன். அந்தச் சொற்களுக்கான பொருளை நானாக ஒருவாறு உருவாக்கிக் கொண்டிருந்தேன். எவ்வளவு சிக்கலான மெட்டுக்கும் சாதாரணமாகப் பாடலை உருவாக்கி விடமுடியும் என்னும் நம்பிக்கையிருந்தது. தமிழகத்தின் லட்சோப லட்சம் இளைஞர்களைப் போலவே திரைப்படத்துறை கனவு எனக்கும் இருந்தது. ஆனால் 'பாடலாசிரியன்' என்பது மட்டும் தான் எனக்குரிய திறமை என்பதில் தெளிவும் இருந்தது. அப்போது என்னுள் தோன்றும் அதிகற்பனைகள் வெகு சுகமாக இருக்கும். சென்னைக்குச் சென்றுவிட வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தேன். அங்கே போய் சேர்ந்ததும் பாட்டெழுதும் வாய்ப்புகள் வந்து குவியும் என்று கருதிக் கொள்வேன். என்னைச் சோதிக்க விதவிதமான, சிக்கல் நிறைந்த மெட்டுக்கள் கொடுக்கப்படும். அவையெல்லாம் என் கற்பனைத் தீயினில் தூசாகும்படி உடனுக்குடன் பாடல் புனைந்து கொடுத்து விடுவேன். இளையராஜா என்னைப் பாராட்டிச் சொல்வது போலப் பல வாசகங்கள் உதிக்கும். எல்லாம் நிறைவேறும். ஆனால் அதற்குச் சென்னை செல்ல வேண்டும்.

சென்னைக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் எதையும் என்னால் உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. ஆகவே கனவுகள் கூடிக் கொண்டேயிருந்தன. அப்போது வலம்புரிஜான் ஆசிரியராக இருந்த *தாய்* இதழ் படிக்கக் கிடைத்தது. அனேகமாக **1983** அல்லது **1984** ஆம் ஆண்டாக இருக்கக்கூடும். அவ்விதழில் ஒரு போட்டி பற்றிய அறிவிப்பு வெளியாகி இருந்தது. 'மெட்டுக்குப் பாட்டு' என்னும் போட்டி. குறிப்பிட்ட ஒரு நாளில் சென்னையில் போட்டி நடைபெறும். போட்டியில் கலந்து கொள்வோர் சென்னைக்குப் போக வேண்டும். நிகழ்ச்சியைக் கங்கை அமரன் நடத்துவார். அதாவது அவர் மெட்டைச் சொல்வார்; அதற்கேற்பப் பாடல் எழுத வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பாடல்களுக்குப் பரிசு வழங்கப்படும். திரைப்பட வாய்ப்புகள்கூடக் கிடைக்கும் என்று அறிவித்திருந்ததாக நினைவு.

அந்தப் போட்டி பற்றிய அறிவிப்புகளைத் தொடர்வதற்காக இதழை வாங்கிக் கொண்டிருந்தேன். அதன் மூலம் சென்னை செல்லும் வாய்ப்புப் பிரகாசப்பட்டது.



படிப்பகம்


www.padippakam.com



அதற்காக தயாரிப்புகளைச் செய்துகொண்டேன். புது மெட்டுக்கள் அமைத்துப் பாடல்கள் எழுதிப் பார்த்தேன். பரத நாட்டியப் பாட்டு, டூயட், சோகம், மகிழ்ச்சி எனப் பலவிதமான சூழல்களை உருவாக்கிக் கொண்டு எல்லா ராகங்களிலும் பாடல்கள் எழுதினேன். அந்த நாளும் வந்தது. மறக்காமல் பாட்டு நோட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டேன். சேலம் சென்று சென்னைக்குப் பேருந்து ஏறினேன். சென்னை செல்வது அதுதான் முதல் முறை. இரவுப் பயணம் முழுவதும் பொட்டுத் தூக்கமில்லை. எண்ணங்கள் எங்கெங்கோ விரிந்தன. சொர்க்கத்தை நோக்கிச் செல்வது போல அத்தனை சந்தோஷமாகவும் இருந்தது.

காலையில் பாரிமுனையில் இறங்கியதும் விசித்திர மான உலகத்துள் நுழைந்து விட்டதாய் உணர்ந்தேன். என்னை வரவேற்க இரத்தினக் கம்பளம் எதுவும் இல்லை. என்றாலும் அந்த மண்ணை மிதிக்க வாய்த்ததே பெரும்பேறு என்பதாய்த் தோன்றிற்று. கையில் 'தாய்' இதழின் முகவரியோடு அந்தப் பகுதியைச் சுற்றி வந் தேன். முகவரியைக் கண்டுபிடித்துச் சேர வேண்டும். பேருந்து நடத்துநர் ஒருவரிடம் முகவரியைக் காட்டி எப்படிப் போகவேண்டும் என்று கேட்டேன். யாரிடமாவது எதையாவது விசாரிப்பது என்பது எனக்குச் சுலபமான காரியமல்ல. தகாத செயல் செய்வதைப் போல அத் தனைக் கூச்சம். ஆனால் அங்கே விசாரிப்பைத் தவிர வேறு வழியேயில்லை. அந்த நடத்துநர் முகவரியைப் பார்த்துச் சிரித்தார். அதில் 'நெல்சன் மாணிக்கம் சாலை' என்றிருந்தது. 'எந்த ஏரியா?' என்று கேட்டார். எனக்குத் தெரியவில்லை. விவரமில்லாத என் முகத்தை ஆராய்ந்து விட்டு 'ஏரியா பேர் இல்லாத எப்படிக் கண்டு புடிக்கறது. ஆட்டோக்காரங்ககிட்டக் கேளு' என்று சொல்லிப் போனார். ரொம்பத் தயக்கத்தோடு ஆட்டோ காரர் ஒருவரை அணுகினேன். முகவரியைப் பார்த்து விட்டு, 'இது ரொம்ப தூரம். இருபத்தஞ்சு ரூவா குடு, கொண்டு போய் விடறன்' என்றார். வேறு ஆட்டோக் காரர்கள் என்றால் நூறு ரூபாய் கேட்பார்கள் என்றும் எங்கெங்கோ சுற்றிக் கொண்டு போய்விடுவார்கள் என் றும் சொன்னார். பெரும்புகழ் பெறப்போகும் பாடலாசிரி யன் குறைந்தபட்சம் ஆட்டோவிலாவது போனால்தான் மதிப்பாக இருக்கும் என்று பட்டது. கைச்சேமிப்பு கரை வதை நினைத்து ஒரு கணம் தயக்கமாக இருந்தாலும் கௌரவம் பெரிதென்று பட்டது. அந்த ஆட்டோக்காரர் எனக்குத் தெய்வம் போலத் தோன்றினார். அவர்தான் என்னைத் *தாய்* அலுவலகம் கொண்டு போய்ச் சேர்த்தார்.

நெல்சன் மாணிக்கம் சாலை இருப்பது சூளைமேடு பகுதி. நான் ஆட்டோவில் வந்து இறங்கியதைக்கண்டு வரவேற்க யாரும் ஓடிவரவில்லை. என்னைப் போலப் பலர் வந்து சேர்ந்து கொண்டிருந்தனர். திரைப்படப் பாட லாசிரியர் ஆகும் கனவுள்ளோர் ஏராளமான பேர் இருந்த னர். பதின்வயதிலிருந்து கிழப்பருவம் வரை மக்கள் நிறைந்திருந்தார்கள். பெண்கள் ஓரிருவர்தான். பெருங் கூட்டத்தை எதிர்பார்த்து விரிவான ஏற்பாடுகளைச் செய்தி ருந்தார்கள். பெரிய அரங்கம். அதனுள்ளே நாற்காலிகள். ஒரு புறம் மேடை. நாற்காலிகள் போதாமல் அங்கும் இங்குமாகக் கீழே உட்கார்ந்திருந்தவர்கள் பலர். ஐந்நூறு பேருக்கும் மேலிருக்கும். பிரமித்துப் போனேன். எனக்கு ஒருவனுக்குத் தான் பாடல் எழுதும் திறமை இருப்பதாக, உள்ளொடுங்கிய கிராமத்து மூலையொன்றில் இருந்துகொண்டு, கற்பனை செய்து கிடந்ததின் அபத்தத்தை உணர்ந்தேன். வந்தவர்களே இவ்வளவு பேர் என்றால், வர இயலாதவர்கள், விருப்பமிருந்தும் இந்தப் போட்டி பற்றிய தகவல் அறியாதவர்கள் என எத்தனையோ ஆயிரம் பேர் இருக்கலாம். கூட்டத்தில் ஒருவனானேன் நான். நோட்டும் கையு மாக பாட்டும் மனமுமாக வெயிலையும் பொருட்படுத் தாமல் எதிர்பார்த்து உட்கார்ந்திருந்த முகங்களில் எனதும் ஒன்று.





பின்னொரு நேரத்தில் கங்கை அமரன் வந்தார். சில ஜோக்குகளோடு முன்னுரை சொன்னார். இவ்வளவு கூட்டத்தைப் பார்த்துத் தனக்கு ஏற்பட்ட வியப்பைச் சொன்னார். எல்லோருடைய கைகளிலும் ஒவ்வொரு தாள் கொடுக்கப்பட்டது. மிகச் சுருக்கமாக ஒரு சூழலைச் சொல்லிவிட்டுக் கங்கை அமரன் மெட்டைத் தொடங் கினார். 'ல'கரத்தில் பல்லவியைப் பாடினார். அதையே 'த'கரத்திலும் 'ந'கரத்திலும் மாற்றி மாற்றிப் பாடினார். அவருடைய குரலோசையைத் தவிர சிறு சத்தமும் இல்லை. ஐந்நூறு பாடலாசிரியர்களும் சொருகிய கண் களோடு மெட்டைப் பிடித்துச் சொற்களைப் பொருத்த முயன்று கொண்டிருந்தனர். கேட்கும்போது எளிமை யாகத் தோன்றினாலும் மெட்டை மனதுக்குள் பற்றிக் கொள்ள பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது. மெட் டைப் பிடித்தால் சொற்கள் நழுவின. சொற்களில் கவனம் கொண்டால் மெட்டு திசைதவறி ஓடிற்று. இரண்டையும் ஒரே சமயத்தில் செய்வது இயலவில்லை. என்னதான் கண்களை மூடிக்கொண்டு தியானித்தாலும் சொற்களும் மெட்டும் சேரவே மறுத்தன. வண்டி எருதுகளில் ஒன்று தண்ணீருக்கும் மற்றொன்று வேலிக்கும் இழுத்தால் வண்டியின் நிலை என்னவாகும்? எப்படியோ முயன்று சொற்களைப் போட்டு நிரப்பினேன். கொஞ்சம் கூடச் சலிப்பின்றி மீண்டும் மீண்டும் மெட்டைப் பாடிக் காட்டி னார் கங்கை அமரன். திரும்பத் திரும்ப யாராவது எழுந்து கேட்டுக் கொண்டேயிருந்தனர். முழுப்பாட்டு மெட்டை யும் பாடிக்காட்ட அரைமணி நேரத்துக்கு மேலாயிற்று.

அவரே பாடலாசிரியர் ஆகையால் வரிகளைப் போட் டும் சில சமயம் பாடினார். ஏதோ ஒப்பேற்றிப் பாடலை எழுதி முடித்தேன். சொல்கிற மாதிரியில்லை. மனதில் என்னவோ விட்டுப்போனது போலிருந்தது. எழுதிய பாடல்களை வாங்கிக் கொண்டனர். முடிவு பின்னர் *தாய்* இதழில் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டது. வெளி யேறிய முகங்களில் சில உற்சாகத்துடன் பொலிந்தன; சில சோகங் கொண்டன. என்னவென்று சொல்ல இய லாத வகையில் நானிருந்தேன்.

திரும்பும் போது ஆட்டோ தேடவில்லை. பேருந்து தான் பிடித்தேன். பேருந்தில் உட்கார்ந்து நோட்டைப் பிரித்தேன். பாடல் வரிகள் மறைந்து நோட்டு முழுவதும் வெள்ளையாகத் தெரிந்தது. அதன்பின் என்னுள் இரண்டு கருத்து மாற்றங்கள் நேர்ந்தன.

ஒன்று : பாட்டுக்குத்தான் மெட்டுப்போட வேண்டும்; மெட்டுக்குப் பாட்டெழுதச் சொல்வது கவிஞனை அவ மதிப்பதாகும்.

இரண்டு : பாடலாசிரியன் வேறு; கவிஞன் வேறு.

ஓவியம் : மருது



படிப்பகம்

www.padippakam.com





ஆறாம் திணையும் ஏழாம் திணையும்

# கவிதை பிறக்கும் பொழுது

: சேரன் :

*cheran@cheran.net*

கோடைகால விடுமுறை நாளொன்றில் எதிர்பாராத வகையில் புதிய வகுப்பு ஒன்றுக்குச் செல்ல நேர்ந்தது. தாய்மொழியும் வாய்மொழியும் ஆங்கிலமாகவே வாய்க்கப்பெற்ற இலங்கை நண்பன் ஒருவன் இந்தப் புதிய வகுப்புக்கு என்னை அழைத்துச் சென்றான். எங்கு போகிறோம் என்பது குறித்தோ அல்லது வகுப்பில் நாங்கள் படிக்கப்போகும் பாடங்களின் பொருள், தலைப்பு எவை என்பன குறித்தோ எனக்கு எவ்வகையான தகவலையும் நண்பன் வழங்கவில்லை. ஒழுங்கான தகவல்களைத் தருவதும் பெற்றுக் கொள்வதும் பரிமாறுவதும் ஜனநாயகத்துக்குப் பொருந்தி வராத இயல்புகள் என்பது என்னுடைய நண்பனின் நெடுங்கால நிலைப்பாடு என்பது எனக்கு முன்னரே தெரிந்திருந்ததால் குறிப்பான தகவல்கள் தொடர்பாக நான் அவனை வற்புறுத்தவில்லை.

எங்களுடைய இடத்திலிருந்து மூன்று அல்லது நான்கு கூப்பிடு தொலைவில்தான் நாங்கள் செல்ல வேண்டிய சனசமூக நிலையம் இருந்தது. பிற்பகல் இரண்டு மணியளவில் நாங்கள் சன்சமூக நிலையத்தைச் சேர்ந்தபொழுதுதான் என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரிய ஆரம்பித்தது. இங்கு ‘தேஷ் பர்தேஷ்’ என்று ஒரு கலாசாரக் குழுவினர் உள்ளனர். Exploring South Asian Culture and Politics in the Diaspora (புகலிடத்தில்/புலம்பெயர்வில் தென்னாசியர்களுடைய பண்பாட்டையும் அரசியலையும் பேசுவது) என்பது அந்த அமைப்பின் நோக்கம். பத்து ஆண்டுகளாக ஒவ்வொரு கோடை காலமும் ஒரு வாரம் விழா எடுப்பார்கள். அமெரிக்கா, கனடா - சில வேளைகளில் இங்கிலாந்து - ஆகிய நாடுகளிலிருந்து ஆங்கிலத்தில் எழுதும் / நாடகம் தயாரிக்கும் / சினிமா எடுக்கும் குழுக்களும் தனி ஆட்களும் நூற்றுக்கணக்கில் ஒன்று கூடுவார்கள். கருத்தரங்குகள், கவிதை அரங்குகள், நாடகங்கள், நாட்டியங்கள் இடம்பெறும். ஒவ்வொரு இரவும் திரைப்படங்கள் இடம்பெறும். இறுதி நாளன்று பெரும் களிக்கூத்துடன் நிகழ்வுகள் முடிவடையும்.

> ‘‘தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆயிரம் பேருக்கு ஒரு கவிஞர் என்று (இலக்கிய) ஆய்வுகள் தெரிவிக்கின்றனர். உலகெங்கணும் எட்டுக் கோடி (?) தமிழர்கள் இருக்கிறார்கள். எனவே தமிழ்ச் சமூகத்தில் கவிஞர்கள் சிறுபான்மையினர் அல்ல என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்’’

ஏற்கனவே பல தடவைகள் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றிருந்த அனுபவம் எங்கள் இரண்டு பேருக்குமே இருந்தது. ‘தென்னாசியர்கள்’ என்ற பொதுப் பெயர் இருந்தாலும் வட இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து பல தலைமுறைகளாக இங்கு வாழ்ந்து வருகிறவர்களையே பெருமளவுக்குப் பிரதிநிதித்துவப்படுத்துகிற இத்தகைய அமைப்புக்களிலும் விழாக்களிலும் எங்களுக்கு ஈடுபாடு இல்லாமல் போய்விட்டது. தென்னாசியா என்பது இந்தியாவின் மறுபெயர் என்றுதான் இங்குள்ள பலர் கருத்தியல் ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் புரிந்து கொண்டிருப்பதும் எங்களுக்கு உடன்பாடானதாக இருக்கவில்லை. இருப்பினும் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து வந்த சமபால் உறவினர் (gay and lesbian) பெருமளவில் பங்கெடுக்கும் ஒரேயொரு நிகழ்வு என்ற முறையில் தேஷ் - பர்தேஷ் விழாவுக்கு ஒரு சிறப்பு இருந்தது. அதனுடைய துணை அமைப்பான ‘குஷ்’ என்பது சமபாலுறவுக்காரர்களுக்கு மட்டுமே உரிய அமைப்பாகும். இந்த இரண்டு அமைப்புக்களிலும் எங்கள் இருவருக்கும் நெருங்கிய நண்பர்கள் பலர் இருந்தார்கள். ஆங்கில நாவல் இலக்கியத்தில் இப்போது உலக அளவில் கவனம் பெற்றிருக்கிற ஷானி முத்து, ஷியாம் செல்வதுரை, எம். ஜி. வாஸன்ஜீ போன்றவர்கள் இத்தகைய அமைப்புகளூடாகவே ஆரம்பத்தில் கவனம் பெற்றவர்கள்.

தேஷ் / பர்தேஷ் - தேசி / பரதேசி நிகழ்வில் அப்படி என்ன புதுமை இந்த முறை மட்டும் நிகழ்ந்துவிடப் போகிறது என்று எனக்குச் சந்தேகம் இருந்தாலும் நண்பனுடைய தெரிவுகளில் எனக்கு எப்போதும் நம்பிக்கை இருந்தது. (தென்னாப்பிரிக்காவின் நிறவெறி அபார்தைட் அரசு கறுப்பு மக்களைப் பிரித்துத் தனியே அமைத்த சேரிப் பகுதிகளான பண்டுஸ்தான் (Bandustan) குடியேற்றங்களுக்கான மாதிரியை கனடிய அரசிடம் இருந்துதான் கற்றுக் கொண்டது என்ற உண்மையை அவன்தான் முதலில் போட்டுடைத்தவன்.)

‘‘கவிதை எழுதுவது எப்படி என்று அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்தில் கற்பிக்கிற பேராசிரியக் கவிஞர் ஒருவர் இந்த முறை சிறப்பு விருந்தினராக வந்திருக்கிறார். தொறன்ரோவில் இருக்கும் தென்னாசியர்களுக்கு ஒரு கவிதை வகுப்பு நடத்துகிறார். அதற்குத்தான் உன்னையும் இழுத்துக்கொண்டு போகிறேன்’’ என்றான் அவன்.

இந்தப் பேராசிரியக் கவிஞர் புகழ் பெற்றவர் என்று சொன்னான். ‘‘Creative writing துறையில் படிப்பிக்கிறார். ஃபைஸ் அஹ்மத் ஃபைஸ் கவிதைகளை மூலமொழியிலேயே கற்றுத் தேர்ந்தவர். அந்தக் கவிதைகளை நவீன ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தன்னுடைய சொந்தப் படைப்பாக இரண்டு நூல்களை இதுவரை வெளியிட்டிருக்கிறார். மேலும் நான்கு நூல்களுக்குத் தலையங்கம் மட்டும் இப்போதே தீர்மானம் செய்து வைத்திருக்கிறார்’’ என்று அவர் பற்றிய தகவல் குறிப்புத் தெரிவித்தது. குறிப்பின் கீழ், இரண்டு கைகளையும் நாடிக்கு முட்டுக் கொடுத்தவாறு, ‘சூனிய வெளியில் பிரக்ஞை அற்று அலையும் புனித உடல்களை வெறித்துப் பார்க்கிற’ பாவனையில்/பாசாங்கில் விழி குத்தி நிற்கும் அவருடைய படம் இருந்தது. (மீசை இல்லை என்றபடியால் நிச்சயமாகத் திராவிட உறவும் இல்லை என்று தெரிந்துவிட்டது!)



படிப்பகம்

கவிதை எழுதுவதையும் யாராவது படிப்பித்து விடலாமா? என்பது எப்போதும் சந்தேகத்துக்குரிய விடயமாகவே எனக்கு இருந்துள்ளது. கவிதையைச் சுவைப்பது, கவிதை பற்றிய ஆர்வத்தைத் தூண்டுவது, கவிதை நோக்கி மற்றவர்களை ஈர்ப்பது போன்ற அம்சங்களுக்குப் பயிற்சியும் தேர்ச்சியும் வளர்ச்சியும் உதவி புரியக்கூடும் என்றாலும் படைப்பு இலக்கியத்துறையில் பட்டம் பெற்றுவிட்டால் இலக்கியம் வந்துவிடும் என்பது நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. மீளமீள வாசிப்பது, செப்பனிடுவது, பண்படுத்துவது போன்ற படைப்பாக்கக் கூறுகளை நாங்கள் கற்றுக் கொள்ள முடியும். அதற்கு ஒழுங்கான ஆசிரியம் துணை செய்யலாம். ஒரு நல்ல படைப்பாளி தனக்குத்தானே ஆசிரியராகவும் இருக்கமுடியும். எனினும் கவிதை எழுதுவது எப்படி என்பதை ஒரு டிப்ளோமாவுக் கூடாகத் திணித்துவிட முடியுமா?

பேராசிரியக் கவிஞரின் வகுப்பில் கலந்து கொள்ள ஒரு நாற்பது பேர் வந்திருக்கிறார்கள். பெண்கள், ஆண்கள், குழந்தைகள் (எண்ணிக்கைப்படி வரிசைப்படுத்தி உள்ளேன்!) பலரது கைகளில் ஏற்கனவே எழுதப்பட்ட கவிதைகள் இருந்தன. எனக்கு அருகிலிருந்தவரின் கவிதையை மெல்ல எட்டிப் பார்த்தேன். அரைவாசி ஆங்கிலமாகவும் அரைவாசி பஞ்சாபி மொழியிலும் இருந்தது. "Hybrid - High Bride - Hi' - Bright" என்று தலைப்பு. பஞ்சாபிலிருந்த பின்னரைத் தலைப்புப் பிடிபடவில்லை. பேராசிரியர் கவி ஆஹா ஸாகித் அலி (பெயரில் பாதி கற்பனை மீதி சத்தியம்!) புன்சிரிப்புடன் உள்ளே நுழைந்தபோது எல்லோரும் ஆரவாரித்தார்கள்.

'கவிஞர்கள் சிறுபான்மை இனம்' என்று அவர் சொல்ல ஆரம்பித்த போது தவிர்க்க முடியாமல் அருகிலிருந்த என் நண்பனைப் பார்க்க வேண்டி இருந்தது. உலகத்திலிருக்கக்கூடிய ஒரேயொரு சிறுபான்மை இனம் பூர்ஷ்வாக்கள் மட்டும்தான். அவர்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே எனது நண்பனின் நிலைப்பாடு மட்டுமன்று; அவனது கவிதைத் தொகுதியொன்றின் தலைப்பே அதுதான். இப்போது கவிஞர்களும் சிறுபான்மையினர் என்று சொல்லி விட்டால் . . .? பேராசிரியக் கவிஞர் தனது வசனத்தை முடிக்கு முன்பே நண்பன் குறிக்கிட்டு விட்டான் : "Poets are not a minority; The only minority is bourgeoise!" பேராசிரியர் கவியின் முகத்தில் புன்முறுவல் ஒன்று. ''உனக்கு நல்ல நகைச்சுவை உணர்வு இருக்கிறது. நகைச்சுவைக் கவிதைகள் எழுதுவது பற்றிய என்னுடைய வகுப்பு ஒன்று இன்னும் இரண்டு மாதங்களில் வான்கூவர் நகரில் நடக்க இருக்கிறது. அங்கே வரலாமே!'' என்று தெரிவித்தபோது, அவர் குரலில் கேலியும், கிண்டலும் இருக்கவில்லை. ஒரு அற்புதமான சீடப் பிள்ளையை இனங்கண்டுவிட்ட புளகாங்கிதம்தான் இருந்தது. ''தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆயிரம் பேருக்கு ஒரு கவிஞர் என்று (இலக்கிய) ஆய்வுகள் தெரிவிக்கின்றனர். உலகெங்கணும் எட்டு கோடி (?) தமிழர்கள் இருக்கிறார்கள். எனவே தமிழ்ச் சமூகத்தில் கவிஞர்கள் சிறுபான்மையினர் அல்ல என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்'' என்று எனது மேலான கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட்டேன்.

''நீங்கள் சொல்வது மிக முக்கியமான, எங்களது அறிவை வளப்படுத்தக் கூடிய தகவல் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. தமிழர்களுக்கும் கவிதைக்கும் ஒரு இரத்த உறவும் உணர்வுப் பிடிப்பும் (blood ties and emotional grip) இருக்கிறது என்று மிச்சிக்கன் பல்கலைக்கழக ஆய்வாளர் ஒருவர் எழுதியது எனக்குத் தெரியும். மேலும் இந்தியாவில், உங்களுடைய முதலமைச்சரும்கூட ஒரு பெரிய கவிஞர் அல்லவா?'' என்று மிகுந்த உற்சாகத்துடன தனனுடைய ஞானக் கிளர்ச்சியை வெளிப்படுத்தினார் கவி ஆஹா ஸாகித்.

'ஐயா, நான் இந்தியாவைச் சேர்ந்தவன் அல்லன். பூர்வீகம் இலங்கை' என்று சொல்ல நேர்ந்தபோது இதே பதிலை எத்தனை ஆயிரம் தடவை சொல்ல வேண்டி நேர்ந்திருக்கிறது என்ற நினைவு மேல் எழுந்தது.

''இலங்கையா? அப்போ நீங்கள் பௌத்தர் அல்லவா? உங்களுடைய மொழியும் . . . சிங்கி. . . இல்லை. . . சிங்கா. . . அப்படி ஏதோ ஒன்று. அந்த மொழியின் பெயர் சரிவர நினைவில் வர மறுக்கிறது. . .'' என்றார் ஆஹா ஸாகித். ''சிங்களம். ஆனால் அது என் மொழி அல்ல'' என்றேன். 'ஓ இப்போது எனக்குப் புரிகிறது. பிரித்தானியர் இலங்கைக்கு அழைத்துச் சென்ற தமிழர்கள் நீங்கள். எனக்கு இந்த விடயம் ஏன் முன்னரே உறைக்காமல் போயிற்று என்று தெரியவில்லை. I'm really sorry. இந்தியாவில் இருந்து சென்ற கூலி உழைப்பாளரின் அவலம் பற்றி David Dabydeen எழுதிய கவிதைகள் படித்திருக்கிறீர்களா? அவர் கரிபியனைச் சேர்ந்தவர். உருக்கமான கவிதைகள் - ஆஹா!'' என்றார் ஆஹா ஸாகித். வார்த்தைகளைச் சரளமாக வழங்குவதில் அவருக்கு சலிப்பே கிடையாது என்று தோன்றிற்று. அவருடைய குறிப்புக்கு நான் பதில் சொல்ல முயலவில்லை. எனது நண்பனும்தான். கவிதை வகுப்பு இப்படித்தான் ஆரம்பமாயிற்று.

''ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்து வானவெளியில் வீசுங்கள். அது பறந்து திரிகிறபோது கிடைக்குமே ஒரு சந்தம்; ஒரு ஒத்திசை - அந்த ஒத்திசையைப் பின் தொடருங்கள். பின் தொடர்கிறபோது அந்தச் சொல்லை மருவக் கூடிய, முயங்கக் கூடிய வேறு இன் சொற்களையும் எடுத்து வீசுங்கள். ஆமாம். சொல்லின் பயணம்.

இணையத்தில் தமிழ் நூல்களைத் தேடுக
மின்னம்பலத்தில் உள்ள மிகப் பெரியதும் 20,000த்துக்கும் அதிகமான தலைப்புகளைக் கொண்டதுமான தமிழ்நூல் அங்காடி இதுதான்
tamilnool.com

www.padippakam.com


Trace the word in its flight. அது அற்புதம் அல்லவா?'' என்றார் ஆஹா ஸாகித் அலி.

வகுப்பில் ஒரு அதீத மௌனம் கவிந்தது. பெண்களும் ஆண்களும் குழந்தைகளுமான கவிகள் இப்போது இறங்க ஆரம்பித்திருந்தார்கள். 'இன் சொல் (sweet word). அது எவ்வளவு பெரிய உன்னதம்! ஒரு நல்ல கவிதையில் வேறு சொல்லே வர முடியாது. வேறு சொல்லே வரக் கூடாது. Sweet words or nothing! இது தான் என்னுடைய தாரக மந்திரம். புரிகிறதா?'' என்று அவர் தொடர்ந்தபோது முன்வரிசையில் மிகுந்த தீவிரத் துடன் பேராசிரியக் கவிஞர் சொல்கிற ஒவ்வொரு வார்த் தையையும் தனது மடிமேலமர்ந்த கணினிப் பொறியின் வன்பொருளுள் இடைவிடாது திணித்துக் கொண்டிருந்த ஒரு கவிக்குச் சந்தேகம் ஒன்று ஏற்பட்டுவிட்டது.

''நீங்கள் இன் சொற்கள் என்று எவற்றைக் கூறுகிறீர் கள்? குறிப்பான உதாரணங்கள் தரமுடியுமா?'' என்று கேள்வியை எழுப்பினார் அந்தத் தீவிரக் கவி. ''ஆம். அதைத்தான் நானும் கேட்க வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்தேன்'' என்று வேறு சில கவிகளும் சேர்ந்து கொண்டார்கள்.

''ஆ! அப்படியா'' என்றார் ஆஹா ஸாகித்.

''இன்சொற்கள் எவை என்று உங்களுக்கு இனங் காண முடியாமல் இருப்பது ஒரு துயரம். வரலாற்றுத் துயரம் என்று கூட இதைச் சொல்லவேண்டும். இன் சொற்கள் எவை என்று தெரியாத கவிஞர்களைப் பார்க் கிறபோது எனது இதயமே நொறுங்கி விடுகிறது. போகட் டும். உதாரணங்களைக் கேட்பது கவிதை அல்ல. வணி கம். எனினும் எனக்குத் தெரிந்த இன்சொற்களுள் தலை யாயது எது தெரியுமா? இதயம். ஆம். அது எவ்வளவு இனியது? கீதம். அது மற்றுமொரு சொல். மோகம். அது பிறிதொன்று. சில சொற்களை எனக்கு அறவே பிடிக்காது. அவை எனக்கு வெறுப்பையும் கரப்பொத் தான் பூச்சி உணர்வையுமே ஏற்படுத்துவன. அவைதான் வன்சொற்கள் : குடல், இரத்தம், நிணம், இந்த மாதிரி... yak!'' என்று ஸாகித் அலி தொடர்ந்த போது எனது நண் பனுக்குப் பெரியதொரு சந்தேகம் எழுந்தது.

''இன்சொற்களை மட்டுமே வைத்துக் கொண்டு எப் படி ஒரு அவல உணர்வை, போர் தரும் வேதனையை நீங்கள் எழுதுவீர்கள்?" என்று கேட்டான், அவன். ''என்ன? போரா?'' என்று அதிர்ந்தார் ஆஹா ஸாகித் அலி.

''சரி. போரைத்தான் விட்டு விடுங்கள். கோபத்தை அல்லது ஒரு குழந்தையின் பிறப்பை, அல்லது அறுவைச் சிகிச்சையை நாம் கவிதையில் எழுதவே முடியாதா?'' என்று தெற்கு மூலையில் இருந்து இன்னொரு கவி மிகுந்த விசனத்துடன் கேட்டாள். ''நான் ஒரு சமூக சேவகி. மருத்துவமனையில் பணிபுரிகிறேன். காயம் பட்ட வர்களுடைய உளவளத்துக்குத் துணைபுரிய என் கவிதை களைப் பாடலாம் என்று திட்டமிட்டு இருக்கிறேன். அதற் காகத்தான் உங்களுடைய ஆலோசனையைக் கேட்க லாம் என்று இங்கு வந்தேன். நீங்களோவெனில்...'' என்று அவள் தொடர்ந்தும் பேசத் தயங்கியபோது ஆஹா ஸாகித் அலியின் முகத்தில் கலவரம் படர ஆரம்பித்தது.

''எனக்கு அந்த விடயங்கள் பிடிக்காது. கவிதை மோகனமானவற்றை மென்மையுடன் பேசவேண்டும் என் பதே எனது கருத்து. அதுதான் இன்சொற்கள் பற்றி நான் கூற நேர்ந்தது. நான் நடைமுறையிலேயே அதனை அழ காக உங்களுக்கு விளக்கிக் காட்டமுடியும். இப்போ பாருங்கள். யாராவது ஒரு வரி அல்லது ஒரு சொல் கூறுங் கள். அதிலிருந்து ஆரம்பிக்கலாம். எங்கே பார்ப்போம். Come on...'' என்று வகுப்பறையிலிருந்தோரை ஸாகித் அலி தூண்டினார்.

**அறிவிப்பு**

கலப்புத் திருமணம் தொடர்பான விவாதத்திற்கு ஏராளமான எதிர்வினைகள் வந்துள்ளன. இன்னும் வந்து கொண்டிருக் கின்றன. எனவே இந்தப் பதிவுகள் இந்த இதழில் இடம்பெற வில்லை. அடுத்த இதழில் வெளிவரும்.

தமிழ் இனி தமிழகச் செலவு விபரங்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

ஆ. கு.

ஒருவரும் முன்வரவில்லை. மறுபடி மௌனம். ''என்ன இது? ஏன் இந்தத் தயக்கம்? சொல்லுங்கள். ஒரு வார்த்தை, ஒரு தொடர் அல்லது ஏதாவது ஒரு ஒலித் துண்டு...'' மறுபடி மௌனம்.

''சரி நானே கேட்டு விடுகிறேன். அதோ அங்கு கறுப்பு நிற சட்டையும் நீளக் கூந்தலுமாக அமர்ந்து இருக்கின்றவரைக் கேட்போம். எங்கே ஒரு சொல், ஒரு தொடர் சொல்லுங்கள் பார்ப்போம்'' என்று இளையவர் ஒருவரைச் சுட்டினார் ஆஹா ஸாகித்.

''Me? Oh, no!'' என்று வந்தது பதில்.

''ஆஹா அதுவே போதும். அற்புதமான தொடர்! Me? Oh, no! என்ன இனிமையான சந்தமும் குழைவும். Me? Oh, no! இதுவே போதும். இதிலிருந்தே ஆரம்பிக்க லாம். Me? Oh, no! என்ற தொடரை இப்போது நீங்கள் அனைவரும் கவிதை ரீதியில் பின் தொடருங்கள். வார்த் தைகளை வானவெளியில் வீசிவிட்டுத் தொடருங்கள். எங்கே பார்க்கலாம்!''

Me? Oh, no!

''ஆமாம். நீங்கள் இன்று இந்த வகுப்பில் எழுதப் போகிற கவிதை இப்படியே ஆரம்பமாகட்டும். Me? Oh, no! வேண்டுமானால் இரண்டு அல்லது மூன்று நிமிடங் கள் கண்களை இறுக மூடி நிஷ்டை கூடுங்கள். அப்போது இந்த அழகான மூன்று சொற்களையும் வானவெளியில் தொடருங்கள். மறக்க வேண்டாம். இந்த மூன்று சொற் களுக்கும் தீவிரமான உணர்வு வெளிப்பாட்டுத் திறன் உண்டு. சரியா? நல்லது. இப்போது கண்களை மூடுங்கள்.''

எனக்குள் இப்போது கலவரம் எழ ஆரம்பித்து விட்டது. மெல்ல நண்பனைப் பார்த்தேன். தனக்கு முன்பு இருந்த வெள்ளைத் தாளில் ஒரு குறிப்பை எழுதிக் காட்டினான் : கஞ்சா இருக்கிறது. வெளியில் போய் ஒரு சிறு புகை போக்கி விட்டு வந்து வானவெளியில் பறக்கலாம். வா.

நண்பன் சொன்ன வார்த்தைகள் உண்மை. அவனுடைய புகழ் பெற்ற கவிதையொன்றில் I have no nation / my nation is hallucination my culture is agriculture என்றும் அவன் எழுதியிருக்கிற ஞாபகம் வந்தது. கூடவே மெல்லிய சிரிப்பும்.

''Me? Oh, no!'' என்பதைத் தமிழில் மொழிபெயர்த்துத் தானே நான் தொடர வேண்டி இருக்கும் என்று யோசித் தேன். பொருத்தமான மொழி / முழி பெயர்ப்புக்காக ஓரிரு நிமிடங்கள் அலைந்து திரிந்தேன். இறுதி விளைவு :

நானா? ஓ! இல்லை!

இனி இந்தத் தொடரை நான் வானவெளியில் தொடர வேண்டும் அல்லவா? இதென்ன தொல்லை என்று யோசித்த போதே ஈற்றடி எதுகை கிடைத்து விட்டது. ''தொல்லை.''

நானா? ஓ, இல்லை.

...... ஓ, தொல்லை...

இந்தக் கீறிட்ட இடத்தை நிரப்புவது இப்போது இருக் கிற வரகவிகளுக்கும் இனிவரப் போகிற வரகவிகள், ஆசு கவிகள் மற்றும் தாங்கள் இனியும் எழுதப் போகிற கவிதைகளையும் முன்கூட்டியே தெரிந்து வைத்திருக்கிற எல்லாக் கவிகளுக்கும் உரிய பெரும் பொறுப்பாகும் என்று ஆணையிடுகிறேன். ■



படிப்பகம்

www.padippakam.com



*பிறவழிப் பயணம்*

# அரசு அன்று கொல்லும்; அரசாணை நின்று கொல்லும்

: ரவிக்குமார் :

தீண்டாமை அமைப்பில் இந்துக்கள், தீண்டப்படாத மக்களை இழிவான பணிகளில் அமர்த்துகிறார்கள்; உயர்ந்த பணிகளில் அவர்கள் போட்டிக்கு வந்துவிடாமல் தடுக்கப்படுகிறார்கள். இந்த உயர்ந்த பணிகள் இந்துக்களுக்கென்றே ஏகபோகமாய் பாதுகாக்கப்படுகின்றன.

பி. ஆர். அம்பேத்கர்

புதியதாய் பொறுப்பேற்கும் ஆட்சியாளர்கள் தமது வீரத்தையும் கருணையையும் வெளிப்படுத்திக் கொள்ள விழைவது எப்போதும் நடப்பதுதான். பயங்கரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்கும் முனைப்பில் சில இயக்கங்களைத் தடைசெய்ய வேண்டுமென தமிழக அரசு பரிந்துரைத்துள்ளது. கூடவே அதிரடிப்படைக்கு புதிய தலைவரையும் நியமித்துள்ளது. இவை வீரத்தின் வெளிப்பாடுகள். தலித் மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. தொட்டில் குழந்தைத் திட்டம் புத்துயிர் பெற்றுள்ளது. இவை கருணைக்கு சாட்சியங்கள். சட்டம், நீதி, நேர்மை போன்ற தொந்தரவான விஷயங்களிலிருந்து வீரம், கருணை என்பனவற்றை நோக்கி மக்களின் கவனம் திரும்பப்பட வேண்டியது அவசியம்தானே.

அந்த நோக்கத்தின் ஒரு பகுதியாகவோ என்னவோ முதலமைச்சர் சட்டமன்றத்தில் ஒன்றை அறிவித்திருக்கிறார். தலித் மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய அரசாணை எண் 44, மறுபடியும் செயல்படுத்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்திருக்கிறார். இந்த அறிவிப்பின் பின்னால் எந்த நோக்கமிருந்தாலும் சரி இந்த அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டால் நல்லது என்றே தலித்துக்கள் எண்ணுகிறார்கள். கடந்த ஆண்டு தி. மு. க. அரசு போட்ட அரசாணை எண் 33 ரத்து செய்யப்பட வேண்டும் என்பதும் அவர்களது கோரிக்கையாயிருக்கிறது. இதற்கான காரணங்களை அறிந்து கொள்ள அந்த அரசாணைகளின் உள்ளடக்கத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு முன்னால் அந்த ஆணைகள் போடப்பட்டதன் வரலாற்றையும் சற்று பார்க்க வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தலித் இயக்கங்கள் எழுப்பி வரும் கோரிக்கைகளுள் ஒன்று "இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது குறித்து வெள்ளை அறிக்கையை அரசு வெளியிட வேண்டும்" என்பதாகும். 1980ல் எம். ஜி. ராமச்சந்திரன் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 50% ஆக உயர்த்திய போதிலிருந்தே இந்த கோரிக்கை எழுப்பப்பட்ட போதிலும் கடந்த பத்தாண்டுகளாக இது தீவிரமடைந்தது. அதன் காரணமாக கடந்த தி. மு. க. அரசு 1997ல் அப்போதிருந்த ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் தலைமையில் ஒரு உயர் நிலைக்குழுவை அமைத்து இது பற்றி அறிக்கை தரக் கேட்டது. அதன்படி அந்தக் குழுவின் விரிவான அறிக்கை 3. 8. 98 அன்று அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழக அரசில் சுமார் 13 லட்சம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இதில் 8.10 லட்சம் ஊழியர்கள் 145 துறைகளில் வேலை செய்கின்றனர். மீதமுள்ளவர்கள் உள்ளாட்சிகளிலும், சத்துணவுத் திட்டம் போன்றவற்றிலும் உள்ளனர். இவை அனைத்திலுமாக சேர்த்தால் இப்போதுள்ள ஒதுக்கீட்டின்படி தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் 2.50 லட்சம் பேர் அரசுப் பணிகளில் இருக்க வேண்டும். ஆனால் அதில் பாதிகூட நிறைவு செய்யப்படவில்லை. இந்த அவலநிலையைத் துறைவாரியாக ஆய்வு செய்த உயர்நிலைக்குழு இந்தக் குறைபாடுகள் நேர்ந்ததற்கான காரணங்களையும் அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளையும் சுட்டிக்காட்டியது.

இந்த உயர்நிலைக் குழுவின் பணிகளை ஒருங்கிணைத்து சிறப்பாக செயல்பட்டவரும் அப்போது ஆதி திராவிட நலத்துறை செயலாளராக இருந்தவருமான திரு. கிருத்துதாஸ் காந்தி அவர்களின் முன்முயற்சியால் போடப்பட்டதுதான் அரசாணை எண் 44 (20. 5. 1998). அந்த ஆணையின் பத்தி 3ல் இப்படி சொல்லப்பட்டுள்ளது: "அரசின் அனைத்துத் துறைகள், அரசு சார் பொது நிறுவனங்கள் மற்றும் அரசிடம் நிதி உதவி பெறும் நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள ஒவ்வொரு வகைப் பிரிவுப் பணியிடங்களிலும் பட்டியல் இனத்தவர், பழங்குடியினருக்குப் போதுமான பங்கேற்பு உள்ளதா என்பதைக் கண்டறிந்து எந்தெந்தப் பணியிடங்களில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் பங்கேற்பு 19 விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ளதோ அந்தப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் நியமிக்கப்பட வேண்டும்.''

இதற்கேற்ப எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் தேவையான பணி விதிகள் செய்யப்படுமென்றும் இந்தப் பணிகளைக் கண்காணிக்க அரசு அமைத்த உயர்நிலைக் குழுவே, ஒரு நிலைக்குழுவாக இருக்குமெனவும் அந்த அரசாணை தெரிவித்தது.

உயர்நிலைக்குழுவின் பதினான்கு பரிந்துரைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிட்டாலும் கூட அவற்றுள் முக்கியமானதை இது எடுத்துக் கொண்டது.

உயர்நிலைக் குழுவின் அரிய முயற்சியால் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் தலித் மக்கள் தமக்குரிய இட ஒதுக்கீட்டைப் பெறாமல் தடுக்கப்பட்டிருந்த உண்மையை வெளிப்படுத்தின. அது வெளியே வரக் கூடாது எனத் திட்டமிட்ட சக்திகள் அந்த அறிக்கையை சட்ட மன்றத்தில் தாக்கல் செய்யாமல் தடுத்து அதைக் குப்பைக் கூடையில் போட்டது மட்டுமின்றி திரு. கிருத்துதாஸ் காந்தியை ஆதிதிராவிட நலத்துறையிலிருந்து மாற்றி, ஒரு அதிகாரமும் இல்லாத சமூக சீர்திருத்தத் துறை என ஒன்றை உருவாக்கி அதில் முடக்கிப் போட்டன. அரசாணை எண் 44 செயல்படுத்தப்படாமல் முடக்கப்பட்டு அதற்குப் பதிலாக அரசாணை எண் 33 பிறப்பிக்கப்பட்டது. இந்தப் புதிய ஆணை 8. 5. 2000 அன்று போடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இட ஒதுக்கீடு தொடர்பான வெள்ளை அறிக்கையொன்று 11. 5. 2000 அன்று சட்டசபையில் முன்வைக்கப்பட்டது. அந்த வெள்ளை அறிக்கைக்கும் சமய நல்லூர் செல்வராசு தலைமையிலான உயர்நிலைக்குழுவின் அறிக்கைக்கும் தொடர்பே இல்லை. பொய்யான புள்ளி விவரங்கள்



படிப்பகம்

www.padippakam.com



கொண்ட மோசடி அறிக்கையென்றே அதைச் சொல்ல வேண்டும்.

புதிதாகப் போடப்பட்ட அரசாணை எண் 33, தலித் மக்களுக்கான இட ஒதுக்கீட்டில் இரண்டு பெரும் தடைகளைப் போட்டுள்ளது. ஒன்று : பின்னடைவுப் பணி இடங்களைப் (Backlog Vacancies) கணக்கிட தன்னிச்சையாக 1. 4. 89 என்றொரு தேதியை அது முடிவு செய்தது. இரண்டு : குறைகின்ற பணியிடங்களில் அந்தந்தத் துறைகளில் நுழைவு நிலை (Entry Level) பணியிடங்களில் மட்டுமே பணியமர்த்தப்படவேண்டும் என அது உத்தர விட்டது.

ஏற்கனவே பார்த்த 8.19 லட்சம் பேர் வேலை செய்யும் 145 அரசுத் துறைகளில் 'ஏ' பிரிவு வேலைக்கு ஒரு தலித் செல்ல வேண்டுமாயின் வெறும் ஐந்து துறைகளில் மட்டுமே சாத்தியப்படும். அதுவும்கூட அந்த 'ஏ' பிரிவு பணிகளுக்கு சிறப்பு பணியமர்த்தல் (Special Recruitment) செய்வதன் மூலம் அந்த வாய்ப்பையும் தமிழக அரசு பறித்துவிட்ட நிலையில் உயர் பதவிகளுக்கு ஒரு தலித் தால் ஒருநாளும் செல்லவே முடியாது என்ற நிலை இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. அரசு வெளியிட்ட அறிக்கையின் படியே 'ஏ' பிரிவில் 173 காலியிடங்களும் 'பி' பிரிவில் 1675 காலியிடங்களும், 'சி' பிரிவில் 3362 இடங்களும் உள்ளன. அரசாணை எண் 33 நடைமுறையி லிருப்பதால் இந்த காலியிடங்களை ஒருபோதும் நிரப் பவே முடியாது.

இந்த அநீதியைக் கண்டித்து தலித் அமைப்புகளும் பல்வேறு அரசியல் கட்சிகளும் குரலெழுப்பின. ஆனாலும் தி. மு. க அரசு அந்த அரசாணையைத் திரும்பப் பெற ஒரு நடவடிக்கையும் எடுக்காதது மட்டுமின்றி அதை நியாயப்படுத்தியும் பேசி வந்தது. கடைசியில் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு இந்த விவகாரத்தை ஆராய ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்தது.

அரசியல் சூழல் காரணமாக தேர்தலில் தமிழ்நாட்டின் முக்கியமான தலித் அமைப்புக்கள் இரண்டு தி. மு. க. அணியில் சேர நேர்ந்தது. அந்த அணியில் இருப்பதால் இடஒதுக்கீட்டில் நேர்ந்துள்ள குளறுபடி குறித்து உரத்துப் பேச முடியாத நிலை. எனினும், சட்ட சபையில் விடுதலை சிறுத்தைகளின் அமைப்பாளர் திருமாவளவன் இந்தப் பிரச்சனையை எழுப்பியுள்ளார். அப்போதுதான் அரசாணை எண் 44 குறித்து முதலமைச்சர் குறுக்கிட்டு உறுதியளித்துள்ளார்.

அரசாணை எண் 44 நடைமுறைப்படுத்தப்படுவதோடு இந்தப் பிரச்சனை ஓய்ந்துவிடாது. பதவி உயர்வில் தலித்துக்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. இதற்காக அரசியல் சட்டத்தில் 16 (iv) (a) என்ற பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இதை தமிழக அரசு நடைமுறைப் படுத்துவதில்லை.

பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்து அதற்கு சட்டப்பாதுகாப்பு தரவேண்டுமென மத்திய அரசை வலியுறுத்துகிறது தமிழக அரசு. இதில் மறுப்பில்லை. ஆனால் தலித்துக்களுக்கு உரிமை வழங்கும் சட்டத்தை நடைமுறப்படுத்தாமல் இருப்பது என்ன நியாயம்?

தலித்துக்கள் தங்கள் அணிக்கே வாக்களித்தனர் எனக் கூறிக்கொள்ளும் முதலமைச்சர் அரசியல் லாபம் கருதியாவது தலித்துக்களுக்கான இட ஒதுக்கீட்டில் நியாயம் செய்வாரா? பட்ஜெட் கூட்டத் தொடரில் இதற்குப் பதில் தெரிந்துவிடும். ■

## பொது அறிவியல்



பதிப்பாசிரியர்கள் : *இராம. சுந்தரம்*
*சா. கிருஷ்ணமூர்த்தி*
*எல். இராமமூர்த்தி*

*அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 613 005*

பக். *677*, விலை ரூ. *300* (1999)

### அ. கா. பெருமாள்

அறிவியலைத் தாய்மொழியில் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம் நடத்திய எட்டாவது கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகளின் முதல் தொகுதி இந்த நூல். இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள், பொதுவான மருத்துவம், சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் காணப்படும் அறிவியல் குறித்த செய்திகள், நாட்டார் வழக்காற்றியலில் அறிவியல் ஆகிய பொருள்கள் குறித்து 103 கட்டுரைகள் இந்நூலில் உள்ளன. இவற்றில் அறிவியலுக்கு நேரடியாகத் தொடர்புடையவை 46 கட்டுரைகளே. மற்ற கட்டுரைகள் இலக்கியம், நாட்டார் வழக்காற்றியல், மொழி, கலைச்சொல் ஆக்கம் ஆகியவற்றுடன் அறிவியல் கொண்ட தொடர்பைக் கூறுவன. ஒருவகையில் அறிவியலுடன் நேரடியாகத் தொடர்பில்லாதவர்கள் எழுதிய கட்டுரைகள் இவை.

இந்த 46 கட்டுரைகளில் சித்த மருத்துவம், சுற்றுப்புறச் சூழல் தொடர்பானவை அதிகம். இந்தக் கட்டுரைகளில் பெரும்பாலானவை அறிவியல் துறையுடன் நேரடித்தொடர்பு இல்லாதவர்களுக்கும் புரியும்படி எழுதப்பட்டுள்ளன. பொதுவாகவே கருத்தரங்குக் கட்டுரைகள் புத்தகமாக வந்தால் தேறாது என்ற கருத்தை இந்த நூல் ஓரளவு தகர்த்திருக்கிறது.

## அறிவியல் தமிழ் வளர்ச்சி



பதிப்பாசிரியர் : *சா. கிருஷ்ணமூர்த்தி,*
*சா. உதயசூரியன்*

*அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்* 613 005

பக். *155*, விலை ரூ. *90* (1999)

தமிழில் அறிவியல் தொடர்பான நூற்கள் 19ஆம் நூற்றாண்டின் பாதியிலே வந்துவிட்டன. ஊர்திரி விலங்கியல் (Domestic Animals 1836) வன விலங்கியல் (Wild Animals 1836) அங்காதி பாதம் (Human Anatomy 1872) ரசாயன முதல் நூல் (Elements of Chemistry 1875) எனப் பல நூற்கள் வந்துள்ளன. இவை எல்லாமே அறிவியலை எளிய தமிழில் அறிமுகப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதப்பட்டவை. ஏறத்தாழ 1836லிருந்து இன்று வரை தொடர்ந்து 163 ஆண்டுகள் எத்தனையோ அறிவியல் நூற்கள் வந்துவிட்டன. என்றாலும் அறிவியல் தமிழ் என்ற உருவாக்கம் இப்போது தான் ஆரம்பித்திருக்கிறது. இத்தகு முயற்சியில் அறிவியல் தமிழ் வளர்ச்சி நூலையும் சேர்த்துக் கொள்ளலாம்.

அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை 1998 டிசம்பரில் நடத்திய கருத்தரங்கில் படிக்கப்பட்ட 15 கட்டுரைகளின் தொகுப்பு இந்த நூல். இவை முழுக்கவும் அறிவியல் தொடர்பான கட்டுரைகள் என்று கூறமுடியாது. அறிவியல் நூற்கள், இதழ்கள், அறிவியல் சொல்லாக்கம், அறிவியல் தொழில்கள், அறிவியல் மொழிபெயர்ப்புகள் ஆகியன பற்றி இக்கட்டுரைகள் விளக்குகின்றன. தமிழகத்தில் அறிவியல் தொடர்பாக நடந்த முயற்சியை இவை சான்றாதாரங்களுடன் குறிப்பிடுகின்றன. இந்த நூலில் உள்ள கட்டுரைகளில் வெங்கடேஸ்வரனின் "பொது மக்களுக்கான அறிவியல் நூற்கள்" என்ற கட்டுரை குறிப்பிடத்தகுந்தது. ■



படிப்பகம்

www.padippakam.com



# அரங்கு

## தமிழ் இனி 2000மும், காண்பியக்கலைகளும்

'தமிழ் அடையாளம்' என்ற தொனிப் பொருளுடைய 'கண்ணுக்குள் வெளி' எனும் காண்பியக் கலைகளின் காட்சி தமிழ் இனி 2000, உலகத் தமிழ் இலக்கிய அரங்கின் ஒரு பகுதியாக, அதற்குச் சமாந் தரமாக செப்டம்பர் 1, 2, 3ல் ஹோட்டல் அட்லாண்டிக், எழும்பூரில் ஏற்பாடாகி யிருந்தது.

தமிழ் நாட்டைச் சேர்ந்த காண்பியப் படைப்பாளிகளான எஸ். தனபால், பி. வி. ஜானகிராமன், ஏ. பி. சந்தானராஜ், கே. எம். ஆதிமூலம், வித்தியாசங்கர் ஸ்தபதி, ஜி. ராமன், ஆர். பி. பாஸ்கரன், எஸ். தட்சணாமூர்த்தி, ஏ. விஸ்வம், ஜி. சந்துரு, டிராட்ஸ்கி மருது, கே. முரளிதரன், இராம பழனியப்பன், எம். நடேஷ், எஸ். மரிய அந்தோனிராஜ், எஸ். மைக்கல் இருதயராஜ் முதலியவர்களது வெளிப்பாடுகளும், ஈழத்தில் இருந்து எம். நிலாந்தன், எஸ். வைதேகி, ரி. சனாதனன் ஆகியவர்களது வெளிப் பாடுகளையும் உள்ளடக்கிய மேற்படி ஓவிய – சிற்பக் காட்சி, நவீன சென்னை இயக்கத்தின் பிதாமகர்களுள் ஒருவரும், சிற்பியுமான எஸ். தனபாலுக்கு காணிக்கை செய்யப்பட்டிருந்தது.

அடையாளம் பற்றிய தீவிரப்படுத்தப் பட்ட தேடுகையும், அதை நிலை நிறுத்துவதற்கான முனைப்பும், பல்வேறு சமூகங் களில், பல்வேறுபட்ட பின் தளங்களில் இருந்து செயற்பட்டுள்ள போதும், காலனீய பின் காலனீய சமூகங்களின் பண் பாட்டமைவின் பிரதான பகுதியாக அடையாளம் பற்றிய பிரக்ஞை நிலவுவதும், கலைகளில் அவை அதிகாரபூர்வமாக வெளிப்பட்டு நிற்றலுமான பின்னணியில், எவ்விதம் 1960களில் இந்திய வட்டகையில் ஏற்பட்ட சொந்த அடையாளம் பற்றிய பிரக்ஞையின், தீவிர சொல்லாடற் களன் களில் ஒன்றாக விளங்கிய நவீன சென்னை இயக்கத்தின் அடையாளத் தேடல் பரப்பின் வழிவந்த படைப்பாளியிடம் தமிழடையாளம் வெளிப்பட்டிருக் கிறதென்பதை காணுமுகமாக காட்சி எடுத்தாளுகை செய்யப்பட்டிருந்தது. சென்னை இயக்கம் பற்றிய கூறியது கூறல் மரபுக்கு வெளியால், வேறுவகையான மறுவாசிப்புக்களை மேற்கொள்ள முயற்சிப்பதன் மூலம், சென்னை இயக் கம் பற்றிய பன்முக வாசிப்புக்கும், அதனால் தகவுடைய வரலாற்றெழுத்தியலுக் கும் பங்களிக்க முடியுமென்ற வகையில், சமஸ்கிருதமயமாக்கம், காலனியம், மேற்குமயமாக்கம், சாதியம், சிறு – பெரு மரபுகள், தேசியம், பூகோளமயமாக்கம், நுகர்வுப் பண்பாடு இவற்றின் கூட்டு மொத்தமான தமிழ்ப் பண்பாட்டில் கலை வெளிப்பாடுகள் எவ்விதம் தமது முந்தைக் கலை மரபுகளை (செந்நெறி/ செந்நெறி சாரா), நிலம்சார் பௌதீக அனுபவங்களை, மதப் புராணிக, தத்துவ வெளியை உண்டு செரித்து நின்றனவென்பதை உருவ, உள்ளடக்க, ஊடகக் கையாளுகைப் பகைப்புலத்தில் காட்சிக் கையேட்டு முற்கட்டுரை அறிமுகம் செய் கிறது. பா. அகிலனால் எடுத்தாளுகை செய்யப்பட்ட காட்சிக்கான முன் எண்ணம் ஓவியர் ரி. சனாதனனுடையது; கலை, இலக்கிய விமர்சகர் வெங்கட் சாமி நாதனால் காட்சி ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இதேநேரம், இலக்கிய அமர்வில் ஓவியர் ரி. சனாதனனால், 'இருபதாம் நூற் றாண்டில் ஓவியர்களுக்கும், எழுத்தாளர் களுக்குமிடையே நிகழ்ந்த ஊடாட்டங் கள்' என்ற தலைப்பில் படிக்கப்பட்ட கட்டுரை, தமிழ் காண்பியக் கலைமரபு களின் பயில்களங்களில் மிகப் பிரதான மான ஒன்று பற்றிய வரலாற்று மறுமதிப் பீடாக இருந்தது. 'அறுபதுகளின் பின் அரைக்கூறில் ஆரம்பமாகிற சிறுபத்தி ரிகை இயக்கம்தான் நவீனத்துவத்தின் அகன்ற அனுபவங்களையும், விசாலித்த சாத்தியப்பாடுகளையும் தமிழ்ப் பண் பாட்டினுள் திறந்து விடுகிறது. இதனால், இதுவரை மேலோங்கி இருந்த இலக்கிய மையப் போக்குகளிலிருந்து விலகி, ஏனைய கலைவடிவங்களிலும் அவற்றின் கவனம் திரும்பியது. புதிய மாற்றுச் சிறப்புடைய எழுத்தாளர்களினதும், ஓவியர்களினதும் பகிர்வுத்தளமாக செயற்பட் டது' எனக் கூறும் சனாதனன், கோட்டுப் படங்கள் விளக்கப்படங்களாக உள் வாங்கப்பட்டதும், விளக்கப்படக்காரர் களுக்குப் பதிலாக, ஓவியர்கள் தொழிற் படத் தொடங்கியதும் முக்கியமான மாற்ற மென எடுத்துக்காட்டி, இவை பற்றிய புரிதலையும், பழக்கத்தையும் ஏற்படுத்த நவீன ஓவியம் பற்றியும், பிற காண்பிய வடி வங்கள் பற்றியும் எழுத்தாளர்கள் கட் டுரை எழுதியமையும், கோட்டுப்படங்கள் வியாபாரப் பத்திரிகைகள் கூடத் தேடிப் பதிப்பிக்கும் ஒன்றாக விரிவடைந்து, இன்று ஜனரஞ்சகக் காண்பியக் கலா சாரத்தில் கணிசமான இடத்தையும் பெற் றுள்ளதை விவரிக்கும் சனாதனன், அடிப் படையான சில கேள்விகளை, அதன் இன்றைய பயில்நிலை மீது வைக்கிறார். சிறு பத்திரிகைகள் ஓவியத்தை பரவ லாக்குவதற்குப் பதில் 'நவீனம்' என்ற பாணியை பரவலாக்கினவா ? சிறு பத்திரி கைகள் தாமுருவாக்கிய Iconகளைத் தவிர, புதியவர்களை இனங்காணவும், விளக்கப்படங்களையும், கோட்டுப் படங் களையும் இனம் பிரித்து அறிய முடியாமல் இருப்பது ஏன் ? – போன்ற வினாக்கள் ஊடாக, அவர் ஒரு மறு உரையாடலை ஆரம்பிக்கிறார்.

பொதுவாக, இலக்கிய – காண்பியக் கலை ஊடாட்டத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியில் 'கண்ணுக்குள் வெளியும்', மேற்படி கட்டுரை முதலியனவும், கலை ஞர்களுக்கிடையில் இவற்றை ஒட்டியேற் பட்ட சந்திப்புக்களும் முக்கியமானவை.

சித்திரன்

# சமவெளி நோக்கி

எனது நூல் "சமவெளி நோக்கி" 17.03. 2001 அன்று (புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு) வெளியீட்டுவிழா சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடந்தது. ஈகைச் சுடரினை திரு பொன். தியாகம் அவர்கள் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளரும் வனபிதா பிரான்ஸ்சிஸ் யோசெப் அடிகளாரும் ஏற்றி வைத்தனர், தலைமையுரையை திரு சி. கருணாகரன் அவர்கள் (வெளிச்சம் சஞ்சிகை ஆசிரி யர்) நிகழ்த்தினார். வரவேற்புரையை எழுத் தாளரும், ஓவியருமான திரு. முல்லைக் கோனேஸ் நிகழ்த்தினார். சிறப்புரையை வி. பு. முக்கிய உறுப்பினர் திரு. வே. பால குமாரன் செய்தார். வெளியீட்டுரையை கவிஞர் புதுவை இரத்தினதுரை (கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர், தமி ழீழம்) நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் ராதேயனும், வனபிதா பிரான் சிஸ் யோசெப் அடிகளாரும் நிகழ்த்தினார் கள். பதிலுரையினையும், நன்றியினையும் நான் நிகழ்த்தினேன்.

வெளியிட்டு வைத்தவர் வி. பு. அர. து. பொறு. சு. ப. தமிழ்ச்செல்வன். முதற் பிர தியைப் பெற்றவர் எனது மனைவியின் தாயார் திருமதி மரியம்மா தைரியநாதன். வெளியீட்டு விழாவிற்கு 400க்கும் மேற் பட்டவர்கள் வந்து கலந்து கொண்டார் கள். விழா மிகச் சிறப்பாகவும் அமைதியு மாக நடைபெற்றது.

42 கவிதைகளும், 4 சிறுகதைகளும், இரண்டு அபத்த நாடகமும் நூலிலுள்ளது. இங்கு அச்சு சாதன வசதி பூச்சியம்தான். இருந்தபோதும் முயற்சி செய்துள்ளேன். இன்னும் இரண்டு தொகுதிக்குரியன உள் ளது. ஆனால் காலத்தின் தேவை கருதி தெரிந்து தொகுத்துள்ளேன். சிறுவர் நாட கம் ஒன்றிற்கான முயற்சி செய்து வரு கிறேன். 2002ல் நிறைவேறும் என நம்பு கிறேன்.

மு. கனகரத்தினம்
(வளநாடன்)


**சமவெளி நோக்கி**

**வளநாடன்**

தாயின் பரிவோடு தூளிகட்டி தேசத் துக்குத் தாலாட்டுப் பாடிவிட்டு, துள்ளியெழுவெனப் பள்ளி யெழுச்சி யும் பாடும் வள நாடனின் கட்டுரை கள், சிறுகதைகள், மௌன நாடகங் கள் அடங்கிய தொகுப்பு.

பக். 94, விலை ரூ.100

கலையழகன் வெளியீடு
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு




படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் இனி 2000 விமர்சன அரங்கு : திரிகோணமலை

தமிழ் இனி 2000 இலக்கிய அரங்கு 25.02.2001ம் திகதி திருக்கோணமலை சமூகசேவை நிலையத்தில் எழுத்தாளர் இராஜ. தருமராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் எழுத்தாளர்கள் திருமலை நவம், கவிஞர் சு. வில்வ ரத்தினம், நந்தினி சேவியர், ஆ. யதீந்திரா ஆகியோர்களும் மற்றும் பல சுவைஞர்களும் பங்கு பற்றினார்கள்.

முதற்கண் மறைந்த முதுபெரும் எழுத்தாளர் திரு. வ. அ. இராசரத்தினத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி உரையை எழுத்தாளர் திருமலை நவம் நிகழ்த்தினார்.

தமிழ் இனி 2000 இலக்கிய அரங்கிற்கான தலைமையுரையை நிகழ்த்தி தமிழ் இனி 2000 அரங்கைத் தொடங்கி வைத்தார் எழுத்தாளர் இராஜ. தர்மராஜா.

"தமிழ்நாட்டில் தமிழ் இனி 2000 இலக்கிய நிகழ்வு காலச்சுவடு சஞ்சிகையினாலும் சரிநிகர் பத்திரிகையாலும் நடாத்தப்பட்டது. இதில் பல எழுத்தாளர்கள் கலந்து கொண்டதாக அறிய முடிந்தது. இலங்கையில் இருந்தும் பல எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர். என்றாலும், இலங்கையில் இது பற்றிய போதிய அறிவித்தல்கள் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. என்றபோதும் ஒரு இலக்கிய அமர்வில் பல எழுத்தாளர்கள் ஒன்று கூடுவது இயல்பு. அதன் மூலம் பல எழுத்தாளர்களை அறியவும், கலந்து உரையாடவும் சந்தர்ப்பம், வாய்ப்பு ஏற்படுகின்றது. அந்த வகையில் திருகோணமலையில் இருந்தும் எழுத்தாளர்கள் சென்று வந்துள்ளனர். அவர்களில் நந்தினி சேவியர், கவிஞர் சு. வில்வரத்தினம் ஆகியோர் அங்கு நடந்தவற்றை இன்று எமக்குக் கூறுவார்கள்" என தலைமையுரையில் குறிப்பிட்டார் இராஜ. தர்மராஜா.

கவிஞர் சு. வில்வரத்தினம் தமிழ் இனி 2000 பற்றி குறிப்பிடும்போது, "தமிழ் நாட்டின் தலைநகர் சென்னையில் தமிழ் இனி 2000 இலக்கிய அமர்வு நடைபெற்றது. இதனைக் காலச்சுவடு சஞ்சிகை நடத்தியமை என்ன நோக்கில் என்பது எமக்கு விளங்கவில்லை. இதற்குப் பல தமிழ் நாட்டு எழுத்தாளர்களும் எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள். கண்டன அறிக்கைகளையும் வெளியிட்டதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இலக்கிய அரங்கு இருவேறு நிகழ்வுகளாக நடந்தன. ஒன்று இலங்கைக்காக கைலாசபதி அரங்கு என்றும் தமிழ் நாட்டுக்காக புதுமைப்பித்தன் அரங்கு என்றும் நடந்தது. இது பெரிதும் முரணபாடாக இருந்தது. எந்த அரங்குக்குச் செல்வது என்பதில் எழுத்தாளர் இடையே பாரபட்சம் காணப்பட்டது. இடையே புத்தக விற்பனை நிலையத்தாலும் குழப்பம் ஏற்பட்டது. இந்த நிலையில் தமிழ் இனி 2000த்தின் நோக்கம் நிறைவு பெற்றதா என தெரியவில்லை. ஆனால் நாம் பல தமிழ்நாட்டு எழுத்தாளர்களையும், புலம் பெயர்ந்த எழுத்தாளர்களையும் சந்திக்கக் கூடியதாக இருந்தது ஒரு நல்ல அம்சம் ஆகும். பல எழுத்தாளர்களையும் சந்தித்து அறிமுகமாகி கதைக்கக் கூடியதாகவும் இருந்தது. அவர்களும் எங்களை அறியக் கூடியதாக இருந்தது. எங்கள் நாட்டு பிரச்சனையையும் விளங்கிக்கொள்ள முடிந்தது. இன்னொரு அம்சம் தமிழ்நாட்டு எழுத்தாளர்களின் கோஷ்டி போக்கும் அதனால் எழும் மோதல்களையும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. அரங்கில் பல கண்டன அறிக்கைகளையும் கோஷ்டி மனப்பான்மை அறிக்கைகளையும் விநியோகித்ததைப் பார்க்கக் கூடியதாக இருந்தது" எனக் கவிஞர் சு. வில்வரத்தினம் குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய நந்தினி சேவியர்...

"தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் பல தமிழ் எழுத்தாளர்கள் ஒன்று கூடியதே பெரும் அதிசயமாக இருந்தது. இலங்கை, இந்திய, மலேசிய, சிங்கப்பூர் மற்றும் வெளிநாடுகளில் வதியும் தமிழ் எழுத்தாளர்களை ஒன்று கூட்டியதே காலச்சுவடு, சரிநிகர் சஞ்சிகைகளின் சாதனையாகும்.

நாம் பல எழுத்தாளர்களை அறிந்து இருக்கின்றோம். ஆனால் நேரில் சந்தித்து உரையாடி அறிமுகம் ஆனது இல்லை. ஆனால், தமிழ் இனி 2000த்தில் அதை நாம் யதார்த்தமாக காணக் கூடியதாக இருந்தது. பல எழுத்தாளர்கள் அறிமுகமாகி ஆங்காங்கே இருந்து உரையாடியதைக் காணக்கூடியதாக இருந்தது எமக்கும் புதிய அனுபவமாக இருந்தது.

நான் இலங்கையின் மார்க்சிய இலக்கியம் பற்றிய கருத்தைக் கூறவே அங்கு சென்றேன். இலங்கையின் மார்க்சிய இலக்கிய வரலாறு அதன் எழுத்தாளர் பற்றிக் கூறக்கூடியதாக இருந்தது. செ. கணேசலிங்கனின் பிரச்சாரம் கூடிய எழுத்துக்கள் பற்றிக் கூறிய வேளையில் அங்கு எதிர்ப்பும் காட்டப்பட்டது உண்மையில் குறிப்பிடக்கூடியது ஆகும். செ. கணேசலிங்கனின் மார்க்சிய இலக்கியத்தின் தேவையின் முக்கியத்துவம் பற்றி தமிழ்நாட்டு இடதுசாரி எழுத்தாளர்கள் கூறியது எனக்கு வியப்பாக இருந்தது" என நந்தினி சேவியர் தனது உரையில் குறிப்பிட்டார்.

முடிவில் தமிழ் இனி 2000 இலக்கிய அரங்கு என்ன நோக்கத்தில் நடைபெற்றாலும், உலகின் பல பாகத்திலும் வாழும் தமிழ் எழுத்தாளர்களை ஒன்று கூட வைத்து, உறவாட வைத்தது காலச்சுவடு, சரிநிகர் சஞ்சிகைகளின் வெற்றியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எழுத்தாளர் ஆ. யதீந்திராவின் நன்றியுரையுடன் இலக்கிய அரங்கு முடிவுற்றது.

இராஜ. தர்மராஜா


**காவ்யா**

நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்
நல்ல நண்பர்கள் நல்ல நூல்கள்

புத்தம் புதிய நூல்கள் – 2000

| | ரூ. |
|---|---|
| திருக்குறள் - காவ்யா உரை | 30.00 |
| *தொகுப்பாசிரியர் சண்முக சுந்தரம்* | |
| நெல்லைச் சிறுகதைகள் | 150.00 |
| நெல்லை நாட்டுப்புறவியல் | 75.00 |
| *சுந்தர பாண்டியன்* | |
| ஆராரோ (நாவல்) | 30.00 |
| இலக்கு | |
| எழுபதுகளில் கலை இலக்கியம் | 40.00 |
| *பிரேம் & ரமேஷ்* | |
| சிதைவுகளின் ஒழுங்கமைவு | 150.00 |
| *நீல. பத்மநாபன்* | |
| மதிலுகள் (மலையாள நவீன இலக்கியம்) | 75.00 |
| *அன்பாதவன்* | |
| செம்பழுப்பாய் சூரியன் (கவிதை) | 30.00 |
| *பா. இதயவேந்தன்* | |
| உயிரிழை (சிறுகதை) | 30.00 |
| *முனைவர் துரை* | |
| மார்க்சிய நோக்கு | 75.00 |
| *முத்து மாணிக்கம்* | |
| இயக்கவியல் | 35.00 |
| *திருநாவுக்கரசு* | |
| சுந்தர ராமசாமி : ஓர் கதைச் சொல்லி | 100.00 |
| *தமிழவன்* | |
| இருபதில் நவீனத் தமிழ் விமர்சனங்கள் | 200.00 |
| *சண்முகசுந்தரம்* | |
| அகத்தாரும் புறத்தாரும் | 75.00 |
| *சோலை சுந்தரபெருமாள்* | |
| வட்டத்தை மீறி (சிறுகதை) | 40.00 |
| *உமா ஜானகிராமன்* | |
| ஒரு துளி துக்கம் (சிறுகதை) | 45.00 |
| *முனைவர் சிவ. விவேகானந்தன்* | |
| பார்பதியம்மன் வழிபாடு | 50.00 |
| *ஞானி* | |
| இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம் | 65.00 |
| *முனைவர் க. பஞ்சாங்கம்* | |
| இலக்கியத்தின் இருப்பியலும் திறனாய்வின் இயங்கியலும் | 75.00 |
| *முனைவர் அ. ராமசாமி* | |
| அலையும் விழித்திரை | 60.00 |
| *முனைவர் முத்து மோகன்* | |
| ஐரோப்பிய தத்துவங்கள் | 75.00 |
| *முனைவர் பாலமுருகன்* | |
| இலக்கியக் களங்கள் | 35.00 |

**2001-ன் புதிய நூல்கள்**

| | |
|---|---|
| உயர் (தமிழியல் ஆய்வுகள்) | 50.00 |
| *தொகுப்பாசிரியர் : சண்முக சுந்தரம்* | |
| நாட்டுபுறவியல் கோட்பாடுகள் | 50.00 |
| கொங்கு நாட்டுப்புறவியல் | (அச்சில்) |
| *(தொ.) பெருமாள் முருகன்* | |
| கொங்குச் சிறுகதைகள் | (அச்சில்) |

**KAAVYA**
16, 17th 'E' Cross
Indira Nager IInd Stage
BANGALORE 560 038
✆ 080 - 5251095

- தபால் செலவு இலவசம்
- பதிவு தபாலுக்கு ரூ.15 சேர்க்க
- புத்தக விலை மட்டும் M.O / D.D. செய்க
- V.P.P. இல்லை





படிப்பகம்

www.padippakam.com



# தடை செய்யப்பட்ட படைப்பும் பலியான தலித் அரசியலும்



ஒடுக்கப்பட்ட மக்களின் இசை, பாடல், நாடகம், தீட்டாய் மாற்றப்பட்டு, தெரு ஓரத்தில் நிறுத்தப்பட்ட தடையை உடைத்து, பறை இசைத்து, உறுமி இசை விண்ணை அடைய விடிய விடிய இம்மக்களின் வாழ்வியல் பிரச்சனைகள், அடக்கு முறைகள், ஆதிக்க சாதிகளின் அடாவடித்தனங்கள் நாடகங்களாக, பறை இசையாக, அசைவுகளின் வழியாக எடுத்துக்காட்டும் "தலித் கலை விழா" இன்று தமிழகம் முழுவதும் நடந்து வருகின்றது.

திருநெல்வேலி தலித் கலை விழா, ஏப்ரல் 15 'எல்லோரும் வாங்க' என்ற விளம்பரத்தோடு 24 அமைப்புகள் இணைந்து நடத்திய விழா. மாஞ்சோலை உயிர்கள் மாண்ட மண்ணில் மக்கள் விழாவா என்ற ஆச்சரியம் கலந்த மனோபாவத்துடன் பாளைத் திடலில் இறங்கிய எனக்கு அங்கு நிகழ்ந்த ஒவ்வொன்றும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தன.

திருநெல்வேலி தலித் கலை விழாவில் மண்ணின் மைந்தர்கள் அவர்களின் இடத்தில்கூடி அவர்களின் கலையை இறுதி வரை கண்டுகளித்தார்கள். இதைப் போன்றதொரு மகிழ்ச்சிக்குரிய செய்தியை நாம் பதிவு செய்யத்தான் வேண்டும். பாளைத் திடலில் சரியாக 6.10க்கு தெருவில் இருந்து ஊர்வலமாக மக்கள் மைதானத்தை அடைந்தார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவ்வளவு சிறப்பாக இருந்தது. மாற்கு சே. ச. எழுதிய "அருந்ததியர் வாழும் வரலாறு" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

சரியாக 12 மணி என நினைக்கிறேன். அனைவரும் எதிர்பார்த்த 'தாமிரபரணி' நாடகம் மேடை ஏறியது.

டிசம்பர் 25இல் கீழ வெண்மணியில் 42 தலித்துக்கள் கொடூரமாக உயிருடன் எரிக்கப்பட்டனர். இப்படு கொலைக்குப்பின் தாமிரபரணிப் படுகொலை தமிழக வரலாற்றின் துயர நாளாகும். பதினேழு பேரின் இரத்தங்கள் தாமிர பரணியின் படுகையை இன்றும் சிவப்பாக்கியிருக்கிறது. இம்முறை இம் மக்களின் உயிரைப் பறித்தது நீர். இப்படுகொலை நடந்து ஒன்றரை வருடம் ஆகிவிட்டது. வரலாற்றில் ஒருமுறை கறுப்பு தினமாக பதிவு செய்யப்பட்ட 'தாமிரபரணி' படுகொலை நடத்தப்பட்ட இடத்தில், முதன் முதலாக தலித் கலை விழா நடத்தப்பட்டது. அக்கலை விழாவில் தாமிரபரணி நாடகம் அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. ஏனென்றால் அக்கலை விழா நடந்த காலகட்டத்தின் அரசியல் சூழல் யாரும் எதிர்பார்க்காத அளவிற்கு மாறி இருந்தது.

தலித் மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் பத்திரிக்கைகள்கூட தாமிரபரணிப் படுகொலையை இரண்டாவது ஜாலியன் வாலாபாக் என எழுதின. இப்படுகொலையை விசாரித்த மோகன் கமிஷன் அறிக்கை "இது ஒரு விபத்து" என அறிக்கை கொடுத்தது. இப்படுகொலைக்கு காரணமான கலைஞரின் கரங்களில் விதவிதமான காப்பு அணிவித்து, தலித் மக்களின் பாதுகாவலன் கருணாநிதி எனப் பறைசாற்றும் கடமையை வெளிப்படையாக செய்து வருகின்றனர். இம்முரண்பட்ட அரசியல் சூழல் காரணமாக தாமிரபரணி நாடகம் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்நாடகத்தை தலித் அல்லாத நண்பர் விளிம்பு (பண்பாட்டு புரிதலுக்கான தளம்) சுப்பையா எழுத, நண்பர் ஜீவா இயக்க திருநெல்வேலி விளிம்பு, புதுவை ஆப்டிஸ்ட் கலைக்குழுவினர் இணைந்து நடத்தினர்.

மைதானத்தில் அனைத்து விளக்குகளும் அணைக்கப்பட்டிருந்தன. மைதானம் எங்கும் ஓரே நிசப்தம். கையில் தீபச்சட்டிகளுடன் கலைஞர்கள் ஆண், பெண், குழந்தைகள் என பல உருவங்கள் மேடையில் பவனி வந்தன. பின்புறத்தே கட்டைக் குழலின் நீண்ட தாயார் (ஒப்பாரி) இசை அரங்கம் எங்கும் ஒலித்துக் கொண்டு இருந்தது. படுகொலையான ஒவ்வொருவரும் எழுந்து வந்து மக்கள் முன் தன் சாவை பறைசாற்றுகின்றனர்.

தாலேலோ லேலேலேலோ / லேலேலேலோ லேலேலேலோ / தெற்கே மழை பொழியும் / தாமிர பரணியில தண்ணி வரும் / தாமிர பரணி தண்ணியில / சிறு மீனுக துள்ளிவரும் / சிறு மீனுக துள்ளி வர / பெரு மீனுக சிறுமீன விழுங்க வரும்

என்ற பாடலுடன் உருவங்கள் மேடையில் ஆங்காங்கு அமருகின்றன. ஒரு ஆண் உருவம் எழுந்து

## மரப்பாச்சி

சாட்டிலைட் சானல்களும் நவீன கல்வி முறைகளும் இன்றைய குழந்தைகளின் உலகை வெகுவாகச் சுருக்கி வருவதோடு ஒரு குறிப்பிட்ட வகைக்குள் வரையறுத்தும் வருகின்றது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இன்றைய குழந்தைகள் பெரியவர்களால் கண்காணிக்கப்படுபவர்களாகவும், வழி நடத்தப்படுபவர்களாகவும் ஆகிவருகிறார்கள். இது, நம்முன் இருக்கும் முக்கியமான பிரச்சனைகளில் ஒன்று. அது போல் இன்றைய உலகம் சந்தித்து வரும் இன்னொரு அபாயம் பாரம்பரியச் சடங்குகள், கலை வடிவங்கள் முதலியவற்றுக்கு ஏற்பட்டு வரும் நெருக்கடி. கடந்த கால வாழ்க்கை முறையோடு தொடர்புடைய விஷயங்களை அவற்றின் வேரிலிருந்து பிடுங்கி புதிய உலகில் நட முயல்வது என்பது எவ்வளவு தூரம் தேவையானது, எவ்வளவு சாத்தியமானது என்பது போன்ற கேள்விகளில் இருக்கும் அதே அளவு நியாயம், ஆதிக்க சக்திகளால் முற்றாகப் புறமொதுக்கப்பட்டவற்றை மீட்டெடுத்து முடிந்த இடங்களில் எல்லாம் பயன்படுத்துதல் என்பது போராட்டத்தின் ஒரு அங்கமாகவே கருதப்பட வேண்டும் என்பதிலும் இருக்கிறது.

இவ்விரு பிரச்சனைகளையும் மனதில் கொண்டு அதற்கொரு எதிர்வினையாக *கல்லாத்தி* என்ற அமைப்பை பாளை-நாட்டார் வழக்காற்றியல் துறை பேராசிரியர் டி.தர்மராஜனும் அவரது நண்பர்களும் சேர்ந்து ஆரம்பித்துள்ளனர்.

கல்லாத்தி (அரசமரம்) பழங்காலத்தில் சாதி பேதமின்றி அனைவரும் புழங்கிவந்த வெளியாக இருந்திருக்கிறது. அரசர் (பஞ்சாயத்துத் தலைவர்?) வீற்றிருந்து நியாயம் வழங்கியது, ஆன்மீகத் தலைவர்கள் தங்கள் வாழ்பனுபவங்களை, தரிசனங்களை மக்களுடன் பகிர்ந்து கொண்டது என ஒரு கிராமத்தின் முக்கியமான நிகழ்வுகள் எல்லாம் அரச மர வெளியிலேயே நடைபெற்று வந்துள்ளது. எனவே அதைக் குறியீடாக வைத்து அனைவரும் வந்து போகும் வெளியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் 'கல்லாத்தி' என்ற பெயரில் இவ்வமைப்புத் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பின் சார்பில் குழந்தைகளுக்கான வெளியை உருவாக்கித் தரும் நோக்கில் 'மரப்பாச்சி' என்ற குழந்தைகளுக்கான அமைப்பு ஒன்றையும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

திருநெல்வேலியில் இருந்து குற்றாலம் செல்லும் வழியில் அமைந்திருக்கும் சீதபற்பநல்லூரில் 'மரப்பாச்சி'யின் முதல் முகாம் நடத்தப்பட்டது. கருவநல்லூர், சீதபற்பநல்லூர் மற்றும் அருகிலிருக்கும் சமத்துவபுரத்திலிருந்து சுமார் 70க்கு மேற்பட்ட சிறுவர்கள் பங்கு பெற்ற இந்த முகாம் 20.5.2001 முதல் 24.5.2001 வரை நடை பெற்றது. ஆரம்ப நாள் நிகழ்ச்சிகள் மற்றும் இறுதி நாள் நிகழ்ச்சிகள் மட்டுமே முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்தது. எஞ்சிய நாள் நிகழ்வுகள் அனைத்தும் சிறுவர்களின் விருப்பத்திற்கேற்ப நடத்தப்படுவது என முடிவு செய்யப்பட்டிருந்தது. பேராசிரியர்கள் செ. இராமானுஜம், மு. இராமசாமி, மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்கள் க. சண்முக சுந்தரம் (கட்டைக்குழல்),



படிப்பகம்

www.padippakam.com



நதி – நதி – நதி / வரலாறுகளின் ஆணவம் / தொல்குடிகளின் உயிர்ப்பு

என நதியை வருணித்துவிட்டு, மறக்க விரும்பாத அந்நாளையும் அந்நிகழ்வு எழுப்புகிற கேள்விகளையும், எதிர்வினைகளையும் பதிவு செய்வது ஒன்றே இன்றைய தினத்தின் எத்தனிப்புகள் என ஆண் உருவம் சொல்ல மேடை எங்கும் அச்சொல் எதிரொலிக்கிறது. பார்வையாளர்களின் மத்தியிலும் அச்சொல் அந்நிகழ்வை மீண்டும் ஒருமுறை பதிவு செய்கிறது.

இந்நிகழ்வு முடிந்தபின் மேடையின் நடுப்புறத் திரையில் படம் ஓடுகிறது. மோகன் கமிஷன் விசாரணையும் அதனால் போராட எத்தனித்த மாணவர்களின் முழக்கமும் திரையில் ஓடுகின்றன. மாஞ்சோலை தொழிலாளர்களின் அவலங்களை மேடையில் உள்ள உருவங்கள் (நடிகர்கள்) விவரித்து கூறி, அவர்களுக்கு ஏற்பட்ட அவலங்களை வெகுசனங்களுக்கு எடுத்துக்காட்ட ஜூலை 23, 1999ம் வருடம் நெல்லையில் கூடுவதை திரை காண்பிக்கிறது. அங்கு திரண்ட மக்கள் மீது காவலர்கள் கலவரம் செய்து அடித்து விரட்டுவதை திரை காண்பிக்கிறது. மேடையில் இருந்து உருவம் எழுந்து

பெயர்கள் மறக்கடிக்கப்பட்டு எண்களாய் மாற்றப்பட்டவர்கள் நாங்கள். பாசம், பச்சாதாபம் நீக்கப்பட்டு ஏதுமற்றுத் திரிபவர்கள். ஏவிய திசையில் பாய்ந்து குதறுவதற்கான கடும் பயிற்சியளிக்கப்பட்ட மனித குணங்கள் நீங்கி சுத்தம் செய்யப்பட்ட கருவிகள் நாங்கள்

என உரத்து கூறுகிறது.

இந்நிகழ்வுக்குப்பின் திரையில் "புதிய தமிழகம்" புகைப்பட உறைநிலை (photo still) வருகிறது. ஓர் உருவம் எழுந்து ஒப்பாரி வைக்கிறது. ஒப்பாரி முடிந்தபின் திரையில் குழந்தைகளின் புகைப்பட உறைநிலை வருகிறது. ஒரு குழந்தை எழுந்து வந்து

என் அம்மா ... அம்மா ... அங்கே / அன்னைக்கி அம்மா இடுப்புல உக்காந்துட்டுப் போனேன் ... / நிறைய கூட்டமா இருந்துச்சு ... / ரொம்ப சந்தோசமா இருந்துச்சு ... / அம்மா ஓட ஆரம்புச்சா ... / பின்னால கம்புக்காரன் அம்மாவ துரத்துனான் ... / நான் கீழே விழுந்திட்டேன் ... / அம்மாவ கம்புக்காரங்க அடிச்சாங்க / அம்மா தலையிலேயும், வயித்துலயும் சிவப்பா இருந்துச்சு ... / அம்மா தண்ணிக்குள்ள போன ... / நான் மண்ணுல விளையாண்டேன் / அம்மா, என் குழந்தை ... என் குழந்தைன்னா / ஒரு கம்புக்காரன் என் கைபுடிச்சுத் தூக்கி / தண்ணியில வீசுனான் / தண்ணி சில்லுன்னு இருந்துச்சு ... / தாகமா இருந்துச்சு ... / தண்ணி குடிச்சேன் கீழே மண்ணுல படுத்து உறங்கிட்டேன் / நல்ல உறங்கிட்டேன் ... அம்மாகூட / என் அம்மா கூட ... ஆமா

இதைக் கேட்டவுடன் மக்கள் கூட்டத்திலிருந்து "17 பேரை அடித்துக் கொன்ற கலைஞர் அரசு" எனச் சப்தமாக ஒரு குரல் எழுந்தது. மக்களின் ஒரு பகுதியினர் "ஒழிக, ஒழிக" என மறுமொழி கூறினர்.

இந்நிகழ்வுக்குப் பின் திரையில் படம் காட்டப்படுகிறது. தாலேலோ லேலே லோ என்ற பாடல் மீண்டும் பாடப்படுகிறது. நெஞ்சு கீறிய புகைப்படம் திரையில் தெரிகிறது. மற்றொரு உருவம் எழுந்து வந்து அங்கு அடித்துக் கொல்லப்பட்ட மக்களை வரிசைப்படுத்தி அவர்கள் எவ்வாறெல்லாம் இறந்தார்கள் என விவரிக்கிறது. பிறிதொரு உருவம் (பெண்) எழுந்து தனக்கு ஏற்பட்ட அவலத்தை விவரிக்கிறது. மற்றொரு பெண் உருவம் எழுந்து அவளுக்கு ஏற்பட்ட கொடூரத்தை விவரிக்கிறது. விக்னேஷ் என்ற ஒன்றரை வயது குழந்தை எழுந்து

தாயார் மடி தேடி தரையில் கிடந்த என்ன / தண்ணீயில தூக்கிப் போட்டானே / தவிதவிக்க தண்ணியில கொன்னானே போலிசு

எனச் சொன்னவுடன் உக்கிரமடைந்த இளைஞன் ஒருவன்

விக்னேசை அடித்துக் கொன்ற / தலித் விரோத தி. மு. க. அரசு

என கத்தி கூற கூடியிருந்த இளைஞர்கள் "ஒழியட்டும், ஒழியட்டும்" என்றனர்.

அப்போது திரை செயலிழந்தது. சில வினாடிகளுக்குள் மின் விளக்குகள் போடப்பட்டன. மக்களுக்கு ஏதும் விளங்கவில்லை. நாடக நடிகர்கள் நடிக்கத் திணறினர். நாடகம் பாதியாய் முடமாக்கப்பட்டது. நடிகர்களோ அவமானத்தின் விளிம்பில் தொங்கிய வண்ணம் மேடையைவிட்டு அகன்றனர்.

நாடகத்தை எழுதிய இளைஞனின் முகத்தில் கோபக் கனல். எதற்காக நாடகத்தை பாதியில் நிறுத்தினீர்கள் எனக் கேள்வி எழுப்ப, இந்நிகழ்ச்சியை நடத்தியவர்களுள் ஒருவர் போலீசு நிறுத்தச் சொன்னார்கள் எனச் சொன்னார். புதிய தமிழகம் கட்சியை சேர்ந்த பிரமுகர் ஒருவர் "இந்நாடகத்தால் 5000 ஓட்டு எங்களுக்கு இல்லாமல் செய்து விட்டாய். நாடகத்தை நிறுத்தவில்லை என்றால் நாங்கள் பிரச்சனை செய்வோம்" என முன்பின் முரணாய் பதிலளிக்க, விசாரித்துப் பார்க்கையில் புதிய தமிழகம் கட்சியை சேர்ந்தவர்களால்தான் நாடகம் முடக்கப்பட்டது எனத் தெரியவந்தது.

அ. செ. நாதன்




கு. பாரதி (உறுமி), சரக்கரை (கதைசொலலி), கைலாசமூரததி (ஒயிலாட்டம்), பரமசிவராவ் (பாவைக்கூத்து), நல்லதம்பித் தாத்தா (கதைசொல்லி), போத்தையா (களப்பணி), தவசிமுத்து (ஓவியம்), சக்கையா (தெம்மாங்கு), விநாயகமூர்த்தி (நாடகம்), விளிம்பு சுப்பையா (நாட கம்) ஜான்சி, கிளாரா முதலானோர் சிறுவர்களோடு சிறுவர்களாக இணைந்து நிகழ்வுகளை நடத்தினர்.

சிறுவர்களையே ஒரு கதை சொல்லச் சொல்லி, அதில் வரும் பாத்திரங்களாக அவர்களையே நடிக்க வைத்து விளையாட்டுப்போல் ஒரு நாடகத்தை நிகழ்த்திக்காட்டிய விதம் இயல்பாக இருந்தது. நாட்டுப்புறக் கலைகளை கற்றுத் தந்ததில் சற்று இயந்திரத்தனமான அணுகுமுறை இருந்தது ஒரு குறையாகவே பட்டது. அதுபோல் இறுதிநாள் நிகழ்வுகளை சீதபற்பநல்லூரிலேயே நடத்தாமல் திருநெல்வேலியில் மீடியாவின் வசதிக்காக நடத்தியது – கிராமத்துச் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளை நகரத்தில் இருப்போரும் பார்க்கவேண்டும் என்ற நோக்கில் அவ்வாறு நடத்தப்பட்டதாக சொல்லப்பட்டது என்றாலும் – பெரிய குறையாகவே பட்டது. போதிய விளம்பரம் தரப்படவில்லையா அல்லது நகரத்திலிருந்தோர் இந்த நிகழ்வில் அக்கறை கொள்ளவில்லையா எனத் தெரியவில்லை. அமைப்பாளர்கள், சிறுவர்களைத் தவிர வேறு யாருமே வந்திருக்கவில்லை. கிராமத்தில் நடத்தப்பட்டிருந்தால் குழந்தைகளின் பெற்றோரும் கிராமத்தினரும் உற்சாகமாக வந்து பங்குபெற்றிருப்பர்.

இந்நிகழ்ச்சியினை ஒட்டி அயோத்திதாசரின் இரண்டு சிறு கதைப் புத்தகங்கள் (சிறுவர்களுக்கானது) வெளியிடப்பட்டன.

அடுத்தடுத்து தமிழகத்தின் எல்லா கிராமங்களிலும் இது போல் முகாம்கள் நடத்துவதற்கு இவ்வமைப்பினர் திட்டமிட்டுள்ளனர். 'நல்ல' விஷயங்களைச் சிறுவர்களுக்கு இளவயதிலேயே கற்றுத் தந்துவிடவேண்டும் என்ற எண்ணம் பெரியவர்களின் ரத்தத்தில் ஊறிப்போயுள்ள விஷயம். அதை அமைப்பாளர்கள் எப்படிக் கட்டுப்படுத்தப் போகிறார்கள் என்பதைப் பொறுத்து இவ்வமைப்பின் வெற்றி தீர்மானிக்கப்படும்.

மகாதேவன்



படிப்பகம்

www.padippakam.com



# உண்மை ஒளிர்கவென்று பாடவோ...?



ஆசிரியர் : *பா. விசாலம்*

வெளியீடு : *விஜயா பதிப்பகம்*
*20, ராஜவீதி*
*கோவை 641 001*

*பக். 248; விலை ரூ.100 (2000)*

**பாவண்ணன்**

நாஞ்சில் நாட்டிலும் நெல்லைச் சீமையிலும் கிறித்துவம் எப்படிப் புகுந்தது? கிறித்துவமும் இப்பகுதிகளும் பரஸ்பரம் எதிர்கொண்ட பிரச்சனைகள் என்னென்ன? ஒன்றிலிருந்து இன்னொன்று எதைப் பெற்றுக் கொண்டது? எதை இழந்தது? இக்கேள்விகளுக்கான விடைகளை வரலாற்றைத் துழாவி ஒருவர் சுட்டிக் காட்டிவிட முடியும். மிகச் சமீபத்திய ஆறேழு தலைமுறை விஷயங்களை ஓரளவாவது துல்லியமாகத் தொகுத்துவிட முடியும். இதே வரலாற்றுத் தகவல்களை ஒரு படைப்பாளி முற்றிலும் புதிய கோணங்களிலும் புதிய வகையிலான அடுக்குகளாலும் தொகுக்கும் போது மட்டுமே, அத்தொகுப்பு முறைக்குக் கூடுதல் பரிமாணம் கிடைக்கிறது.

ராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் ஆகிய படைப்புகளின் காலத்தையொட்டிய வரலாற்று உண்மைகளை வரலாற்று ஆய்வாளர்கள் முன்வைத்திருப்பதற்கும் அந்தந்தப் படைப்பாளிகள் முன்வைத்திருப்பதற்கும் உள்ள வேறுபாட்டை நம்மால் புரிந்து கொள்ள முடியும். தகவல்களைத் தம் படைப்புக்குள் பொருத்தும் விதத்தில் குறைத்தோ அல்லது கூட்டியோ அல்லது சற்றே மிகைப்படுத்தியோ சொல்வதில்தான் கலைஞனின் சாமர்த்தியம் இருக்கிறது. ராமன் வனவாசத்தின்போது மனைவியைப் பறிகொடுத்தான் என்று மட்டும்தான் ஒரு வரலாற்றாசிரியன் குறிப்பெழுத முடியும். சீதையின் உருவத்தை மனத்துக்குள் அணு அணுவாக வரவழைத்து அவள் இல்லாமையால் நேரும் துயரை மிகுதியாக்கிக் கொண்டு சுய வதையால் புலம்பும் ராமனை ஒரு படைப்பாளியால் மட்டுமே படைக்க முடியும். வரலாற்றாசிரியன் தகவல்களின் மேல் அடுக்கைக் கோர்ப்பதில் மும்முரமாக இருக்கிறான். இணைந்த தகவல்களின் அடுக்குகளைக் குலைத்துக் கீறிப் பார்க்கிறான் படைப்பாளி. வரலாற்றாசிரியர்களின் சுதந்திரம் ஒரு கட்டுக்குள் அடங்கக்கூடியது. படைப்பாளிகளின் சுதந்திரம் கட்டற்றது. வரலாற்றிலிருந்தே தமக்குத் தேவையான தகவல்களைத் தொகுத்துக் கொண்டாலும்கூட ஒரு படைப்பாளி முன்வைக்கக் கூடிய கேள்வி வரலாற்றையே திணற வைக்கக்கூடியது.

"உண்மை ஒளிர்கவென்று பாடவோ" என்னும் நாவல் இரண்டு பிரிவாக இயங்குகிறது. போத்தியின் பேரனான மரியதாசுப்பிள்ளையின் தோற்றம், படிப்பு, பதவி, திருமணம், மனைவி, குழந்தைகள், கொழும்புப் பயணம், அவரது கிறிஸ்துமஸ் விடுமுறைப் பயணங்கள் என விரிவு கொள்வது ஒரு பிரிவு. "போத்தியின் குறிப்புகள்" என்னும் நாட்குறிப்பேட்டை மீனா என்னும் பாத்திரம் படிப்பதன் வழியாக முன்வைக்கப்படும் மதமாற்றப் பதிவுகள் இன்னொரு பிரிவு. ஒன்றுக்கொன்று தொடர்புடையனவே என்றாலும் நாவலில் இரண்டுக்குமான இணைவு மிக மேலோட்டமாக, வலிந்து இணைக்கப்பட்டதாக இருக்கிறது.

புதிய ஏற்பாட்டின் சாயலில் வம்ச வரலாறு போலத் தொகுக்கப்பட்டிருக்கும் போத்தியின் குறிப்புகள் வரலாற்றாசிரியன் குறிப்புகள் போலச் சுவாரஸ்யமானவை. நரசிங்கை மூர்த்தியா பிள்ளை, சொர்ணத்தின் கதை உருக்கமானது. ஒரு சுகப்பிரசவத்தை முன்வைத்து அவர்கள் மதம் மாற வேண்டியதாயிற்று. தேவசகாயம் பிள்ளையாக மதம் மாறிய நீலகண்டப் பிள்ளைக்கு திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் விதிக்கப்பட்ட மரணதண்டனை ஏசுவுக்கு நிகழ்ந்த சிலுவையேற்றத்துக்கு நிகரானதாக மாறி மனத்தைப் பதைபதைக்கச் செய்கிறது. இப்படி மனித குலங்கள் சந்தித்த பலவிதமான அனுபவங்கள் இதில் பதிவாகியுள்ளன. கிறித்துவம் நெல்லைச் சீமையிலும் நாஞ்சில் மண்ணிலும் காலூன்றி வேர்விட்டுத் தழைத்ததைச் சுட்டிக்காட்ட இத்தகவல்கள் உதவுகின்றன. ஆனால் இந்த வரலாற்றுத் தகவல்களை ஒரு வரலாற்று நூலின் வழியாக எளிதாக ஒரு வாசகனால் அறிந்து கொள்ள முடிகிற நிலையில் அதே தகவல்களை அதே பாணியில் தொகுத்துத் தருவதன் மூலம் படைப்பாளி சாதிப்பதொன்றுமில்லை. வரலாற்றின் விரிந்த திசைகளில் கிடைக்கிற தகவல்களில் தேவையான அளவு கொஞ்சமாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அத்தகவல்களிடையே காணக் கிடைக்கும் இடைவெளிகளைக் கற்பனையாலும் புனைவுகளாலும் நிரப்பும் போதுதான் படைப்பாளி வெற்றி பெறமுடியும். வரலாற்றாசிரியன் கையாள்வது விவாதத்தின் ஒருபக்கம். அவ்விதத்தின் வேறு வேறு பக்கங்களையும் படைப்பாளி தன் கற்பனைகளால் இட்டு நிரப்புவதுதான் மிகப்பெரிய சவால். இட்டு நிரப்பாத வரை ஒற்றைப் பரிமாணத்தன்மை கொண்ட சித்திரமாகவே அக்குறிப்பு எஞ்சிவிடும். எடுத்துக்காட்டாக, நீலகண்டப் பிள்ளையின் மரணதண்டனைக் குறிப்பைப் பார்ப்போம். தம் சமஸ்தானத்தின் விசுவாச ஊழியனுக்கு மரணதண்டனை விதித்த ராஜாவுக்கு உண்டான மனநெருக்கடி என்ன? அந்த மரணதண்டனை சரிதான் என்று சொல்லும் சமஸ்தானத்துக்குக் கூட்டத்தின் வாதங்கள் என்னென்ன? அந்த மரணதண்டனை சரியல்ல என்று சொல்லும் அதே சமஸ்தானத்துக் கூட்டத்தின் வாதங்கள் என்னென்ன? சமஸ்தானத்தின் கிறித்துவத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் பேசப்பட்ட குரல்கள் எவை எவை? என்ற குறிப்புகளைக் கற்பனையால் இணைத்தால் மட்டுமே ஒரு முழுமையான சித்திரத்தை படைப்பாளி தீட்ட முடியும். மாற்றுக் கோணங்களைக் கொண்ட மாற்றுத் தரப்புகளைக் கட்டி முறுக்கேற்றும் போதுதான் நாவலின் அமைப்பில் வலுவேறும்.

இலக்கியம் ஒருபொழுதும் வரலாற்றை மட்டுமே சார்ந்ததல்ல என்பதற்குக் காரணமும் உள்ளது. அது புறத்தின் தகவல்களை மனக்கண்ணாடி வழியே உற்று நோக்குகிறது. மனக்கண்ணாடி வழியே பார்க்கும்போதுதான் கண்ணுக்கு எட்டும் தகவல்களையும் கண்ணுக்கெட்டாத வெளியையும் கோர்த்து இணைத்துத் தர முடியும். அக்கண்ணாடியின் முன் வரலாற்றின் எல்லாப் பாத்திரங்களையும் இழுத்து வந்து ஒருமுறையாவது நிற்கவைத்து பார்த்து விடுகிறது படைப்பாளியின் கை. இத்தகு செயல்கள் வழியேதான் நாவலின் மைய தரிசனம் உருவாகிறது.

இந்த நாவலின் உத்தேச தரிசனம் மதமாற்றத்தின் பொழுது மனித மனம் உள்வாங்கிய வலி. வடக்கன் குளத்துக்கு வந்து சேர்ந்த சில நாடார்களும் சில வெள்ளாளர்களும் வலியை அனுபவித்தவர்களே. ஒரு வலியிலிருந்து நிவாரணத்தைத் தேடித்தான் அவர்கள் மதத்தை மாற்றிக் கொண்டார்கள். ஆனால் காலம் செல்லச் செல்ல, தலைமுறை மாற மாற அவர்கள் கண்டதென்ன? எதிர்பார்த்து வந்த நிவாரணம் கிடைத்ததா? ஒரு வலி மறைந்து புதிய வலிகள் தோன்றிக் கொண்டே இருப்பது ஏன்? இந்தக் கதை வழியாக தேவாலயங்களில் தடுப்புச்சுவர் இடிப்புப் போராட்டம், மாராப்புச் சீலைப் போராட்டம் எனப் பல போராட்டங்களையும் வெற்றிகளையும் விசாலம் சித்தரித்துள்ளார். ஆனால் அடிப்படையில் உருவான வலி அப்படியேதான் இருக்கிறது. இப்போது எல்லாருக்கும் சீலை உண்டு. தேவாலயங்களில் தடுப்புச்சுவர் இல்லை. ஏசுவின் பாதங்களை முத்தமிடவும் முடியும். ஆனால் ஒரே கிறித்துவத்தை ஏற்றுக் கொண்ட


## உயிர் நிழல்

**மார்ச் – ஏப்ரல் 2001**

சேரன், அ. முத்துலிங்கம், ஆழியாள், யமுனா ராஜேந்திரன்
கலையரசன், நா. விச்வநாதன், கலைச்செல்வன்...

*தொடர்புகளுக்கு :*

Exil, 27 Rue Jean Moulin
92400 Courbevoie, France, e-mail : ExilFR@aol.com




படிப்பகம்

www.padippakam.com



நாடார்களுக்கும் வெள்ளாளர்களுக்கும் ஒருபோதும் நல்லுறவு இல்லை. கொடுப்பினை, கொள்வினை கிடையாது. எனில், எத்தகு வெற்றி இது? எல்லா கட்டங்களிலும் சின்னச் சின்ன வெற்றிகளும் தோல்விகளும் சின்னச் சின்னச் சந்தோஷங் களும் வாழ்வின் பகுதியாக மாறி, வலி மறைந்ததைப் போன்ற தோற்றத்தைக் காட்டுகின்றன. ஆனால் இயற்கையின் தூண்டு தலால் எப்போதாகிலும் ஒரு மோதல் உருவாகி வரும்போது வலி யும் புண்ணும் தன்மீது போர்த்தப்பட்ட எல்லாத் திரைகளையும் கட்டுகளையும் மீறிக்கொண்டு தலைகாட்டி விடுகின்றன. இந்த வலிக்கு என்ன பதில்? கிறித்துவத்தை மட்டுமல்லாமல், மானு டத்தை நோக்கியும் இக்கேள்வி எறியப்படுகிறது.

உச்சியை நோக்கி எறியப்பட வேண்டிய கல், கைக்கெட்டும் தொலைவில் விழுகிற அளவு மட்டுமே இந்த நாவலால் எறியப்பட்டிருக்கிறது. தகவல்களின் நம்பத்தன்மைக்கு அளவு மீறிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு விட்டதோ என்று தோன்றுகிறது.

அன்னம்மா இந்த நாவலில் இடம்பெறும் முக்கிய பாத்திரம். பேச்சே இல்லாமல் மிக நுட்பமாகத் தன் கணவனை எடை போட்டு விடுகிறது அவள் மனம். கூடவே வாழ்ந்தாலும் மனத் தளவில் விலகி நடப்பது அவள் விவேகத்தைக் காட்டுகிறது. அப்பாவின் மிதமிஞ்சிய செல்வத்துக்கு ஆளாகிப் பாழாகும் மகள் ராஜத்தைக் கண்டு தாயாக இருந்தும்கூட, அன்னம்மா பயப் படும் தருணங்கள் உருக்கமானவை. அவளது பயம் தன் கல்வி யின்மை சார்ந்தும் ராஜத்தின் கல்வியறிவைச் சார்ந்தும் உருவா வது. ஏடாகூடமாக ஏதாவது கொழும்பிலிருக்கும் அப்பாவுக்கு எழுதிப் போட்டுவிடுவாளோ என்று கணம்தோறும் பயம் கொள் வதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கல்விகற்ற மீனா வின் மீது அவள் மனம் அன்பையும் நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்கிறது. அதில் அவளுக்கு எந்தத் தடையும் இல்லை. பல சமயங்களில் அவளிடம் பேசுவது அன்னம்மாவுக்கு நிம்மதி யாகக்கூட இருக்கிறது. இந்த விசித்திரமும் நுட்பமும் கொண்ட அன்னம்மாவின் மன இயக்கம் நாவல் முழுக்க இயல்பாக வந்துள்ளது.

சவரியும் நேசனும் மற்ற பிள்ளைகளும் சேர்ந்து போகும் சுபாஷ் ஊர்வலக் காட்சி, கடுகடுப்பான அப்பா ஊருக்கு புறப் பட்டுப் போவதை நிம்மதியாக உணரும் பிள்ளைகள், "ஹய்யா, நாளைக்கி அப்பா ஊருக்குப் போயிருவாங்களே" என்று மாற்றி மாற்றி ராகம் இழுத்துப் பாடுவது, கோழிக்கால் சூப்புக்கு ஆசைப் பட்ட சிறுவனொருவன் "நாளைக்கு எங்க அப்பாவும் பனைமரத் திலிருந்து உழுவாரு, அப்ப எனக்கும் கால்சூப்பு கெடைக்கும்" என்று சொல்லும் தருணம் என அழகாகச் சித்திரிக்கப்பட்ட இடங்களுக்கு பல எடுத்துக்காட்டுக்களைச் சொல்லலாம். அனைத்தும் விசாலத்தின் கவனிப்புத் திறமைக்குச் சான்றானவை.

நாவலில் ஓர் இடத்தில் ராஜம் கூறுவதுபோல ஒரு வாசகம் இடம் பெறுகிறது. "ரோஜாவ பறிச்சா முள் குத்தும்ன்னு தெரி யாதா?" என்கிறாள் அவள். அவள் கூறும் சந்தர்ப்பம் வேறு. ஆனால் நாவலின் மைய தரிசனத்துக்கு வெகு அருகில் இந்த வாசகம் பொருத்தமாக இருக்கிறது. கிறித்துவம் ஒரு ரோஜா என் றால் அதைப் பறித்தால் மலருடன் கூடவே உள்ள முள் குத்தும் என்று ஏன் தெரியாமல் போனது? காலத்தின் முன் இந்தக் கேள்விதான் எஞ்சி நிற்கிறது.

இதுதான் இந்த நாவலின் பலம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லாப் பாத்திரங்களும் எதிர்கொண்ட மனநெருக்கடி வழியாக இக்கேள்வி புகுந்து வரவில்லை என்பதுதான் இதன் பலவீனம்.


புது எழுத்து
(காலாண்டிதழ்)
மே – 2001
மாதவிக்குட்டியுடன் ஒரு சம்பாஷணை, பா. வெங்கடேசன், ராணி திலக், சா. தேவதாஸ், ஜீ. முருகன், லதா ராமகிருஷ் ணன், குட்டி ரேவதி

புது எழுத்து, 20, ஜே. கே. சி. தெரு, காவேரிப்பட்டணம், தருமபுரி மாவட்டம் 635 112 தொலைபேசி : 04343 – 52665




கமலா தாஸ்

## சந்தன மரங்கள்

ஆசிரியர் : *கமலா தாஸ்*
தமிழில் : *நிர்மால்யா*
வெளியீடு : *சேது அலமி பிரசுரம்*
*8, முத்துக்கிருஷ்ணன் தெரு*
*தி. நகர், சென்னை 17*
பக்.: *208*, விலை ரூ.*140 (1999)*

அமரந்த்தா

இருபதாம் நூற்றாண்டில் பெண்களால் எழுதப்பட்ட இலக்கியத் தில் ஒரு பொதுத் தன்மை உண்டு; எழுதப்படும் பொருள் சமூக– பொருளாதார நிலைகளைப் பிரதிபலிப்பதாக இருந்தாலும், அவை அடிப்படையாகக் கொண்டிருக்கும் மதிப்பீடுகள் பெரும் பாலும் ஆண் மைய சிந்தனைமுறையிலிருந்து எழுந்தவையா கவே இருப்பதைப் பார்க்க முடியும். ஆனால் கமலா தாஸின் படைப்புகள் இவற்றுக்கு முற்றிலும் மாறாக பெண்ணின் பார்வையில் வாழ்க்கையின் பரிமாணங்களை முன்வைக்கின் றன. அவர் பெண்ணாக இருப்பதில் பெருமிதம் கொண்டவர். உடல் பெண்ணின் பலவீனம் அல்ல – மாறாக அதுவே அவளது பலம் என்று உணர்ந்தவர்; எல்லாவற்றுக்கும் முதன்மையாக ஒரு சுதந்திரமான மனித உயிரியாகத் தன்னை உணர்ந்தவர் என்ற அளவில் கமலா தாஸ் கவனத்துக்கு உரியவர் ஆகிறார்.

'சந்தன மரங்கள்' தொகுதியின் சிறுகதைகள் உயர் வர்க்கப் பெண்களின் உளவியலை வெளிப்படுத்துவனவாக உள்ளன. விதிவிலக்காக உள்ள (தொகுதிக்குப் பொருந்தாத) 'ருக்மணிக்கு ஒரு பொம்மைக் குழந்தை' பலரும் அறியாத (அறியாததுபோல இருப்பதன் வசதி கருதி!) ஒரு உலகத்துக்கு நம்மை இட்டுச் செல்கிறது. பெண் குழந்தைகள் விபச்சாரத் தொழிலுக்கு வரு வதற்கு பல காரணங்களைச் சொல்ல முடியும். ஆனால் குடும் பத்திலுள்ள வயதுவந்த ஆண்களின் பாலியல் வக்கிரங்களுக்கு இரையாகும் பன்னிரெண்டு வயதுக் குழந்தை விபச்சார விடு திக்கு வருவதைச் சொல்ல ஒரு கமலா தாஸ் வர வேண்டியிருக் கிறது – நச்சென்று முகத்தில் அடித்தாற்போல ஒரு ஆரம்பம் அந்தக் கதைக்கு. ஆனால் நாடகார்த்தமான அதன் முடிவு மிகுந்த ஏமாற்றத்தில் தள்ளிவிடுகிறது. அப்படியொரு அந்தர் பல்டி அடிக்கும்படி அவருக்கு என்ன தேவை எழுந்ததோ. மாஹிம் வீடு, சந்தன மரங்கள், பருந்துகள், நீர் மாதுளையின் பூக் கள் – இந்தக் கதைகள் வாழ்வின் தேவைகள் யாவும் நிறை வேறிவிட்ட நிலையில் செய்வதற்கு ஏதுமற்ற உயர் வர்க்கப் பெண் களின் பொழுது போக்கு அம்சமாக ஆண் – பெண் உறவு மாறி விட்டதைச் சொல்கின்றன. 'சந்தன மரங்கள்' நெடுங் கதை பெண்ணும் பெண்ணும் உடல் ரீதியில் ஈர்க்கப்பட்டு இணை வதைச் சொல்லும் அதேவேளையில், அதிலும் ஆண் நிலை எடுக்கும் பெண் தப்பும் தவறுமான மன நிலையிலேயே வாழ் வின் அனைத்து முடிவுகளையும் எடுக்கிறாள் என்றும் சொல்வ தில், ஆசிரியரின் அரசியல் புரிகிறது. 'துரோகம்', 'தப்பித்தல்', 'பொய்கள்' ஆகியவை ஆண் மைய சமுதாயத்தில் யதார்த்த வாழ் வில் ஆண் பலவீனமானவன், நம்பிக்கைக்கு லாயக்கற்றவன் என்பதை முன்வைக்கின்றன. ஆணின் நியதி மீறல்கள் வெறும் உடல் தேவை சார்ந்தவையாக இருக்க, பெண்ணின் நியதி மீறல் கள் தோழமை நாடுவனவாக இருக்கின்றன என்ற பொது உண் மையை இவரது கதைகளில் காண முடிகிறது.

நிர்மால்யாவின் பின்னுரை இப்புத்தகத்துக்கு ஒரு நல்ல அறி முகமாக இருக்கும். சற்றே நெருடலாக உள்ள மொழிபெயர்ப்பு, உரையாடல் மொழியில் இடையிடையே தென்படும் மாறுபாடு களால் வாசிப்பை மேலும் சிரமமாக்குகிறது. கமலா தாஸ் என்ற பெண்ணின் தனிப்பட்ட ஆளுமையை அக்குவேறு ஆணி வேராக ஆராய்ந்ததன் விளைவாக ஜெயமோகனின் முன்னுரை, தனது படைப்புகளின் வாயிலாக மனஉறுதி கொண்ட பெண்ணான கமலா வெளிப்படுத்திய உடலை மதிக்கும் தன்மைக்கு, உடல் சார்ந்த விழைவுகளுக்கு உரிய இடத்தை தயங்காமல் இயல்பாக வழங்கிய பாங்குக்கு, இன்பத்தை தேடிச்சென்று அடையத் துடித்த இயல்புக்கு ஆன்மீக வேஷம் கட்டுவதாக இருக்கிறது. கமலா தாஸின் படைப்புகள் பாவனையற்றவை; நேரடியாக வாச கரிடம் செய்தியைக் கொண்டு சேர்க்கும் திறன் பெற்றவை. ■



படிப்பகம்

www.padippakam.com



# செம்பதிப்பின் வரலாறும், காலச்சுவடு பதிப்பகமும் புதுமைப்பித்தன் கதைகளும்

• ராஜ் கௌதமன் •



அதுவரை ஐரோப்பியர்க்கு மட்டுமே உரிமையாக இருந்து வந்த அச்சகமும் பதிப்பகமும் 1835–ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியர்களுக்கும் உரிமையாகின. மூன்றடுக்குக் கல்வி முறை அமலான பிறகு, (மிஷனரிகள்) அரசாங்கம், உள்ளூர் கனவான்கள் ஆரம்பித்து நடத்தி வந்த பள்ளி – கல்லூரிகளின் பாடநூல்களின் தேவை மதராஸ் மாநிலத்தில் ஆயிரக்கணக்கில் பெருகின. செய்யுள் மற்றும் வசன நூல்கள் அச்சிட வேண்டிய நெருக்கடி. அது ஒரு இலாபகரமான தொழிலாக உடனே புரிந்து கொள்ளப்பட்டது. ஓலைச் சுவடிகள் அச்சேறின. புதிய வசன நூல்கள் மொழிபெயர்ப்புக்களாக அச்சேறின. பழைய செய்யுள் நூல்களுக்கு வசனங்கள் எழுதப்பட்டு அச்சேறின. தமிழ் நாவல்கள் வெளிவந்தன. பாடநூல்களை வெளியிடுவதில் பெரும் போட்டியும், அகடவிகடமான முயற்சிகளும் உருவாயின. இந்நிலையில் சி. வை. தாமோதரம் பிள்ளை, சேலம் இராமசாமி முதலியார், உ. வே. சாமிநாதையர் போன்ற தமிழறிஞர்கள் இதுவரை வெளிவராத பழமையான இலக்கியங்களைத் தமிழர்களுக்குத் தரும் முயற்சியில் ஈடுபட்டார்கள். பாடநூலைவிட மகத்தான நோக்கம் இதில் இருந்தது.

உ. வே. சா. 1880களிலிருந்து பதிப்பித்த நூல்கள் 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டு மக்கள் படிக்கத்தக்கவை அல்ல எனச் சைவ சமயவாதிகளால் தடைசெய்யப்பட்டவை என்பதை நினைவில் வைக்கவேண்டும். சமண காவியங்கள் 'சீவக சிந்தாமணி', 'சிலப்பதிகாரம்', பௌத்த காவியம் 'மணிமேகலை' சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, குறுந்தொகை, பரிபாடல், புறநானூறு, பதிற்றுப் பத்து முதலிய செவ்வியல் இலக்கியங்களை உ. வே. சா. பதிப்பித்துச் சைவ சமயக் கோளரிகளால் காயப்படுத்தப்பட்டார். உ. வே. சா. பல சுவடிகளைத் தொகுத்து ஆராய்ந்து பாடபேதங்களை வகுத்து, மூலபாடத்தை நிதானம் செய்திருப்பதும், எழுதியுள்ள ஆராய்ச்சி முன்னுரைகளும், குறிப்புகளும் அவரை ஆக்கபூர்வமான பதிப்பாளரின் முன்னோடி என்பதை நிரூபணம் செய்கின்றன. இன்றைக்கும் அவர் பதிப்பித்தவையே பூரண நம்பகத்தன்மை கொண்டிருக்கின்றன.



உ. வே. சா. பதிப்பிற்கு அடுத்தபடியாக 1950களில் இராமலிங்க சுவாமிகளுடைய (1823 – 1874) அருட்பாடல்களின் 6 தொகுப்புக்களையும், அவரது வசன நூல்கள், உபதேசங்கள், திருமுகங்கள் ஆகியவற்றையும் 12 தொகுதிகளாக செம்பதிப்பாக வெளியிட்ட தனி மனிதர் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, பி. ஏ. எம். எல். சுவாமிகளின் அருட்பாடல்களின் 6 திருமுறைகளும் ஏற்கனவே சிறப்பாக வெளிவந்துவிட்டதால் (1867, 1880, 1885) இவற்றைச் செம்மையாக வெளியிடுவதில் பிள்ளையவர்களுக்குச் சிரமம் அதிகம் இருந்திருக்காது. ஆனால் சுவாமிகளின் வசனநூல் (முதற்பதிப்பு 1854) அப்படி இல்லை. முதற்பதிப்பு சுவாமிகளின் மூல வாசகம். ஆனால் இரண்டாம் பதிப்பில் (1886) சுவாமிகள் செய்துள்ள சுமார் 470 'பிழைகள்' திருத்தப்பட்டு வெளிவந்தன. பாலகிருஷ்ண பிள்ளை தமது பதிப்பில் சுவாமிகளின் மூல வாசகத்தை அந்தப் 'பிழைகளோடே' வெளியிட்டு, அடிக்குறிப்புகளில் 2ஆம் பதிப்பில் செய்த திருத்தங்களைக் காட்டியுள்ளார்.

1950களின் இறுதியில் திரு. மர்ரே எஸ். ராஜம் சங்க இலக்கியத் தொகுதியை 12 பாகங்களாக வெகுமக்கள் படித்துப் புரியும் விதமாகச் செய்யுளில் சொற்களைப் பிரித்து, நிறுத்தற்குறியீடுகளிட்டு, தகுந்த தலைப்புக்கள், உள்தலைப்புகளிட்டு எளிய பதிப்பாக வெளியிட்டார்.

சுமார் 127 ஆண்டுகளுக்குமுன் மறைந்த இராமலிங்கர் என்ற சாதனையாளரின் மொத்தப் படைப்புக்களைச் செம்மையாக வெளியிட்டதில் பாலகிருஷ்ண பிள்ளையே முன்னோடி. சுமார் 53 ஆண்டுகளுக்குமுன் மறைந்த புதுமைப்பித்தன் என்ற சாதனையாளரின் மொத்தப் படைப்புக்களை வெளியிடும் பணியை ஒருசிலர் மேற்கொண்டிருந்தாலும் (ஐந்திணை பதிப்பகம்) அவற்றைச் செம்பதிப்பாக வெளியிட்ட பெருமை காலச்சுவடு பதிப்பகத்தையே சேரும். அப்பதிப்பின் முதல் தவணைதான் 'புதுமைப்பித்தன் கதைகள்' (2000) (பதிப்பாசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி). நவீன அறிவியலின் வசதிகளை நன்றாக இப்பதிப்பில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இராமலிங்க சுவாமிகளின் படைப்புகளை அவர் வாழ்ந்த காலத்திலேயே அவரது அன்பர்கள் மிகுந்த பக்தி ஈடுபாட்டோடு பதிப்பித்தார்கள். பாலகிருஷ்ண பிள்ளையும் இதே ஈடுபாட்டோடு தமது பொருளைச் செலவழித்துப் பதிப்பித்தார். யார் பதிப்பிப்பது, யாருக்குத் தகுதி உண்டு என்கிற சர்ச்சைகள் அப்போது எழவில்லை. சுவாமிகளின் படைப்பைச் செம்மையாகக் கொண்டு வருவது புண்ணியம், பாக்கியம் என்று கருதினார்கள். ஆனால் இன்று அப்படி இல்லை. சுதந்திரம் பெற்ற பிறகு, காலமான படைப்பாளியின் படைப்புக்குச் சட்டபூர்வமாக (60 ஆண்டுகள்) வாரிசுதாரர்கட்கு உரிமை வழங்கப்பட்டு விட்டது. பாரதியார், பாரதிதாசன், புதுமைப்பித்தன் போன்ற காலம் கடந்த சாதனையாளர்களின் படைப்புக்களை வெளியிடுவதில் வியாபாரப் போட்டியும், அவசரமும், இலாப நோக்கும் ஏற்பட்டிருப்பதைத் தமிழ் உலகம் நன்கறியும். புதுமைப்பித்தனை யார் வெளியிடுவது என்பதில் சர்ச்சை மேலெழுந்து வந்து கொண்டிருக்கிற சூழலில், காலச்சுவடு பதிப்பகம் புதுமைப்பித்தனின் மொத்தச் சிறுகதைகளையும் செம்பதிப்பாகக் கொண்டு வந்துள்ளது.

புதுமைப்பித்தனின் படைப்புக்களைச் செம்பதிப்பாகக் கொண்டு வருவதில் சிக்கல்கள் சில உள்ளன.

1. புதுமைப்பித்தன் எழுதிய மூலவாசகங்கள் எல்லாம் முதன் முதலில் 1930 – 40களில் *ஆனந்த விகடன், கல்கி* போன்ற அன்றைய பெரும்பத்திரிகைகளில் பிரசுரமாகவில்லை. *மணிக்கொடி, ஊழியன், சூறாவளி, சந்திரோதயம், முல்லை, ஜோதி,* முதலிய *சிறு* பத்திரிகைகளில் பிரசுரமாயின. *கலைமகள்* விதிவிலக்கு. புதுமைப்பித்தன் கதைகளில் காணப்படுகிற பாடபேதங்களில் எது மூலம் என்றறிய அவர் கதைகள் முதன் முதலில் பிரசுரமான இப்பத்திரிகைகளைத் தேடி எடுப்பது, ஓலைச்சுவடிகளை எடுப்பதைவிடக் கடினம்' (விபரம் தெரிந்த பத்திரிகை தொகுப்பாளர்கள் ஒத்துழைக்க மறுத்துள்ளனர்!)

2. புதுமைப்பித்தன் கதைகளில் பாடபேதங்கள் தோன்ற அவர்தான் மூல காரணம். 1934 முதல் அவர் கதைகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அதற்கு முன்பே அவரது தழுவல் கதைகள் சில வந்துள்ளன. 1947ஆம் ஆண்டு வரை தொடர்ந்தும் விட்டு விட்டும் கதைகள் எழுதியுள்ளார். 1940, 1941, 1943,



படிப்பகம்

www.padippakam.com



1947 ஆகிய ஆண்டுகளில் அவரது கதைகளின் ஐந்து தொகுப்புக்கள் வெளிவந்தன. அவற்றிற்கு அவர் முன்னுரை வழங்கிச் சில கதைகளில் அடித்தல் திருத்தங்களைச் செய்துள்ளார். எந்தச் சொல்லை, தொடரை, தலைப்பை நீக்கி எதைச் சேர்த்தார் என்பதை அறிவதற்கு மூலபாடங்கள் மிகவும் அவசியம். மூலபாடங்களை அறிய அவை பிரசுரமான பத்திரிகைகள் அவசியம். புதுமைப்பித்தன் ஆய்வை வெகுகாலத் திற்குமுன் ஊக்கத்தை மட்டுமே மூலதனமாய்க் கொண்டு தன்னந்தனியாய்த் திரிந்து அலைந்த வேதசகாயகுமார் இவ்விசயமாக அரிய தகவல்களைச் சேகரித்துள்ளார் என்பது அவரது சமீபத்திய விமர்சன நூல் வழி தெரிகிறது. ஆயினும் இம்முயற்சியை நடைமுறைப்படுத்திய பின்புலமும் பலமும் காலச்சுவடு பதிப்பகத்திற்கே இருக்கிறது. ஒரு நான்கைந்து பு. பி. விற்பன்னர்கள் அடங்கிய பதிப்பாசிரியர் குழு செய்யத்தக்க அரும்பணியினை பதிப்பாளர் ஆ. இரா. வேங்கடாசலபதி ஒருவரே செய்திருப்பது வியப்பாக உள்ளது. 'பதிப்பியல் நோக்கில் புதுமைப்பித்தன் கதைகள்' என்ற தலைப்பில் அவர் பதிவு செய்துள்ள தகவல்கள் அவரது உழைப்பிற்குச் சான்றாக உள்ளன.

பு. பி. யின் 97 சிறுகதைகளும், ஒரு குறுநாவலும், முற்றுப்பெறாத ஒரு நாவலும் இத்தொகுப்பில் உள்ளன. கதைகளின் முழுமையான தொகுப்பாக இது இருப்பதால் பு. பி.யின் *நவீன குசேலர்* பற்றிய கதையும், *நாரத ராமாயணமும்* இதற்குள்ளே கொண்டு வந்திருக்கலாம். ஆனால் பக்கக்கணக்கு அதிகரித்துவிடக் கூடுமாகையால் பின் வரும் தொகுப்புக்களில் இவற்றைச் சேர்ப்பார்கள் என நம்புகிறேன்.

இத்தொகுப்பின் சிறப்பு, பு. பி.யின் ஒவ்வொரு கதையின் வெளியீட்டு வரலாறு கொடுக்கப்பட்டிருப்பதுதான். கதைகள் முதன் முதலாக வெளிவந்த தேதி, ஆண்டு, பத்திரிகை, பின்னர், அவை பு. பி. வாழ்ந்த காலத்தில் ஐந்து தொகுதிகளாக வெளியிடத் தேர்வு செய்யப்பட்டபோது ஆசிரியரால் அடைந்த திருத்தங்கள் ஆகிய வரலாறு மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. மேலும் 97 கதைகளும் அவை வெளிவந்த காலக்கிரமத்தில் தொகுக்கப்பட்டிருப்பதால் பு. பி.யின் கதை கூறும் நுட்பத்தின் வளர்ச்சியைச் சிரமமின்றித் தொடர வசதி உண்டாகியிருக்கிறது. பு. பி. பற்றிய விமர்சகனுக்கும், ஆய்வாளனுக்கும் தகவல் திரட்டுவதில் நேரிடும் கால, பொருள் விரையம் தவிர்க்கப்பட்டுவிட்டது எனலாம். இவ்வகையில் மேற்படியாரின் நன்றிக்குரியவர் பதிப்பாசிரியரே. இப்பதிப்பின் அருமை, ஏற்கனவே பு. பி. படைப்புக்களை மூன்று தொகுதிகளாக வெளியிட்ட ஐந்திணைப் பதிப்போடு ஒப்பிட்டால் தெரியும். ஐந்திணைப் பதிப்பில் வந்த ஒரே நல்ல அம்சம், க. நா. சு. இறுதியாகப் பு. பி. பற்றி எழுதியுள்ள விமர்சனக் கட்டுரைதான்!

இப்பதிப்பின் பின்னிணைப்புக்கள், விமர்சக ஆய்வாளருக்கு மிகவும் பயன் தருகின்றன. குறிப்பாக, 'புதுமைப்பித்தன் கதைகள் : வெளியீட்டு விவரங்களும் பாடவேறுபாடுகளும்' என்ற பின் இணைப்பு பதிப்பாளரின் அயராத உழைப்பிற்கு சான்று. பு. பி. கதைகள் பற்றிய பாடவேறுபாடுகளை அவரைப்பற்றி மேலும் அறிந்து கொள்ளத் துணைபுரிகின்றன. 1930களில் அவர் படைத்த கதைகள் ஐந்து தொகுப்புக்களாக வெளிவந்த போது பு. பி. அவற்றில் சில திருத்தங்களைச் செய்துள்ளார். இந்தத் திருத்தங்களை ஏன் செய்தார் என்பதை அறிவது சுவாரஸ்யமானது. பத்தாண்டுகள் கழித்து ஒரு படைப்பாளி தனது சிறுகதைகளைச் செம்மைப்படுத்தி வெளியிட்டிருப்பது படைப்பாளியின் பார்வை மாற்றத்தைப் புலப்படுத்துவதாக இருக்கிறது. 'ஆனால் சீமா, பரமேச்வரய்யரிடமும் உலகத்தினர் முன்பும் ஆண்மையுடன் நடந்து கொண்டான்' என்று இறுதியில் புதிதாக இந்த வரியைச் சேர்த்து, *ஆண் சிங்கம்* என்ற தலைப்பை, *ஆண்மை* என்று பு. பி. மாற்றியுள்ளார். புதிதாகச் சேர்த்த வரிதான் கதையை நிமிர வைத்துள்ளது. இதேபோல பல திருத்தங்களைப் பு. பி. செய்திருக்காவிட்டால் *விநாயக சதுர்த்தி* புனைகதைத் தன்மை குறைந்து, சிறு சிறு வியாசங்களைக் கொண்ட கதையாக இருந்திருக்கும் என்பதை அறிய இந்தப் பதிப்பு உதவியுள்ளது. மனம்போன போக்கில் அவசரமாகப் பிய்த்துக் கொண்டு போகும் பு. பி.யின் படைப்புச் செயலை அவரே நிதானப்படுத்தியது தெரியும்.

*விபரீத ஆசை* (ஏப்ரல் 1939) என்ற கதை தொகுப்பாக வருவதற்குமுன் (1952), 1946ல் முல்லை இதழ்9ல் மறுபிரசுரமாகியுள்ளது. பு. பி. இதில் ஒரு வாக்கியத்தைச் சேர்த்துள்ளார். அது "இப்படி ஒன்றும் நிஜமாக நடக்கவில்லை." அதாவது நண்பன் பிணமாகிக் கிடந்தபோது குளித்துவிட்டுத் துண்டைப் போர்த்திவந்த அவனது இளம் மனைவியோடு கதை சொல்லி பக்கத்து அறையில் கலவி புரிந்தது ஆசிரியனின் கற்பனையே தவிர நிஜமாக நடக்கவில்லை என்று பண்பாட்டு முகமூடியைப் பு. பி. எடுத்துமாட்டிக் கொண்டுள்ளார். இன்று இத்திருத்தத்தைப் பார்க்கும்போது நிஜமாக நடந்தது என்று இருந்ததைவிட, வெறும் கற்பனை என்று திருத்தியது மிகுந்த ஆபாசமாக இருக்கிறது!

மொத்தத்தில் பு. பி. யின் பக்தர்களுக்கும், விமர்சகர்களுக்கும், வாசகர்களுக்கும், பு. பி. யை இலக்கியப் பரம்பொருளாக்கும் பக்தர்களின் வழிபாட்டை ஒழிக்கும் வேகத்தில் பு. பி. என்னும் விக்கிரகத்தைப் போட்டு உடைப்பவர்களுக்கும் இந்தச் செம்பதிப்பு பயனுள்ள பதிப்பாக இருக்கும். இனிவரவிருக்கும் பு. பி. படைப்புகளின் தொகுப்புக்களும் இதே சீரில் இருக்குமென்றே எதிர்பார்க்கிறேன்.

புதுமைப்பித்தன் கதைகள்
பதிப்பாசிரியர்: ஆ. இரா. வேங்கடாசலபதி
வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம்
669, கே. பி. சாலை
நாகர்கோவில் 629 001
பக். 824 ; விலை ரூ.350


# தமிழினி

342, டிடிகே சாலை
ராயப்பேட்டை
சென்னை 600 014

| | ரூ. |
|---|---|
| **கவிதைகள்** | |
| சிலைகளின் காலம் *சுகுமாரன்* | 15 |
| விண்ணளவு பூமி *தேவதேவன்* | 25 |
| அனிச்சம் *கலாப்ரியா* | 20 |
| ஆம் நண்பர்களே அது தான் நடந்தது *மகாதேவன்* | 20 |
| அமுதபருவம் வலம்புரியாய் அணைந்ததொரு சங்கு *யூமா. வாசுகி* | 20 |
| கலாப்ரியா கவிதைகள் | 120 |
| இன்றைய மலையாளக் கவிதைகள் | 20 |
| **நாவல்கள்** | |
| சித்தார்த்தன் *ஹெர்மன் ஹெஸ்ஸே* | 45 |
| பின் தொடரும் நிழலின் குரல் *ஜெயமோகன்* | 290 |
| புயலிலே ஒரு தோணி கடலுக்கு அப்பால் *ப. சிங்காரம்* | 180 |
| கன்னியாகுமரி *ஜெயமோகன்* | 50 |
| கூள மாதாரி *பெருமாள் முருகன்* | 90 |
| ரத்த உறவு *யூமா. வாசுகி* | 120 |
| **சிறுகதைகள்** | |
| தூயோன் *கோபி கிருஷ்ணன்* | 40 |
| கன்னிவாடி *க. சீ. சிவகுமார்* | 50 |
| நுகம் *அ. எக்பர்ட் சச்சிதானந்தம்* | 60 |
| தீட்டு *அழகிய பெரியவன்* | 50 |
| பூமிக்குள் ஓடுகிறது நதி *சு. வேணுகோபால்* | 45 |
| ஆதண்டார் கோயில் குதிரை *கண்மணி குணசேகரன்* | 50 |
| **விமர்சனம்** | |
| புதுமைப்பித்தனும் கயிற்றரவும் *ராஜமார்த்தாண்டன்* | 60 |
| புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும் *வேதசகாயகுமார்* | 60 |
| புதுமைப்பித்தன் எனும் பிரம்மராக்ஷஸ் *ராஜ் கௌதமன்* | 50 |
| **Marooning Thickets** *Marimuthu* | 40 |




படிப்பகம்

www.padippakam.com



*மௌனத்தின் சிறகடிப்பு*

# தியாகச் சுடர்கள்

**கண்ணன்**



சமீபத்திய பயணம் ஒன்றில் என் நண்பர் - கவிஞர் ஒருவருடன் இரண்டாம் ஜாமத்தில் உரையாடிக் கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் பேச்சு இலக்கியச் சூழல், நூல் விற்பனை என்று உருள ஆரம்பித்தது. தனது கவிதைத் தொகுதி வெளிவந்து சில ஆண்டுகளுக்குப் பின்னரும் வீட்டில் கட்டுகளாகக் கிடப்பது மனதைப் பாதிப்பதாக அவர் வருந்தினார். அவரது மனஅவசத்தை என்னால் நெருங்க முடிந்தது. அவரே ஆசையாகவும் நேர்த்தியாகவும் வெளியிட்ட தொகுப்பு அது. என்னுடைய அனுமானத்தில் இதற்குள் விற்பனையாகியிருக்கும் என்று நான் நினைத்த ஒரு தொகுப்பு தேங்கிக் கிடப்பது எனக்கு வியப்பை அளித்தது.

நண்பரிடம் அவருடைய தொகுதி கடந்த சென்னை புத்தகச் சந்தையில் (Book Fair) எத்தனை பிரதிகள் விற்பனையாயிற்று என்று கேட்டேன். புத்தகச் சந்தையில் நூலை வினியோகிக்கவில்லை என்றார் அவர். வினியோக உரிமை கொண்டிருக்கும் ஆர்வலர் புத்தகச் சந்தையில் இவரது தொகுதி விற்பனை ஆகாது என்று கூறிவிட்டாராம். புத்தகம் புத்தகச் சந்தையில் விற்பனையாகாமல் வேறு எங்கு விற்பனை ஆகும் என்றும், சென்னைப் புத்தகச் சந்தையில் புத்தகம் விற்பனையாகாமல் என்னதான் விற்பனையாகிறது என்றும் - நான் புத்தகச் சந்தையைப் பார்த்ததில்லை - கேட்டேன். கவிஞரும் ஆர்வலரும் தேடிவரும் உன்னத வாசகனுக்காக பூட்டிய வீட்டில் காத்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

படைப்பாளியின் வேலை படைப்பதும் அதற்காக உழைப்பதும்தான். அவர்களே அவர்களது படைப்புகளை வெளியிட்டு வினியோகிக்கும் நிலை மாறவேண்டும். மாறிக்கொண்டும் இருக்கிறது. பல இளம் படைப்பாளிகளின் படைப்புகளை கௌரவமான முறையில் 'தமிழினி' வெளியிட்டு வருகிறது. தலித் படைப்பாளிகளுக்கு வெளியீட்டு வாய்ப்பை அளிப்பதுடன் முக்கியமான சில மொழிபெயர்ப்புகளையும் 'விடியல்' வெளியிட்டு வருகிறது. ஸ்நேகா, காவ்யா போன்ற பதிப்பகங்களையும் இந்தப் பட்டியலில் சேர்க்கலாம். நூல் சந்தை இன்னும் தூடு பிடிக்கும்போது மேலும் சில பதிப்பகங்கள் உருவாகும்.

ஜோசியமும், வாழ்க்கை முன்னேற்ற நூல்களும் வெளியிட்டுக் கொண்டிருந்த பதிப்பாளர்கள் தரமான இலக்கிய நூல்களை உருவாக்கும் பணியில் ஈடுபடத் துவங்கியிருப்பதுகூட ஒரு விதத்தில் சாதகமானதுதான். இலக்கியம் செலவாணி ஆவதுடன் ஒரு பதிப்பகத்திற்கு தேவையான கௌரவ முத்திரையைத் தருவதாகவும் ஏற்பட்டு வருவது அவசியமான மாற்றம்தான்.

இப்போது வியாபாரம் x தியாகம் என்ற முரணைப் பார்க்கலாம். ஒரு கால கட்டத்திற்கு மிகவும் புதுமையான அல்லது காலத்திற்கு முந்திய சில முயற்சிகளை, முன்னோடிச் செயல்பாடுகளை முன்னெடுப்பது கடுமையான ஒரு பயணமாக அமையலாம். தமிழில் இத்தகைய செயல்பாட்டிற்கும் தியாகத்திற்கும் ஒரு சிறந்த உதாரணமாக இருப்பவர் சி. சு. செல்லப்பா. மிகுந்த கட்டுப்பாட்டுடனும், சிக்கனத்துடனும், தொழில் திறனுடனும் தன் பணிகளைச் செய்தவர் அவர். அவரது முயற்சிகள் முன்னோடியானவை என்பதால் பொருளாதார ரீதியில் அவர் தோல்வி அடைய நேரிட்டது. தோல்வியை அவர் வரவேற்கவில்லை. தியாகச் சுடராகத் தன்னைக் கற்பனை செய்து கொள்ளவில்லை. எப்போதும் புலம்பியதில்லை. வினியோக முயற்சியில் கௌரவமான, நேர்மையான உத்திகளையும் கையாள அவர் தயங்கியதில்லை. நூல்களை ஊர் ஊராகத் தூக்கிச் சென்று விற்பனை செய்யத் துணிந்தார் அவர். *எழுத்தில்* வெளிவந்த இந்த விளம்பரத்தைப் பாருங்கள். சில கற்பனைச் சித்திரங்களை இது கலைக்கும்.

---

பாதி விலைக்கு ஆண்டு சந்தா ! ஒரு அரிய வாய்ப்பு

**ஆகஸ்ட் 15 வரையில் சந்தாதாரர்களாக சேர்பவர்களுக்கு**

இந்த 18 மாத காலத்தில் 'எழுத்து' தமிழ் இலக்கியத் துறையில் தன் ரகத்தில் தனியொரு புதுமை முயற்சி என பெயர் பெற்றுவிட்டது. 'எழுத்து'வை அறிவுப் பெட்டகம் என பத்திரப்படுத்தி வைக்கிறார்கள் வாசகர்கள்.

நீங்கள் எழுத்துபற்றி கேட்டிருக்கலாம். நண்பர்களிடம் வாங்கிப்படித்திருக்கலாம். ஆனால் உங்களிடம் அது என்றைக்கும் இருக்கவேண்டிய பொக்கிஷம்.

இப்பொழுது உங்களுக்கு அபூர்வமாகக் கிடைக்கும் ஒரு வாய்ப்பை எப்படி பயன்படுத்திக் கொள்ளப் போகிறீர்கள்?

பின் வருவதை ஊன்றிப் படிக்கவும் :

எழுத்துவின் வழக்கமான சந்தா ரூ.5.00 தனிப்பிரதி 50 ந. பை. ஆனாலும், புது சந்தாதாரர்களுக்கு இரு புதுச் சலுகைகள் கிடைக்கின்றன.

1. வாடி வாசல் (சி. சு. செல்லப்பா எழுதிய ஜல்லிக்கட்டு நாவல், விலை ரூ.1.00) சிறந்த இலக்கியத்தர நூல் அன்பளிப்பாக கிடைக்கும்.
2. எழுத்து சந்தாதாரர்களாக ஜூலை முதல் சேர்பவர்களுக்கு ஜனவரி 60 முதல் ஜூன் முடிய உள்ள 6 ஏடுகளும் (ரூ.2.50 பெறுமானம்) ரூ.1–க்கு அடையாள விலைக்குத் தரப்படுகிறது.

எனவே

நீங்கள் ரூ.6–க்கு, ஜூலை முதல் ஒரு ஆண்டுக்கு 12 'எழுத்து'களும் அன்பளிப்பாக வாடி வாசல் நாவலும் ஜூன் வரை உள்ள முன் 6 ஏடுகளும் பெறுகிறீர்கள். எட்டரை ரூபாய்க்கு (5+1+2.50) ரூ. 6.00 தான் தருகிறீர்கள். கிட்டத்தட்ட பாதிவிலை!

ஆகவே

இது ஒரு ஆபூர்வமான செயல்முறை ஆதலால் தவணை தரப்பட்டிருக்கிறது. நீங்கள் இதைப் படித்ததும் உடனடியாக ரூ.6 அனுப்பி சந்தாதாரர் ஆகி சலுகைகளைப் பெறவும்.

**எழுத்து**, 19–A, பிள்ளையார் கோவில் தெரு, திருவல்லிகேணி, சென்னை–5

*(எழுத்து இதழ் 19 – ஜூலை 1960)*

---

*எழுத்து* முதல் இதழில் *கடன் வாங்கிக் கல்யாணம்* திரைப்பட விளம்பரம் - சிற்றிதழ் மரபிற்கான ஆதாரக் கருத்துகளை முன்வைத்த சி. சு. செல்லப்பாவின் தலையங்கத்திற்கு இடையில் - இடம்பெற்றுள்ளது. புதுமைப்பித்தன் சிறப்பிதழாக வெளிவந்த *எழுத்து* 7 பின்னட்டையில் *'தமிழ் மணம் கமிழும்' நாலு வேலி நிலம்* திரைப்பட விளம்பரம் இடம் பெறுகிறது. 'வாடிவாசல்' குறுநாவலுக்கு ஜல்லிக்கட்டு புகைப்படத்துடன் கூடிய பின்னட்டை விளம்பரம் தொடர்ச்சியாக பல இதழ்களில் வெளிவந்துள்ளது. பல பின்னட்டைகளில் எழுத்து பிரசுரத்தின் விளம்பரங்கள், நூல்களை வாங்கத் தூண்டும் வாசகங்களுடன் இடம் பெற்றுள்ளன. 'ஜனவரி முதல் *எழுத்து*



படிப்பகம்

www.padippakam.com



அதிக பக்கங்களுடன் புதிய அம்சங்களுடன் வெளிவரும்' என்று அறிவிக்கிறது ஒரு பின்னட்டை விளம்பரம்.

*எழுத்து* சிற்றிதழாக வெளிவருவதன் நோக்கம் 'வாசகர்களின் தொகையை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு அல்ல: இலக்கிய வாசகர்களைத் தேடிப்பிடிப்பதுதான் எழுத்துக்கு நோக்கம்' என்று தன் பார்வையைத் தெளிவாக முன்வைக்கிறார் சி. சு. செல்லப்பா. (*எழுத்து* இதழ் 1 - ஜனவரி *1959*)

இன்று செல்லப்பா போன்ற முன்னோடிகளின் தாக்கம் திரிக்கப்பட்டு தீவிர இயக்கத்தை முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு எதிராக நிறுத்தப்படுகிறது. கடும் உழைப்பின் விம்மலுக்கு மாற்றாக சோம்பேறி மடங்களின் ஊளைச்சத்தம் சிலாகிக்கப்படுகிறது. முன்னோடி முயற்சிகள் தோல்வி அடையலாம். ஆனால் தோல்வி அடைந்தால் முன்னோடி ஆக முடியாது. தியாகிகள் பிறரால் அவ்வாறு கணிக்கப்படுகிறார்கள். தானே சூட்டிக் கொள்ளும் மாலை அல்ல அது. கடும் பயணத்தின் சிகரம் அது. திட்டமிட்டு குட்டித் தோல்விகளை அடைவது மிக எளிதானது. அதைப் பற்றி மிகையாகப் புலம்புவது மிக சுகமானதும்கூட. எந்த உழைப்பும் இன்றி, செய்திறனும் இன்றி, திட்டமோ, நோக்கமோ, அரசியலோ இன்றி சவடாலை மூலதனமாகக் கொண்டு கனவுகளின் மயானத்தில் இடம் தேடுபவர்களும் தோல்வியைக் கட்டித்தழுவி தியாகமாக உருமாற்றி சுவைப்பதில் போதை காண்பவர்களும் தியாகச் சுடர் ஆக முடியாது. ■

# வரப்பெற்றோம்

முன்நிலவுக்காலம் (கவிதைகள்); பழமலய்; ரூ. 35; பக். 96

புறநகர் வீடு (கவிதைகள்); பழமலய்; ரூ. 40; பக். 112

வெளியீடு: பெருமிதம், 4 / 316, A, இளங்கோ வீதி, சீனிவாசா நகர், வழுதிபிராட்டி, கண்டர்மானடி, விழுப்புரம் 605 401

ஐம்பதாண்டுத் தமிழ்ச் சிறுகதைகள்; தொகுப்பாசிரியர்: சா.கந்தசாமி; ரூ. 100; பக். 288

வரம் (சிறுகதைகள்); காஞ்சனா தாமோதரன், ரூ. 50; பக். 160

வெளியீடு: கவிதா பப்ளிகேஷன், 8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை 600 017

மனிதனே உன் விலை என்ன ?; ஷிஹாப்; வெளியீடு: இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், 78, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12, ரூ. 5; பக். 32.

வயலட் நிறபூமி (கவிதைகள்); அப்பாஸ், வெளியீடு: சமி, 14–D, 1/16 திருநகர் 3வது தெரு, பசுவந்தனை ரோடு, கோவில்பட்டி; ரூ. 40; பக். 50.

இன்னும் இந்த வாழ்வு (கவிதைகள்); தபசி; யாழ் வெளியீடு; 134, வடக்கு வீதி, சந்தைப் பேட்டை, திருக்கோவிலூர் 605 757; ரூ. 40; பக். 84.

புருஷார்த்தம் (நாவல்); சத்யானந்தன்; வெளியீடு: சரஸ்வதி கலை மையம், 45 / 1, கீழ்த்தளம், டயமண்ட் பிளாக், விக்னேஸ்வர அப்பார்ட்மெண்ட்ஸ், ஸ்ரீனிவாசா நகர், காந்தி ரோடு, திருவானைக்கோவில் 620 005; ரூ. 50; பக். 290.

காலாதீத இடைவெளியில் (கவிதைகள்); ரவி சுப்பிரமணியன்; வெளியீடு: மதி நிலையம், 4 (39) பிருந்தாவன் அடுக்கு குடியிருப்பு, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை 17; ரூ. 50; பக். 128.

மீண்டும் ஆதியாகி (நாவல்); க. வை. பழனிச்சாமி; வெளியீடு: சுயம், 24 / 9 – அ, சகாதேவபுரம், சேலம் 636 007, ரூ. 150; பக். 152.

கூளமாதாரி (நாவல்); பெருமாள் முருகன்; ரூ. 90; பக். 216.

சிலைகளின் காலம் (கவிதைகள்), சுகுமாரன், ரூ. 20, பக். 54.

பூனையைப் போல அலையும் வெளிச்சம் (கவிதைகள்); குட்டி ரேவதி; ரூ. 15; பக். 72.

வெளியீடு: தமிழினி, 342, டி. டி. கே. சாலை, ராயப்பேட்டை, சென்னை 14

இவர்கள் வித்தியாசமானவர்கள் (கட்டுரைகள்); அந்தோணி ஜீவா; வெளியீடு: பூபாள சிங்கம் புத்தக சாலை, 340, செட்டித் தெரு, கொழும்பு 11; ரூ. 40; பக். 160.

மக்கள் உரிமை; இங்கர்சால்; தமிழில்: வெ.சாமிநாத சர்மா; வெளியீடு: மருதம் பதிப்பகம், 202, கடைவீதி, ஒரத்தநாடு 614 625; ரூ. 21; பக். 88.

கிரேக்க காதல் கவிதைகள்; தமிழில்: ராஜ்ஜா; ரூ. 18; பக். 80.

சும்மா கிட (நாவல); ஹென்றி போரேல்; தமிழில் : ராஜ்ஜா; ரூ. 21; பக். 88.

வெளியீடு: மருதம் பதிப்பகம், 202, கடைவீதி, ஒரத்த நாடு 614 625;
குடிமுந்திரி (சிறுகதைகள்); தங்கர் பச்சான்; வெளியீடு: செம்புலம், 50, 5ஆவது தெரு, அச்சுதன் நகர், ஈக்காட்டுத்தாங்கல். சென்னை–97. ரூ. 75; பக். 138.

தலித் தற்கொலைகள்; எஸ். பிரேம் தாஸ்; வெளியீடு: திணை, 36, பகவதி லாட்ஜ், மீனாட்சிபுரம், நாகர்கோவில் 1; ரூ. 30; பக். 64.

உட்புற நிலவு (கவிதைகள்); பா. சத்திய மோகன்; வெளியீடு: லாவண்யா, டி18, ஏ.கே.டி.பிரகாசம் சாலை, வட்டம் 9, நெய்வேலி 607 801; ரூ. 45; பக். 112.

குமரி மாவட்டப் புதினங்களில் சமூக நிறுவனங்கள்; முனைவர் கஸ்தூரி ஜான்சன்; வெளியீடு: கிரேஸ் பதிப்பகம், 78, நம்பியார் நகர் தெரு நாகப்பட்டினம் 611 001; ரூ. 80; பக். 240.

வெளிச்சப் புள்ளிகள் (கவிதைகள்); கோவி. செயராமன்; வெளியீடு: மீனா புத்தகப்பண்ணை, 20, வில்லியம் லே அவுட், 2வது தெரு, விழுப்புரம் 605 602; ரூ. 24; பக். 92.

நாற்றுகள் (இலக்கிய ஆய்வு சிந்தனைகள்); முனைவர் ஒய். டென்னிசன், முனைவர் க. பூரண சந்திரன்; வெளியீடு: துறைப் பதிப்பகம், பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி 620 017. ரூ. 45; பக். 202.

தடை ஓட்டங்கள் (சிறுகதைகள்); எம். ஏ. சுசீலா; தழல் வெளியீடு, விற்பனை: மீனாட்சி புத்தக நிலையம், 48 தானப்ப முதலி தெரு, மதுரை 625 001; ரூ. 30; பக். 116

மௌனம் சம்மதமல்ல (கவிதைகள்); நிதர்சனா; ரூ. 25; பக்.64

வேரடி மண் (கவிதைகள்); கோவை சதாசிவம்; ரூ. 25; பக். 64.

ஆர். சண்முக சுந்தரத்தின் படைப்பாளுமை (விமர்சனம்); பெருமாள் முருகன்; ரூ. 45; பக். 144.

வெளியீடு: தமிழோசை பதிப்பகம், 797– ஈ, ராம் மோகன் வணிக வளாகம், சத்தி சாலை, காந்திபுரம், கோயம்புத்தூர் 641 012;

மனத்தின் விடுதலை; ஜோதிப்பிரகாசம்; வெளியீடு: பொன்மணி பதிப்பகம், முதல் குறுக்குத் தெரு, சிறுத் தொண்டன் தெரு, ஓண்டிக்குப்பம், மணவாளநகர், திருவள்ளூர் மாவட்டம் 602 002; ரூ. 46; பக். 160

உள்ளே வெளியே (சிறுகதைகள்); உஷா தீபன்; வெளியீடு: மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை 625 001; ரூ. 25; பக். 112.

புவியிலோரிடம் (நாவல்); பா.ராகவன்; வெளியீடு: ராஜேஸ்வரி புத்தக நிலையம், 8, முத்து கிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை 600 017. ரூ. 40; பக். 184.

உதிரி சயனத்தை நீரில் அலசும் வரை (கவிதைகள்); அமிர்தம் சூர்யா; வெளியீடு: எழில், 31, மாதவரம் நெடுஞ்சாலை (வடக்கு) பெரம்பூர், சென்னை 600 011; ரூ. 30; பக். 80.

தவத்திரு சங்கர தாஸ் சுவாமிகளின் நாடகங்களில் இசைக் கூறுகள் (தமிழ் நாடக இசை); முனைவர் அரிமளம் சு. பத்மநாபன், வெளியீடு: இசைத் தென்றல், 14, மூன்றாம் குறுக்குத் தெரு, இராமன் நகர் (குறிஞ்சி நகர்) லாசுப்பேட்டை, புதுச்சேரி 605 008; ரூ. 95; பக். 244

அலெக்சாண்டரும் ஒரு கோப்பைத் தேனீரும் (நாவல்); எம். ஜி. சுரேஷ்; வெளியீடு: புதுப்புனல், 32 / 2, ராஜி தெரு, முதல் மாடி, அயனாவரம், சென்னை 600 023; ரூ. 115; பக். 340

நவீன உலகச் சிறுகதைகள்; தொகுப்பாசிரியர்: சி.மோகன்; வெளியீடு: அகரம், 15பி–1., சரவணா காம்ப்ளக்ஸ், வெள்ளப் பண்டாரத் தெரு, கும்பகோணம் 612 001; ரூ. 70; பக். 160 ■



படிப்பகம்

www.padippakam.com



# கண்டதும் கேட்டதும்

என் முதல் வெளியீடு (*பொதுமைப் பூக்கள்*) வரும்போது மனுஷ்ய புத்திரன் இலக்கிய உலகில் ஒரு ஆளேயில்லை. எல்லா பத்திரிகைகளுக்கும் கத்தை கத்தையாக கவிதைகள் அனுப்பிக் கொண்டிருந்தார். அது தான் அவரது நிலை.

இளைய பாரதி, *வெப் உலகம் மின்னிதழில்*

விரைவில் வெளிவர உள்ளது

'குருதி கசியும் இசைத்தட்டு'

(இளைய பாரதியின் கவி ஆளுமை பற்றிய கட்டுரைகள்)

புதுமைப்பித்தன் பதிப்பகத்தின் விளம்பரத்திலிருந்து

## "இன்னொரு பாரதி"யை இனம்கண்டு கொள்ளுங்கள்

இளைய பாரதி என்பவர் *பொதுமைப் பூக்கள்* என்னும் கவிதை நூல் ஒன்றை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்.

இவரைப்பற்றி *செம்மலர்* ஆசிரியர் திரு கே. முத்தையா அவர்கள் 'இன்னொரு பாரதி' என்றும், எழுத்தாளர் திரு சு. சமுத்திரம் அவர்கள் 'காலம் அருளிய கவிஞன்' என்றும், 'சிகரம்' ஆசிரியர் திரு ச. செந்தில்நாதன் அவர்கள் 'தத்துவக் கவி உலா நடத்தும் சத்தியக் கவிஞன்' என்றும், கவிஞர் இளந்தேவன் அவர்கள் 'தீமைகளின் நிழல் பட்டால் தீப்பந்தமாகிவிடும் கவிஞன்' என்றும், ஏகோபித்துப் பாராட்டிய பின்பும் இளைய பாரதிக்கு திருப்தி ஏற்படாததால் தனது முன்னுரைக்கு 'நியாயத் தென்றலுக்காக ஒரு புயற் பறவையின் பிரவேசம்' என்ற தலைப்பும் இட்டு அகமகிழ்ந்து கொள்கிறார்!

இந்த புயற்பறவை நியாயத் தென்றலுக்காக பிரவேசம் செய்கிறதோ இல்லையோ இதன் புத்தகத்தைப் படித்தவுடன் ஆங்காங்கே மற்ற கவிஞர்களின் கவிதைகளைத் தனதாக்கியிருப்பதிலிருந்து ஒரு அநியாயத் தென்றலுக்கு இப்புயற்பறவை அஸ்திவாரம் போடுவது நன்றாகவே புரிகிறது!

இவர் தன்னை ஓர் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்தவராக இனம் காட்டிக் கொள்கிறார். அக்கட்சியைச் சேர்ந்த மிகச் சிறந்த கவிஞர்கள் தணிகைச் செல்வன், செம்மலர் செல்வன் ஆகியோருடன் பழகியாவது சுய சிந்தனையை வளர்த்துக் கொள்ள முயற்சிப்பது நல்லது!

பேராசிரியர் நா. வானமாமலை எழுதி 1975 ம் ஆண்டு 'மக்கள் வெளியீடு' வெளியிட்டுள்ள 'புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்' என்ற நூலின் 65ம் பக்கத்தில் எடுத்தாண்டுள்ள கவிஞர் மீராவின் கவிவரிகள் :

"நான் துறவியாகப் போகிறேன் /பற்றுகள் அனைத்தும் முற்றும் / நீக்கிப் பரம்பொருளிடம் மட்டும் / பற்றுவைக்கும் துறவிகளைப் பற்றி / நீ கேள்விப்பட்டிருப்பாய் / நான் / சகல பற்றுக்களையும் வீசியெறிந்துவிட்டு / உன்மீது மட்டும் பற்றுவைக்கும் / துறவியாகப் போகிறேன்!"

இளைய பாரதியின் "பொதுமைப் பூக்கள்" 64, 65 பக்கங்களில் இவ்வாறு புனர்ஜென்மம் எடுத்துள்ளது.

'நான் துறவியாகப் போகிறேன் / . . . . / . . . . /முற்றும் துறந்து. . . . / . . . . /. . . . /. . . . /. . . . /துறவியைப் பற்றி / நீ / கேள்விப் பட்டிருப்பாய்! . . . . /. . . . /. . . . /. . . . /. . . . /. . . . / சகல பற்றுகளையும் முற்றும் துறந்து. . . . /. . . . / உன்மீது மட்டும் / பற்றுவைக்கும் / துறவியாகப் போகிறேன் . . .

பேராசிரியரின் மேற்குறிப்பிட்டுள்ள நூலின் 52-ம் பக்கத்தில் எடுத்தாண்டுள்ள கவிஞர் சிற்பி கவி வரிகள் :

'நியாயங்களின் சமாதிகளை நீங்கள் கண்டதுண்டா ? / எங்கள் நாட்டில் அவைகளை 'நீதிமன்றங்கள்' என்போம்!'

இதை இளையபாரதி தனது புத்தகத்தின் 97-வது பக்கத்தில் இவ்வாறு வாந்தியெடுத்துள்ளார்.

'நியாயத்தின் சமாதிகளே நீதி மன்றங்களாய் காட்சியளிக்கும் தேசத்தில்'

கவிஞர் உதயை மு. வீரையனின் 'அக்கினிக் குஞ்சுகள்' (1974-ல் வெளிவந்தது) என்ற கவிதைத் தொகுதியின் 103-வது பக்கத்தில்

'ஆத்திரம் கண்ணை மறைக்கிறது

ஆதிக்கம் மண்ணை அழிக்கிறது'

என்ற வரிகள் இளைய பாரதியால் அவரது புத்தகத்தின் 95-வது பக்கத்தில்,

'ஆதிக்கம் கண்களை மறைக்கிறது

ஆதிக்கம் பெண்களை அழிக்கிறது'

என்று நியாயத் தென்றலுக்காக வடிவமெடுத்துள்ளது!



பேராசிரியரின் மேற்குறிப்பிட்டுள்ள நூலின் 79-வது பக்கத்தில் எடுத்தாண்டுள்ள கவிஞர் பரிணாமன் கவி வரிகள் :

'பன்னீர் மரம் போல் / கண்ணீர் சொரிந்தே'

என்ற வரிகள் இளைய பாரதியின் நூலின் 95-வது பக்கத்தில்

'பன்னீர் மரங்கள் / கண்ணீர் சொரிவதா ?'

என்று நியாயத் தென்றலுக்காக 'எடுத்தாளப்'பட்டுள்ளது போலும்!

கவிஞர் வெ. நடராஜனின் 'புதிய ராகங்கள் (1975) என்ற கவிதைத் தொகுதியின் 92-வது பக்கத்தில்,

'நெருப்பு புகைக் கக்கியொரு / நெடும்புயலின் முகம்கீறி'

என்ற வரிகள் இளைய பாரதியால் அவரது கவிதை நூலின் 112-வது பக்கத்தில்

'கனலை கக்கி / கடும்புயலின் முகம்கீறி'

என நியாயத் தென்றலுக்காக அநியாயமாக அபகரிக்கப்பட்டுள்ளது!

ஜீவபாரதியின் 'ஒரு முடிவுக்கு வாருங்கள்!' (1977) என்ற கவிதைத் தொகுதியின் 11-வது பக்கத்தில்

'இன்பமும் துன்பமும் இணைகோடு – இதில் / எது வந்த போதிலும் துணிவோடு'

என்ற வரிகள்

'இன்பமும் இன்னலும் இரு கோடு – இதில் / என்ன வந்தாலும் துணிவோடு'

என்றும்

'நாடே நம்மிரு விழியாகும் – அதன் / நலனே நம்முயிர் மொழியாகும்'

என்ற வரிகள்

'நாடே நமது வீடாகும் – அதன் / நலமே நமது வளமாகும்'

என்றும்

'பொதுமைப் பூக்களி'ன 93-வது பக்கத்தில் நியாயத் தென்றலுக்காக 'பூத்துக் குலுங்குகின்றன"

என் கண்ணுக்குத் தெரிந்து இத்தனை! எனவே, தயவுசெய்து கவிஞர்கள் தங்களுடைய கவிதைப் புத்தகங்களை வைத்து இந்த 'இன்னொரு பாரதி'யின் புத்தகத்தை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்!

இளைய பாரதி தன் முன்னுரையை "என் கவிதைகளைப் பிரசுரித்து தங்களை அலங்கரித்துக் கொண்ட *சிகரம், செம்மலர், தீக்கதிர், தாமரை, ஜனசக்தி* ஆகிய இதழ்களுக்கும் என் நன்றி" என்று முடிக்கிறார். தப்பி தவறி இளைய பாரதியின் "பொதுமைப் பூக்கள்" மறுபதிப்பு வந்தால் முன்னுரையில் இன்னும் எப்படியெல்லாம் எழுதுவாரோ தெரியாது.

எது எப்படியோ! புத்தகத்தின் தலைப்பு மிகப் பொருத்தம்! பல கவிஞர்களின் நெஞ்சப் பூங்காவில் மலர்ந்த கவிதைப் பூக்களைப் பறித்து "பொதுமைப் பூக்கள்" என்று பெயரிட்டாரே அதற்காக ஒரு முறை பாராட்டலாம்!

ஜீவபாரதி, *தாமரை*, அக்டோபர் 1980

(கே. ஜீவபாரதி முற்போக்குக் கவிஞர். நியூ செஞ்சரி புக் ஹவுஸின் பதிப்புப் பிரிவில் பணியாற்றியவர். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் சிலவற்றைப் புதியதாகக் கண்டெடுத்து, அனைத்துப் பாடல்களையும் கால வரிசையில் வெளியிட்டவர் இவருடைய கவிதை நூல்கள் : *ஒரு முடிவுக்கு வாருங்கள்* (1977); *சொல்லுறத சொல்லிப்புட்டேன்* (1986); *களத்தில் பிறந்த கவிதைகள்* (1982). அண்மையில் ஜீவா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரின் எழுத்துகளைத் தொகுத்து நூலாக்கி வருகிறார்.)

■



படிப்பகம்

www.padippakam.com



*With Best Compliments*
*from*

தினமலர்

தேசிய தமிழ் நாளிதழ்

# DINAMALAR

National Tamil Newspaper

*Printed simultaneously at*

Chennai ✧ Vellore ✧ Pondicherry

Erode ✧ Salem ✧ Coimbatore

Tiruchi ✧ Madurai

Tirunelveli ✧ Nagercoil

படிப்பகம்

www.padippakam.com



விவாதம்

# சாகித்ய அகாதெமி விருது இலக்கியத்துக்கா? களப்பணிக்கா?



• ராஜமார்த்தாண்டன் •

இரண்டாயிரமாவது ஆண்டுக்கான சாகித்ய அகாதெமியின் தமிழ் மொழிக்கான விருது தி. க. சி.யின் 'விமர்சனங்கள் – மதிப்புரைகள் – பேட்டிகள்' (டிச. 1994) நூலுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 1994 – 98 காலகட்டத்தில் தமிழில் வெளிவந்த நூல்களிலிருந்து சிறந்த இலக்கியத்தரம் வாய்ந்த ஒன்றாக இது தேர்வு செய்யப்பட்டுள்ளது. நீல. பத்மநாபன் தலைமையிலான வல்லிக்கண்ணன், வா. செ. குழந்தைசாமி, கு. சின்னப்ப பாரதி அடங்கிய மூவர் குழு தி. க. சி.யின் நூலைத் தேர்வு செய்துள்ளது. வழக்கம் போலவே (விதிவிலக்கான ஆண்டுகளும் உண்டு) இவ்வாண்டும் சாகித்ய அகாதெமியின் தமிழ் விருது குறித்த சர்ச்சை கிளம்பியுள்ளது.

விருது பெற்றுள்ள தி. க. சி. யின் 'விமர்சனங்கள் –மதிப்புரைகள் – பேட்டிகள்' புத்தகம் சாகித்ய அகாதெமியின் மேலான நோக்கங்களை சற்றேனும் நிறைவேற்றுவதாக உள்ளதா ? தமிழ் மொழிக்கும் நவீன தமிழிலக்கியத்துக்கும் புதிய பார்வையும் பரிமாணமும் அளிப்பதாக உள்ளதா ?

தி. க. சி. புத்தகத்தின் முதல் பகுதி அவரது விமர்சனக் கட்டுரைகளைக் கொண்டது. அதில் 'நான் படித்த நாவல்கள்' என்றொரு கட்டுரை. 1967 – 87 காலகட்டத்தில் தி. க. சி. 'படித்து ரசித்த சில தரமான, முக்கியமான நாவல்களைச் சுட்டிக்காட்டுவதே' அந்தக் கட்டுரையின் நோக்கம். அதிலிருந்து இரண்டு பகுதிகள் :

"1973இல் வெளிவந்த அசோகமித்திரனின் 'தண்ணீர்' ஒரு சிறந்த குறியீட்டு நாவல் என்று பலராலும் பாராட்டப் பெறுகிறது." (பக். 17)

"1985இல் வெளிவந்து, 1986இல் 'இலக்கியச் சிந்தனை'யின் 5000 ரூபாய் பரிசு பெற்ற சின்னப்ப பாரதியின் 'சங்கம்' பற்றி விரித்துரைக்கத் தேவையில்லை. தமிழகத்தின் தரமான இலக்கிய ஏடுகளும், முற்போக்கு இலக்கிய விமர்சகர்களும் இந்த நாவலினைப் பாராட்டியுள்ளனர். சோவியத் தமிழறிஞர் விதாலி பூர்னிக்கா இதைப் பாராட்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது." (பக். 20)

இந்தப் புத்தகத்தைத் தமிழில் அல்லது மொழிபெயர்ப்பில் படிக்கும் வாசகனுக்குத் தி. க. சி. யின் விமர்சனப் பார்வைதான் முக்கியமே தவிர, பலர் பாராட்டுவதோ, இலக்கியச் சிந்தனைப் பரிசோ, இலக்கிய ஏடுகளின் – முற்போக்கு விமர்சகர்களின் பாராட்டுகளோ அல்ல. ஆனால் தி. க. சி. யின் 'விமர்சனத் தராசு' இப்படியேதான் பொத்தாம் பொதுவாக இலக்கியப் படைப்புகளை எடைபோடுகிறது.

1988ல் எழுதப்பட்ட அந்தக் கட்டுரையின் கடைசிப் பகுதியிலிருந்து :

"கடைசியாக ஒரு நாவலாசிரியரைப் பற்றி இங்கு அவசியம் குறிப்பிட வேண்டும்; அவர்தான் சுந்தர ராமசாமி.

1966இல் வெளிவந்த 'ஒரு புளியமரத்தின் கதை' என்ற வட்டார வழக்கு நாவல்மூலம் புகழ் பெற்ற சுந்தர ராமசாமி கலை இலக்கியத் துறையில் கம்யூனிச எதிர்ப்பு இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராக முன் நிற்கிறார்.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த இவரது "ஜே. ஜே : சில குறிப்புகள்" என்ற நாவல் சுஜாதா போன்றவர்களாலும், "கணையாழிக் குழு" எழுத்தாளர்களாலும் மெச்சப்படுகிறது.

இன்றைய கலை இலக்கியத் துறையின் சில போக்குகளை நையாண்டி செய்யும் இந்நாவல், உண்மையில் மனித ஆளுமையின் சிதைவைப் போற்றுகிறது. ஜி. நாகராஜன் போன்ற சீரழிந்த எழுத்தாளர்களின் போக்குகளையும், நடத்தைகளையும் ஆராதிக்கும் இந்நாவல், ஓர் அராஜகவாதியின் சிந்தனைகளையும், மனக் குழப்பங்களையும், ஒரு புதிய வடிவத்தில் வெளிப்படுத்துகிறது." (பக். 22)

இந்த அபிப்பிராயத்தைப் படிக்கும் ஒரு வாசகர் 'ஜே. ஜே : சில குறிப்புகள்' நாவலையும் படித்திருப்பாரேயானால், அவரால் தி. க. சி. யின் இலக்கியப் புரிதலின் அபத்தத்தை, அவரது 'லேபிள்' சார்ந்த மதிப்பீட்டை, அவரது விமர்சனப் பார்வையின் 'நுட்பத்தை'த் தெளிவாகவே புரிந்து கொள்ள முடியும். இதற்கு இந்தக் கட்டுரையிலேயே இன்னுமொரு உதாரணம், 'சுட்டி' (அக். 1986) இதழில் சுந்தர ராமசாமி கூறியிருக்கும் கருத்துக்கான தி. க. சி. யின் எதிர்வினை.

"கலை இலக்கிய உருவங்களுக்குள் நம் எதிர்பார்ப்புக்கு ஏற்பச் சமூக அம்சம் பிரதிபலிக்க வேண்டும் என்றோ, நம் பிரச்சினைகளையே அவை முன் வைக்க வேண்டும் என்றோ, நாம் நம்பிக்கை வைத்திருக்கும் விடைகளையே அவை தரவேண்டுமென்றோ எதிர்பார்ப்பது நியாயம் அல்ல. கலை இலக்கியங்கள் தனிமனிதனின் அனுபவம் சார்ந்து வெளிப்படுபவை ஆகும்" (பக். 23) என்று சுந்தர ராமசாமி கூறியிருப்பதற்கான தி. க. சி.யின் எதிர்வினையைப் பாருங்கள் :

"கலை இலக்கியவாதிகளுக்குச் சமூகப் பொறுப்பு ஏதும் கிடையாது; தனிமனித சுதந்திரமே எல்லாவற்றுக்கும் மேலானது, அடிப்படையானது என்பதே க. நா. சு. மற்றும் சுந்தர ராமசாமி குழுவினரின் கொள்கை. தனிநபர் சுதந்திரம் என்ற பெயரில், இவர்கள் அராஜகவாதத்தை உயர்த்திப் பிடிக்கிறார்கள்; தனி உடைமைக் கொள்கையையும், சுரண்டலையும், பிற கேடுகளையும், கொடுமைகளையும் ஆதரிக்கிறார்கள் என்பது தெளிவு." (பக். 23)

சுந்தர ராமசாமி தெளிவாகக் கூறியிருப்பதைத் திரித்துக் கூறி, தன் பார்வைக்கேற்ப அர்த்தப்படுத்திக்கொண்டு, அவரையும் க. நா. சு. வையும் 'அராஜகவாதி'களாக முத்திரை குத்தியிருக்கும் தி. க. சி. யின் 'விமர்சன நுட்பத்தை' விதந்தோத வார்த்தைகளே கிடைக்கவில்லை.

தி. க. சி.யின் இந்தக் கட்டுரையில் ராஜம் கிருஷ்ணன், சு. சமுத்திரம், ஜெயந்தன், நா. பார்த்தசாரதி, என். ஆர். தாசன் போன்றவர்களின் நாவல்களெல்லாம் அற்புதமான படைப்புகளாகச் 'சுட்டிக்காட்டப்' பட்டிருப்பதையும் வாசகர்கள் கவனிக்க வேண்டும்.

அடுத்து, 'தமிழ் நாவலும் தத்துவப் போக்குகளும்' கட்டுரையில், கொள்கை அடிப்படையில் தமிழ் நாவல்களில் ஐந்து முக்கியமான போக்குகளை வரையறுக்கிறார் தி. க. சி. அவை : காந்தீயக் கொள்கை; திராவிட இலக்கியக் கொள்கை; அராஜகவாதக் கொள்கை; ஜனரஞ்சகக் கொள்கை; முற்போக்கு இலக்கியக் கொள்கை. (பக். 27) "க. நா. சுப்ரமணியம், சி. சு. செல்லப்பா, சுந்தர ராமசாமி, நகுலன், வெங்கட் சாமிநாதன் போன்றவர்களும், 'இலக்கு கலாசார இயக்கம்' என்ற பெயரில் பெங்களூர், சென்னை, கோவை முதலிய இடங்களில் இயங்கிக் கொண்டிருப்பவர்களும், அராஜகவாதக் கொள்கையினர் ஆவர். இவர்கள் பல வடிவங்களில் காணப்படுவர்; என்றாலும், முற்போக்கு இயக்கங்களையும் ஸ்தாபனங்களையும் எதிர்ப்பதே இவர்கள் கொள்கை" (பக். 29–30) என்று அழுத்தமாக முத்திரை குத்துகிறார் தி. க. சி. மேலும், தமிழகத்தில் 'அராஜகவாத எழுத்தாளர்'களின் தலைவராகக் க. நா. சு.வுக்குக் 'கிரீடம்' சூட்டி, மற்றவர்



படிப்பகம்

www.padippakam.com



களுக்குச் 'சீடர்கள்' அந்தஸ்தும் வழங்கியருளுகிறார்.

'விமர்சனங்கள்' பகுதியில் மேலுமுள்ள கட்டுரைகளில் சில : 'நா. பா. வின் பண்பும் பணிகளும்', 'அமரர் நா. பா. – சில நினைவுகள்', 'நா. வா. வின் 'ஆராய்ச்சி' (இதழ் – 42 – ஜனவரி 93) ஒரு மதிப்பீடு', 'ஓர் இலக்கியவாதியின் அரசியல் சிந்தனை', 'கவிஞர் 'தயா'வின் ஆளுமை' (டாக்டர் தயானந்தன் பிரான்ஸிஸ் கவிதைகள் பற்றிய கட்டுரை. அவரது கவிதைகளை முழுமையாகப் படிக்காத வாசகரும்கூட தி. க. சி. மேற்கோள் காட்டியிருக்கும் கவிதைப் பகுதிகளிலிருந்து 'கவிஞர் தயா'வின் கவிதைகளின் இலக்கியத் தரத்தைப் புரிந்து கொள்ள முடியும்!), 'தமிழ்ப் புத்தக வெளியீடு : செய்ததும் செய்ய வேண்டியதும்', 'மனித நேயத்தின் மகத்தான சின்னம்' ('அமரர் லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப் பரிசுகள்' அமைப்பை நடத்தும் எட்வர்ட் சாமுவேல் தேவசிகாமணி பற்றிய கட்டுரை), 'சகோதர எழுத்தாளனுக்கு ஒரு திறந்த மடல்' (ஜெயமோகனுக்கு 1993ல் எழுதிய திறந்த கடிதம்)... இவையெல்லாம் நவீன தமிழிலக்கியத்துக்கு வளம்சேர்க்கும் – புதிய பரிமாணம் சேர்க்கும் – ஆக்கபூர்வமான விமர்சனங்கள்! இவற்றை மொழிபெயர்ப்பதன் மூலம் பிற மொழி வாசகர்கள் நவீன தமிழிலக்கியம் குறித்துப் புதிய தெளிவு பெற்று, நவீன தமிழிலக்கியப் படைப்புகளின் மொழிபெயர்ப்புகளைத் தத்தம் மொழிகளிலே தேடிப்பிடித்துப் படித்துப் பயனடைவார்கள் என்று நம்புவோம்!

விமர்சனப் பகுதியே இப்படியென்றால், 'மதிப்புரைகள்' பற்றிச் சொல்லவே வேண்டாம். 'பேட்டிகள்' பகுதியில் தொ. மு. சி. ரகுநாதனுடனான தி. க. சி. பேட்டி மற்றும் தி. க. சி. யின் இரண்டு பேட்டிகள் இடம் பெற்றுள்ளன. புத்தக அமைப்பிலும் குளறுபடி. 'பேட்டிகள்' பகுதியில், சாரு நிவேதிதாவுக்குத் தி. க. சி. எழுதிய பகிரங்கக் கடிதம் ஒன்று, வேண்டாத விருந்தாளியைப்போலப் பரிதாபமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

இப்படி மேலோட்டமான, ஒருதலைப் பட்சமான, இலக்கிய ரசனை கடுகனைத்தும் இல்லாத, பொத்தாம் பொதுவான அபிப்ராயங்களே குவிந்து கிடக்கும் இந்தப் புத்தகத்துக்குச் சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டிருப்பதை, இலக்கிய அக்கறை கொண்ட யாரால்தான் சகித்துக்கொள்ள முடியும்? இந்தப் புத்தகம்தானே சாகித்ய அகாதெமியினால் பிற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்படும். இந்த அரிய விமர்சனக் கருத்துகளை – முத்துக்களை – படிக்கும் பிறமொழி வாசகர்கள் தலையைப் பிய்த்துக் கொள்ள மாட்டார்களா? நவீன தமிழிலக்கியப் படைப்புகளும் விமர்சனங்களும் 'குப்பை கூளங்கள்' என்ற முடிவுக்குத்தானே வருவார்கள். இதையெல்லாம் உத்தேசித்துத்தான், தீவிர இலக்கிய அக்கறை கொண்டவர்கள் சாகித்ய அகாதெமியின் தமிழ்த் தேர்வுக் குழுவினரின் இந்தத் தேர்வைச் சர்ச்சைக்குள்ளாக்கிக் கடுமையான விமர்சனத்தை முன்வைக்கின்றனர். அதற்கு எதிர்வினையாகத் தி. க. சி. யும் அவரது ஆதரவாளர்களும், இந்தத் தேர்வை விமர்சிப்பவர்களை 'அராஜகவாதிகள்', 'வக்கிரமனம் படைத்தவர்கள்', 'உள் நோக்கம் கொண்டவர்கள்' என்று குறைகூறுகின்றனர்; வசைபாடுகின்றனர். ஆனால், 'அராஜகவாதிகள்', 'தனிமனிதவாதிகள்', 'கலை கலைக் காகவேகாரர்கள்', 'பிற்போக்குவாதிகள்', 'பழமைவாதிகள்', 'நச்சிலக்கியப் படைப்பாளிகள்', 'இந்துத்துவவாதிகள்', 'முற்போக்காளர்கள்', 'மதச்சார்பற்றவர்கள்' போன்ற அனைத்து 'லேபிள்'களும் இன்று அரசியல் – சமூக ரீதியாகவும், இலக்கிய – கலாசார ரீதியாகவும் அர்த்தமிழந்து

## சாகித்ய அகாதெமியின் தமிழ் விருதுகள் : 1955 – 2000

1955 – தமிழ் இன்பம் (கட்டுரைகள்) – ரா. பி. சேதுப்பிள்ளை
1956 – அலை ஓசை (நாவல்) – கல்கி
1958 – சக்கரவர்த்தி திருமகன் (Ramayana retold in Tamil) – சி. ராஜகோபாலாச்சாரி
1961 – அகல் விளக்கு (நாவல்) – மு. வரதராசன்
1962 – அக்கரைச் சீமையில் (பயணம்) – மீ. ப. சோமு
1963 – வேங்கையின் மைந்தன் (நாவல்) – அகிலன்
1965 – ஸ்ரீ ராமானுஜர் (வாழ்க்கை வரலாறு) – பி. ஸ்ரீ. ஆச்சாரியா
1966 – வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (வாழ்க்கை வரலாறு) – ம. பொ. சிவஞானம்
1967 – வீரர் உலகம் – கி. வா. ஜகன்னாதன்
1968 – வெள்ளைப் பறவை (கவிதை) – அ. சீனிவாச ராகவன்
1969 – பிசிராந்தையார் (நாடகம்) – பாரதிதாசன்
1970 – அன்பளிப்பு (சிறுகதைகள்) – கு. அழகிரிசாமி
1971 – சமுதாய வீதி (நாவல்) – நா. பார்த்தசாரதி
1972 – சில நேரங்களில் சில மனிதர்கள் (நாவல்) – ஜெயகாந்தன்
1973 – வேருக்கு நீர் (நாவல்) – ராஜம் கிருஷ்ணன்
1974 – திருக்குறள் நீதி இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) – க. த. திருநாவுக்கரசு
1975 – தற்காலத் தமிழ் இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) – இரா. தண்டாயுதம்
1977 – குருதிப் புனல் (நாவல்) – இந்திரா பார்த்தசாரதி
1978 – புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (விமர்சனம்) – வல்லிக்கண்ணன்
1979 – சக்தி வைத்தியம் (சிறுகதைகள்) – தி. ஜானகிராமன்
1980 – சேரமான் காதலி (நாவல்) – கண்ணதாசன்
1981 – புதிய உரைநடை (விமர்சனம்) – ம. ராமலிங்கம்
1982 – மணிக்கொடி காலம் (இலக்கிய வரலாறு) – பி. எஸ். ராமையா
1983 – பாரதி : காலமும் கருத்தும் (இலக்கிய விமர்சனம்) – தொ. மு. சி. ரகுநாதன்
1984 – ஒரு காவேரியைப் போல (நாவல்) – லக்ஷ்மி
1985 – கம்பன் : புதிய பார்வை (இ. விமர்சனம்) – அ. ச. ஞானசம்பந்தன்
1986 – இலக்கியத்துக்கு ஓர் இயக்கம் (இ. விமர்சனம்) – க. நா. சுப்ரமணியம்)
1987 – முதலில் இரவு வரும் (சிறுகதைகள்) – ஆதவன்
1988 – வாழும் வள்ளுவம் (இ. விமர்சனம்) – வா. செ. குழந்தைசாமி
1989 – சிந்தாநதி (Autobiographical Essays) – லா. ச. ராமாமிர்தம்
1990 – வேரில் பழுத்த பலா (நாவல்) – சு. சமுத்திரம்
1991 – கோபல்லபுரத்து மக்கள் (நாவல்) – கி. ராஜநாராயணன்
1992 – குற்றாலக்குறிஞ்சி (வரலாற்று நாவல்) – கோவி. மணிசேகரன்
1993 – காதுகள் (நாவல்) – எம். வி. வெங்கட்ராம்
1994 – புதிய தரிசனங்கள் (நாவல்) – பொன்னீலன்
1995 – அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) – அசோகமித்திரன்
1996 – வானம் வசப்படும் (நாவல்) – பிரபஞ்சன்
1997 – சாய்வு நாற்காலி (நாவல்) – தோப்பில் முகம்மது மீரான்
1998 – விசாரணைக் கமிஷன் (நாவல்) – சா. கந்தசாமி
1999 – ஆலாபனை – அப்துல் ரகுமான்
2000 – விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள் – தி.க.சிவசங்கரன்

1957, 1959, 1960, 1964, 1976 – விருதுகள் வழங்கப்படவில்லை.

கல்கி, பாரதிதாசன், கு. அழகிரிசாமி, ஆதவன் ஆகியோருக்கு அவர்கள் மறைவுக்குப் பின் விருதுகள் வழங்கப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com



போன வார்த்தைச் சேர்க்கைகளாகிவிட்டன என்பதைத் தி. க. சி. யும் அவரது ஆதரவாளர்களும் உணர்ந்து கொள்ளாவிட்டாலும், இன்றைய வாசகர்கள் அது குறித்துத் தெளிவாகவே இருக்கிறார்கள்.

"விமர்சனத் துறையில், ஒரு இலக்கியக் களப்பணியாளனுக்கு (Literary Activistக்கு) விருது வழங்கி, ஒரு புதிய ஜனநாயகப் பாதையைத் திறந்து விட்டுள்ள"தாக, சென்னையில் 19. 3. 2001ல் சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டபோது ஏற்புரையில் கூறுகிறார் தி. க. சி. தனது இலக்கிய விமர்சனத்துக்கு சாகித்ய அகாதெமி விருது கிடைக்கும் தகுதி இல்லை என்பதை அவரது உள்ளுணர்வு அறிவுறுத்துவதையே தி. க. சி. யின் இந்த வார்த்தைகள் காட்டுகின்றன. அதனால்தான் இலக்கியக் களப் பணியாளனுக்கு 'விருது', 'ஜனநாயகப் பாதை' என்றெல்லாம் பேசுகிறார் தி. க. சி.

அவரே சொல்வதுபோல அவர் 'இலக்கியக் களப்பணியாளர்' தான். அவரது ஆதரவாளர்கள் சொல்வதுபோல அவர் நல்ல மனிதர்தான். அரைநூற்றாண்டுக்கு மேலாகத் தமிழில் படித்து, எழுதி வருகிறவர்தான். புதிய எழுத்தாளர்களைத் 'தட்டிக் கொடுத்து' ஊக்குவிப்பவர்தான். ஆனால் இந்தத் தகுதிகளுக்காகவா சாகித்ய அகாதெமி விருது வழங்கப்படுகிறது ? இல்லையே! தரமான இலக்கியப் படைப்புக்காக அல்லவா வழங்கப்படுகிறது.

"அடுத்த ஆண்டில், தமிழ் இலக்கியத்துக்கான சாகித்ய அகாதெமி விருது, இலக்கியச் சாதனை புரிந்துள்ள ஒரு தமிழ்ப் பெண்மணிக்கு வழங்கப்பட வேண்டும் என்பது என் வேண்டுகோள்" என்றும் அந்த ஏற்புரையில் குறிப்பிடுகிறார் தி. க. சி. பெண்ணியத்துக்கு ஆதரவான இலக்கியக் குரல்! சாகித்ய அகாதெமியின் தமிழ் விருது முறை வைத்து, ஒரு கவிஞனுக்கு வழங்கப்பட வேண்டும்; நாடகாசிரியனுக்கு வழங்கப்பட வேண்டும்; விமர்சகனுக்கு வழங்கப்பட வேண்டும்; பெண் படைப்பாளிக்கு வழங்கப்பட வேண்டும்; பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு படைப்பாளிக்கு வழங்கப்பட வேண்டும்; தலித் படைப்பாளிக்கு வழங்கப்பட வேண்டும்; சிறுபான்மை மதத்தினரான இஸ்லாமியப் படைப்பாளிக்கு வழங்கப்பட வேண்டும்; கிறிஸ்தவப் படைப்பாளிக்கு வழங்கப்பட வேண்டும்; நாத்திகப் படைப்பாளிக்கு வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம் 'இட ஒதுக்கீட்டு' அடிப்படையில் கோரிக்கை விடுப்பது அபத்தமானது. சாகித்ய அகாதெமியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் வெளியிடப்படும் அசட்டுத்தனமான கோரிக்கைகள்.

தி. க. சி. யின் விருது பெற்றுள்ள இந்த நூலில் உள்ள ஒரு பேட்டியில், "ஒரு நல்ல படைப்பை எப்படி இனங்கண்டு கொள்கிறீர்கள்" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், "கலாபூர்வமாக மனசுக்கு நிறைவு அளிக்கும்படியான படைப்பு எதுவும் மிகச் சிறந்த படைப்புதான். ஒரு தனித்தன்மை, மறுபடி மறுபடி படிக்கத் தூண்டும் ஈர்ப்பு ஒவ்வொரு சிறந்த படைப்பையும் இனம் காட்டிவிடும்" (பக். 303) என்கிறார் தி. க. சி. இதைப் படிக்கும்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது. ஆனால், இலக்கியப் படைப்பு குறித்தான இந்த அளவுகோலைத் தி. க. சி. எந்தத் தமிழ் படைப்புக்கும் பொருத்திப் பார்க்கவில்லை என்பதுதான் மிகப் பெரிய சோகம். தனக்குவப்பான, தான் விரும்பித் தாலி கட்டிக் கொண்ட 'முற்போக்குக் கருத்து'களுக்கு வக்காலத்து வாங்கும் வகையில், தனக்குவப்பான 'சித்தாந்தக் கண்ணாடி'யை மாட்டிக் கொண்டே அனைத்துப் படைப்புகளையும் 'எடை' போடுகிறார். அதனால்தான் மூன்றாந்தரப் படைப்பாளிகள் தமிழின் மேலான சாதனையாளர்களாகவும், க. நா. சு., சி. சு. செ., சுந்தர ராமசாமி, நகுலன் போன்ற படைப்பாளிகளும், வெங்கட் சாமிநாதன் போன்ற தமிழின் முக்கியமான விமர்சகர்களும் தி. க. சி.யின் 'சித்தாந்தக்' கணிப்பில் 'அராஜகவாதி'களாகி விடுகின்றனர். அவருக்கென்றிருக்கும் 'முற்போக்கு' எழுத்தாளப் பாசறையின் பின்னணியுடன் அதை அழுத்தமாக வெளிப்படுத்தியும் வருகிறார் தி. க. சி.

இன்னொரு வேடிக்கையான விஷயம். 1971 – ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருது நா. பார்த்தசாரதிக்கு வழங்கப்பட்டது. அதைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார், தி. க. சி. : "சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற நாவல் என்ற முறையில் இதைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்தால் வெற்றிகரமாக இருக்குமா ? இருக்காது என்றே எண்ணுகிறேன்." (பக். 213 – 214) தொடர்ந்து, "ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு இவ்வாண்டில் சாகித்ய அகாதெமியில் பரிசு கிடைத்திருக்கிறது. இது தமிழுக்குப் பெருமை, நமக்கெல்லாம் பெருமை என்ற முறையில், நா. பா. வைத் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்" பக் (215) என்றும் எழுதுகிறார்.

சாகித்ய அகாதெமி விருது என்ன, ஞானபீட விருதா ? அங்கீகரிக்கப்பட்ட இந்திய மொழிகளில் வெளிவந்துள்ள ஆகச் சிறந்த படைப்புக்கு – படைப்பாளிக்கு – வழங்கப்படுவது ஞான பீட விருது. ஆண்டாண்டு தோறும் மாநில மொழிகளின் தேர்வுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்படுவது சாகித்ய அகாதெமி விருது. இந்த விருதுதான் வருஷாவருஷம் ஒரு தமிழனுக்கு வழங்கப்படுகிறதே. இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது ?

தி. க. சி. யின் 'விமர்சனங்கள் – மதிப்புரைகள் – பேட்டிகள்' நூலுக்கு விருது வழங்கியதன் மூலம் சாகித்ய அகாதெமி தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறுகிறார் ஜெயமோகன். இந்தத் தவறான முன்னுதாரணம், சாகித்ய அகாதெமி தொடங்கப்பட்ட காலத்திலேயே தமிழ்த் தேர்வுக் குழுவினரால் அரங்கேற்றப்பட்டுவிட்டது. முதல் ஆண்டிலேயே – 1955ல் –ரா. பி. சேதுப்பிள்ளையின் 'தமிழ் இன்பம்' என்ற சாதாரணமான கட்டுரைத் தொகுதிக்கு விருது வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 'சக்கரவர்த்தித் திருமகன்', 'அக்கரைச் சீமையில்', 'ஸ்ரீ ராமானுஜர்' என்று பட்டியல் தொடர்கிறது. (பெட்டியில் உள்ள விருதுப் பட்டியலைப் பார்க்கவும்).

ஆர். ஷண்முகசுந்தரம், சி. சு. செல்லப்பா, பிரமிள் போன்றவர்கள் விருது வழங்கப்படாமலேயே மறைந்துவிட்டார்கள். சுந்தர ராமசாமி, நீல. பத்மநாபன், நகுலன், ஆ. மாதவன், சி. மணி, ஞானக்கூத்தன்... என்று விருது வழங்கப்படாத தரமான தமிழ்ப் படைப்பாளிகளின் பட்டியல் நீள்கிறது. வேறு எந்த இந்திய மொழிகளிலும் இதுபோன்ற புறக்கணிப்பு நடந்திருப்பதாகத் தெரியவில்லை.

அடிப்படையிலிருந்து சாகித்ய அகாதெமியின் தமிழ்த் தேர்வுக் குழுவின் செயல்பாடுகள் சீரமைக்கப்படாத வரையில், இதுபோன்ற 'ஏற்பாடுகளும்', 'முன் தீர்மானங்களும்' தொடரத்தான் செய்யும். இந்தக் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கான வழி என்ன என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முதல் கட்டமாக, சாகித்ய அகாதெமியின் தமிழ் விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட படைப்புகள் எவை ? அவை எந்த அடிப்படையில், யார் யாரால் பரிந்துரைக்கப்பட்டன ? அவற்றிலிருந்து இறுதிச் சுற்றுக்கான ஆறு நூல்களைப் பரிந்துரைத்தவர்கள் யார் ? அந்த நூல்களின் பட்டியல் போன்ற விவரங்கள் எல்லாம் ஒரு தமிழ் வாசகனுக்கு அறியக் கிடைக்க வேண்டும். அவ்வகையில் சாகித்ய அகாதெமியின் தேர்வு முறை பகிரங்கமானதாக இருக்க வேண்டும். இல்லையேல், இறுதிச் சுற்றில் விருதுக்குரிய நூலைத் தேர்வு செய்யும் மூவர் குழுவினரின் – அவர்களின் பெயர்கள் சாகித்ய அகாதெமியில் பகிரங்கமாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் இறுதிச் சுற்றுக்குப் பரிந்துரைக்கப்பட்ட நூல்களின் பட்டியல் அறிவிக்கப்படுவதில்லை – நேர்மையும் இலக்கியத் தகுதியும் வாசகர்களின் கேள்விக்குரியதாகிவிடும். மேலும் யூகங்களுக்கும் வழி வகுக்கும்.

உதாரணமாக, 2000ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமியின் தமிழ் விருதுக்கு இறுதிச் சுற்றுக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஆறு நூல்களில் சுந்தர ராமசாமியின் 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்', நாஞ்சில் நாடனின் 'எட்டுத்திக்கும் மதயானை', இமையத்தின் 'ஆறுமுகம்' நாவல்களும் இடம் பெற்றிருந்ததாகக் காற்றுவாக்கில் தகவல்கள். இது உண்மையானால் இந்த ஆண்டின் விருதுத் தேர்வு எத்தனை முறைகேடானது, அநீதியானது, இலக்கியத்துக்குப் புறம்பானது என்று ஒரு வாசகன் நினைப்பதில் தவறென்ன இருக்க முடியும் ?

எனவே, சாகித்ய அகாதெமியின் தேர்வுமுறை ஆரம்ப கட்டத்திலிருந்தே பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் அதன் செயல்பாட்டில் வாசகனுக்கு நம்பிக்கை ஏற்படும். யூகங்கள் தவிர்க்கப்படும். இலக்கியத்துக்குப் புறம்பான நூல்களின் தேர்வு ஓரளவிலேனும் தவிர்க்கப்படும். ■



படிப்பகம்

www.padippakam.com



## மைலாஞ்சி



*மைலாஞ்சி* விமர்சனத்தை நண்பர் அழகியபெரியவன் காலச்சுவடு மே –ஜூன் 2001 இதழில் எழுதியிருந்தார். இவ்விமர்சனத்தை வாசித்தபோது சில தெளிவின்மைகளும், முரண்களும் அவரது வரிகளில் தொனித்ததை உணர முடிந்தது.

1. இசுலாமுக்கும் இந்துத்துவத்திற்குமான நெருங்கிய தொடர்பு இருப்பதை இந்த நூலின் கவிதைகள் பகிர்ந்து கொள்கின்றன என்கிற ஒரு மிக எளிமையான மதிப்பீட்டை முன் வைக்கும் விமர்சகர் இதற்கு ஆதாரமாக *மைலாஞ்சி*யில் இடம் பெற்றுள்ள பிறந்த குழந்தையின் நாக்கில் சேனைத்தண்ணி தொட்டு வைத்தல், சொர்க்கத்து கண்ணழகிகள் (ஹூருல்ஈன்கள்) தூங்கும் குழந்தையை சிரிக்க வைப்பதாய் கூறும் புனைவு, வயித்து வலிக்கு உப்பு புளியால் கொதிக்கு ஓதுதல் என்பதாக சிலவற்றை வரிசைப்படுத்துகிறார்.

இத்தகைய நிகழ்வுகள் மரபுக்கு எதிர்நிலையில் இயங்கும் அடித்தள மக்களின் நாட்டார் சமய மரபு அடையாளம்தான். இங்கே இவை இஸ்லாமிய நாட்டார் மரபுகளாகும். இரண்டாவதாக, இந்த சடங்கியல் நிகழ்வுகளில் பிரதானமாக தென்படுவது வாழ்வியல் நம்பிக்கைகள், உறவுகள், கவலைகள், உளவியல் விருப்பங்கள், புராதன மருத்துவச் செயல்கள் எனப் பலவாறான சிந்தனை தொனிப்புகளாகும். அறிவுப்புலன்வழி உணர்தல் நிலையைத்தாண்டி உணர்வாக்க நிலைகளில் இவை குறித்த அனுபவங்களை நாம் தொகுத்துக் கொள்ளலாம்.

இஸ்லாத்தை பரப்ப வந்து உயிர்நீத்த சமயஞானிகளின், சூபிகளின் நினைவிடங்கள்தான் தர்காக்கள். அங்கு நிகழ்வுறும் சடங்குகள் இஸ்லாமிய உள்ளடக்கம் மற்றும் சூழல் சார்ந்து இயங்குகின்றன. ஆனால் இவற்றை பண்பாட்டு ரீதியாகவோ மானுடவியல் ரீதியாகவோ, புரிந்து கொள்ள இயலாத, வஹாபிகள் (இமாம் வஹாபின் சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இஸ்லாமியப் பிரிவினர்) தர்காக்களுக்கு எதிராக தீவிர முரட்டுத்தனமான பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த தூய்மைவாதமும், போலி அறிவுவாதமும் மறுபரிசீலனைக்குரிய ஒன்றாகும். யூதர்களின் வழக்கமாகவும், கிறிஸ்தவர்கள் குறிப்பிட்ட காலம்வரை பின்பற்றவும் செய்துவந்த 'சுன்னத்' என்னும் ஆண்குழந்தையின் பிறப்புறுப்பின் நுனியை துண்டித்தல் சடங்கு, நபிஇபுராகீம் தன் மகன் இஸ்மாயிலை இறைக்கட்டளைக்கு இணங்க பலிகொடுக்கத் தயாரான தியாக சம்பவத்தை நினைவுறுத்தும் நிலையில் ஒரு பிராணியை (ஆடு / மாடு /ஒட்டகம்) பலிக்கொடுத்தல், புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் நிலையில் ஸபா, மர்வா குன்றுகளுக்கிடையே தொங்கோட்டம் ஓடுதல், முஸ்தலிபா மலையிலிருந்து பொறுக்கிவந்த ஏழு சிறு கற்களால் 'மினா'வில் ஷைத்தான் மீது கல்லெறிதல் உள்ளிட்ட சடங்குகள் எல்லாமும் அரேபிய சூழலை பின்புலமாகக்கொண்ட இஸ்லாமிய நாட்டார்சார் மரபுகளின் தொகுப்புகளாக இருப்பதை கவனிக்கவேண்டும். திருக்குர்ஆனும் இவற்றை அங்கீகரிக்கிறது. இங்கெல்லாம் தங்களின் அதீத அறிவுவாதத்தை வஹாபிகள் பயன்படுத்த தயாராக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2. நண்பர் தனது விமர்சனத்தில் "தேவைக்கதிகமான அரபுச் சொற்களை கவிதைகளில் கையாண்டுள்ளதால் அவைகளின் பொருள்தேடி கவிதைகளில் அர்த்தப்படுத்திக் கொள்வதற்குள் மிகுந்த ஆயாசம் மேலிடுகிறது" – எனக்குறிப்பிடுகிறார். இக்கூற்றை நாம் மற்றுமொரு கோணத்தில் அணுகவேண்டியுள்ளது. இதுவரை தமிழ்க் கவிதைப் பரப்பிற்குள் இதிகாச புராணவியல் காப்பியக் குறியீடுகளே அதிகம் இடம்பெற்று வந்துள்ளன. மத நீக்கப் பின்னணியை தத்துவப் பின்புலனாக்கி இயங்கிய திராவிட இயக்க கவிஞர்களிடமும், இடதுசாரி படைப்பாளிகளிடமும் இந்த தாக்கம் அதிகமாகவே தொழிற்பட்டது. சிறுதெய்வ வழிபாடு, மாந்தீரிக சொல்லாடல்கள் மாற்று மரபுசார் பின்னணியில் தலித்திய கவிதைகளிலும் தீர்க்கமாக இயங்கி வருகின்றன. இந்நிலையில் தமிழ் பேசும் முஸ்லீம்கள் பயன்படுத்தும் இஸ்லாமிய குறியீடுகளும் விளிம்புநிலை தமிழ் – மலையாள கலப்பு சொல்லாடல்களும் மைலாஞ்சியில் இடம் பெற்றிருப்பதை தமிழின் பன்மை அடையாளங்களை அங்கீகரிக்கும் போக்காகவே கருதலாம்.

வரலாறும் சமகாலமும் பின்னிப்பிணையும் சொல்லாடல்களாக, எண்ணற்ற மனசின் துயரங்களை அடையாளம் காட்டும் வார்த்தைகள் இயங்குகின்றன. "திரைகளின் மறைத்தலில் தொடருது கர்பலாக்கள்" இவ்வரியின் ஆழத்திற்குள் பயணப்பட வேண்டுமெனில் 'கர்பலா' சரித்திர சம்பவமும், அதன் சோகமும் தெரிந்திருக்கவேண்டும். அரேபிய மண்ணில் இஸ்லாத்தை நடைமுறைப்படுத்திய அண்ணல்நபி நாயகத்தின் பேரரான இமாம் ஹுசைன் 'கர்பலா' என்னுமிடத்தில் தொழுது கொண்டிருக்கும்போது எதிரிகளால் தலைதுண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டார். அவருடன் எழுபத்திரண்டு தோழர்களும் உயிர்துறந்தார்கள். இந்தக் கர்பலா துயரக்குறியீடே இஸ்லாமியப் பெண்படும் துயரங்களை உணர்த்தும் மொழியாய் மறுஅர்த்த உருவாக்கத்தில் கவிதைக்குள் இடம்பெறுகிறது. இவ்வாறாக மூசாநபியின் அஸா, யூனூஸ் நபி வாழ்ந்த மீனின் வயிறு, அபாபீல் பறவைகளின் வருகை, இஸ்மாயில் நபியின் பிஞ்சுக் கால்கள் பட்டு ஊற்றெடுத்த ஜம் ஜம் கிணறு உள்ளிட்ட இஸ்லாமிய மரபு வழிக் குறியீடுகளையும், கிண்ண நேர்ச்சை, மகாம் தண்ணி, ஒடுக்கத்து புதன் கடக்குளிப்பு, கவுணி, மறவணை என தமிழ் இஸ்லாமிய வட்டார அடையாளம் சார்ந்த குறியீடுகளையும் மைலாஞ்சியின் கவிதைப்பரப்பெங்கும் காணலாம். இது தமிழ்வாசகனுக்கு முற்றும் புதிதானவை என்றாலும் வாசிப்பின் வெளிகளில் சலனங்களை உருவாக்கவல்லவை.

3. மைலாஞ்சி விமர்சகர் போகிறபோக்கில் ஒருவரியை வீசி எறிந்துவிட்டுச் செல்கிறார் : "எந்தக் கவிதையும் நிறைவான தொரு கவிதையனுபவத்தை தராமல் நின்று விடுகின்றன". இது சுய முரண்பாடுமிக்கதொரு வாசகமாகும். ஏனெனில் இக்கருத்தை அவரே ஐந்தாவது பத்தியில் மறுக்கிறார். "தொட்டில் சீலை, மைலாஞ்சி, தனி, சந்திப்பின்வதம், பெத்தாப்பா போன்ற கவிதைகள் நல்ல அனுபவம் தருகின்றன". அது சரி அது என்ன அப்படி பொத்தாம் பொதுவான "நிறைவானதொரு கவிதை அனுபவம்"?

ஆண் / பெண்; ஆதிக்கசாதி / தலித்; கிறிஸ்தவன் / இஸ்லாமியன் என எல்லோருக்குமான ஒரேவித அனுபவம் எப்படி இருக்க முடியும். இதற்கான விமர்சகனின் அளவுகோல் எது ? பிரபஞ்சம் தழுவிய அன்பு, பாசம், தாய்மை, கருணை, நீதி என்கிற பொதுப் புள்ளிகளை எடுத்தால்கூட ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்கும் தனித்த குணாம்சங்களைக்கொண்டுதானே இயங்குகிறது. அழகியல் / எதிர் அழகியல் தளங்களில் கவிதையை இனங்காணும் சூழலில் இப்படியானதொரு வாசகத்தை தமிழ் விமர்சனச்சூழல் தூக்கி வீசி எறிந்து விடுகிறதே. மைலாஞ்சியின் 'பிறைகாணல்' கவிதை *தினந்தோறும் ஆசை / பிறையின் முகங்காண / அது தேயும் போதும் வளரும் போதும் / இரவின் தனிமையில் / மேகங்கள் விலகியும் விலகாமலும் / அதன் மௌனப்பார்வை / என்னில் பதிவதாய் உணர்வேன்/*என நீள்கிறது.

முதலில் நிலவை 'பிறை' என்று சொல்லும்போதே ஒரு கலாச்சார அடையாளம் உருவாகிவிடுகிறது. பிறையை வைத்துத்தான் இஸ்லாமியர்கள் காலம் கணக்கிடப்படுகிறது. பெருநாட்கள் பிறையைப் பார்த்துதான் தீர்மானிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு பிறையைக் காண்பித்து உம்மாமார்கள் அஸ்ஸலாமு அலைக்கும் சொல்லிக் கொடுக்கிறார்கள். எனவேதான் பிறை காணல் என்பது ஒரு இஸ்லாமிய கலாச்சார அனுபவமாக வெளிப்படுகிறது. இதுவே வாசகனிடத்தில் மனித அனுபவத்தின் பகுதியாகமாறி கவிதையனுபவமாக மனசில் தங்கிவிடுகிறது.

4. "மைலாஞ்சி பிரதியில் ரகுலையும் மீறி எழுகின்ற சில எதிரெதிர் குரல்கள் வலுவான இஸ்லாமியக் குரலால் முடங்கிப் போகின்றன" என்றும் ஓரிடத்தில் விமர்சகர் முடிவு செய்கிறார். எனது இன்றைய அனுபவத்தில் இதுவும் உண்மை சிறிதளவும்



படிப்பகம்

www.padippakam.com



இல்லாத கூற்றாகும். இதற்கு காலச்சுவடு பிரசுரித்திருந்த மௌலவி தேங்கை ஷர்புதீனின் பிரசுரமே போதுமானதாகும். எனினும் இது தொடர்பாக இன்னுமதிகம் என்னால் சொல்ல இயலும். திருநெறி தொண்டர்குழு அமைப்பு எட்டு பக்கங்கள் கொண்ட ஒரு பிரசுரம் வெளியிட்டது. *மைலாஞ்சி* கவிதையின் சில பக்கங்கள், இஸ்லாத்திற்கு விரோதமாக எழுதப்பட்டிருப்பதாக தெரிவித்து, தொகுப்பின் பதிநான்கு கவிதைகளை பிரசுரித்து உலமாபெருமக்களிடம் விளக்கம் கேட்டு இருந்தது. இப்பிரசுரம் ஆயிரக்கணக்கில் அச்சடிக்கப்பட்டு வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகைக்குப் பின் பெரும்பாலான பள்ளிவாசல்களில் விநியோகிக்கப்பட்டன. தொடர்ந்து வெள்ளிக்கிழமைகளில் பல தொழுகைப் பள்ளிகளில் ஆலிம்கள் மூலமாக *மைலாஞ்சி* கவிதைகளை உதாரணம் காட்டியும், கடுமையாக தாக்கியும், படைப்பாளியை கண்டித்தும், பயான்கள் (சொற்பொழிவுகள்) நிகழ்த்தப்பட்டன. இஸ்லாத்தின் பெயரால் உணர்ச்சிநிலையில் போலியாக கோபங்கள் உருவாக்கப்பட்டன.

இக்கவிதைகளுக்கு விளக்கம் கேட்கும் தோரணையில் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட நபர்கள், ஒரு இரவில் வீடு தேடி வந்தனர். இரண்டுமணி நேரங்களாக கடுமையாக வாக்குவாதம் செய்து திரும்பிச்சென்றனர். அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை. மேலும் தக்கலை அ. பீ. மு. அ. ஜமாஅத்திற்கு (முஸ்லிம்களின் ஊர் சபை) சுமார் 120பேர் கையெழுத்திட்ட மனுஒன்று வழங்கப்பட்டது. ஜமாஅத் சட்ட திட்டங்களுக்கும், ஷரீஅத் நெறிமுறைகளுக்கும் எதிராக *மைலாஞ்சி* கவிதைகள் இருப்பதாகவும் என்மீது நடிவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அதில் கோரியிருந்தனர்.

*மைலாஞ்சி* கவிதை நூலை சுட்டிக்காட்டி சல்மான் ருஷ்டி, தஸ்லிமா நஸ்ரின் வரிசையில் என் பெயரையும் சேர்த்து மஸ்கட்டிலிருந்து பதிமூன்று பேர் கையெழுத்திட்ட நான்கு பக்க மனுவை ஜமாஅத்திற்கு அனுப்பி என்மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியிருந்தனர். மின்அஞ்சலிலும் தகவல்களும், எதிர்ப்புகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. மைலாஞ்சியை தீவைத்துக் கொளுத்த வேண்டும் என்ற அளவுக்குகூட பதட்டங்கள் உருவாகின. வதந்திகள் பரப்பப்பட்டன. மௌலவி தேங்கை சர்புதீனின் மைலாஞ்சி எதிரொலி பிரசுரம், எம். ஏ. ஷாகுல்ஹமீதின் அஸ்தஃபிருல்லா பிரசுரம், அபுஆஷிக்கின் மைலாஞ்சி ஓர் பார்வை பிரசுரம், திருமறையில் உலகியல் பிரசுரம் ஆகியவை *மைலாஞ்சி*க்கு எதிராக தொடர்ந்து வெளிவந்தன. முகவரியற்ற மிரட்டல் கடிதங்களும் வந்தன. சிறுகதை எழுத்தாளர் மீரான் மைதீன் நண்பர் ஹாமீம் முஸ்தபா, விமர்சகர் முஜிபுற்றகுமான் உள்ளிட்ட ஒருசிலரால் மட்டுமே *மைலாஞ்சி*யின் மறுபக்கங்கள் குறித்து இஸ்லாமிய தளத்தில் பேசமுடிந்தது.

தக்கலை முஸ்லிம் ஜமாஅத் நிர்வாகம் இதற்கிடையே ஊர் ஆலிம் முன்னிலையில் *மைலாஞ்சி*யின் ஏறத்தாழ இருபது கவிதைகள் பற்றி என்னிடம் விளக்கம் கேட்டது. அந்த இரவின் எல்லை முடியும்வரை இது நீடித்தது. இவ்விளக்கங்கள் அளிக்கப்படாமல் இருந்திருந்தால் ஊர்விலக்கு நிகழ்ந்திருக்கும். இது பெற்றோர், குடும்பம், சமூகம், ஊர், அதன் நிகழ்வுகள், நல்லது கெட்டது காரியங்கள் எல்லாவற்றிலிருந்தும் படைப்பாளியையும் அவரது மனைவி, குழந்தைகளையும் விலக்கி வைக்கும் நிகழ்வாகும். தற்போது கவிதைக்கான எனது விளக்கங்கள் மாவட்ட உலமா சபைக்கு கருத்துகேட்டு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிகிறது. கவிதைப் படைப்பை சரியா/தவறா என உரசிப் பார்க்கவும் முடிவெடுக்கவும் இங்கே உலமாக்கள் கைவசம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து பெறப்படும் உலமா சபையின் பத்வா (தீர்ப்பு) அடிப்படையில், அடுத்துவரும் அபீமுஅ பொதுக்குழுவில் என்மீது நடவடிக்கை தொடரும் எனத் தெரிகிறது.

*மைலாஞ்சி* தொடர்பாக ஜனநாயகபூர்வமாக கருத்துப் பரிமாற்றம் செய்வதும், விவாதிப்பதும் பிரசுரங்கள் வெளியிடுவதும் ஆரோக்கியமான விஷயம்தான். ஆனால் இவ்விவாதங்களின் முடிவு படைப்பாளியை பழிவாங்க வேண்டும், புத்தகத்தை தடைசெய்ய வேண்டும், படைப்பாளியை ஊர்விலக்கு செய்யவேண்டும் என்பதான எல்லைகளை நோக்கி செல்வது தான் துக்ககரமானதாகும்.

ஹெச். ஜி. ரசூல்

---

## கடிதங்கள்

தேர்ந்த பாவனைகளை மட்டும் கொண்டிருப்பவர்கள் அல்லாதவர்களைப் புறந்தள்ளுகிற காலகட்டத்தில் தி. க. சியைப் போற்றுதல், தூற்றுதல் நகுலனைப் போற்றுதல், தூற்றுதல் கடந்து சென்று, அவரவர்கள் அவரவர்களையே அறிந்து அறிமுகப்படுத்துதலே மரபையும் காலத்தையும் சரியான ஒருங்கிணைப்பில் கொண்டு செல்லும்.

அருண் சஞ்சாரி
கோவை

வியாபார உத்திகளால் பிரமலமடைந்த சஞ்சிகைகள் ஆழ்ந்த வாசிப்பின் ஈர்ப்பை அறியாத தமிழ் வாசகர்களுக்கு சுவையான தீனியாக உள்ளன. 'மனைவியின் நண்பன்' என்றும் 'சக்களத்தி – சின்ன வீடு' என்றும் ஆராய்ச்சி செய்துகொண்டே பிரலமாகியுள்ள பத்திரிகைகள் மத்தியில் 'காலச்சுவடு ஒரு தனித் தீவு. முற்றிலும் மாறுபட்ட முதல் தரமான படைப்புகளைத் தாங்கி வருவது அதன் இலக்கிய முத்திரை காலத்தை வென்று நிற்கும்.

ஆர். ஆர். சாமி
திருவண்ணாமலை

மே மாத காலச்சுவடு கண்டேன். இதழில் தலையங்கம் 'ஜெயலலிதாவின் பின்நவீனத்துவ நோக்கு' கண்டேன். பின்நவீனத்துவத்திற்கே புதிய வரையறையை ஏற்படுத்திக் கொண்டு அறிவுஜீவிகளின் நடுநிலைமைப் பார்வையில் மகா மகா அதுயையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தோற்றுவித்துவரும் ஜெயலலிதா இந்திய அளவில் மட்டுமல்ல, அகில உலகிலும் மாபெரும் தவறானதொரு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வந்திருப்பதை நாடும் ஏடும் அறியும். தேர்தல் நெடுங்கி வந்த சமயத்தில் முதலமைச்சராகக் கூட பவனி வந்தாலும் வரலாம் என்னும் சூழலில் உள்ள ஒருவரைப் பற்றிய காரசாரமான ஆனால் புடம்போட்ட விமர்சனத்தை அதுவும் பொத்தாம் பொதுவாக இல்லாமல் பெயருடன் பிரசுரிப்பது என்பது சாதாரண நிகழ்வாக இருக்க முடியாது. இதேபோல் என்றென்றும் உங்கள் பேனாமுனை நிமிர்ந்தே இருக்கட்டும்.




சுந்தர ராமசாமியின் 'வானகமே இளவெயிலே மரச்செறிவே' கட்டுரை மொழிபெயர்ப்பு பற்றிய தகவலை ஓரளவு நல்ல வாசிப்பாளனையும் இதுவரை கண்ணோட்டம் விடாத தளத்திற்கு அழைத்துச் சென்றது. இன்றைய காலகட்டத்தில் தமிழின் நல்ல செறிவான படைப்பாளிகள் செய்யாத பகிர்தல் பணியை அவர் செய்து வருவது மிகவும் அபூர்வமானதாகும். இதன் மூலமாக, படைப்பாளி என்பவன் தம் மனதில் பட்ட உண்மைகளையெல்லாம், தன்னுடைய அனுபவங்களையெல்லாம் ஏதேனுமொரு உரையாடல் வழியாக வாசகனிடத்தில் சேர்ப்பவனாக இருக்கவேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

'மௌனத்தின் சிறகடிப்பு' கட்டுரை கண்டேன். ஏற்கனவே சிறு பத்திரிகை உலகம் பற்றியும், தீவிர இலக்கியவாதிகள் பற்றியும் ஒரு வெகுசன வாசகர் வட்டம் வெகுசன இதழ்களைத் தாண்டி வருவதில் ஆர்வம் காட்டாமல் தீவிர இலக்கியத்தின்மேல் ஒருவித 'பயந்த' அதுயை கொண்டுள்ளது. இந்த லட்சணத்தில் இலட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையாகும் குமுதம் போன்ற வெகுசன இதழ்கள் முன்புபோல வெறும் குப்பைகளைத் தந்தாலும் பரவாயில்லை. நானும் நவீன இலக்கியத்திற்கு பங்காற்றுகிறேன் பேர் வழி என்று



படிப்பகம்

www.padippakam.com



சொல்லிக்கொண்டு இலக்கியம் பற்றியும் இலக்கியவாதிகள் பற்றியும் நடுங்கிக் கொண்டிருக்கும் இண்டர்நெட் கூட்டத்திடம் தவறான அணுகுமுறையை இனிமேலாவது நிறுத்திக்கொண்டால் நல்லதாக இருக்கும்.

எல். கோபாலகிருஷ்ணன்
சொக்கனூர்

மே – ஜூன் இதழில் என்னுடைய கவிதைத் தொகுப்பிற்கு தோழர் ப்ரதிபா ஜெயச்சந்திரன் எழுதிய விமர்சனம் படித்தேன். அது குறித்த எனது கருத்துக்கள் இவை.

ப்ரதிபா ஜெயச்சந்திரன் எனக்குப் பிடித்த கவிஞர்களில் ஒருவர். அவரின் கவிதைகளில் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. ஆனால் இவ்வளவு அபத்தமான ஒரு விமர்சனத்தை அவரால் எழுத முடியுமென்பதை நம்புவதற்கு இன்னமும் சிரமமாய் இருக்கிறது.

கவிதை குறித்து அவருக்குச் சில கருத்துக்களும், நம்பிக்கைகளும் இருக்கலாம். கவிஞனுக்கு மீளலில் நம்பிக்கை வேண்டும். விரக்தி கூடாது. அதுவும் முதல் கவிதையிலேயே கூடவே கூடாது. கவிதைக்கான சொற் தேர்வில் பத்தியம் வேண்டும் என்பன போன்று. அங்ஙனமே, கவிதை சுதந்திரமானது. எல்லா வரையறைகளையும் மறுத்து, அவற்றை எள்ளி நகையாடிக் கொண்டு, தனது இருப்பைத் தனது வனப்பு, வலிமை இவற்றைக் கொண்டு தானே நிர்ணயித்துக் கொள்ள வல்லது என்பன போன்ற கருத்துக்கள் எனக்கும் இருக்கக் கூடும். எனில், சரியான கவிதையின் உடற்கூறு (Anatomy) இப்படித்தான் இருக்க வேண்டும் என்றோ, அல்லது கவித்துவத்தின் சூத்திரம் இதுதான் என்றோ வரையறுக்கும் உரிமை யாரிடம் இருக்கிறது ?

மற்றபடி, இந்துத்துவத்திற்கும் எனது தொகுப்பிற்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்றே நினைக்கிறேன். ப்ரதிபா சமீபமாய் ஜெயமோகனின் எழுத்துக்களை நிறைய படித்து மிரண்டு போயிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

மேலும், நாய் என்கிற குறியீடு தலித்தைத்தான் குறிக்க வேண்டும் என்று யாரேனும் சட்டம் போட்டு விட்டார்களா என்ன ? என்னுடைய தொகுப்பில் எந்த இடத்திலும் தலித்துக்குக் குறியீடாக நாயைப் பயன்படுத்தவில்லை.

12–வது கவிதையில் வரும் வெறிநாய், மொட்டை வால் நாய் குறியீடுகள் பொதுவான முதலாளி – தொழிலாளி, மேலதிகாரி –கீழ்நிலை ஊழியன் என்பன போன்ற முரண்பாடுகளைப் பேசுவது. தலித் சாதியில் பிறந்த முதலாளிகளும், மேலதிகாரிகளும்கூட (குறைந்த எண்ணிக்கையில் தான் என்றாலும்) இருக்கலாம் என்பது ப்ரதிபா அறிந்ததுதானே.

அப்படி, 18–வது கவிதையில் வரும் சொறிநாயும்கூட நியாயமாய்க் கிடைக்க வேண்டிய அங்கீகாரம் கூட கிடைக்காமல், தனக்குத்தானே சொறிந்து விட்டுக் கொள்ளும், சிறு பத்திரிக்கை சார்ந்த படைப்பாளிகளைக் (இதில் நான் உட்பட எல்லாரும் அடக்கம்) கிண்டல் செய்வதாகும். தவிரவும் முதுகு சொறிதல் என்பது பரவலாய் எல்லாரும் பயன்படுத்தும் பிரயோகம்தானே.




ப்ரதிபா திரும்ப ஒருமுறை தொகுப்பைப் படிக்கவேண்டும். பொருள் புரியாமல் படித்துவிட்டுப் பழியைப் படைப்பாளன் மேல் போடுவது கொஞ்சம்கூட நியாயமற்ற ஒன்று.

திராவிட இலக்கியங்கள் புராணம் சொல்லாடல்களை எதிர்முரண் நிலைபாட்டில் தான் கையாண்டன என்றும் சொல்லிவிட்டு,

*அவளொன்றும் படிதாண்டாப் பத்தினியுமல்ல*

*நானும் முற்றும் துறந்த முனிவனுமல்ல*

என்ற அண்ணாவின் பதிலை (நடிகையுடனான தொடர்பு குறித்த கேள்விக்கு) உதாரணமாகச் சொல்கிறார். பத்தினி படிதாண்டாதவள், முற்றும் துறந்தவன் முனிவன் என்ற நேரடியான பொருளில்தானே இங்கு கையாளப்படுகிறது. Affirmative, Negative என்று ப்ரதிபா சும்மா தமாஷ் பண்ணுகிறார் என்றே தோன்றுகிறது.

ப்ரதிபாவோடு முரண்பட எனக்குச் சங்கடமாய் இருக்கிறது. என்றாலும் ப்ரதிபா வரையறுப்பது போன்ற வரையறைகளின் மீது எனக்கு அக்கறையில்லை என்பதையும், அவரது எதிர்பார்ப்புக்கு விரோதமாகத் தொடர்ந்தும் இது போன்ற பலவீனமான தொகுப்பைத் தருவதே என் விருப்பம் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ப்ரதிபா சொன்ன எல்லாவற்றையும் மறுக்கக்கூடாது என்பதற்காக, ஓவியர் சந்துவின் அட்டை ஓவியம் மிகவும் நன்றாக உள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ம. மதிவண்ணன்
பெருந்துறை

'ஜெயலலிதாவின் பின் நவீனத்துவ நோக்கு' தலையங்கம் கண்டேன். சரியான நேரத்தில் சரியாக எழுதப்பட்ட தலையங்கம் இது. போயஸ் குட்டையில் ஊறிய மனிதர்களை கண்ணன் பட்டியலிட்டிருந்த விதம் நயமாக இருந்தது. ஒரு சில காரணங்களுக்காக போயஸ் அம்பலத்தில் மறைந்த தலைவர்கள் பலரை என் மனம் ஏற்றுக்கொண்டாலும், எந்தவொரு நோக்கத்திற்காக ஒரு கட்சி ஆரம்பிக்கப்பட்டதோ, கடைசியில் அந்த கட்சியையே போயஸ் வளர்த்த யாக குண்டத்தில் பெரிய ஐயா மூப்பனார் தாரை வார்த்ததை தான் என்னால் ஜீரணிக்க முடியவில்லை. தான் ஆட்சியில் இல்லாத போதே, தலைவர்களை விட்டு கட்சிகளை கட்டுடைக்கும் பணியை துவங்கிவிட்ட ஜெயலலிதா, தற்போது ஆட்சி பீடத்தில் அமர்ந்து விட்ட நிலையில் 'அந்தப் பணி'யை செம்மையாய் செய்வார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

வே. முத்துக்குமார்
கல்லிடைக்குறிச்சி

காலச்சுவடு இதழ் 35ல் வெளியான 'புதுமைப்பித்தன் அரங்கு' பற்றிய குறிப்பு சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்தது. சல்மா அரங்கில் பயன்படுத்திய புதுமைப்பித்தனின் 'அடிப்படை வாதம்' 'இந்துத்துவம்' என்ற சொற்கள் மிகவும் வேதனை தந்தன. புதுமைப்பித்தனின் முழுமையான பன்முக ஆளுமை இன்னும் நன்கு உணரப்படவில்லை. அவர் வெறுப்பு வேதாந்தியல்ல; இலக்கியத்திலும் தனி வாழ்விலும் இரு முகங்கள் காட்டும் நடிப்புக் கலைஞரல்ல. தன்மனைவிக்கு எழுதும் கடிதத்திலே கூட 'வகுப்புத்துவேஷம் ஒரு விஷம் கதை எழுதக் கூடியவர்களுக்குக் கண்மறைக்கும் மஞ்சள் காமாலை' என்று சாடுகிறார். மத வெறி என்ற மஞ்சள் காமாலை அவரைத் தாக்கியது கிடையாது. சென்ற நூற்றாண்டின் தலைசிறந்த இலக்கியவாதியை நூற்றாண்டின் பிற்பகுதியில் தலைதூக்கிய பண்பாட்டு வக்கிரகங்களான அடிப்படைவாத அளவு கோல்களால் மதிப்பிடும் முயற்சி நகைப்புக்குரியது.

எஸ். கணேசன்
மதுரை

இதழ் 35 தலையங்கத்தில் ஜெயலலிதாவின் பங்களிப்பு மிகைப்படுத்தப் பட்டுள்ளது என்றே நினைக்கிறேன். ஜெயலலிதா அரசியலின் பக்கம் திரும்பு முன்னமே தமிழக அரசியல் சேறாகிவிட்டது. அதில் அவர் விதைக்கிறார். நன்றாகவே அறுவடையும் செய்கிறார். ஜெயலலிதா யாரையும் சீரழிக்கவில்லை என்றோ சீரழியத் தொடங்கிவிட்ட தனிமனிதர்களையும் கட்சிகளையும் அவரால் கவரமுடிகிறது. தமிழகத்துக்கு அவர் செய்த பெரிய உதவி ஏதெனில் அதன் பாராளுமன்ற அரசியலின் உண்மையான வடிவத்தை ஒட்டு மொத்தமாக அடையாளங் காண இயலுமாக்கியது தான்.

தனிமனித ஆதிக்கமே இன்றைய ஜனநாயகச் சீரழிவுக்குக் காரணம் என்கிற தொனி இரா. செழியனின் கட்டுரையிலும் உள்ளது. காந்தியின் உட்கட்சி அரசியலில் இருந்தது தனிமனித ஆதிக்கமா ? ஜனநாயகமா ? நேரு பரம்பரை ஆட்சி நாலாவது தலைமுறையையும் எட்ட முயல்வது எங்கு தொடங்கியது ? மெய்யாக, இந்தியாவில் பாராளுமன்ற ஜனநாயகம் இந்திய முதலாளிய யதார்த்தத்துக்கு ஏற்ப இயங்குகிறது. பாராளுமன்றம், தேர்தல்கள் என்பன உறுதிப்படுத்துவது பெரும்பான்மையின் பேரிலான ஒரு சர்வாதிகாரத்தையே. உண்மையான அதிகாரம், பலரது கண்ணுக்கு மறைவாகவே உள்ளது.

இந்தியாவில் தேசிய ஒடுக்குமுறை உள்ளது. சமூகப் பிரிவுகள் மீதான பல வேறு ஒடுக்குமுறைகள் உள்ளன. இவற்றுக்கு எதிரான கிளர்ச்சிகளை எந்தவிதமான



படிப்பகம்

www.padippakam.com



சமூகப்பார்வையும் அரசியற் சிந்தனையும் வழிநடத்துகின்றன என்பதை ஒட்டியே அவற்றின் விளைவுகள் அமைகின்றன. திராவிட இயக்கமோ தலித்தியமோ அடிப் படை நியாயமின்றி எழுந் தவையல்ல. இன் னும் சொன்னால், ஒரு 'பயங்கரவாதியின்' துப்பாக்கி என்றுமே ஒரு பாராளுமன்ற வாதியின் சாராயப் போத்தலைவிட ஜன நாயகமானது.

திராவிட இயக்கமும் தலித் இயக்கங் களும் பாராளுமன்ற அரசியலால் சீரழிந் துள்ளன. அதை விட முக்கியமாக, சீரழி வுக்கான விதைகள் அவற்றின் பார்வைகள் குறுக்கப்பட்ட இடத்திலேயே விதைக்கப் பட்டுள்ளன. ஒடுக்குமுறையின் வேர் களைத் தேடி அறிவதும் ஒடுக்கப்பட் டோரை ஒடுக்குமுறையாளர்கட்கு எதி ராக ஒன்று திரட்டுவதும் எளிதல்ல. ஆனால் அவசியமானவை. இரா. செழியன் இந்தச் சீரழிவுக்கான தீர்வை இந்திய தேசிய ஐக்கியம் என்ற இடத்தில் தேடுகிறார். ஆனால், பிரச்சனை வேறெங்கோ உள்ளது. இந்திய ஜனநாயகம் என்பது தேர்தலுக்கான வாக்குச் சாவடிகளில் தங்கியிருக்க முடி யாது. அது இனம், மொழி, மதம், சாதி போன்ற பலவேறு அடிப்படைகளில் மேற் கொள்ளப்படும் பாகுபாட்டையும் ஒடுக்கு முறையையும் முறியடிக்காமல் இயலுமா காது. ஏற்றத்தாழ்வான எந்தச் சமூகத்திலும் ஜனநாயகம் என்பது பசப்பானதே.

மறுபுறம், இந்த ஊழல் அரசியல் காரண மாக, தேர்தல்களே வேண்டாம், பாராளு மன்றமோ மாநிலச் சட்டசபைகளோ வேண் டாம், நாட்டுக்குத் தேவை நல்லதொரு சர் வாதிகாரி என்கிற ஃபாஸிஸக் கருத்து எழ லாம். இன்றைய பாராளுமன்ற ஜனநாயகம் போலித்தனத்திற்கு மாற்றான மக்கள் ஜன நாயக அமைப்புக்களை எவ்வாறு உரு வாக்கி, வளர்க்க இயலும் என்பதே இந்தியத் துணைக்கண்ட முழுமையிலும் உள்ள ஜனநாயகப் பிரச்சனை.

கல்வி அறிவு பற்றி இரா. செழியன் சொல்வதில் சிறிது உண்மை உண்டு. அது எத்தகைய கல்வி அறிவு என்பதில் அவ ருக்கும் எனக்கும் உடன்பாடு இருக்குமோ தெரியாது.

சி. சிவசேகரம்

இலங்கை

ரவிக்குமார் மீண்டும் மேலவளவின் கண்ணிக்கதையை எழுத்துக்களால் படம் பிடித்துள்ளார். அவரின் ஒவ்வொரு எழுத்துக்களின் வாசிப்பின்போதும் கோபம் தலைக்கேறி இரத்த அழுத்தம் அதிகரிக் கிறது. இந்த அமைப்பில் என்றைக்குமே தலித்துக்கள் நீதியைப் பெற்றதே கிடையாது. எல்லா அதிகார மையத்திலும் சனநாயகம் இல்லை சாதி வெறி தான் கூடிக்கொண்டி ருக்கிறது. அதுதான் நீதித்துறையிலும் வெளிப்படுகிறது. இது ஒன்றும் புதிதல்ல. நாற்பத்து நான்கு பேர் எரியூட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட வெண்மணி சம்ப வம் பற்றிய உயர்நீதி மன்ற தீர்ப்பில் – கோபால கிருஷ்ண நாயுடுவின் தகுதிக்கும் அந்தஸ்துக்கும் அவர் சேரிக்குச் சென்று குடிசையை கொளுத்தினார் என்பது நம்பத் தகுந்ததாய் இல்லை என்று அவரை விடு வித்தது. ஆனால் நீதிமன்றம் வழங்காத தீர்ப்பை "மக்கள் மன்றம்" வழங்கியது என் பதும் வரலாறு நமக்குக் கற்றுத்தரும் பாட மாக இருக்கிறது. ஒவ்வொரு தீர்ப்பின் முடிவு களையும் மக்கள் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். நீதிக்கான வாய்ப்பு களை அவர்கள் நீதித்துறையிலிருந்தே எதிர் பார்க்கிறார்கள். அவர்களின் நம்பிக்கைகள் பொய்த்துப் போகிறபோதுதான் அவர்களின் ஆவேசம் வேறு வழியைத் தேடுகிறது. அவ் வகையில் மேலவளவின் தீர்ப்பையும் நம்பிக் கைகளோடுதான் பாதிக்கப்பட்டவர்கள் பார்த்துகொண்டிருக்கிறார்கள்.

ராஜமுருகு பாண்டியன், கிராமத்து மேடு

ஜே. பி. சாணக்யாவின் பிளாக் டிக் கெட் படித்தேன். கீழ்தட்டு மக்களின் பிரச்சனை கள், அவர்களுக்கும் பொது ஜனங்களுக் குமான தொடர்பு அதிகார வர்க்கங்களின் மையத்தில் இயங்கும் அவர்களின் அரசியல் மனோபாவம் இவையனைத்தையும் பிரதி பலித்து இருக்கிறார்.

சாணக்யாவின் கதையில் வரும் எல்லா கதாபாத்திரங்களிலும் மிகைபடுத்தி கூறும் மனோபாவத்தில் எழுதப்பட்டது அல்ல. பிளாக் டிக்கெட் எங்கள் ஏரியாவில் புழக்கம் இல்லையென்ற போதிலும் கதாபாத்திரங் களின் ரணவேதனையை உணர முடிகிறது.

கவிதையில்லாமல் காலச்சுவடு இனி வெளிவரும் என்று நம்புகிறேன். கவிதை பிர சுரம் செய்வது இனி கொஞ்சம் நாள் நிறுத்தி வையுங்கள்.

எஸ். செந்தில் குமார், போடி நாயக்கனூர்

காலச்சுவடு மே – ஜூன் இதழில் 'சேவி யர் தனிநாயகம் அடிகள்' என்னும் தலைப் பில் வெளியாகிய கட்டுரையைப் படித்து மிகவே மகிழ்கின்றேன். கட்டுரையாசிரியர் கூறுவதுபோல 'தமிழகத்தில் மறக்கப்பட்ட அல்லது நியாயமான இடம் கிடைக்காத அறிஞர்'களுள் ஒருவராகிய தனிநாயகம் அடிகளாரைப் பற்றிய இக்கட்டுரை அவரது பணிகளைத் தமிழர்களுக்கு நினைவூட்டப் பெரிதும் உதவும் என்பது திண்ணம். காலம் கருதி இக்கட்டுரையை எழுதிய அ. கா. பெருமாள் அவர்களுக்கும், வெளியிட்ட தங்க ளுக்கும் நெஞ்சம் கனிந்த பாராட்டுக்கள்.

கட்டுரையாசிரியரைப் பாராட்டும் இவ் வேளையில் கட்டுரையில் காணப்படும் சில தகவல் பிழைகளையும் தவறுகளையும் தங் களது கவனத்துக்குக் கொணர விரும்பு கின்றேன்.

1. அடிகளாருக்குத் தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட்டது இலங்கையிலோ, உரோமை நகரிலோ அல்ல. 1940 – 45ஆம் ஆண்டுகளில் வடக்கன்குளத்தில் ஆசி ரியப் பணிபுரிந்துபோது தான் அவர் தமிழ்மீது ஆர்வம் கொண்டு, தமிழ் இலக்கியத்தை முறையாகப் பயிலத் தொடங்கினார்.

2. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வித்துறை விரிவுரையாளராக (பேராசிரிய ராக அல்ல) அவர் பணியாற்றிய ஆண்டுகள் 1952 – 61. இதற்கிடையில் இலண்டன் பல் கலைக்கழகத்தில் 1955 – 57 ஆண்டுகளில் அவர் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட் டம் பெற்றார். 1961 – 69 ஆண்டுகளில் மலேயாப் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறைத் (Dept. of Indian Studies) தலைவ ராகவும் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். அங்கு அவர் 1955–56 ஆண்டுகளில் மொழிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார் என் பது தவறு.


யாதுமாகி

நவீன கவிதைகளுக்கான காலாண்டிதழ்

மார்ச் 2001

விலை ரூ. 25

ஜோர்ஜ் லூயிஸ் போர்ஹே, தேவ தேவன், கற்சுறா, தெ. மதுசூதனன், சிபிச்செல்வன், இறை. ச. ராஜேந்திரன், ஜே. பிரான்ஸிஸ் கிருபா, மோகன், பாவண்ணன், ந. முருகேச பாண்டி யன், யவனிகா ஸ்ரீராம், சூத்ரதாரி . . .

யாதுமாகி

6, பருவத சிங்க ராஜ தெரு

திருநெல்வேலி 627 006

மின்னஞ்சல் :

yadhumahi@yahoo.com

தொலைபேசி : 04652 – 335711


3. அடிகளார் சரளமாகப் பேச அறிந்தி ருந்த மொழிகளில் தமிழ், இத்தாலியன், போர்த்துக்கேயம் ஆகிய மொழிகளையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

4. மேலை கீழை நாடுகளில் ஏறத்தாழ 200 சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார் என் பது சரியல்ல. 1949 – 50 ஆண்டுகளில் தமது உலகத் தமிழ்த் தூதுப் பயணத்தை மேற்கொண்டிருந்த போது 'ஐக்கிய அமெரிக் காவில் ஓராண்டில் யான் தமிழைப்பற்றிய இருநூறு விரிவுரைகள் நிகழ்த்தியது பெரு வியப்பன்று' என அடிகளாரே எழுதுவதால் ஒரே ஆண்டில் அவர் 200 விரிவுரைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆற்றினார் என் பதே சரி.

5. 1981–இல் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடந்த ஊர் மதுரைதான், சென்னை யன்று.

6. 1679–ஆம் ஆண்டு அச்சில் வெளி வந்த Tamil - Portughese Dictionaryயின் திருந்திய பதிப்பை அடிகளார் கொண்டு வந் தார் என்பது சரியன்று. அகராதியை ஒளிப் பட நகலாகவே அவர் வெளியிட்டார். அவ் வகராதிக்கு பேரா. நோல்ட்டனுடன் அவர் இணைந்து எழுதிய ஆராய்ச்சி முன்னுரை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அத்துடன் Proencaவின் முன்னுரையையும் ஆங்கிலத் தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். ஆனால் அம்மொழிபெயர்ப்புப் பணிக்குத் தம் உதவி அடிகளார்க்குத் தேவைப்படவில்லை என் றும், அடிகளாரே முழுப் பணியினையும் செய்துவிட்டுக் கூட்டாசிரியராகத் தம் பெயரை வெளியிட்டுச் சிறப்புச் செய்தார் என்றும் பேரா. நோல்ட்டன் எழுதியது நினைவுகூரத்தக்கது.

7. 'தமிழ்த் தூது' நூலின் முதல் பதிப்பு 1952ஆம் ஆண்டின் வெளிவந்தது. திருந்திய நான்காம் பதிப்புத்தான் 1962ஆம் ஆண் டில் வெளிவந்தது.

கட்டுரையில் வழங்கப்பட்டுள்ள தரவு கள் உண்மையானவையாக இருக்க வேண் டும் என்பதுதான் என் நோக்கம்.

அமுதன் அடிகள், திருச்சிராப்பள்ளி

**Edited and published by S.R. Sundaram (Kannan) for Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001 and printed by M. Biju at Print Point Offset Press, 103 Sahotharar Street, Nagercoil 629 002**


படிப்பகம்

www.padippakam.com



டி. எபனேசர் சுந்தர் சிங்

நான் எனது உடலையே
எனக்கான சவால்
மையமாகக் கொள்கிறேன்.
ஓவியத்தில் எனது
பிரதிநிதித்துவத்திற்கு
மையமாக எனது உடலே
மேலும் மேலும் முக்கியத்துவம்
அடைந்து வருகிறது.
விளிம்புக்கு விளிம்பு ஒவ்வொரு
படைப்பின் மேற்பரப்பும்
எனது உடலைப் போல நிரம்புகிறது.
தென்னிந்திய
சிற்பத்துக்குரிய வரைதல்
பண்புகளிலிருந்து எனது உருவங்கள்
உருப்பெறுகின்றன எனக்கூறும்
எபனேசர் 1967ல் திருநெல்வேலியில்
பிறந்தவர். சென்னையிலும்,
இந்தியாவின் பிறநகரங்களிலும்
நடந்த பல ஓவியக்காட்சிகளில்
பங்குபற்றிய அவரின் படைப்புக்கள்
சென்னை லலித்கலா அக்கடமி
உட்பட பல்வேறு இடங்களிலும்
சேகரிப்பில் உள்ளன.



'evil design'
ACRYLIC ON HAND MADE PAPER 1996 53" x 38"


**With Best Compliments from**

**S. Rangarajan**


படிப்பகம்

www.padippakam.com

Regd with the Registrar of Newspaper
for India under No. 42764/88 Kalachuvadu


# உலகத்தரம் வாய்ந்த சீட்டுத் திட்டங்கள்

## மேன் மேலும் பொலிவுடன்

இந்தியாவில் தோன்றிய தொன்மையான சீட்டு வழிமுறை 2000 ஆண்டுகளை வயதில் கடந்திருந்தாலும் 21ஆம் நூற்றாண்டிலும் வளமைக்கு வழி காட்டுகிறது. கடந்த 200 ஆண்டுகளில் தோன்றிய பல அந்நிய முதலீட்டு முறைகளை விட உன்னதமானவை சீட்டுத் திட்டங்கள். காலத்தை வென்று நிற்கும் இந்தப் பொலிவான வழிமுறை அதிக மக்களுக்கு ஆண்டாண்டுகளாய் பயன் வழங்கி வருகிறது.




### ஸ்ரீராம் சீட்டுத் திட்டங்கள்

மாறிவரும் பொருளாதாரச் சூழல்களை மனதில் கொண்டு சீட்டுத் திட்டங்களில் பல்வேறு மாறுதல்களை உடனடியாய் செயல்படுத்தி இன்றளவும் புதுப்பொலிவுடன் திகழ்கிறது ஸ்ரீராம் சிட்ஸ். புதியதொரு திட்டத்தின் மூலம் உங்களுக்கு கூடுதல் லாபம் தர காத்திருக்கிறது.

### கூடுதல் டிவிடெண்ட் திட்டம்

விழாக்காலங்களில் சீட்டுத்திட்டங்களில் இணைவோருக்கு ஸ்ரீராம் சிட்ஸ் பல பரிசுகள் வழங்கும். ஆனால் இந்த முறை ஒரு சீட்டுத் திட்டமே பரிசாக கிடைக்கிறது. ஆம்! அனைவருக்கும் ஆதாயம் தரும் கூடுதல் டிவிடெண்ட் திட்டம். பணத்தேவைக்காக, சீட்டில் சேர்பவர்களுக்கு அதிகப் போட்டியின்றி உடனடியாக தள்ளியெடுக்க வாய்ப்பு உள்ளது.

- இதைத்தவிர, சேமிக்கும் நோக்கத்தில் சீட்டில் சேர்பவர்களுக்கு, முதலில் தள்ளியெடுப்பவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட டிவிடெண்ட் தொகை பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இதன்மூலம் சந்தாதாரர்கள் கூடுதல் டிவிடெண்ட் தொகையை ஆதாயமாகப் பெறுவார்கள்.

### ரூ.7,000/- கோடி பட்டுவாடா

ஸ்ரீராம் சிட்ஸ் மூலம் இதுவரை பரிசுப் பணமாக விநியோகிக்கப்பட்ட ரூ.7,000/- கோடியை, 30 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பகிர்ந்து கொண்டுள்ளன. 15 லட்சத்திற்கும் மேலானோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

### நலம் பெற ஸ்ரீராம் சிட்ஸில் இணைவோம்

உலகத்தரம் வாய்ந்த சீட்டுத் திட்டங்களை வழங்கும் ஸ்ரீராம் சிட்ஸில் இணைந்து சந்தோஷமாய் சேமிப்போம். வாழ்வை வளமாக்கிக் கொள்வோம். பல்வேறு பரிசுகள், பற்பல திட்டங்களுடன் உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கிறது ஸ்ரீராம் சிட்ஸ்.

## வாருங்கள்! வாழ்வை வளப்படுத்திக் கொள்ளுங்கள்!



**ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்**
www.shriramchits.com
சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு
சென்னை - 600 002. போன்: 8461833 - 39.

WORDCRAFTS